
திருவாசக ஆய்வுரைக்களஞ்சியம்

51 பகுதிகள் ஆய்வுரைகள்



சிவாய நம

புதுக்கோட்டை திலகவதியார் திருவருள் ஆதீனம்

அமரர் அருள்மிகு டாக்டர் சாயிமாதா சிவ பிருந்தா தேவி அன்னை

பவள விழா வெளியீடு 2002

திருவாசகம்
ஆய்வுரைக் களஞ்சியம்

51 பகுதிகள்
ஆய்வுரைகள்

பதிப்பாசிரியர்கள் :

குன்றக்குடி பெரியபெருமாள்
பேராசிரியர். தா. மணி

வெளியீடு :

திலகவதியார் திருவருள் ஆதீனம்
1120, மச்சுவாடி, தஞ்சை சாலை, புதுக்கோட்டை-622 001.
தொலைபேசி : 04322-28024
இணைய தளம் : www.sivabrindadevi.org



அமரர் தவத்திரு சாயிமாதா சிவபிருந்தாதேவி அன்னையார்
பவள விழா நினைவு வெளியீடு

முதற்பதிப்பு : மார்ச், 2002

வெளியிட்டவர் : முனைவர். **இ. சுந்தரமூர்த்தி**
துணை வேந்தர், தமிழ்ப்பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்.

அளவு : டெம்மி 1X8

தாள் : கிரீம் ஓவ்

அட்டை ஓவியம் : சரவணன், நியூ வேல்டு டிஜிட்டல்

லேசர் : எம். சொக்கலிங்கம்,
பிரண்ட்ஸ் கம்ப்யூட்டர்
புதுக்கோட்டை

அச்சு : மதிநிலையம்,
தி.நகர், சென்னை - 17 ✆: 4311838

விலை : ரூ. 100/-

1/4

பதிப்புரை

உண்மைதான்!

இது ஓர் அரிய முயற்சி; பெரிய முயற்சியும் கூட! கருங்கல் மனத்தையும் கனிவித்து உருக்கவல்ல திருவாசகத் திருநூலின் ஐம்பத்தோரு பகுதிகளுக்கும், ஐம்பத்தோரு அறிஞர்களிடமிருந்து ஆய்வுரைகள் பெற்றுப் பதிப்பித்து, திருவாசகம் - ஆய்வுரைக் களஞ்சியம் என நூலாக்கம் செய்து, வெளியிடத் திட்டமிட்டோம்.

திட்டத்தை முதன் முதலாக அருட்செல்வர் டாக்டர். நா. மகாலிங்கம் அவர்களிடம் தெரிவித்துபோது, “நல்ல முயற்சிதான்; ஆனால் கடினமான முயற்சி ஆயிற்றே! திட்டத்தை நிறைவேற்றிவிடின் அது ஒரு சாதனையாக அமையும். சாதனைக்கு என் உதவியும் உண்டு” என ஊக்கப்படுத்தியதோடு இத்தகைய உருவாக்கத் திருவாக்கத்திற்குப் பத்தாயிரம் ரூபாயை உவந்து வழங்கி, உற்சாகப் படுத்தினார்கள். அப்பெருந்தகை வாழ்ந்து வரும் திசைநோக்கி, நன்றிப் பெருக்கோடு கரம் கூப்புகிறோம்.

புதுக்கோட்டைத் திலகவதியார் திருவருள் ஆதீனகர்த்தராக எழுந்தருளித் திருவருள் பாலித்திருந்த அன்னையார் தவத்திரு சாயிமாதா சிவ பிருந்தா தேவியார் , திருவாசகத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தவர்கள். நாளும் ‘சிவபுராணம்’ ஓதும் பழக்கமுடையவர்கள். அன்னையாரின் பவளவிழா நினைவாக உருவாக்கம் கொள்ளும் திருநூல், திருவாசகம் பற்றியதாக இருப்பின், பொருத்தமாக அமையுமென்ற கருத்தில்தான், அருட்செல்வர் கூறியது போல, இத்தகைய கடின முயற்சியில் இறங்கினோம்.

ஆய்வுரைகள் வழங்கியுள்ள பேரறிஞர்கள், பேராசிரியர்கள், புலவர்கள், கவிஞர்கள், ஆய்வுரைஞர்கள் ஆகிய சான்றோர். பெருமக்களுக்கு, உள்ளார்ந்த நன்றியை உவந்து காணிக்கையாகப் படைக்கிறோம். 'அமுதசுரபி' யில் இடம் பெற்ற அன்னையாரின் கட்டுரையை ஆய்வுரைக் களஞ்சியத்தில் இணைத்துக் கொள்ள உதவிய கலைமாமணி டாக்டர். விக்கிரமன் அவர்களுக்கும், பிழைத்திருத்தம் செய்துதவிய தமிழறிஞர்கள் டாக்டர் அய்க்கன், வே. ராமதாஸ், தி.சு. மலையப்பன், பெ. பழனிச்சாமி ஆகிய சான்றோர்களுக்கும், லேசர் அமைத்து அச்சிட்ட பிரண்ட்ஸ் கம்ப்யூட்டர். உரிமையாளர் ம. சொக்கலிங்கம் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியை மகிழ்வோடு தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழன்னையின் திருவடிகளில், ஒரு புதிய இலக்கிய மலரைச் சமர்ப்பித்துப் பெருமிதம் கொள்கிறோம்.

தயானந்த சந்திரசேகரன்
நிருவாகி,
திலகவதியார் திருவருள் ஆதீனம்
புதுக்கோட்டை.

குன்றக்குடி பெரியபெருமாள்
பேராசிரியர் தா. மணி
பதிப்பாசிரியர்கள்

திருவாசகத் தேனமுதம்

- தவத்திரு **சாயிமாதா சிவபிருந்தா தேவி அன்னையார்**

திருவாசகம், சிவபெருமான் பற்றிய அருள்நூல். மாணிக்க வாசக சுவாமிகளால் அருளப் பெற்றது.

மணிவாசகப்பெருமான் திருவாய் மலர்ந்தருள, சிவபெருமான் திரு ஓலையில் எழுதித் "திருச்சிற்றம்பலம் உடையான் " என்று கைச் சாற்று (கையெழுத்து) இடம்பெற்ற பெருமையுடையது. எந்த நூலுக்கும் இதனைப் போல் பெருமை, அருமை இல்லை.

சிவபெருமான் பெயரில் வைத்த சிந்தை காரணமாக, விநாயகருக்குக் கூட இந்நூலில் இடமில்லை; முருகனைப் பற்றி ஓரிடத்தில் குறிக்கப்பெற்றாலும்.

"குமரன் தன் தாதைக்கும் சென்றூதாய் கோத்தும்பி "

என்று கூறுவது, முருகனது தந்தையைக் குறிப்பதையே உணர்த்தும், இப்படிப்பட்ட திருவாசகத்தில் ஒரு சாதாரண மனிதனை, உயர்த்திப்பாடுகிறார் மாணிக்கவாசகர். இது சிந்தனைக்குரிய செய்தி அல்லவா?

"கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்
என்னப்பன் என்னொப்பில் என்னையும் ஆட்கொண்டருளி
வண்ணப் பணித்தெனை வாவென்ற வான் கருணைக்
கண்ணப் பொன் நீற்றற்கே சென்றூதாய்க் கோத்தும்பி"

"கண்ணப்பனைப் போல, மணிவாசகரால் சிவ பெருமானிடத்தில் பற்றுக் கொள்ள முடியாவிட்டாலும்" என்று பாடிப்பரவி, கண்ணப்பனின் அன்பை- அயரா அன்பை - நிலை நாட்டுகிறார்.

"நாடகத்தால் உன்னடியார் போல் நடித்து நான் நடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன்"

அவரே நடிக்கிறார் என்றால் - எம்போன்றவர்கள் - நெற்றியிலே பட்டை; கழுத்திலே கொட்டை; காலிலே கட்டை ஆகியவை பூண்டு கொண்டு அடியார் போல நடிக்கிறோம் - இல்லையா?

எம் போன்றவர்கள், இங்கே படித்தோம்; இன்னாரிடம் பாடம் கேட்டோம். இத்தனை இத்தனை பட்டங்கள் பெற்றோம் என்ற சுயபுராணம் சொல்லிக் கொள்கிறோமே - எங்களைப் பார்த்து மணிவாசகர் கேட்கிறார்-

''ஏ! பெண்ணே! ஏ! ஆணே!

நினைத்த உடன் உனக்குச் சாகத் தெரியுமா? மாத்திரை தேடக் கூடாது; நீரை நோக்கி ஓடக் கூடாது; மாடியிலிருந்து விழக் கூடாது.

வாழ்க்கை போதும் என்று எண்ணியவுடன், நினைத்தவுடன் மூச்சை விடத் தெரியுமா? இனி நீ நினைத்தவுடன், பிறக்க முடியுமா? சரி பிறந்து விட்டாய்; வளர்ந்து விட்டாய் - இனிமேல் சாகாமல் இருக்கத் தெரியுமா? நீ பெற்ற அறிவு என்ன அறிவு? என்று சாடுகிறார்.

"செத்திடவும் பிறந்திடவும் இனிச் சாவாதிருந்திடவும்
அத்தனையும் அறியாதார் அறியும் அறிவு எவ்வறிவோ
ஒத்தநிலம் ஒத்தபொருள், ஒரு பொருளாம் பெரும்பயனை
அத்தன் எனக்கருளியவாறு யார் பெறுவார் அச்சோவே !"

நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்; நூறாண்டுகள் வாழ்வோம். இன்பதுன்பங்களை ஒன்றாக நினைக்கும் உணர்வுகள் பெற்றுவிட்டால் நாம் நூறாண்டும் அதற்கு மேலும் வாழலாம். நம் நாட்டு ரிஷிகள், தவ சிரேஷ்டர்கள், முனிபுங்கவர்கள் வாழ்ந்தார்கள், இப்போதும் வாழ்கின்றனர். ஆனால், என்றைக்காவது ஒரு நாள் நாம், வந்த காரியம் முடிந்ததும் போயாக வேண்டும்.

செத்துப்போனார்; இறந்து போனார் என்கிறோம். சாவு என்றால் என்ன? எது சாகிறது? உயிர் போகிறது என்கின்றனர். மூச்சுப் போய் விட்டது என்றும் சொல்கின்றனர். உயிருள்ள போது, மூச்சு விடுகின்றோமே - இதற்கு என்ன ஆகி விட்டது? எது எது எப்படி கெடுகிறது என்று, மணிவாசகர் அருளுகிறார்.

ஊன் கெட்டு முதலில் உடம்பு கெட்டுப் போகிறதாம். உடம்பு கெட்டதும், உணர்வு கெடுகிறதாம். கை அசைக்க முடியவில்லை - காலை அசைக்க முடியாது போகிறது. அதன்பின் உள்ளமும் கெட்டுப்போகிறதாம்.

ஊன் கெட்டு, உணர்வு கெட்டு, உள்ளமும் கெட்டு, இந்த மூன்றும் கெட்டபின், கடைசியாகத்தான், நான், என்ற ஆணவம், மிடுக்கு, செருக்கு கெடுகிறதாம். என்ன அழகாக; எத்தனை கோவையாக - எத்தனை நயமாக - எத்தனை நாகரீகமாகப் பாடுகிறார் பாருங்களேன்!

"ஊன் கெட்டு, உணர்வு கெட்டு
உள்ளமும் கெட்டு, நான் கெட்டவா பாடித்
தெள்ளேணம் கொட்டாமோ"

ஊன் கெடுமுன், உணர்வு கெடுமுன், உள்ளமும் கெட்டுப் போகுமுன், இந்த நான், நான் என்ற ஆணவத்தை அழிக்க வேண்டாமா? நரகாசுரனின் ஆணவத்தை அழித்தடக்கி அன்பையும் அருளையும் நிலைநாட்டிய கிருஷ்ண பகவானின் மாக்கருணையை எண்ணி வழிபட்டுத் தீபஒளித் திருநாளைக் கொண்டாடி, வையத்துள் வாழ்வோர் அனைவரும் அமைதி காத்து, அறம் பேணி வாழ்வோமாக!

(அமுதசுரபி 1990 தீபாவளி மலரில் வெளியானது)

பொருளடக்கம்

1. சிவபுராணம்

பேராசிரியர். டாக்டர். **வை. இரத்தினசபாபதி**

முன்னுரை

பெருந்துறை புகுந்து பேரின்ப வெள்ளம் முழ்கிய புனிதன் மொழிந்தது திருவாசகம்.

தோணித்துறை, அறத்துறை, அருட்டுறை என்ற மூன்று துறைகளிலும் நின்று தெளிந்து உணர்ந்து மேல் வந்து பெருந்துறை சார்ந்து அதனுட் புகுந்து பேரின்ப வெள்ளம் மூழ்கிய புனிதர் என்று கொள்ளுதல் வேண்டும்.

தோணித்துறை, அறத்துறை, அருட்டுறை ஆகிய மூன்று துறைகளையும் மருவி உயர்ந்த துறையே பெருந்துறை.

தோணித்துறை அனுபவம் பிடித்த பத்தினுள்ளும் திருப் புலம்பல் என்ற தலைப்புப் பாடல்களுள்ளும் எடுத்து நிறுத்தப் பெற்றன.

அறத்துறை அனுபவம் திருக்கழுக்குன்றப் பதிகத்தினுள் வரையறுத்து உணர்த்தப் பெற்றது.

அருட்டுறை அனுபவம் திருஅண்ணா மலையில் அருளிச் செய்யப்பெற்ற திருவெம்பாவை, திரு அம்மானை என்ற இரு பதிகங்களின் வாயிலாக வெளிப்படுத்தப் பெற்றது.

நாலாவதும் மருவிஉயர்ந்ததும் ஆக நின்ற பெருந்துறை அனுபவம் 46 பகுதிகளாக மணிவாசகப் பெருந்தகையாளரால் உணர்த்தப் பெற்றது.

திருப்பெருந்துறையில் குருவால் அருளப்பெற்ற அருளனுபவப் பேறுகள் 20; தில்லையில் கூத்தப்பெருமானால் அருளப்பெற்ற அருளனுபவப் பேறுகள் 25; திருவுத்தர கோச மங்கை அனுபவமே முடிநிலைத்திருப் பேறு.

நீண்ட நெடும் பாடல்களாக நின்ற நான்கும் இவற்றுள் அடங்கும், என்று கூறுவாருளர். நீண்ட நெடும் பாடல்களில்

அமைந்தவை முறையே திருப்பெருந்துறையிலும், தில்லையிலும் பாடப் பெற்றவை.

நீண்ட நெடும் பாடல் நான்கையும் தோணித்துறை, அறத்துறை, அருட்டுறை அனுபவம் பதிங்கள் ஐந்தையும் நீக்கி நிறுத்தினால் மணி வாசகப் பேறு என நின்ற பதிகங்கள் அருளியலனுபவப் படிநிலைகள் 42 எனக் கொள்ளுதல் பொருந்துவதாகும்.

பேசா அனுபவப் பெரும் பேற்று நிலைகள் நிறைவுற நிற்பது நாற்பத்திரண்டில் குறைவறநின்றஅனுபவம் நின்று நிறைவு பெறவும் நிலையில் 43 என நிற்கும் என்று அருளாளர்கள் பலரும் ஏற்றிருக்கின்றனர்.

ஆயினும் அருளாளர்கள் பலரும் திருச்சிற்றம்பலம் மணிவாசகப் பேறு என்பது மணிவாசகருக்கு மட்டுமே இறைவனால் அருளப்பெற்றது என்றும் கூறுவர். இவ்வுண்மையை ஆய்ந்து தெளிதல் இந்த இடத்துக்கு தேவையானது அன்று.

திருவாசக முன்னுரை

பெருந்துறை அனுபவம் எனப்பெறும் மணிவாசகப் பெரும் பேற்றனுபவம் இன்று நமக்கு 51 பிரிவுகளாக அமைத்துக் கொடுக்கப் பெற்றுள்ளன. தமிழ், சமஸ்கிருதம் ஆகிய இரண்டு மொழிகளின் மொத்த மூல எழுத்துகள் 51 ஆதலின் திருவாசகம் 51 பகுதிகளால் அமைந்தன என்று இயம்புவது ஒருவகை மரபு.

> "திருவாற் பெருந்துறைச் செழுமலர்க் குருந்தன்
> நீழல் வாய் உண்ட நிகரில் ஆனந்தத்
> தேன் தேக் கெறியும் செய்ய மாணிக்க
> வாசகன் புகன்ற மதுர வாசகமானது"

முதன் முதலில் திருப்பெருந்துறை, தில்லை, திருவண்ணாமலை முதலிய பல்வேறிடங்களுக்கு அடிகள் சென்ற போதெல்லாம் பல்வேறு சூழலில் பாடப்பெற்றது என்றும், இப்போது நமக்குக் கிடைக்கும் திருவாசகம் தில்லைக் கூத்தப்

பெருமான் நேர்நின்று எழுதிக் கொள்ள வேண்டும் எனப் புகன்ற காலத்து, அப்பெருமானின் திருவுள்ளக் குறிப்பை நிறைவேற்றப் புகுந்த அடிகள் அதுவரையில் தாம் பாடியவைகளைத் தொகுத்துக் கோவைப்படுத்தி, இறைவன் திருவடிக்கீழ் அமர்ந்து சொல்லிய பாட்டு என்றும் கொள்ளப்பெறல் வேண்டும். இதனாலேயே அடிகள் திருவாசகத்துச் சிவபுராணத்து இறுதியில்

"சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டு"

என்று கூறுவதன் நுட்பத்தை ஓர்ந்துணர்தல் வேண்டும்.

சொல்லற்கு அரியானைப் பல்வேறிடங்களிலும் பல் வேறு சூழ்நிலைகளிலும் தாம் பெற்ற அருளியலனுபவப் பெரும் பேற்றை விளக்கிச்சொல்லியது முதன் முறை. இரண்டாம் முறையாகத் திருவடிக்கீழ்ச் சொல்லியபாட்டு இது எனக் கூறினராதல் வெள்ளிடை மலை.

"தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முன்மொழியும்-கோவைத்
திருவாசகமும்"

என்ற பாடலில் வரும் "கோவைத் திருவாசகம்", என்ற தொடருக்குக் கோவைப்படுத்தி இரண்டாம் முறையாகச் சொன்ன திருவாசகம் எனப்பொருள் கொள்ளுதல் வேண்டும். திருக்கோவையார் என்ற நூல் திருவாசகம் அருளிய மணிவாசகரால் அருளப் பெற்றது அன்று என்ற கருத்து இங்கே ஆய்தற்குரியது.

மதுரையில் நடைபெற்ற மணிவாசகப் பெருமானைச் சார்ந்த வரலாறுகள் பல உண்டு. ஆயினும் மதுரையில் அருளிய பதிகங்களாக ஏதும் காணப்பெறவில்லை என்பதும் சிந்திப்பதற்குரியது.

மணிவாசகப் பெருமான் மூவருக்கும் முந்தியவர் என்ற கொள்கையானது மரபு வழிக் கொள்கை என்று தம் திருவாசக உரையில் அமரர் முதுபெரும் புல்வர். அருணை வடிவேலு முதலியார் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். பதிகப் பெருவழிகண்ட

பாலயுகவாயருக்கும் முற்பட்ட நிலையில் காரைக்காலம்மையாரே பதிகப் பெருவழியைத் தோற்று வித்தவர் என்று கொள்ள இடமுண்டு.

"காரைக்காலினால் மேய குலதனம்" என்று நம்பியாண்டார் நம்பிகளால் விதந்தெடுத்து ஓதப்பெற்ற அம்மையார் காலத்தே, இந்நிலவுலகில் திருவாலங்காடு மட்டுமே கூத்தப்பெருமான் ஆடும் திருத்தலமாக இருந்தது என்பது தெய்வச்சேக்கிழார் திருவாக்கினால் தெளியப்பெறும் செய்தியாகும். அம்மையார் காலத்தில் தில்லைச் சிதம்பரம் அத்தகைய சிறப்பைப் பெற்றதாக அறியப்பெற வாய்ப்பு இல்லை.

மணிவாசகப் பெருமான் காலத்தில் தில்லைத்தலம் சிறப்புப் பெற்றிருந்தமையை அறியலாம்.

அம்மையார் அருளிய திருவாலங் காட்டுத் திருப்பதிகங்கள் இரண்டனுள் முதலாவது திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் என்றும், இரண்டாவது திருவாலங்காட்டுப்பதிகம் என்றும் முன்னர் பெயரிடப் பெற்றுள்ளன. இக்காலத்தே இரண்டு பதிகங்களையும் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகங்கள் என்றே பதிப்பித்துள்ளனர். அம்மையாரை ஒட்டியே மணிவாசகப் பெருமானும் கோயில் மூத்த திருப்பதிகம், கோயில் திருப்பதிகம் என இரண்டாக அமைத்துப் பாடியிருப்பதையும் இணைத்துச் சிந்தித்தல் வேண்டும்.

திருவாசகத்தினுள்ளும் பத்துப்பாடல்களால் நிறைந்தவை அனைத்துமே பதிகம் என்ற தொகைச்சொல்லால் குறிக்கப் பெற வில்லை. சில பிரிவுகள் பத்துப் பாடல்களைக் கொண்டிருந்தாலும் "பத்து" என்ற தொகைச் சொல்லாலேயே குறிக்கப் பெற்றுள்ளன. பதிக அனுபவம் வேறு: பத்து அனுபவம் வேறு என்பதையும் நாம் உய்த்துணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

திருவாசகம் கூறும் "நெறி" என்பதை எண்ணிப் பார்க்குங்கால்

"முத்தி நெறி அறியாத மூர்க்கரோடு முயல்வேனைப்
பத்தி நெறி அறிவித்து"

எனவரும் தொடரைக்கண்டு, திருவாசகம் உணர்த்த வந்ததும், இறைவனால் மணிவாசகருக்கு நேர் நின்று உணர்த்தப் பெற்றதும் "பத்தி நெறியே" என்று கொள்ளலாம். அதுவே செம்மைப் பெருநெறி.

'எம்மானை உள்நினைந்த சிந்தையராய்
வாழும் திறம்"

என்றும்

"ஆராத அன்பினொடு அண்ணலைச் சென்று ஏத்துவார்
பேராத காதல் பிறந்து"

என்றும் வருகின்ற அம்மையார் திருவாக்குகளும் பத்தி நெறியும் ஒன்றா என்பதையும் சிந்திக்க வேண்டும். "தொல்லை இரும்பிறவி" என்ற தொடக்கமுடைய பாடல்

"எல்லை மருவாளர்" என்று குறிப்பிட்டுள்ளதையும் இணைத்துக் காண வேண்டும்.

மேலும் ஒரு சிந்தனை. "கீதம் முன்பாடும் அம்மை" என்று தெய்வச் சேக்கிழாரால் பாடப்பெற்ற அம்மையார் வேண்டியது 'அடியன் கீழ் இருக்க' என்பதாகும். அவ்வாறே அம்மையார் கூத்தப்பெருமான் திருவடியில் அமர்ந்திருக்கும் பேறு பெற்றார். நாயன்மார் வரிசைகளிலும் அமர்ந்திருக்கும் பேறு பெற்றவர் அம்மையார் ஒருவரே.

மணிவாசகப் பெருமானும் தம்முடைய "திருவண்டப்பகுதி" என்ற மூன்றாம் நெடும்பாட்டினுள்

"என்னையும் இருப்பது ஆக்கினன்"

என்று அருளிச் செய்துள்ளார். அருளியல் அனுபவப் பேற்றினுள் முடிநிலைப் பேறும் பேறனுபவமாகத் திகழ்வது "இருப்பது" என்ற அனுபவமே அதனாலேயே வள்ளற் பெருமானார்.

"உரு அண்டப் பெருமறை என்று
உலகமெலாம் புகழ்கின்ற
திருஅண்டப் பகுதி எனும் திருஅகவல்
வாய்மலர்ந்த
குரு என்று எப்பெருந்தவரும்
கூறுகின்ற கோவே நீ
'இரு' என்ற தனி அகவல் எண்ணம்
எனக்கு இயம்புதியே"

என்று விதந்து எடுத்து ஓதவாராயினர்.

காரைக்காலம்மையார் கருத்தும் மணிவாசகர் கருத்தும் 'இருத்தல்' எனப்பெறும் பெரும்பேற்றனுபவத்தை எவ்வாறு அமைத்துக் கொள்ளுகின்றன என்று காண்பதும், காட்டுவதும், காலத்துக்கேற்ற கட்டாயம் என்பதை அருளாளர் நிலையில் நின்று சிந்திக்க வேண்டும்.

சிவபுராண முன்னுரை

1. திருவாசகம் என வழங்கப்பெறுவதும் அருளியலனுபவப் பெருவாழ்வை விளக்குவதும் மணிவாசகப் பெருந்தகையால் அருளப்பெற்றதும் ஆகிய திருவருள் தெய்வப்பனுவலில் முதல் நின்ற நான்கு நெடும் பாடல்களும் பிரம சூத்திரத்தின் முதல் நான்கு சூத்திரங்களின் விளக்கமாக அமைந்தன என்று கொள்ளும் மரபு ஒன்று உண்டு. அவ்வகையில் முதல் நின்ற "சிவபுராணம்" பிரம சூத்திரத்தின் முதல் சூத்திரமாகிய "அதாதோ பிரம ஜிங்ஙாசா" என்பதன் பொருளை மையமாகக் கொண்டதாகக் கொள்ளலாம். அவ்வொற்றுமையை விரிக்கிற்பெருகும்.

2. திருவருட் பெருந்திரு சுந்தரலிங்க முனிவர் தாம் இயற்றிய திருப்பெருந்துறைப் புராணத்தினுள் திருவாசகத்தின் 51 பிரிவுகளுக்கும் உரிய மெய்ப்பொருளியலனுபவ நுட்பங்களை இருபத்து நான்கு செய்யுள்களில், 'திருவாசக உண்மை' என்ற தலைப்பில் எடுத்துக் காட்டியுள்ளார். அதனுள் சிவபுராணம் பற்றிய பாடலைக் காணலாம்.

"தேசுறு மாணிக்க மெனச்
சிறந்த திருவாசகத்தில்
பேசு திருச் சிவபுராணத்து அகவல்
பெருமை சொலில்
ஈசர் தமக்கு இயல்பான திருநாமம்
முதல் எவையும்
மாசறவே வாழ்க என
வாழ்த்துகின்ற அருட்குறிப்பாம்"

மேலே குறிப்பிடப்பெற்ற பாடலின் அடிப்படையில் சில செய்திகளைக் காணலாம்.

(அ) சிவபுராணம் என்பதை அகவல் யாப்பு எனக் கொண்டுள்ளார். இப்போதுள்ள பதிப்புகளில் கலிவெண்பா யாப்பினால் அமைந்தது என்றுள்ளது.

(ஆ) நமச்சிவாய என்பதை இறைவனின் இயல்பான பெயர் என்று குறிப்பிட்டுள்ளார்.

(இ) எல்லாவற்றையும் வாழ்க என வாழ்த்தும் திருவருட்குறிப்பைக் கொண்டது சிவபுராணம்.

(ஈ) தேசுறு மாணிக்கமெனச் சிறந்தது திருவாசகம்.

3. இனி, சிவபுராணம் பற்றிய வேறொரு முன்னுரையையும் சிந்தித்தல் இன்றியமையாதது.

திருவாசகத்தின் 51 பிரிவுகளுக்கும் இயைபுடைத்தாய உள்தலைப்பு அல்லது சிறு தலைப்பு ஒன்று அருளப்பெற்றுள்ளது.

சிவபுராணத்துக்கு அவ்வகையில் அமைந்த உள் தலைப்பானது : "சிவனது அநாதி முறைமையான பழமை" என்பது.

"சிவபுராணட" என்பதற்குச் சிவபெருமானது பழையனவாகிய பெருமைகளைக் கூறும் பாட்டு என்று முன்னோர்கள் பொருள் கண்டுள்ளனர். அதுவே கருத்தாயின் சிவபுராணம் என்பதற்குச் "சிவனது" பழைமை என்று நேராகவே பொருள் கூறிவிடலாம். ஆயினும் சிவனது "அனாதி

முறைமையான பழைமை" என அத்தொடர் குறிப்பிட்டிருப்பதால் வேறு பொருள் இருத்தல் வேண்டும்.

சிவன் எனும் நாமம் தனக்கே உரிய செம்மேனி எம்மானாகிய பரம்பொருள் பழைமையானவனே யாயினும்

"முன்னைப் பழம்பொருட்கு முன்னைப்பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே"

எனவும் கூறப்படும் இயல்பினன் என்பது மதுரவாசகம் பகர்ந்த மணிவாசகப்பெருமான் திருவுள்ளக் கருத்தே.

இறைவனின் தனித்தன்மைகள் பலவாயினும் இங்கே குறிப்பிடப் பெறுவது இறைவனுக்கும் ஆன்மாவுக்கும் உள்ள ஒருவகை உறவு பற்றியதே எனக் கொள்வது சிறப்புடையதாகும்.

"பழைமை எனப்படுவது யாதெனின் யாதும்
கிழமையைக் கீழ்ந்திடா நட்பு"

என்ற திருக்குறட் பொருளை ஓர்ந்து உணர்க.

இறைவனுக்கும் ஆன்மாவுக்கும் உள்ள இறையுறவு படாத ஒரு காலத்தில் ஒருவனால் தோற்றுவிக்கப்பட்டது என்று கூறப்படாத உறவு ஒன்று உண்டு. இத்தகைய உறவு ஒன்று உண்டு என்பதைக் காரைக்காலம்மையாரும்

"சீர்வல்லதாயம்"

என்று அற்புதத் திருவந்தாதியில் கூறியருளினார். அத்தகைய உறவை ஆன்மாவானது உணர்ந்து பற்றுதல் வேண்டும். எனவும் அந்த உறவே அத்துவித உறவு என்றும் மெய்ப்பொருளியல் வல்லுநர் அறைவர்.

4. இனி சிவபுராணம் என்பது திருவாசக முழுமைக்கும் அமைந்த பாயிரம் என்று கொள்ளுதல் வேண்டும் என்பதும் மரபு வழிச் சிந்தனையே. இங்ஙனம் மங்கல வாழ்த்து முதலாக, பாட்டின் பயன் ஈறாக, பாயிர உறுப்புகள் பலவும் அமைய இதனை அருளிச் செய்தமையின், அடிகள் தம் பெருமானைப் பலவாற்றானும் பாடி மகிழ விரும்பி, அங்ஙனம் பாடத்

தொடங்குங்கால் இதனையே முதற்கண் அருளிச் செய்தார் என்பது பெறுதும். இதனானே இதனுட் கூறப்பெற்ற பாயிரப் பகுதிகள் பலவும், பின்னர் அருளிச்செய்த பல பகுதிகட்கும் பொருந்துதல் காண்க என்பது அமரர் மகாவித்துவான் டாக்டர். அருணை வடிவேலு முதலியார் அவர்களின் ஆய்வுரை.

மேலும், "சிவபுராணம்" என்பது திருவாசகம் எனப்பெறும் அருளியற் பெரும்பேற்று வாழ்வியற்பொருள் நூலுக்கு அமைந்த பாயிரமே என்பதை வேறொரு சான்று கொண்டும் காணலாம்.

'நமச்சிவாய வாஅழ்க' எனத்தொடங்கி ஆராத இன்பம் அருளும் மலை போற்றி என்ற முடிவு வரையிலும் முறையே நோக்கின் வாழ்க என முடிவன ஆறு : வெல்க என முடிவன ஐந்து : போற்றி என முடிவன எட்டு : ஆக 6,5,8 என்ற எண்களில் அமைந்த பாடல்களைத் தன்னுள் அடக்கியதே திருவாசகம் எனக் கொள்ளலாம். இன்று நமக்குக் கிடைக்கும் திருவாசகப் பாடல்களின் எண்ணிக்கை 658 என்பதே.

சிவபுராணம் பாடுபொருள் :

சிவனது அநாதி முறைமை எனப்பெறும் பழைமை என்பது இரு கூறாகப் பிரிந்து நெறியாகவும் செயற்பாட்டு முறையாகவும் மலர்கிறது என்று தெளிவாக வகைப்படுத்திக் கொள்ளலாம்.

'பழைமை' என்பதன் இலக்கணம் "யாதும் கிழமையைக் கீழ்ந்திடா நட்பு" என்பதே. இது ஒருவகை இருமை உறவு.

பழைமைக்கு உரிமையுடைய பொருள் இரண்டு ஆதலின் உறவும் இருவகைப்பட்டது. இங்கே சுட்டப்பெறும் இருவகை உறவுகளையும் எடுத்துக்காட்டும் வகையில் காரைக்கால் அம்மையார்

"திறத்தால் மடநெஞ்சே சென்று அடைவதல்லால்
பெறத்தானும் ஆதியோ பேதாய் - நிறத்த
இருவடிக்கண் ஏழைக்கு ஒருபாகம் ஈந்தான்
திருவடிக்கண் சேரும் திரு"

என அற்புதத் திருவந்தாதி 47ஆம் செய்யுளிற் குறிப்பிட்டருளினார்.

"திருவடிக்கண் சேரும் திரு" எனப்பெறும் பேற்றினை இருவகை நெறிகளிற் பெறலாம் என்று குறிப்பிட்டருளினார்.

1. திறத்தால் சென்று அடைவது

2. அவன் அளிக்கப்பெறுவது

பழைமையும் கிழமையும் காரணமாக இருவகை உறவுகள் அமைகின்றன.

ஆன்மாவானது தானே முயன்று தம்முடைய முயற்சி வலிமையால் சென்று இறைவன் திருவடிப்பேற்றினை அடைதல் என்பதே திறத்தால் சென்று அடைவது. இது ஆன்மாவின் முயற்சியால் சென்று அடையும் நெறி. இது நமச்சிவாயப் பெருநெறி

பின்னது இறைவன் தானே வந்து தலையளி செய்து, தன்னைக்கொடுத்து ஆன்மாவைத் தனதாக்கித் தன் திருவடிப்பேற்றை அருளுவது. இது இறைவன் தன்னை அளிக்க, ஆன்மாவானது அருளியலனுபவப் பெரும் பேற்றை அடைந்து துய்ப்பது. இது சிவாயநமப் பெருநெறி.

காரைக்கால் அம்மமையார் கூறும் திறத்தால் சென்று அடைவது என்பதே நமச்சிவாயப் பெருநெறி. அவன் அளிக்கப் பெறுவது என்பதாக அம்மையார் கூறும் நெறியே சிவாயநமப் பெருநெறி.

இங்கேஎடுத்துக் காட்டப்பெற்ற இருவகை நெறிகளையும் சற்று விரிவாக நாம் விளங்கிக் கொள்ளுதல் வேண்டும்.

'நமச்சிவாய' என்பது இறைவன் திருநாமம் என்பது அனைவரும் உணரக் கிடந்த உண்மை.

"நாதன் நாமம் நமச்சிவாயவே"

என்பது ஞானசம்பந்தர் திருவாக்கு.

சுந்தரர் காலத்தில் ஐந்து எழுத்துகளும் ஐந்து பதங்களாக விளக்கம் செய்யப்பெற்றன.

சுந்தரர் காலத்துக்கும் ஞானசம்பந்தர் காலத்துக்கும் முற்பட்ட நிலையில், 'தத்வமசி' மகாவாக்கியத்துக்கேற்ப 'நமசிவய' என்பது மூன்று பதங்களாகப் பிரிக்கப் பெற்றிருந்தன.

நமப்பதம் ஆன்மாவைக் குறிக்கும்; சிவப்பதம் பரம்பொருளைக் குறிக்கும். அசிபதம் இரண்டன் உறவைக் குறிக்கும். நம, சிவ, ஆய என அமையும் போது ஆன்மாவானது தானே தன் முயற்சியால் சென்று இறைவனை அடைவது. இதையே காரைக்கால் அம்மையார் திறத்தால் சென்று அடைவது என்றார்.

'சிவ, ஆய, நம' என அமைவது இரண்டாவது நெறி. சிவப்பதமாகிய பரம்பொருள் தாமே முன்னின்று ஆண்டு ஆன்மாவைத் தன் வயப் படுத்திக்கொள்வது. இந்நெறியே இறைவனால் அளிக்க ஆன்மாவ்வானது பெறும் இரண்டாவது நெறி.

நம, சிவ, ஆய என்பது அனைத்து ஆன்மாக்களுக்கும் பொதுவாய நெறி. சிவ, ஆய, நம என்பது மணிவாசகர் பெற்ற மாண்பமை நற்பெருநெறி. இதனாலேயே மணிவாசகப்பெருமான் திருவாசகத்தில் 38ஆம் பதிகமாக விளங்கும் 'திருவேசறவு' என்னும் பதிகத்தின் பத்தாவது பாடலில்,

"நானேயோ தவம் செய்தேன்
சிவாயநம எனப்பெற்றேன்
தேனார் இன்னமுதமுமாய்த் தித்திக்கும்
சிவபெருமான்
தானே வந்து எனதுள்ளம் புகுந்து
அடியேற்கு அருள் செய்தான்
ஊனாரும் உயிர் வாழ்க்கை ஒறுத்து
அன்றே வெறுத்திடவே"

என்ற திருப்பாட்டாலும் ('சிவாயநம' என்பது மந்திர உபதேசமன்று)

"தந்தது உன் தன்னைக் கொண்டது
என் தன்னை"

என்ற வாய் மொழியாலும் உணர்த்துவராயினர்.

இவ்விரு வகை நெறிகளையும் அவற்றின் அமைப்புகளையும் சிவபுராணத்தில் தெளிவாக எடுத்துக் காட்டியிருப்பதைக் காணலாம்.

"நமச்சிவாய வாஅழ்க"

பழைமையில் அமைந்த முதன்மைப் பொதுமைப் பெருநெறியே நமச்சிவாய்ப் பெருநெறி இதனாலேயே 'வாஅழ்க' என அளபெடை கொடுத்துக் கூறினாராயிற்று.

இப்பொதுமைப் பெரு நெறியானது ஆறு பகுதிகளாகப் பிரிந்து நிற்கும். அவைகளை முறையே 'நமசிவ ஆதல்', 'நாதன்தாள்', 'நீங்காதான் தாள்', 'குருமணி தன் தாள்', 'அண்ணிப்பன் தாள்' என ஐவகைப் படிநிலைகளைக் கடந்து, ஏகன் அநேகன் இறைவன் என நின்ற பரம்பொருளின் திருவடியை அடைதல். இதனைத் 'தொந்த தசி' என வழங்குவது தத்துவ மரபு. இங்கே 'தாள்' என்பது முயற்சியைக் குறிக்கும்.

நமசிவாய என்பதைத் தொடக்க உணர்வாகவும் நால்வகைச் சந்நிதி பாதங்களைத் தாங்கள் எனவும் கொண்டு, அடையப் பெறும் பயனாகத் திருவடிப் பேறு என்பதைக் குறித்தார் எனவும் கொள்ளலாம்.

நமசிவாயப் பெருநெறியில் அமைந்த ஐவகை மலக்கட்டுகளையும் வெல்லுதல் வேண்டும் என்பதை ஐவகை வெல்க எனும் சொற்களால் குறிப்பிட்டார்.

நால் வகைச் சந்நிதி பாதம் பெற்று ஐவகை மலங்களை வென்று திருவடிப்பேற்றை அடைந்தவர்கள் இறைவனுடைய எண்குண அனுபவம் பெறுவார்கள் என்பதை எட்டு வகையான போற்றிகளை அருளினார் எனக் கொள்ளுதல் வேண்டும்.

"ஆராத இன்பம் அருளும் மலை போற்றி" எனக் கூறி நமசிவாயப் பெருநெறியின் இயல்பையும் அமைப்பையும்

படிநிலைகளையும் பேற்றின் அருமையையும், அப்பேறானது எண்வகை அனுபவமாக அமையும் என்பதையும் எடுத்துக் காட்டினார்.

சிவாயநம என்னும் பெருநெறி

நமசிவாயப் பொதுமைப் பெருநெறிக்குப் பின் விளைவது சிவாயநமச் சிறப்பு நெறி இதுவே தத்துவமசி மகாவாக்கியத்தின் நேர்ப்பொருள் விளக்கம். இதனைச் சிவஞான முனிவர் சிவத்துமசி எனக் கூறுவர்.

இப்பெருநெறியில் இறைவன் ஆன்மாவைத் தலையளித்துத் தன் வயமாக்கிக் கொள்வான். நமசிவாயப் பெருநெறியில் அமைந்த வினை-முந்தை வினை முழுதும் மோய்ந்து விடும். சிவாயநமப் பெருநெறிப்பேறு பெற்றவுடன் முந்தை வினை முழுதும் மோய உரைப்பன என்பதற்குச் சஞ்சிதம், பிரார்ப்தம், ஆகாமியம் ஆகியவைகளை எடுத்துக் காட்டுவர்.

முந்தையன என்பது ஆன்மாவின் செயல். 'சிவாயநம' ப் பெருநெறியில் ஆன்மாவின் சொல் செயல் யாவும் இறை வசமாகும். இதனை மணிவாசகப்பெருமான்

"கயல் மாண்ட கண்ணிதன் பங்கன்
என்னைக் கலந்து ஆண்டலுமே
அயல் மாண்டு அருவினைச் சுற்றமும்
மாண்டு அவனியின்மேல்
மயல்மாண்டு மற்றுள்ள வாசகமும்
மாண்டு என்னுடைய
செயல் மாண்டவர் பாடித்
தெள்ளேணம் கொட்டாமோ"

என்ற திருவாசகத் தெள்ளேணப் பதிகத்துப் பதினோராம் பாடலிற் குறித்துள்ளமை கண்டு தெளியலாம்.

நமசிவாயப் பொதுமைப் பெருநெறி நிறைவடைந் தமையாலும் சிவாயநமப் பெருநெறி தோன்றியதாலும்

"சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினை முழுதும் மோய உரைப்பன் "

என்றார்.

சிவாயநமப் பெருநெறிக்கு முன்னதாய நமசிவாயப் பெருநெறியை வாழ்த்தி, அந்நெறியின் விளக்கங்களைக் கூறி முடித்தபின் சிவாயநமப் பெருநெறியின் தோற்றத்தை எடுத்துக் கூற முற்படும் நிலையில் எழுந்த வரிகளே மேலே குறிப்பிடப் பெற்ற இரண்டு வரிகளும்.

"சிவாயநம "எனப் பெறும் பெருமைச் சிறப்பு நெறியைச் சிவபுரானாத்துள்:

"நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே "

என்ற வரிகளால் உணர்த்திப் போந்தார். மேலும் இதனை

"ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை"

என்ற தொடராலும் குறிப்பிட்டுக் காட்டினார்.

சிவாயநமப் பெருநெறியின் அமைப்புப் மேறும்

"சிவயாநம" என்னும் சிறப்புப் பெருநெறியில் சொல்வதற்கு அரியானைச் சொல்ல முடியும் என்பது முதல் வெற்றி. அதற்கு மேல் ஐந்து வெற்றிகளை எடுத்துக்காட்டிச் சிவபுராணத்திலேயே விளக்கிக் கூறவும் செய்தார்.

போற்றுதல்
புணர்தல்
இருத்தல்
பொய்கெடுதல்
மெய்ஆதல்

என்ற ஐவகைப் பெருமைசால் வெற்றிப் பேறுகளை இணைத்துக் காட்டியுள்ளார்.

'போற்றிப் புகழ்ந்திருந்து' என்பது பாடமன்று. 'போற்றிப் புணர்ந்திருந்து' என்பதே பாடமாகக் கொள்ளல் வேண்டும். புணர்ந்திருப்பதன் சிறப்பையும் படிநிலைகளையும் புணர்ச்சிப் பத்தினுள் எடுத்துக் காட்டி விளக்கியுள்ளார்.

நமசிவாயப் பெருநெறியின் இயல்பை ஆராத இன்பம் அருளும் மலை போற்றி என்ற வரியுடன் நிறைவு செய்து கொள்ளும் மணிவாசகப் பெருந்தகை.

"சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்" என்ற வரி தொடங்கித் திருவாசகம் முழுவதிலும் சிவாயநமப் பெருநெறியின் சிறப்பியல்புகளையே அருளியலனுபவப் பெரு வாழ்வியலில் நின்று கூறினாராகக் கொள்ளுதல் வேண்டும்.

"சிவாயநம "எனப் பெறும் பெருநெறியில் ஐவகைப்படி நிலைகள் உண்டு. அவற்றுள் இடைநின்ற "இருத்தல்" என்ற அனுபவம் சொல்லொணாத அனுபவப் பெருநிலை என்பதை அருளாளர்கள் போற்றி எடுத்துக் கூறிவியந்துள்ளார்கள்.

மேலும் ஒரு கருத்தை அறிஞர்தம் ஆய்வுக்கு உரிய பொருளாக எடுத்துக் காட்டும் இச்சையுடையேன்.

"தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்" என்ற தொடர் மணிவாசகரையே குறிக்கும் என்று கருதும் அறிஞர்களும் உண்டு என்பதை ஆராய்தல் வேண்டும்.

முடிப்புரை

மேலே எடுத்துக் காட்டப் பெற்றவற்றால் சிவபுராணம் கொள்ளும் சில சில செய்திகளை நிலை நிறுத்ததலாம்.

1) மணிவாசகர் பெருந்துறை புகுந்தவர்.

2) திருவாசகம் இன்றைக்கு நமக்குக் கிடைப்பது இறைவன் திருவடிக் கீழ்நின்று கோவைப் படுத்திச் சொல்லப் பெற்றது.

3) காரைக்காலம்மையாரை அடுத்துள்ள காலத்தில் தில்லையைக் கண்ட பெருமைக்குரியவர் மணிவாசகர்.

4) திருவாசகம் உணர்த்துவது எல்லை மருவாநெறி எனவும் பத்திநெறி எனவும் கூறப் பெற்றுள்ளன.

5) மணிவாசகப் பெருமானின் இருத்தல் அனுபவம் பற்றிய விளக்கம்.

6) சிவபுராணத்தைத் திருவாசகத்துக்குப் பாயிர மாகக் கொள்ளுதல்.

7) சிவபுராணத்தின் உள்ளுறை சிவனது அனாதி முறைமையான பழமை.

8) சிவபுராணம் காட்டும் இருவகை நெறி.

9) நமசிவாயப் பொதுமைப் பெருநெறியை எடுத்துக் காட்டியதோடு நிறுத்தி விடுதல்.

10) சிவாயநமப் பெருநெறிமாண்பாக மலர்ந்ததே திருவாசகம்

2. கீர்த்தித் திருவகவல்

முனைவர். ஜே. ரோசுலெட்

உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கு அரியவன் சிவபெருமான். அவனின் சீராரும் சிறப்புக்களை அவனருளால் ஐம்புல உணர்வுகளையும் வென்ற மாணிக்கவாசகர் பாடிப்பரவுவதே திருவாசகம். காண்பதற்கரிய பரம்பொருளைப் பல வடிவங்களிலும் கண்டு உள்ளம் நெக்குருகிப் பரவும் மார்க்கம் இப்பனுவலில் 51 பதிகங்களுளிலுள. அவற்றுள் இரண்டாம் பகுதி கீர்த்திருவகவல். இப்பகுதி நாற்சீரடியான் அமைந்த 146 அகவற்பாவாகும் கீர்த்தி என்பது பெருமை. அகவல் என்பது பேசுதல் அல்லது பரவுதல் எனப்படும். இறைவன் பெருமையைப் பேசிப் பரவுதலே இப்பதிகச்செயல்

இறைவன் குருவாகி வந்து அவரவர் பக்குவத்திற்கேற்பத் திருவருள் கூட்டும் நெறியே சைவ நெறியாகும். இங்குக் குருவே சிவமாகும். அடியார்களுக்கு அருள்செய்ய பற்பல வடிவமேற்பவன் சிவபெருமான். அப்பெருமான் உலக இன்பத்தினை உயிர்களுக்கு நுகர்விக்கப் போகமூர்த்தியாகவும் ஞான நன்னெறியில் நலம்பெற யோக மூர்த்தியாகவும் குற்றம் கடிந்து மறக்கருணையால் தண்டித்து ஆட்கொள்ள அருள்சுரக்கும் வேக மூர்த்தியாகவும் வெளிப்படுகின்றான்.

கீர்த்தித்திருவகவலில் சிவனின் 44 அருட் செயல்கள் நிலைமண்டில ஆசிரியப்பாவில் மாணிக்க வாசகரால் தெவிட்டாமல் தரப்பட்டுள. அளவடிப்பாடல் இங்குத் திருவருள் சிறப்பு குறைவின்றிச் சிந்தாமல் சிதறாமல் நேரடியாய் நிறைந்து சிறக்கிறது என்பதை உணத்தவே வாதவூரர் இவ்யாப்பு வடிவம் ஏற்றார் எனலாம்.

அருட் செயல்கள்

அடியார்களை உய்விப்பதற்காக இறைவன் கொண்ட கோலங்களே அருட் செயல்கள். அவனின் கருணையும் ஆற்றலும் சீலமும் அருட் பெருக்கும், அடியார்களுக்கு எளியனவாய் எட்டும் வகை கீர்த்தி திருவகவலின் உச்சம்.

வலை வீசி மீன் பிடித்ததும், நரியைப் பரியாக்கியதும், பிட்டுக்கு மண் சுமந்ததும், தண்ணீர்ப் பந்தலமைத்ததும், பட்டமங்கையில் அட்டமாசித்தி உரைத்ததும், திருவோரியூரில் பாலகனானதும், போர் வீரனாக வில் தாங்கியதும் திருவியையாடற் புராணத்தில் இடம் பெறும் சிவ விளையாடல்களாகும். இவ்வாடல் சிற்சில வேறுபாடுகளுடன் பெரும்பகுதியும் மாற்றம் இன்றியே கீர்த்தித் திருவகவலில் மாணிக்கவாசகரால் பாடப்பெற்றுள்ளன. பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற் புராணம் இறைவன் வலையில் சிக்குண்டது

"வெவ்வினைச் சுறவே றையன் விடுவலைப் பட்டவன்றே"

(2702-4)

எனப்பாடுவார். மாணிக்கவாசகரோ கீர்த்தித் திருவகவலில்,

"கேவேடர் ஆகி கெளிறது படுத்தும்
மாவேட்டு ஆகிய ஆகமம் வாங்கியும்" *(17-18)*

என வலைப்பட்டது கெளிற்று மீன் என்கிறார். இங்குச் சுறா, கெளிறு என்ற வேறுபாடன்றிப் பிற ஒன்றும் மாறு கொள்ளவில்லை.

சிவபெருமானின் அருட்கொடை அனைத்தும் ஏழையரை ஏற்றவே நிகழ்த்தப் பெற்றன. மகேந்திர மலையில் ஐம்முகத்தால் ஆகமம் கூறியும், திருப்புறம்பயத்தில் அறநூல்களை இயற்றியும், திருவாரூரில் பரஞானம் வழங்கியும், சாந்தம்புத்தூரில் போர் புரியும் வேடனுக்குக் கண்ணாடியில் காட்சி நல்கியும், திருவிடை மருதூரில் பாதம் பதித்தும், திருவாதவூரில் திருவடிச் சிலம்பினை ஒலித்தும் அடியவர்களை ஆட்கொண்டான் சிவன். இவை ஞான நன்னெறியில் உயிர்கள் நலம்பெற இறைவ்ன் யோக மூர்த்தியானமையை விளக்கும்.

சந்திர தீபத்தில் சாஸ்திரியாகவும், திருப்பெருந்துறை நந்தம் பாடி, உத்தரகோசமங்கை ஆகிய ஊர்களில் ஞானாசிரியனாகவும், திருவெண்காட்டில் விருந்தினனாகவும், மதுரையில் குதிரைப் பாகனாகவும், மொக்கணீச்சுரத்தில்

தீவண்ணனாகவும் கோலங் காட்டினான். இக்கோலங்களால் அருள்சுரக்கும் வேக மூர்த்தியாகிறான் இறைவன்.

காஞ்சியில் சிவசக்தியாய்த் தோற்றம் தந்த சிவம் திருக்கடம்பூர், திருவீங்கோய்மலை, திருவையாறு போன்ற ஊர்களில் திருநீற்றுக் கோலத்துடன் அடியவர்க்குக் காட்சி நல்கினான். திருவாஞ்சியூர், சீர்காழி, திருக்கழுக்குன்று, திருக்குற்றாலம், பாலை, வேலம்புத்தூர், பஞ்சப்பள்ளி, கல்லாடம் போன்ற தலங்களில் இறைவன் போக மூர்த்தியாக எழுந்தருளியமையைக் கீர்த்தித்திரு அகவல் விளம்பும்.

இறைவனின் இவ்வருட் கோலங்களை "இந்திர ஞாலம்" (94) என்கிறார் மாணிக்கவாசகர். உலகின் இயற்கை அதில் வாழ் உயிர்கள் அனைத்தும் இறைவனுடைய மாயவித்தைகள். அம்மாய வித்தையைத் தன்னிடத்திருந்து தோற்றுவித்துக் தன்னுள்ளே அடக்கும் பேரருள் சிவமேயாகும்.

உயிர்களை ஆட்கொள்ளல்

உலக இன்பங்களைப் போற்றி மயங்குவன உயிர்கள். அவை பரஞானம் ஒராது துன்பக்கடலில் மூழ்கிக் கரைகாணத் துயர்மேவும். அவற்றை உய்விக்கவே இறைவனின் திருவிளையாடல்கள். அவ்வாடல்கள் இறையின் தலைவனாம் தன்மையை உயிர்களுக்கு உணர்த்திப் பரிபக்குவம் தரும். இதனை,

"என்னைத் தன்னடியா னென்ற றிதலும்
தன்னை நானும் பிரானெனன் றறிந்தேனே"

என மொழிவார் மணிவாசகர். உயிர்களை ஆட்கொள்ளுகையில் அவற்றின் அழுக்கு நீங்கி .இருத்தல் வேண்டும். அழுக்கே ஆணவம் கன்மம் மாயையாம் மும்மலங்கள். நீரானது அலை, நுரை, திவலைகளாதல் போல ஆன்மா பல்வகையான வடிவெடுக்கும். மும்மலம் கழிந்த ஆன்மா உண்மை வடிவாம் சிவமாகும். சூரியன் முன்னர் இருள் மாய்வது போலச் சிவ ஐக்கியத்தில் மும்மலங்களும் கழியும். மும்மலம் அறுப்பவன் சிவன் என்பதை.

"மூலமாகிய மும்மல மறுக்கும்
தூயமேனி சுடர்விடு சோதி" (111-112)

என்பர் மாணிக்கவாசகர்.

மின்சாரம் மின்விளக்காக மின்சங்காக மின் அடுப்பாகக் குளிர்சாதனப் பெட்டியாகப் பல்வேறு வகையான இயக்கப் போக்குடையது. உயிர்களும் அத்தகைய பல்வேறு வகையான இயக்கங்களைக் கொண்டுள்ளன. இவ்வியக்க ஆற்றல் திறன் கொண்டே இறைவன் உயிர்களை ஆட்கொள்ளுகின்றான்.

"எப்பெரும் தன்மையும் எவ்வெவர் திறனும்
அப்பரிசு அதனால் ஆண்டு கொண்டருளி" (125-126)

என்னும் வரிகள் இறைவனின் பேரருள் திறத்தினை வெளிப்படுத்தும். இப்பேரருள் குரு, வேதியன், குதிரைப்பாகன், தீவண்ணன், வில்வேடன், சோதி உருவன், ஞானாசிரியன், சிலம்போசையன், தொண்டன், விருந்தினன் எனப் பல்வடிவ சிவசக்திகளாக வெளிப்படும். இதனை,

"வேறு வேறுருவும் வேறுவே யியற்கையும்
நூறு நூறாயிர மியல்பின் தாகி" (23-24)

என மொழிவார் வாதவூரார். ஓருருவம் ஒரு நாமம் இல்லா இறைவன் உருவினைக் காண இயலாத காரைக்காலம்மையார்,

"அன்றும் திருவுருவம் காணாதே ஆட்பட்டேன்
இன்றும் திருவுருவம் காண்கிலேன் - என்றுமே
எவ்வுருவோன் நும்பிரான் என்பார்கட்கு என்னுரைப்பேன்
எவ்வுருவே நின்னுருவம் எது?

என உருகுகின்றார். மாணிக்கவாசகரோ இறைவன் குருவடியில் தனக்குக் காட்சி தந்தமையை,

"அருபரத் தொருவன் அவனியில் வந்து
குருபரன் ஆகி அருளிய பெருமையும்"

என்றும்

"அந்தமில் பெருமை அருளுடை அண்ணல்
எந்தமை ஆண்ட பரிசு" (101-102)

என்றும் பாடிப்பாடி மகிழ்வார்.

இறைவனின் அருட்செயல்களுக்கு அவனுடைய ஐம்முகத் தோற்றம் காரணமாகின்றது. உயிர்களைப் படைத்தலும் காத்தலும் அழித்தலும் மறைத்தலும் அருளலும் இறைவனின் ஐந்தொழில்கள். அதன் வெளிப்பாடே சிவனின் ஐந்து முகங்கள்.

"ஒன்றாகி மூலத்து உருவம் பலவாகி"

என்பது கம்பன் வாக்கு. அடியவர்களை உய்விக்க வேடம்புனையும் வேடதாரியான சிவபெருமான் மகேந்திரமலையில் ஐம்முகங்களால் உபதேசித்தருளினான். இதனை

"மாவேட்டு ஆகிய ஆகமம் வாங்கியும்
மற்றவை தம்மை மகேந்திரத் திருந்து
உற்ற ஐம்முகங்களால் பணித்தருளியும்" (18-20)

என்ற வரிகளால் புலப்படுத்துவார் மாணிக்கவாசகர். திருமூலரும்

"முகம் ஐந்து செங்கண் மூவைந்து"

எனவும்

"ஐந்து முகம் உள ஐம்மூன்று கண்ணுள"

எனவும் கூறிப் பக்திப் பரவசப்படுவார். மூர்த்தங்கள் எல்லாம் சிவ அடக்கம் என்பதே ஐம்முகப் பொருள்.

பஞ்ச முகங்களான சத்புருஷம், அகோரம், சத்யோ ஜாதம், வாமதேவம் ஈசானம் எனப்படும். சிவ ஐம்முகங்களே சைவ ஆகம பிறப்பிடம். இதனை

"மன்னு மாமலை மகேந்திர மதனில் சொன்ன
ஆகமம் தோற்று வித்தருளியும்" (9-10)

என அருளுவார் மாணிக்கவாசகர்

சிவனின் திருவிளையாடலில் கலை ஞானங்களை தோன்றவும் மறையவும் செய்யும். அஞ்ஞான இருள் முற்றும் மாயும். இதனை

"துன்னிய கல்வி தோற்றியும் அழித்தும்
என்னுடை யிருளை யேறத் துரந்தும்" (5-6)

எனப் பாடுவார். வாகீசர் இறையருட் செயல்களில் உருக்கரந்து அருளும் செயலும் சுட்டப்பட்டுள்ளது. இவ்வுருக் கரத்தலை,

"அந்தமில் பெருமை அழல் உருக்கரந்து
சுந்தர வேடத்து ஒரு முதல் உருவு கொண்டு
இந்திர ஞாலம் போல வந்தருளி
எவ்வெவர் தன்மையும் தன்வயின் படுத்து" (92.95)

என மொழிவார் வாதவூரார்.

"திருவார் பெருந்துறைச் செல்வ னாகிக்
கருவார் சோதியில் கரந்த கள்ளமும்" (54.55)

என்று வேறிடத்துச் சிவனின் உருக்கரக்கும் தன்மையை வெளிப்படுத்துவார் மாணிக்கவாசகர். இறைவனின் உருக்கரத்தலும் வெளிப்படலும் திருவருள் ஆகும். அவ்வருள் மனித மீட்சிக்கே என்பது போதரும்.

ஐம்முகச் சிவன் மாணிக்கவாசகரைத் தேவர் கோனாக வந்து ஆட்கொண்டான். அக்காட்சி 26 அடிகளில் (100 - 126) விரிந்து சென்று பத்து அரச சின்னங்களாய் மருள் நீக்க அருளும். இதுவே தசாங்கம் எனப்படும். இத்தசாங்கத்தில் சிவனின் நெற்றிப்பட்டை கொடியாகவும், அருள் ஆறாகவும், நாதப்பிரம்மம் (ஒலி) நாதப் பெரும் பறையாகவும், முத்தலைச் சூலம் படையாகவும், கருணை மாலையாகவும், பரிமா ஊர்தியாகவும், பாண்டி நாட்டைத் தன் நாடாகவும், உத்தரகோச மங்கையை ஊராகவும், தேவதேவன் என்னும் திருப் பெயர் பூண்டு கைலாயமலையை அருள் மலையாகக் கொண்ட ஆண்டவன் சிவன் என்பார் மாணிக்கவாசகர். இவ்வகவற்பாவே மாணிக்கவாசகர் திருவருளில் கலந்த பேரானந்தத்தை,

"உனம் தன்னை ஒருங்கு உடன் அறுக்கும்
ஆனந்தமே ஆறா அருளியும்" (105-106)

என்றும்

"வான் வந்த சிந்தை மலம் கழுவி வந்து இழியும்
ஆனந்தம் காண்யாறு"

என்றும் பேசும்

திருவாசகத் தேன் மாந்தி ஊனுருகி உள்ளொளி பெருகி வான் கலந்த நிலைமேவ கீர்த்தித் திருவகவல் வழிகாட்டி நிற்கிறது. இம்மெய்மையை அனுபவித்து அனுபவித்து வள்ளல் இராமலிங்க அடிகளார்.

"வான் கலந்த மாணிக்க வாசக நின்வாசகத்தை
நான் கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன் கலந்து பால்கலந்து செழுங்கனித் தீஞ்சுவைகலந்து
ஊன் கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிப்பதுவே"

எனப்பாடிச் சென்றுள்ளார்.

⁂

3. திருவண்டப் பகுதி

- தவத்திரு **ஊரன் அடிகளார்**

திருவாசகத்தின் முதல் நான்கு அகவல்களும், திருக்குறள் முதல் நான்கு அதிகாரங்களைப் போன்றவை.

திருவாசகம்	**திருக்குறள்**
1. சிவபுராணம்	1. கடவுள் வாழ்த்து
2. கீர்த்தித் திரு அகவல்	2. வான்சிறப்பு
3. திருஅண்டப் பகுதி	3. நீத்தார் பெருமை
4. போற்றித் திருஅகவல்	4. அறன் வலியுறுத்தல்

திருவாசகத்துக்கும், திருக்குறளுக்கும் முகம் போன்றவை இவை.

"திருவண்டப்பகுதி" என்ற பெயரே (தலைப்பு) அருமையானது. "அண்டப்பகுதியின் உண்டைப்பிறக்கம்" என்று தொடங்குவதால் "திருஅண்டப்பகுதி" என்று பெயர் பெற்றது. முதற்குறிப்பாற் பெற்ற பெயர்.

திருவாசகப் பதிகங்களின் பெயர்களுக்கு (தலைப்புகளுக்கு) ஒரு கருத்துக்குறிப்பு துணைத்தலைப்புப் போன்று, தலைப்பை - பதிகப்பெயரை - ஒட்டியே கொடுக்கப் பெற்றிருக்கும். இதற்குக் "திருவுள்ளக்கிடை" என்று பெயர். 51 பதிகங்களுக்குமே இப்படித் திருவுள்ளக்கிடை உண்டு. அச்சிட்ட நூல்களிற் காணலாம். இவை அச்சிட்டார் கொடுத்தன்று. பழமையான ஏடுகளிலேயே காணப்பெறுபவை. மாணிக்கவாசகரின் திருவுள்ளத்தை, பதிகக் கருத்தை, திறந்து காட்டும் இத்திருவுள்ளக் கிடைகள் திறவுகோல்கள் போன்றவை.

பதிகம்	திருவுள்ளக்கிடை
1. சிவபுராணம்	1. சிவனது அநாதி முறைமையான பழமை
2. கீர்த்தித் திருவகவல்	2. சிவனது திருவருட் புகழ்ச்சி முறைமை
3. திருவண்டப்பகுதி	3. சிவனது தூல சூக்குமத்தை வியந்தது
4. போற்றித் திருவகவல்	4. சகத்தின் உற்பத்தி

திருவண்டப் பகுதியின் திருவுள்ளக்கிடை "சிவனது தூல சூக்குமத்தை வியந்தது". தூலம் - பருமை. சூக்குமம் - நுண்மை. அண்டம் தூலம். அணு-சூக்குமம். இறைவன் அண்டத்தைப் போன்று பருமையாகவும் (தூலமாகவும்) விளங்குகிறான். அணுவை போன்று நுண்மையாகவும் (சூக்குமமாகவும்) விளங்குகிறான். இவ்வாறாக விளங்கும் இறைவனது தூல சூக்குமத் தன்மையை வியப்பதே திருவண்டப்பகுதி. ஆதலின் அது சிவனது தூல சூக்குமத்தை வியந்தது என்னும் திருவுள்ளக்கிடயைப் பெற்றது. "சூக்கமொடு தூலத்து" என்பது திருவண்டப் பகுதியின் பத்தாவது அடி (வரி)

அண்டத்தைப்பற்றியும் அணுவைப்பற்றியும் திருவண்டப் பகுதியில் மாணிக்கவாசகர் பல செய்திகளைக் கூறுகிறார். இது அணு விஞ்ஞான காலம், அண்ட விஞ்ஞான காலம். அணுவை ஆராய்வதற்கு மைக்ரோஸ்கோப் (Microscope) வேண்டும். அண்டத்தை ஆராய்வதற்கு டெலஸ்கோப் (Telescope) வேண்டும். மாணிக்கவாசகர் காலத்தில் இந்த இரண்டு ஸ்கோப்புகளுக்கும் ஸ்கோப்பே இல்லை. பின்னர் எவ்வாறு எந்த ஸ்கோப்பைக் கொண்டு நம் ஞானியர்கள் அணுவைப் பற்றியும் அண்டத்தைப் பற்றியும் ஆராய்ந்து கண்டார்கள்? அவர்களுக்கு இருந்த ஒரே ஸ்கோப் ஞானம் ! ஞானம்!! ஞானம் !!! ஞான அறிவு ! ஞான அறிவு !! ஞான அறிவு !!!

மெய்ஞ்ஞானத்துள் விஞ்ஞானம் அடங்கும். விஞ்ஞானத்துள் மெய்ஞ்ஞானம் அடங்காது. நம் நாட்டு ஞானிகள் அனைவரும் இவ்வகையில் விஞ்ஞானிகளே. அவர்கள் அருளிய ஞான நூல்களில் எவ்வளவோ விஞ்ஞான உண்மைகள் சொல்லப்பெற்றுள்ளன.

"ஞானிகள் அனைவரும் விஞ்ஞானிகளே.
விஞ்ஞானிகள் யாரும் மெய்ஞ்ஞானி ஆகார்"

"All Saints are scientists. But,
Scientists are not saints".

என்று நாம் ஒரு புதுமொழியே சொல்லி வருகிறோம்.

"அண்டப்பகுதியின் உண்டைப் பிறக்கம்" என்று திருவண்டப் பகுதியைத் தொடங்குகிறார் மணிவாசகர். உலகம் உருண்டை என்று அந்தக் காலத்திலேயே நம் ஞானியர்கள் சொன்னார்கள். மேலை நாட்டு அறிஞர்கள் உலகம் உருண்டை என்பதை அக்காலத்தில் அறியார். அண்டப்பகுதியின் உண்டைப்பிறக்கம், அதன் அளப்பரும் தன்மை, வளப்பெரும் காட்சி, ஒன்றுக்கு ஒன்று நிற்கும் எழிலைப் பகர்ந்தால் நூற்று ஒரு கோடிக்கு மேற்பட விரிவன என்பவை அக்காலத்தில் உலக அறிஞர்கள் பலர் அறியாதவை.

அருக்கனில் சோதி (சூரியனில் ஒளி), மதியில் தண்மை (சந்திரனில் குளிர்ச்சி), தீயில் வெம்மை, வானில் கலப்பு, காற்றில் ஊக்கம் (வேகம்), நீரில் சுவை, மண்ணில் திண்மை (அடி 20-26) என்பன இயற்கை விஞ்ஞானம்.

அண்ட விஞ்ஞானத்தை அணு அணுவாக நம் ஞானிகள் அறிந்திருந்தது போன்றே பிண்ட விஞ்ஞானத்தையும் அறந்திருந்தார்கள். அண்டம் என்பது பிரபஞ்சம். பிண்டம் என்பது நமது உடம்பு. அண்டத்தில் உள்ளதெல்லாம் பிண்டத்தில் என்பது நம் நாட்டில் வழங்கும் ஞானப்பழமொழி. "அண்டத்தைவிடப் பிண்டம் விசாலமானது "என்கிறார் வள்ளலார். திருவண்டப்பகுதியின் இறுதிப்பகுதி பிண்டத்தில் அமுதூறும் அனுபவத்தைக் கூறுவது.

"வாக்கிறந் தமுதம் மயிர்க்கால் தோறுந்
தேக்கிடச் செய்தனன் கொடியேன் ஊன்தழை
குரம்பை தோறும் நாயுட லகத்தே
குரம்பைகொன் டின்தேன் பாய்த்தி நிரம்பிய
அற்புத மான அமுத தாரைகள்
எற்புத் துளைதொறும் ஏற்றினன் உருகுவ
துள்ளங் கொண்டோர் உருச்செய் தாங்கெனக்
கள்ளு றாக்கை யமைத்தனன் ஒள்ளிய
கன்னற் கனிதேர் களிறெனக் கடைமுறை
என்னையும் இருப்ப தாக்கினன் என்னிற்
கருணை வான்தேன் கலக்க
அருளொடு பராவமு தாக்கினன்
பிரமன்மா லறியாப் பெற்றி யோனே"

நம் உ ம்பில் அமுதம் ஊற வேண்டும்.

"காயத்துள் அமுது ஊற ஊற நீ
கண்டுகொள் என்று காட்டிய" -581

என்று உடம்பில் அமுதம் ஊறுவதை மாணிக்கவாசகர் வேறு ஓரிடத்திலும் குறிப்பிடுகிறார். உடம்பில் ஊறும் அமுதம் மயிர்க்கால்தோறும் தேங்கவேண்டும். எலும்புத் துளைகளிலும் ஏறவேண்டும். இதைத்தான் மணிவாசகர் திருவண்டப்பகுதியின் இறுதிப்பகுதியில் மேற்காட்டிய அடிகளில்

"அமுதம் மயிர்க்கால்தோறும் தேக்கிடச் செய்தனன்"
"அற்புதமான அமுததாரைகள்
எற்புத்துளைதொறும் ஏற்றினன்"

என்கிறார். மயிர்க்கால்தோறும் அமுது ஊறிய அனுபவம், ஊறித்தேங்கிய அனுபவம் திருமந்திரத்திலும் திருமூலரால் குறிப்பிடப்பெறுகிறது.

"பாலொடு தேனும் பழத்துள் இரதமும்
வாலிய பேரமு தாகும் மதுரமும்
போலுந் துரியம் பொடிபட வுள்புகழ்
சீல மயிர்கால் தொறுந்தேக் கிடுமே." - 2831

"ஓதும் மயிர்கால் தொறும் அமுதூறிய
பேதம் அபேதம் பிறழாத ஆனந்த
மாதி சொருபங்கள் மூன்றகன் றப்பாலை
வேதம் ஓதுஞ் சொரூபீதன் மேன்மையே." - 2856.

வள்ளாலரும் திருவருட்பா அருட்பெருஞ்ஜோதி அகவலில் "அமுதம் உடலெலாம் ஊற்றெடுத்தோடி நிரம்பிட" என்று கூறுகிறார். அமுதம் ஊறிய உடம்பு, மயிர்க்கால் தோறும் அமுதம் தேக்கிடப்பெற்ற உடம்பு, எலும்புத்துளைதோறும் அமுதம் ஏறிடப்பெற்ற உடம்பு (யாக்கை- ஆக்கை) அழிதரும் ஆக்கை ஆகாது, அளிதரும் ஆக்கை ஆகும்.

இதே திருவண்டப்பகுதியில் 118, 120 ஆம் அடிகளில்

"அழிதரும் ஆக்கை ஒழியச் செய்த ஒண்பொருள்"

"அளிதரும் ஆக்கை செய்தோன் போற்றி"

என்று கூறப்பெருவதைக் காண்க. "அழிதரும் ஆக்கை", "அளிதரும் ஆக்கை"என்பதில் ஒரே ஒரு எழுத்து வேறுபாடு. இது ஒரு எழுத்து வேறுபாடுதான் மக்களின் தலையெழுத்தையே மாற்றுகிறது.

"அழிதரும் ஆக்கை - அழியும் உடம்பு
அளிதரும் ஆக்கை - அழியா உடம்பு, சாகா உடம்பு"

இவ் அளிதரும் ஆக்கையே 178-ஆம் அடியில் "அள்ளூறு ஆக்கை" எனக் கூறப்பபெறுகிறது. இத்தகைய ஆக்கைகள் (உடம்புகள்) பிணமாக விழா, இறவா, மண்ணுக்கோ நெருப்புக்கோ இரையாகா. இறவாநிலை பெற்ற இவர்கள் என்றும் இருப்பர். "என்னையும் இருப்பதாக்கினன்"என்று மாணிக்கவாசகர் கூறுகிறார் (அடி 179).இருப்பது, உள்ளது, சத், இறைப்பொருள் ஒன்றே. சத்தாதல், உள்ளதாதல், உளதாதல், இருப்பது என்றால் இறப்பு நீங்கி இருப்புப் பெறுதல்.

வரவு - பிறப்பு
செலவு - இறப்பு
வரவிலிருந்து செலவை நீக்கினால் - இருப்பு. கையிருப்பு
லாபம் - ஆதாயம் - ஆன்மலாபம்

இவ்வரவு செலவுக் கணக்கு எப்படி இருக்கிறது என்று பார்த்தீர்களா? போக்கு என்பது போய்விடுவது, செத்துப்போவது, இறப்பு. வரவு என்பது பிறப்பு. "போக்கும் வரவும்புணர்வுமிலாப் புண்ணியனே " என்னும் திருவாசகமும் "போக்கு வரவு புரிய" என்னும் சிவஞான போதமும் இதுவே.

"என்னையும் இருப்பது ஆக்கினன் "என்ற மாணிக்கவாசகர் கூறும் திருவண்டப்பகுதியின் இறுதிப்பகுதி வள்ளற்பெருமான் இராமலிங்க அடிகளுக்கு மிகவும் பிடித்தமானது.

திருவாசகம் வள்ளற்பெருமானது வழிபடு நூல். திருமண முதல் இரவிலும் வள்ளற்பெருமான் ஓதியது திருவாசகமே. தமக்கு வாழ்க்கைப்பட்ட மணப்பெண்ணுக்கு அன்று ஓதுவித்தது (உபதேசித்தது) திருவாசகமே: வள்ளலர் திருவாசகத்திற்கு வாழ்க்கைப்பட்டவர் என்பது நாம் பல இடங்களிலும் அழுத்தந் திருத்தமாகக் கூறிவருவது, எழுதிவருவது. திருவாசகம் முழுவதும் வள்ளற்பெருமானுக்கு மனப்பாடம். இது பெருமானே அறிவித்த செய்தி.

வள்ளற்பெருமான் அருளிய திருவருட்பாவில் ஆளுடைய அடிகள் அருள்மாலையில் திருவண்டப் பகுதியின் எண்ணத்தை, திருவுள்ளக்கிடையை, மாணிக்கவாசகரிடமே வள்ளற்பெருமான் வினவும் பாடல் வருமாறு.

"உரு அண்டப் பெருமறைஎன் றுலகமெலாம் புகழ்கின்ற
திரு அண்டப் பகுதிஎனும் திருஅகவல் வாய்மலர்ந்த
குரு என்றெப் பெருந்தவரும் கூறுகின்ற கோவேநீ
இரு என்ற தனிஅகவல் எண்ணம்எனக் கியம்புதியே".

"என்னையும் இருப்ப தாக்கினன்" என்ற திருவண்டப்பகுதித் தொடர் வள்ளற்பெருமானது சிந்தனையை எங்கெங்கோ கொண்டு செல்கிறது. திருவாசகத்தில் திளைத்த

வள்ளற்பெருமான் அதன் சிலபல இடங்களில் கட்டுண்டுபோகிறார். அப்படிப்பட்ட இடங்களில் மிகவும் முக்கியமான ஒன்று திருவண்டப்பகுதி. இதில் திருஅண்டப்பகுதியை, "உருஅண்டப் பெருமறை என்று உலகெலாம் புகழ்கின்ற திருஅண்டப்பகுதி" என்கிறார். அதுவும் போதாது என்று "திருஅண்டப்பகுதி எனும் திருஅகவல் என்கிறார். திருஅண்டப்பகுதி எனும் திரு அகவலில் இரு என்ற தனி அகவல் என்கிறார். அகவல் - அகவிக்கூறுவது. இரு என்றது - என்னையும் இருப்பதாக்கினன் என்று கூறியது. அதைத் தனி அகவல் என்கிறார். இது ஒரு தனி அனுபவம், தனி அகவல்.

திருவாசகத்தில் சோதி, கருணை, தேன், அமுதம் என்ற நான்கு சொற்களும் மிகுதியாக வருபவை. சோதி 42 இடங்கள். கருணை 62 இடங்கள். வள்ளற்பெருமான் சோதியையும் கருணையையும் திருவாசகத்திலிருந்துதான் எடுக்கிறார். கேழில் பரஞ்சோதி, கேழில் பரங்கருணை என்பதிலுள்ள, பரஞ்சோதி பரங்கருணையை, பெருஞ்ஜோதி, பெருங்கருணை யாக்குகிறார். அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை யாக்குகிறார். திருவண்டப்பகுதியில் "அருட்பெருந்தீ" என்றே ஓரிடம் வருகிறது (அடி 160) அருட்பெருந்தீதான் அருட்பெருஞ்ஜோதியாகிறது.

திருவாசகம் முழுவதற்கும் வள்ளற்பெருமானின் கண் கொண்டு உரைகாண வேண்டும். "இப்போது என்னுடைய அறிவு அண்டாண்டங்களுக்கு அப்பாலும் கடந்திருக்கிறது" என்று வள்ளற்பெருமான் ஓரிடத்தில் கூறுகிறார். (பேருபதேசம் திருவருட்பா, உரைநடைப்பகுதி பக்கம் 356). வள்ளற்பெருமானது அறிவு அண்டாண்டங்களுக்கு அப்பாலும் கடப்பதற்குத் துணை செய்தது திருவாசகமும் அதன் திருவண்டப்பகுதியும் என்றால் திருவாசகத்தின் சிறப்பை, திருவண்டப்பகுதியின் சிறப்பை, சொல்லப்போமோ?,

வாதவூரடிகளை யாம் வணங்கி வாழ்வாம்!
வள்ளலார் கழல் வாழ்த்தல் வாழ்வாவதே!

4. போற்றித் திருவகவல்

பேரறிஞர். **தமிழண்ணல்**

"தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி"

சிவனியச் சார்பான எந் நிகழ்வாயினும், இம் முழக்க வாசகத்தைக் கேட்கலாம். இவ்விரு அடிகளும் இடம் பெற்ற பாடல்தான் போற்றித் திருவகவல் இவ் அடிகளில் பொருந்தியுள்ள கருத்து, ஆழ்த்தகன்ற வரலாற்றுப் பின்னணி உடையதாகும்.

தமிழர்களுக்கே உரிமையுடையன சிவனியமும் மாலியமும். சிவனிய மெய்யியல் - சைவ சித்தாந்தம். இச்சைவ ஆகமம் வட மொழியில் உள்ளது. வேதாந்தத்திற்கும் சித்தாந்தத்திற்கும் வேறுபாடுமட்டுமன்று, முரண்பாடும் உண்டு. தமிழர் வரலாற்றை ஆங்கிலத்தில் எழுதிய பி.டி. சீனிவாச அய்யங்கார் இதை நன்கு விளக்கியுள்ளார். (The Agamas the vedas- VIII-i) இன்று 'ஆங்கிலமயமாக்குதல்' நடைபெறுவது போலச் 'சமசுகிருதமயமாக்குதல்' என்பது இடைக்காலத்தே சில நூற்றாண்டுகள் நடைபெற்றது. வேதாந்தம்"ருத்ரனை "மட்டுமே குறித்தது. அக்கினி வழிபாடொன்றே அதற்குரியது. சித்தாந்தம் தமிழரின் சிவ வழிபாடு பற்றியன. வட மொழியில் இருந்தாலும், "தென்னாடுடைய சிவனே போற்றி "என்பது, அவ்வழிபாட்டின் தொன்மையையும் அது முதலில் தென்னாட்டிற்கே உரித்தானது என்பதையும் மிக நுட்பமாய் உணர்த்துவதாகும்.

இப்போற்றித் திருவகவல் 225 அடிகளையுடைய நிலை மண்டில ஆசிரியப் பாட்டாகும். திருவாசகத்தின் முன்பகுதியிலுள்ள நான்கு நெடும்பாடல்களில், நான்காவதாக உள்ளது இது. இந் நெடும்பாட்டின் முன்பகுதி நான் முகன் முதலிய தேவர்களால் வழிபடப் படுகின்ற, காத்தற்கடவுளாகிய திருமால் பன்றி வடிவெடுத்துத் தேடியும் காணுதற்கரிய சிவன், மெய்யடியார் கண்டு மகிழுதற்பொருட்டு இந்நிலவுலகிலே எளிவந்தருளிய செய்தியைக் கூறுகிறது. அடுத்துவரும் பகுதி,

உலகில் தோன்றும் பலதிற உயிர்களில் மக்கட் பிறப்பின் மாண்பைச் சுட்டுகிறது. தாய் வயிற்றில் கருவில் உருவாகி வரும் பத்து மாதங்களிலும் ஏற்படும் பலவகைத் துன்பங்களிலிருந்தும், பிறகு பிள்ளைப் பருவம் முதல் ஆண்மைப் பருவம் வரை நேரும் பலவகைத் துயரங்களிலிருந்தும் இம்மக்கள் உயிர் தப்பிப் பிழைத்துவளர்ந்ததைப் பின்னர் வரும் பகுதி விளக்கிக் கூறுகிறது.

உலகில் நலம்பெறவாழத் தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாக, அச்சிறப்புடைய எண்ணத்தைக் கலைக்கப் பலவகைக் குழுக்களும் சமயங்களும் முயல்வதையும், அதை மாற்றி இறைமை எண்ணம் சிதையாதபடி காக்க அவ்விறைவனே குருவாக எழுந்தருளி வந்ததையும் அடுத்து வரும் பகுதி விரித்துக் கூறுகிறது. இவ்வாறு உயிர்களை இறைவன் தாய்போல் அருள் செய்து காப்பதை 86 வரையுள்ள அடிகள் விளக்குகின்றன. 87 முதல் 225 அடிகள் முடிய, இடைப்பட்ட 141 அடிகளும் போற்றி, போற்றி என்று இறைவனைப் போற்றி வணங்கும், தமிழ் அருச்சனைப் பாட்டாக உள்ளன. இப்பகுதி, "சிவபெருமானை முன்னிலைப் படுத்திப் போற்றும் மந்திர மொழியாக அமைந்துள்ளது". "நமச்சிவாய என்னும் மந்திரத்தின் முன்னுள்ள "நம" என்னும் சொல்லுக்குநேரான தமிழ்ச்சொல் "போற்றி" என்பதாகும். போற்றுதல் என்பது புகழ்தல், வணங்குதல் குறிக்கொண்டு பாதுகாத்தல் எனப் பல பொருள்தரும் ஒரு சொல்லாகும். போற்றி என்பது வணக்கம் என்ற பொருளிலும் எம்மைப் பாதுகாத்தருள்க என வேண்டிக் கோடற்பொருளிலும் வழங்கும் செந்தமிழ் மந்திரச் சொல் என்பது, போற்றித் திருவகவலாகிய இதனாலும் போற்றித் திருத்தாண்டகம் முதலாக முன்னுள்ள திருமுறைகளிற் காணப்பெறும் அருட்பாடல்களாலும் நன்கு துணியப்படும்" என்பர். அறிஞர். க. வெள்ளைவாரணர் (பன்னிரு திருமுறை வரலாறு) (II-117).

தமிழ்ச்சொல் மந்திர மாகாதா? திருக்கோயில்களுக்குள் இத்திருமுறை மந்திரங்கள் அல்லவா நாளும் ஒலிக்க வேண்டும்?

வேதாந்திகள் தங்கள் கொள்கைக்கு உட்படாத, தாங்கள் நுழையவே கூடாத திருக்கோயில்களுக்குள் நுழைந்து கொண்டு, இறைவன் செவிகளில் தமிழ் மந்திரங்கள் ஒலிக்கவிடாது

தடுக்கின்றனர். தமிழர்தம் செல்வத்தாலும் உழைப்பாலும் கட்டப்பட்ட திருக்கோயிலுக்குள், அத் தமிழர்களின் மொழியைப் புகவிடாமல் தடுப்பது கொடுமையிலும் கொடுமையாகும். வேதாந்திகள் திருக்கோயில்களை விட்டு வெளியேறி விட வேண்டும். அல்லது வெளியேற்றப்பட வேண்டும். இவர்கள் வெளியே வந்தாலல்லாமல், உண்ணாழிகை எனப்பட்ட கருவறைக்குள் தமிழ்மொழி ஒலித்தல்இயலாது. மாணிக்கவாசகர் போலும் சிவவேதியர்கள் தூய தமிழர்கள். இதைக் குருக்கள் எனப்படும். சிவாச்சாரியர்கள் உணர்தல் வேண்டும்.

இப் போற்றித் திரு அகவல், மிகச் சிறந்த அருச்சனைப் பாட்டாகும். "அருச்சனை பாட்டேயாகும் " ஆதலால் மண்மேல் தம்மைச் சொற்றமிழ் பாடுக என இறைவனே வேண்டியதைச் சேக்கிழார் பெருமான் சுட்டிக் கூறியுள்ளார்.

இப்போற்றித் திருவகவல் மிகச் சிறந்த கருத்துக்களைத் தன்னகத்தே கொண்டது. வடமொழி மந்திரங்களில் ஒலி அதிர்வுள்ள அளவு, கருத்து ஆழமோ , அழகோ அமைந்திரா. தமிழில் அருச்சித்து வழிபடுங்காலமே, உண்மையான பக்தியும் ஆன்மிகமும் தழைக்கும் காலமாகும்.

கல்வி என்னும் பல்கடற் பிழைத்தும்
செல்வம் என்னும் அல்லலிற் பிழைத்தும்
நல்குரவு என்னும் தொல்விடம் பிழைத்தும்
புல் வரம்பாய பலதுறை பிழைத்தும்
தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகி ......

கல்வி, செல்வம், வறுமை, பிற பல இழிந்த துறைகள் யாவும் எவ்வாறு தெய்வ நினைவை எட்டவிடாது தடுக்கும் என்பதையும் அவற்றினின்றும் தாம் தப்பிப்பிழைத்துத் "தெய்வம்" என்பதோர் நினைவு வரப்பெற்றதையும் மாணிக்கவாசகர் விளக்குமிடம் இது. மாணிக்கவாசகர் தமக்கு இறைவன், திருப்பெருந்துறையில் குருந்தடியில் ஞான குருவாக எழுந்தருளிக் காத்ததைக் குறிப்பிடத் தவறுவதே இல்லை. 'அருபரத்து ஒருவன் அவனியில் வந்து', குருபரனாகி அருளிய பெருமையைப் பணிவுடன் தெரிவிக்கின்றார். திருவாசகம், மாணிக்கவாசகரின்

'தன் வரலாறு' என்பார். சி.யூ. போப்பையர். ஆன்மாவுக்கும் இறைவனுக்குமிடையே நேரடித் தொடர்பால் உருவானதே திருவாசகம் எனவே அது அருச்சிப்பதற்கு ஏற்ற, மிகப்பொருத்தமான நூலாகும். அதிலும் இப்போற்றித் திருவகவல் முதலிடம் வகிக்கிறது. எவ்வாறு இப்போற்றி தொடங்குகிறது பாருங்கள் :

என்பு நைந்துருகி நெக்குநெக்கு ஏங்கி
அன்பெனும் ஆறு கரையது புரள
நன்புலன் ஒன்றி நாத என்று அரற்றி
உரை தடுமாறி உரோமம் சிலிர்ப்பக்
கரமலர் மொட்டித்து இருதயம் மலரக்
கண்களி கூற, நுண்துளி அரும்பச்
சாயா அன்பினை நாடொறும் தழைப்பவர்
தாயே யாகி வளர்த்தனை போற்றி !

என்று தொடங்கும் போற்றி, அருச்சனையாக மட்டுமின்றி, எவ்வாறு உள்ளமுருகி, மெய்ம்மயிற்சிலிர்க்க அருச்சிக்க வேண்டுமென்பதையும் உணர்த்துகிறது. மழை வருங்கால் கத்துகின்ற தவளைகள் போல, புரியாத மொழியில் மந்திரங்களை ஓதுபவர்கள், இவ்வுண்மையன்பை உணர்வதே இல்லை. அவர்கள் தம் வருமானம், பிழைப்புக் கருதி இத் தீங்கைத் தொடர்கின்றனர். பக்தியைச் சுயநலத்திற்கு விலைபேசி விற்கின்றனர். இத்தகைய கொடுமைகளைத் தமிழர்கள் துணிந்து தடுக்க வேண்டும். தாமே இப்போற்றிகளைப் பாடி, தேங்காயைத் தாமே உடைத்து, இறைவன் முன் வைத்து வணங்கி விட்டு வர வேண்டும். வருமானம் நின்றால், இவர்கள் தாமே வெளியேறி விடுவர். அல்லது போற்றித் திருவகவல் பாடத் தொடங்கி விடுவர்.

5. திருச்சதகம்

- தவத்திரு. **சாந்தலிங்க இராமசாமி அடிகளார்**

"பாட்டெனப்படுவதுன் பாட்டு" எனப் போற்றப்படும் தேனூறு வாசகம் திருவாசகம். ஐந்தெழுத்து மறைமொழியை முதலாக உடைய எட்டாம் திருமுறை 'தம் முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தத் தோன்றிய அருள் நூல். வான் பழித்து மண் புகுந்து மனிதரை ஆட்கொள்ளும் வள்ளலது புகழ்பாடும் நூல். திருவாசகத்தின் ஐந்தாம் பகுப்பாக விளங்குவது திருச்சதகம். ஐந்தெழுத்தில் தொடங்கி, ஐந்தாவது பகுதியில் புகழ் பாடல்களாகத் திருச்சதகம் விளங்குகிறது. சதகம் நூற்றின் தொகுப்பு. இது பத்துப் பத்துப் பாடல்களாகப் பகுக்கப்பட்டிருக்கிறது. அதனைப் பதிற்றுப் பத்து என்பர். ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கும் புகழ் பாடல்களாதலின் 'பத்தி வைராக்கிய விசித்திரம்' எனவும் கூறப்படுகிறது. இது அணைந்தோர் தன்மையின் சிறப்பினைக் கூறுவது. அவர் தன்மைகள் பத்தாகும். 'பத்துடையீர், ஈசன் பழவடியீர்' என்பதன் விளக்கம் திருச்சதகம் எனலாம். இது வரம்பிகந்த அன்பின் முதிர்வை வெளிப்படுத்தும். அனைத்தெலும்பு உள் நெக ஆனந்தத் தேனைச் சொரியும் பாடல்களாகும்.

முதற் பத்துப் பாடல்கள் உடம்பெல்லாம் கண்ணாய் வெள்ளம் பாயும் அன்புடையாரிடத்து நிகழும் மெய்ப்பாடுகளைத் தோற்றும் அருளாற்றல் ஆகும். சித்தமலம் அறுவித்துச் சிவமாக்கும் அருள் வளத்தை இரண்டாம் பத்து உணர்த்தும். மூன்றாம் பத்து நெறியில்லா நெறியாகும் சிறு நெறிகள் சேராமே அருளும் அருளாற்றலைப் புலப்படுத்தும். நாலாம் பத்து மாறி நின்றென்னை மயக்கிடும் வஞ்சப் புலனைந்தின் வழியடைத்தனை உணர்த்தும். ஐந்தாம் பத்து புன்புலால் யாக்கை புரை புரைகனியப் புரியும் பேரருட் திறனை விளக்குவது. ஆறாம்பத்தில் புண் சுமந்த பொன்மேனி பாடுதலே பணியெனும் பேரருட் திறனைத் தருவது. ஏழாம் பத்து சிந்தனை நின்தனக் காக்கி ஐம்புலன்கள் ஆரத்தந்தெனையாட்கொண்ட பேரருட் திறம் கூறும். எட்டாம் பத்து தந்தது உன் தன்னை கொண்டது என்

தன்னை சங்கரா ஆர் கொலோ சதுரர்? எனும் அந்தமிலா ஆனந்தத்தை விளக்கும் ஆற்றலைக் காட்டும். ஒன்பதாம் பத்து அனைத்தெலும்பு உள்நெக ஆனந்தத் தேன் சொரியும் வளமைக்கு வழிகாட்டும் ஆற்றலுடையது. பத்தாம் பத்து ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்தத்திற்கு வழிகாட்டுவது. எனப்பத்துக் கொத்தாக நூறு பாடல்களால் அற்புதமான அமுததாரைகள் எற்புத் துளைதொறும் ஏற்றிய பாங்கினை உணர்த்துவன.

திருச்சதகத்தின் பாடல்களனைத்தும் சிந்திப்பவர்க்குச் சிறந்து செந்தேன் முந்திப் பொழிவனவாகும்.

"தவமே புரிந்திலன் தண்மல
ரிட்டு முட்டா திறைஞ்சேன்
அவமே பிறந்த அருவினை
யேனுக்கு அன்பருள்ளாஞ்
சிவமே பெறுந்திரு வெய்திற்றி
லேனின் திருவடிக்காம்
பவமே யருளு கண் டாயடி
யேற்கு எம் பரம்பரனே"

எனும் பாடலை நோக்குவோம். இப்பாடலில் மணிவாசகர் இறைவனை அடைதற் குரிய நெறிகளில் செல்லாது திருவடிகளில் நிலைத்து நிற்கும் பேற்றினை வேண்டுகிறார்.

இறைவனை அடைதற்குரிய நெறிகள் நான்கு. மனிதப் பிறவியின் பயன் இறைவனை வணங்குதலேயாகும். மணிவாசகரோ இறைவனை வணங்கவில்லை. மலரிட்டு வணங்கவில்லை; தவமும் செய்யவில்லை. இவ்வுலகில் வீணாகப் பிறந்து நீங்குதற்கரிய வினைகளையுடையவராகி மெய்யடியார்கள் இனத்துள் ஆகும் செல்வத்தினைப் பெறவில்லை என்று எண்ணுகிறார். திருவாரூர்த் தேவாசிரிய மண்டபத்துள் வீற்றிருக்கும் இறையடியார்களைப் பார்த்து இவர்களைப் போல் ஆகும் நாள் எந்நாளோ என்று சுந்தரர் எண்ணிய பாங்கு ஈண்டு நினைவு கூறலாம். மணிவாசகரோ அடியராகும் நிலையினைப் பெறாததால் திருவடிக்கு ஆளாகும் பிறவி வேண்டும் என்கிறார்.

'முட்டாது இறைஞ்சேன், 'முட்டாது தண் மலரிட்டு இறைஞ்சேன்' 'முட்டாது தவம் செய்திலேன்' என்று இறைவனிடம் தன் குறையினைக் கூறுகிறார். முட்டாது தவம் புரிதல், முட்டாது நாண்மலரிட்டு வணங்குதல் என முட்டுப்பாடாகிய தடையின்றி இறைவனுக்குரிய செயல்கள் நடைபெறுதல் வேண்டும். இவரே இறையிடம் "பரந்து பல் ஆய் மலர் இட்டு முட்டாதடியே இறைஞ்சி" எல்லாம் பெறலாம் என்கிறார். சூழ்த்த மாமலர் தூவுதலில் தடைகள் வணங்குதலில் தடைகள், புகழ் புரிதலில் தடைகள், தவத்தில் தடைகள் இவைகள் மனிதன் வீணாள்படுதற்கு ஏதுவாவன ஆகும். ஆதலின் 'அவமே பிறந்த அரு வினையேன்' என்றார். வாய்த்தது நம் தமக்கு மானிடப்பிறவி, எனவே மனத்தாலும் உடலாலும் வாக்காலும் போற்றித் தொண்டு செய்து துதித்தற்கு அமைந்தது. ஆனால் இப்பெருந்தகைக்கு அவற்றைச் செய்ய வாய்ப்பின்றி "பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும் பயனற்ற வீணான வாழ்க்கையாக இருத்தலின்" அவமே பிறந்த அருவினையேன் என்றார்.

வாழ்த்தி வணங்குவதால் தவம் பெருகும். ஆனால் நெறியல்லா நெறி செல்லும் முட்டுப்பாடு ஏற்படுகிறது. சிவத்தை எப்பொழுதும் நினைத்து இருத்தலே தவம் புரிதலாகும். பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடி வாழாமல் வீண்பிறவியாய் சிவமாகிய திருவை எய்த இயலாமல் இருப்பதால் 'இப் பிறவி வேண்டேன்' என்கிறார். சரியை, கிரியை, யோக நெறிகளை மேற்கொள்ளாது உள்ளேன். எனவே நின் திருவடிக்கே அகம் குழைந்து அன்புமிகுந்து தொண்டு செய்து வாழ்கின்ற பிறவியைத் தர வேண்டும் என்று முறையிடுவதாகிய மெய்யுணர்தலைக் கூறி விளக்குகிறார்.

இவ்வாறு பத்துப் பத்துப் பாடல்கள் உயிர்நலம் பெறத் தவிர்க்க வேண்டியவற்றை விளக்குகின்றன.

'நாடகத்தால் உன்னடியார் போல' நடித்து என்று தொடங்கும் பாடலில் மாணிக்கவாசகர் நான் நடிக்கின்றேன், எதற்கு எனில் வீட்டின்பத்தைப் பெறுவதற்காக, அதுவும் விரைவாக அடைதல் வேண்டும் என்று வேண்டுகின்றார்.

மிகப்பெரிதும் விரைகின்றேன் என்கிறார். மெய்யம்மையான மெய்யடியார் தாம் இல்லையெனினும் மெய்யடியார் போல எண்ணும் பாவனையில் உள்ளார். மெய்யடியர்கள் மெய்மையாகிய வீட்டின்பத்தைப் பெறுவர். பொய்யனாக நடித்து யான் பெற விரும்புகிறேன் என்பதாகும். ஈண்டு கள்வர்கள் இருவர் மெய்யடியார்கள் போல் நடித்து, சிவலிங்கமாகக் கட்டிய கத்திரிக்காய்கள் இலிங்கம் ஆன வரலாறு பசவ புராணம் கூறும்.

ஆதலின் அடியார் நடுவே இருந்து வீடு பெற இடையறா அன்பெனக்கு ஊடகத்தே நின்றுருகும் நல்வினை வேண்டும் என்கிறார். மேலும் உனது உடைமையாக இருப்பவன் நான், எனவே உனது பொருளாக இருக்கும் எனக்கு உள்ளிருந்து உருகும் அன்பினை அருள்வாயாக என்று உரிமையுடன் வேண்டுகிறார். உனது உடமைப் பொருளாகிய நான் அன்பின்றி இருக்கலாமா? என்ற எண்ணம் உடையவராக விளங்குகிறார்.

அன்பின் வழியது உயிர்நிலையாகும். அவ்வன்பின் விளைவு அருளாகும். இவ் இரண்டின் இயல்பினைச் சமய நூல்களில் காணலாம். இறைவனிடத்து அன்பர்கள் வைப்பது அன்பு. அவ் அன்பின் காரணமாக இறைவன் தருவது அருள். உயிரின் குணம் அன்பு. இறையின் குணம் அருள். இறைவனின் எண் குணங்களுள் பேரருள் உடைமை ஒன்று. எனவே, மணிவாசகர் அன்பு கொண்டு அருளை வேண்டுகிறார். அன்பு அருளின் எல்லையே இறைவனின் திருவடியாகும்.

இறைவன் தேவர்களால் காண இயலாதவன், யாவராலும் அறியவொணாதவன். நான்கு வேதங்களும் இறைவனை வாழ்த்துகின்றன. அசுரர்களால் வரும் துன்பம் நீங்க இறைவனை வாழ்த்துகின்றனர் தேவர்கள்.

செற்றம், காமம் முதலாகிய குறைகளைப் போக்கி நலம் பயப்பனவற்றைக் கருதியே பரவுவார்கள் தேவர்கள். 'வாழ்த்துவதும் வானவர்கள் தாம் வாழ' என்பது திருமுறை. வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனாக இறைவன் உள்ளான் என்பதனைக் கூறுகின்றன. குராமலர் அணி கூந்தலை உடைய உமையம்மை இறைவனின் ஒருபாகத்துள்ளாள்.

உன்னுடன் கலந்திருப்பவர் உண்மை அன்புள்ள மெய்யடியார்கள் ஆவர்.

தேவர்களுக்கும் வேதங்களுக்கும் இறைவனின் திருவடி காண்பது அரிது. உனது மெய்யன்பினை உடைய அடியார்களே உனது அன்புடன் கலந்து நிற்பவர். மேன் மேலும் கலந்து நிற்பவர். மெய்யடியார் என்பது உண்மையான இறையடியார் மெய்ம்மையான உடம்பினைப் பெற்றவர் அருளால் மெய்ம்மையாக நின்றார். சுந்தரர் தேவாரமும்

"பாடுவார் பசி தீர்ப்பாய்
பரவுவார் பிணி களைவாய்"

என்று சுட்டுகிறது. குறையிரந்து நிற்கும் செயல் புறநிலை. அந்நிலையே தேவர்கட்கும் வேதங்கட்கும் அமைந்தது. விரவுதல் ஒன்றுடன் ஒன்று கலத்தலாகும். மெய்யன்பால் இறைவனுடன் விரவும் இயல்புடையார் அடியார்கள். யாவர்க்கும் அரிய திருவடிகள்ளச் சேர்வார்கள், என்று சுட்டுகிறார். தனக்கு அப்பேறு கிட்டியதை எண்ணி எண்ணி இறும்பூது கொள்கிறார். இந்நிலை வீடும் வேண்டா விறலாகிய அக நிலையாகும்.

"பரவுவார் இமையோர்கள் பாடுவன நால்வேதம்
குரவுவார் குழல் மடவாள் கூறுடையாள் ஒருபாகம்
விரவுவார் மெய்யன்பின் அடியார்கள் மேன்மேல் உன்
அரவுவார் கழலிணைகள் காண்பாரோ அரியானே"

என்று மெய்யன்பினால் விரவுதலை வேண்டுகின்றார். உமையம்மையினை ஒரு பாகத்தில் உடையவன் இறைவன். அவன் தானே எளியனாக வந்து எம்மைக் கருணையினால் கலந்து ஆண்டு கொண்டவன். அவனது அருமைய்ய உணராது உள்ளேன். ஒரு சிறுகுழந்தை தன் கையில் உள்ள பொற்கிண்ணத்தின் பெருமையினை அறியாது எறிந்தும் வீசியும் விளையாடும். அது போன்று நீ குருவாக எனக்குக் கிடைத்தும் உன்னை அரியவன் என்று எண்ணாது எளியனாக எண்ணினேன். மெய்யில் இலங்கும் வெண்ணீறு உடையவன். மெய்ம்மைத் தன்மையுடைய திருநீறு பூசிய மேனியுடையவன். மெய்யில் உள்ளதாகிய நீறு என இரு பொருள் படும் தன்மையினை

அறியலாம். திருநீற்றுப் பதிகத்துள் வரும்

"உண்மையில் உள்ளது நீறு"
"சத்தியமாவது நீறு"

என்ற தொடர்களை ஈண்டு நினையலாம்.

அடியார்கள் மெய்ம்மையான வீட்டின்பத்தினைப் பெற்றனர். எனை மட்டும் பொய்மையான உலகில் போக விட்டுச் செல்கிறாய். உண்மையான அடியார்கள் உனது மெய்நிலையில் பொருந்தியுள்ளார்கள் பொய்யே மெய்யென்று எண்ணும்என்னை விட்டுச் செல்லுதல் பொருத்தமோ? எனக்குச் சொல்வாயாக என்று வேண்டுகிறார்.

திருச்சதகம் முழுவதும் தனது அனுபவ நிலையினைப் பல வகையில் கூறியுள்ளார். திருச்சதகப்பாடல்கள் தம்மையுணர்ந்து தனையுணர்வார் தகுதிப்பாட்டினை விளக்குவனவாகும்.

6. நீத்தல் விண்ணப்பம்

பேராசிரியர் மயிலம். **ஆ. சிவலிங்கனார்**

மாணிக்க வாசகர் அருளிய திருவாசகத்தில் ஆறாவது பனுவல் நீத்தல்விண்ணப்பம். சிவபெருமான் திருப்பெருந்துறைக் கோகழிக்குருவாக எழுந்தருளித் தம்மையாட்கொண்டு சில நாள் உடன் இருத்திப் பின்னர் விட்டு நீங்கியபோது, ஆற்றாமை மேலிட்டுப் பாடப்பட்டது இது. திருவுத்தரகோசமங்கை யென்னும் ஊர்த் திருக்கோவிலிலிருந்து பாடப்பட்டது.

கோகழிக் குருமணி தம்மை விட்டு நீத்தலை நினைந்து விண்ணப்பித்த விண்ணப்பம் என இரண்டாம் வேற்றுமையிலும், தம்மை நீத்த செயலுக்கு இரங்கி வேண்டிய விண்ணப்பம் என நான்காம் வேற்றுமையிலும் பொருள் கொள்ளுமாறு பாடல்கள் அமைந்துள்ளன.

"கடையவனேனைக் கருணையி னால்கலந் தர்ண்டுகொண்ட
விடையவ னேவிட் டிடுதிகண் டாய்விறல் வேங்கையின்தோல்
உடைய னேமன்னும் உத்தர கோசமங் கைக்கரசே
சடையவ னேதளர்ந் தேன்எம்பி ரான்என்னைத் தாங்கிக் கொள்ளே"

- என்பது முதற்பாடல்.

கோகழிக் குரு மணியானவர் மாணவர் பலருடன் இருந்தவர், அவர்களை விட்டுப் பிரிந்தபோது, மாணிக்க வாசகரைப் பார்த்து, "நீ எம்மைத் தில்லையில் வந்து பார்" எனச் சொல்லிச் சென்றார். அவர் பிரிவு தாங்க மாட்டாத பலருள், சிலர் குருமணியுடன் சென்றனர், சிலர் மயங்கி வீழ்ந்தனர், சிலர் தீப்பாய்ந்தனர், சிலர் நிலத்தில் வீழ்ந்து புரண்டனர் (கீர்த்தித் திருவகவல் 127 -137). மாணிக்கவாசகர் அம் மாணவர் போல் இல்லாமல் ஒதுங்கிக் கடைப்பட்டவரானார். தம்மைக் கீழ்ப்பட்டவராக எண்ணினார். அதனால் தம்மைக் கடையவன் எனக் கூறிக்கொண்டார். அதனால்,

"மாணவருள் கடைப்பட்ட என்னை நீக்கி விட்டாயே, இனி என் செய்வேன்; தளர்ந்தேன்; என்னைத் தாங்கிக் கொள்" என

விண்ணப்பித்தார். சிவபிரானே குருமணியாக வந்தமையின் மற்றை மாணவரோடு கலந்திருக்குமாறு செய்து ஆட்கொண்டமையின் "கருணையினால் கலந்து ஆண்டு கொண்ட விடையவனே" என்றார். தம் வாழ்க்கையின் இடையில் வந்து ஆட்கொண்டமையின் இடையவனே என்று கூறினார் என்றும் கொள்ளலாம். புலித்தோலும் திருச்சடையும் சிவபெருமானுக்கும் குருமணிக்கும் உரியன. அதனால் குருமணியே சிவபிரான் என்று 'உத்தரகோசமங்கைக்கு அரசே, "வேங்கையின் தோல் உடையவனே' சடையவனே என விளித்தார். விண்ணப்பத்தில்," "என்னை நீத்துவிட்டாய் (விட்டிடுதி): இனி நான் யாது செய்வேன்," தளர்ந்தேன், தாங்கிக் கொள் என வேண்டினார்.

பாடலில் "விட்டிடுதி" என வந்தது "நீத்து விட்டாய்" என்ற பொருளுடையதாயினும், நீத்து விடாதே - விட்டுவிடாதே என்ற பொருளையும் உட்கொண்டதாகும். ஒரு பாடலில் (44)

"முழுதயில் வேற்கண் ணியர் என்னும் மூரித் தழல் முழுகும்
விழுதனை யேனை விடுதி கண்டாய்"

என்று தம்மை நீத்ததாகக் கூறியவர், அப்பாடலிலேயே பழுது செய்வேனை விடேல் என்று கூறியதும் காணலாம்.

குருமணி தம்மை நீத்தற்கு மாணிக்கவாசகர் கருதிய காரணங்கள் யாவை?

1) குருமணி தம்மை விட்டுப் பிரிந்ததற்கு - அதாவது தம்மை நீத்தமைக்குத் தாம் மற்றை மாணவரிற் கடைப்பட்டமையே என்று முதலில் கருதினார். அதனால், எடுத்த எடுப்பிலேயே "கடையவனேனை" என்றார்.

2) தாம் உலக வாழ்க்கையில்- சிற்றின்பத்தில் எண்ணம் உடையவராக இருந்தமையும் ஒரு காரணம் என்று எண்ணினார். நீத்தல் விண்ணப்பம் பாடல் ஐம்பதில் எட்டுப் பாடல்களில் தாம் சிற்றின்பத்தில் ஆழ்ந்தவராகக் கூறிக் கொண்டார்.

"கொள்ளேர் பிளவகலாத தடங் கொங்கையர் கொங்கைச் செவ்வாய் விள்ளேன்" (2)

"காருறு கண்ணியர் ஐம்புலன் ஆற்றங்கரை மரமாய் வேருறு வேனை" *(3)*

"செழிகின்ற தீப்புகு விட்டிலிற் சின்மொழி யாரிற் பன்னாள் விழுகின்ற என்னை" *(5)*

"கொழுமணி யேர்நகை யார்கொங்கைக் குன்றிடைச் சென்று குன்றி விழுமடியேனை" *(27)*

"வலைத்தலை மானனை நோக்கியர் நோக்கின் வலையிற்பட்டு மிலைத் தலைந்தேனை" *(40)*

"முதலைச் செவ்வாய்ச்சியர் வேட்கை வெந்நீரில் கடிப்ப மூழ்கி விதலைச் செய்வேனை" *(41)*

"உழைதரு நோக்கியர் கொங்கைப் பலாப்பழத்து ஈயின்
ஒப்பாய்
விழைதரு வேனை" *(46)*

"முழுதயில் வேற்கண்ணியர் என்னும் மூரித் தழல் மூழ்கும் விழுந்தனையேன்" *(44)*

என்பன அவர் வாக்கு

3) தம் ஐம்புலன்களின் வழிச் சென்று துன்புறுவதையும் காரணமாகக் கருதினார்.

"மாறுபட்டு அஞ்சு என்னை வஞ்சிப்ப" *(11)*

"புலனால் அரிப்புண்டேனை" *(21)*

"புலன்கள் திகைப்பிக்க யானும் திகைத்து" *(28)*

"மத்துறு தண்தயிரிற் புலன்கள் தீக்கதுவக் கலங்கி" *(30)*

என்வும், பிறவாறும் கூறியமை காணலாம். ஐம்புலன் வழிச் செல்லலும் அவற்றால்படும் துன்பத்தின் நீங்க நினைத்தலும் ஆகிய இரு நிலையிலும் துன்புறுவதால் இருதலைக் கொள்ளி எறும் பொத்ததாகவும் கூறினார் (9)

4) கோகழிக் குருமணி தம்மை யாட் கொள்ள இருக்கவும். தாம் ஆணவம் கொண்டு தருக்கி நடந்ததும் ஒரு காரணமாகக்

கருதினார்.

"தனித்துணை நீ நிற்க யான் தருக்கித் தலையால் நடந்த
வினைத் துணையேன்" (39)

என்பது அவர் கூற்று.

5) சிற்றின்பத்தும் பேரின்பத்தும் தடுமாறிய நாட்டமும் ஒரு காரணம் ஆகும். உலக இன்பத்தில் நாட்டம் இருந்தும் இறைவழிபாட்டிலும் மனம் சென்றவராய் இருந்தார். அதனால், பாடிற்றிலேன் பணியேன் (45) எனத் தம் இறைவேட்கையைப் புலப்படுத்தினார். அவர் மனம் உலக இன்பத்திலும் இறையின்பத்திலும் மாறிமாறி அலைந்தது என்பதை அவரே ஓர் இடத்தில் கூறியுள்ளார்.

"இறைவனே ! நீ என்னை நின் மலரடிக்கே அழைப்பாயோ, அல்லது
பிறவிக்கே தள்ளுவாயோ அறியேன், என்மனம் நெசவாளர் தறியில்,
பாவின் ஊடே இப்படியும் அப்படியுமாக ஓடும் குழல்(நாடா)
போலச் சிற்றின்பத்திலும் பேரின்ப நினைவிலும் தடுமாறுகிறது
நின் குறிப்பு அறியேன்"

என்ற கருத்துப்பட

"மாவடு வகிரன்ன கண்ணிபங் காவுன் மலரடிக்கே
கூவிடு வாய்கும் பிக்கே யிடுவாய் நின்குறிப் பறியேன்
பாவிடை யாடு குழல்போல் கரந்து பரந்ததுள்ளம்
ஆகெடு வேன்உடை யாயடி யேனுன் அடைக்கலமே"

அடைக்கலப்பத்து 8)

எனப் பாடி வருந்தியுள்ளார்.

6) குருமணியின் திருவருள் உதவியைத் தாம் மதியாமையும் ஒரு காரணம் என்றும் கருதினார்.

தில்லையில் வந்து காணுமாறு கூறிய அருள் திறத்தை மதியாமல்- அதாவது திருப்பெருந்துறைக் கோகழியை விட்டுக் குருமணி போனபோது, " நலமலி தில்லையுள் கோல மார்தரு பொது வினில் வருக "எனக் கூறிச் செல்லவும், உடன் தில்லை போகா திருந்தமையால் குருமணியின் திருவருளை மறுத்ததாகக் கருதினார். அதனால்,

"*மறுத்தனன் யான் உன் அருள் அறியாமையினால்*" (6) என்றார். அன்றியும்,

வளர்கின்ற நின் கருணைக் கையில் வாங்கவும் நீங்கி யிப்பால்

மிளிர்கின்ற என்னை" (4)

என்றும் கூறினார்.

"இறைவனே! "நீ என்னை யாட் கொண்டாய், ஆனால் யான் என் ஐம்புலன்களில் வழிச் சென்று அத் திருவருளை மறந்து விட்டேன் (12)

என்றும்

"நற்கதியடைய அடியேற்கு உன் திருவடி தந்தாய் அத் திருவருளை மதியாமல், உடம்பின் பற்றை விடாமல் உள்ளேன்" (42)

என்றும் கூறினார். குருமணியின் அருட்செயலைப் போற்றினாராயினும் மனம் புலன்வழிச் செல்வதையும் உணர்ந்தார் ஆதலின் அவ்வாறெல்லாம் கூறினார்.

மாணிக்கவாசகர் நீத்தல் விண்ணப்பப் பாடல்களைக் குருமணியானவர் தம்மை விட்டுப் பிரிந்தவுடன் பாடினார் என்பதும், தம்மை நீத்தற்குக் காரணம் தாம் கடைப்பட்டமையும், சிற்றின்பத்தை விரும்பியமையும், சிற்றின்பத்திலும் பேரின்பத்திலும் நாட்டம் கொண்டு ஒரு நிலைப்படாமையும், புலன்களால் ஈர்க்கப் பட்டமையும், குருமணியின் அருட்செயலை மதியாமையும் ஆம் என்பதும் அவர் பாடல்களிலிருந்து அறியலாம்.

திருவாசகப் பாடல்கள் பெரும்பாலனவற்றில் அவர், தம்மை இழித்துக் கொண்டதும், தம்மைப் பொய்யன் எனப் பலகால் கூறிக் கொண்டதும், அதனால் திருவருள் கூடவில்லை எனத் தாமே நினைந்து பலகால் அழுததும் காணலாம். "அழுதடியடைந்த அன்பன்" என்றே அவரைப் பாடுவர் ஆன்றோர்.

7. திருவெம்பாவை

- டாக்டர். சரசுவதி இராமநாதன்

உயர்தனிச் செம்மொழியான தமிழில் உள்ள சமய இலக்கியங்களில், பெண்களுக் கென்றே எழுந்தஇலக்கிய வகைகளுள் பாவை தனிச்சிறப்புடையது. உலகியல் வாழ்வை, ஆன்மிக வாழ்வோடு இணைக்கும் இயல்புடையவை பாவைப் பாடல்கள். பீடுடைய மார்கழியில் பெரியாழ்வார்பெற்ற பெண் பிள்ளையான கோதை நாச்சியாரின் திருப்பாவையும், அறிவால் சிவனேயான மணிவாசகநாயகியின் திருவெம்பாவையும், அற்புதமான பக்திஅலை அதிர்வுகளை (Vibration) உலகம் முழுவதும் ஏற்படுத்துவது கண்கூடு.

மால் கழிக்க- மார்கழியில், ஜீவாத்மாக்களுக்கு அறிவுறுத்துவன பாவைப்பாடல்கள். புல்லாங்குழலாகமாறி, இரசிகர்களுக்குத் தன் இசையால் இன்பமளிப்பதும் ஒரு மூங்கில்தான்! அடுப்பு ஊதும் குழலாகிப் புகையில் கலங்குவதும் ஒரு மூங்கில்தான்! மூங்கிலுள் வேற்றுமையில்லை. அது சேரும் இடத்தால்தான் பேதம்! உயிர்களும் அப்படியே! பிறப்பு ஒக்கும் எல்லா உயிர்க்கும்! ஆனால் அவன் அருளாலே அவன்தாள் வணங்கி, அவனது கருவியாகச் செயல்படும்போது, சாதாரண மூங்கிலான ஜீவாத்மா, - அவன் புகழ்பாடும் புல்லாங்குழலாக, அருளாளனாக, மாறமுடியும்! அப்படி மாறிய, பக்குவம் அடைந்த ஜீவனின் பேச்சே பாவை எனலாம்!

திருவண்ணாமலையில்

திருவாதவூரடிகள், திருவண்ணுமலையடைந்து, வழிபடும் நிலையில், மார்கழி மாதம் வந்துற்றதாக, இளமகளிர் வைகறைத்துயில் எழுந்து, ஆதியந்தமில்லா அருட்சோதியைப்பாடி, பொய்கையில் நீராடி, மகிழ்வது கண்டார். இறைவனின் பொருள் சேர்புகழ்பாடிப் பூத்திகழும் பொய்கை குடைந்து, நீராடும், மகளிர் நிலையில் தன்னை நிறுத்தித் திருவெம்பாவை அருளினார் எனக் கடவுள் மா முனிவர் கூறுவர்!

இது திருவண்ணாமலையில் அருளப்பெற்ற நூல் என்பதற்கு :

'ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்சோதி'
'பாசம் பரஞ்சோதிக்கு'
'மாலறியா நான் முகனும் காணுமலை'
'கேழில் பரஞ்சோதி'
'பாதாளம் ஏழினும் கீழ் சொற்கழிவு பாதமலர்'
'போதர் புனைமுடியும் எல்லாப் பொருள் முடிவே !'
'அண்ணாமலையான் அடிக்கமலம்'
'போற்றிமால் நான்முகனும் காணாத புண்டரிகம்'

மேற்சொன்ன அடிகளைக் காட்டுவர். தில்லையில் அருளப் பெற்றது திருவெம்பாவை என்பாரும் உளர்.

'தேசன், சிவலோகன், தில்லைச்சிற்றம்பலத்துள் ஈசன்!'
'கோயில்பிணுப்பிள்ளைகாள்'
(கோயில் என்றாலே சைவர்களுக்குத் தில்லைதானே?)
'சிற்றம்பலம்பாடி!'

என்ற அடிகளைச் சான்று காட்டுவர். எங்கு அருளிச் செய்யப் பெற்றால்தான் என்ன?

பாவை நோன்பு

பெண்கள் ஒருவரையொருவர், "எம் பாவாய்!" என்று அழைப்பதாக அமைந்த பாடல்களே இவ்விருபதும். இவை "பாவையர் ஆதரிக்கும் பாடல்கள்!". பாவை என்ற ஐகார ஈற்றுப் பெயர் விளியில் ஐ, ஆய், ஆகும் என்றபடி (தொல்காப்பிய-விளி-மரபு) எம் பாவாய் ஆயிற்று. திருந்து பூவல்லி, உந்தி, தோள்நோக்கம், பாவை, சாழல், அம்மானை, பொற் சுண்ணம், என்பவை இளமகளிர் இசையுடன் பாடியாடும் பல்வரிக் கூத்துக்கள் ! பண்டைய மகளிர் இயலும் இசையும் பயின்று, இறைவனது பொருள் சேர் புகழைப்பாடி யாடுவது, சமய ஒழுக்கமாயிருந்திருக்கிறது!

"கருந்தடங்கண்ணார் கழல் பந்து
அம்மானைப் பாட்டயரும் கழுமலமே!"

என்றார் திருஞான சம்பந்தர். எட்டடியால் இயன்ற ஒருபோகு கொச்சகப்பாவால் இயன்றன திருவெம்பாவை இருபது பாடல்களும்.

இது சத்தியை வியந்தது என்பர். மனோன்மணி, சர்வபூத தமனி, பலப்ரமதனி, பலவிகரணி, கலவிகரணி, காளி, ரௌத்திரி, கேஷடை, வாமை, என்று நவசக்திகள் பெயரிடப்படுவர். திருப்பாவையில் சொல்லப்பட்டது போல் நோன்பு நியதிகள் திருவெம்பாவையில் கூறப்படவில்லை. நீராடல் மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது!

முதலில் எழுப்பியவள் ஒருத்தியும், எட்டுப்பாவைப் பாடல்களில் எழுப்பப்பெற்ற எண்மரும், ஆக ஒன்பது சக்திகள் என்பர். நவசக்திகளில் ஆற்றலைக்கிளர்ந்து எழச் செய்வதால், ஐந்தொழில் கூத்தியற்றும் அம்பலவாணனின் ஆதிரைத் திருநாளில் தில்லைக் கூத்தனின் திருமுன்னர் ஓதப்பெறும் சிறப்புப்பெற்றது. அம்பாவாடல் பரிபாடல் 11 இல் (வரி 74-87). சிறப்பிக்கப் பெறுகிறது.தாயருகா நின்று தவத்தைந் நீராடல் என்றும் பரிபாடல் கூறுகிறது.

நோக்கம்

ஆண்டாள் நாச்சியார் திருப்பாவையில் நாராயணனுக்குக் கைங்கரியம் செய்யும் போது, "எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும்" வேண்டும் என்றார். "தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி", கேட்டார்!

மணிவாசகரும், "உன் கையில் பிள்ளை உனக்கே அடைக்கலம்!" என்று சரணுகதி செய்கிறார். "எம் கொங்கை நின் அன்பர் அல்லால் தோள் சேரற்க".எம் கை உனக்கல்லாது எப்பணியும் செய்யற்க. "கங்குல் பகல் எம்கண் மற்றொன்றும் காணற்க". என்பதில் எத்தனை உறுதிப்பாடு! கணவன் சிவனடியார். அவருக்குத் தொண்டும், சிவத்தொண்டும் செய்யாவரா் கேட்கிறார் வாசக நாயகி. He for God; She for God in him ! என்ற மில்டனின் அடிகளை எண்ணி இன்புறலாம்! சக்தியின் இன்னருளே என்னப் பொழியாய் மழையே- என்பது உலகம் வாழக் கேட்கும் வரம்!

சில நயங்கள்

திருவெம்பாவையின் இருபது பாடல்களுக்கும் பொருள் தருவது இக்கட்டுரையின் நோக்கமன்று, சில நயங்களைச் சிந்தித்து மகிழ்வோம்; மணிவாசகரைப்போல் மெய்தான் அரும்பி, விதிர்விதிர்த்து, சிவனின் விரையார் கழற்குக் கைதான் தலைவைத்து, கண்ணீர் ததும்பி, வெதும்பி, நிற்பவரும் உள்ளனர். நாமம் கேட்ட பின்னும் வன்செவியராய் வன்னெஞ்சப் பேதையராய் இருப்பவரும் உள்ளனர். முன்னவர்கள், பின்னவரை எழுப்பும் பாடல்கள் எட்டு! தேசன்- ஒளிமயமானவன் (காண இந்தக் கண்கள் போதா) சிவலோகன் - சிவலோகத்தில் இருப்பவன் (அங்கு நாம் செல்ல முடியாது.)

தில்லைச்சிற்றம்பலத்து ஈசன் - யாரும் காண எளிவந்த அர்ச்சாவதார மூர்த்தி! ஆக, இறைவனை வான்பழித்து மண் புகுந்து வரவழைக்கிறார் மணிவாசகர்! அதுபோல, விண்ணுக்கொரு மருந்து - (யார் விண்ணைச் சென்று சேர முடியும்!)

வேத விழுப்பொருள்- வேதமே, அல்லை ஈது என்று இன்மைப் பொருள் சொல்லித் திகைக்கிறதே! அவனைக் கண்ணுக்கினியான்- நம் பார்வையில் இனிமைதரக் காணப்பெறுபவன், என்று எளியனாகக் காட்டுகிறார்.

'கசிந்து உள்ளம் உள்நெக்கு நின்றுருக' என்ற தொடர் அற்புதமானது; வெல்லம் அடுப்பில் சூடு ஏறியவுடன் கசியும்; பின் சிறு கட்டிகளாக நெகிழும்; அதன் பின் உருகும். அதுபோல் பக்தியிலும் நிலைகள் உள்ளன. "கேழில் பரஞ்சோதி; கேழில் பரங்கருணை" என்ற வாசகரின் தொடர்களே "அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை" என்ற வள்ளலாரின் அருள்மொழியானது!

என்ன வேண்டுதல்?

திருவெம்பாவை ஒன்பதாம் திருப்பாட்டில் சிவனடியாரே எம் கணவர் ஆக வேண்டும் என்ற உறுதியான வேண்டுதலைத் தெரிவிக்கிறார்கள் பாவைப்பெண்கள்.

ஏதவன் ஊர்; ஏதவன் பேர்?

"யார் உற்றார் ? யார் அயலார்?" என்ற பத்தாம் திருப்பாட்டு இறைத் தத்துவத்தை மிக அழகாகக் காட்டும். சிலேடையாக (இரட்டுற மொழிதலாக) வந்த 13ஆம் திருப்பாட்டு அழகானது.

பிராட்டி	**பெருமான்**
குவளை மலர் (அம்மன் விழி)	செங்கமலம் (சிவனது விழி)
குருகுகள் (வளையல்)	அரவம் (பாம்பு ஆபரணம்)

பொய்கையில் குவளை, செங்கமலம், குருகுகள், இவற்றோடு அரவம் என்ற சத்தமும் இருக்கும்; பாம்பு தண்ணீரில் உண்டோ? தங்கள் மலம் கழுவுவார் புறத்து அழுக்கை நீக்கப் பொய்கைக்கு வருவார்கள். அகத்து மும்மலங்களைப் போக்க இறைவன் இறைவியிடம் வந்து சார்வர்!

'காதர் குழையாட' என்ற 14ஆம் திருப்பாட்டு, சொல்லழகு, ஓசையின்பம் பொருந்திய பாடல். பெய்வளை தன் பாதத்திறம் பாடுகின்ற இப்பாட்லும் "சிறு மருங்குல் மையார் தடங்கண் மடந்தை - என்ற 11ஆம் பாடல் அடியும், 16ஆம் திருப்பாட்டும் சக்தியை வியந்தது என்ற தத்துவத்திற்கு எடுத்துக்காட்டு.

மழையும், அருள் மழையும்

"ஆழி மழைக்கண்ணா" - திருப்பாவை, கண்ணனே மழைக்கடவுள் என்று உருவகம் செய்தது. 16ஆம் திருவெம்பாவையில் பிராட்டியே மழையாகிறாள்!

பிராட்டியின் கருமை வண்ணம்	- முகிலின் கருமை
இடை	- மின்னல்
சிலம்பு ஒலி	- இடி முழக்கம்
புருவம்	- வானவில்
அம்மையப்பன் தரும் அருள்	- மழை

என்ற உருவகம் எண்ணி இன்புறத்தக்கது. (பாடல் 16) அண்ணாமலையின் அடிக்கமலத்தில், அந்த ஜோதி ஒளியில், பணியும் விண்ணோரின் மணி முடிகளின் ஒளி மங்கியது; மறைந்தது. அதுபோல, இரவியின் கதிரில், தாரகைகள் ஒளி மங்கின. சூரியன் வந்ததும், இருள் நீங்கும்; தாரகைகள் மறையும்.

சிவனருளுக்கு முன் அறியாமை இருள் விலகும் பிறப்புக்களான தாரகைகள் மறையும்! பிறப்பிறப்பற்ற நிலை கூட்டும் அவன் எல்லாமாக இருக்கிறான். (பாடல் 18)

ஞாயிறு எங்கு எழில் என்?

9 ஆம் திருப்பாட்டுக் கூறிய அதே பிராத்தனை 19 ஆம் பாடலிலும் வலியுறுத்தப் பெருகிறது. இந்தக் கைங்கரியப் புண்ணியம் கிடைத்துவிட்டால் போதும்! சூரியன் எங்கு உதித்தால் என்ன? செம்மாந்து நின்று அவன்தாள் மலர் போற்றும் போற்றிப்பாடலுடன் திருவெம்பாவை நிறைவு பெறுகிறது. திருப்பள்ளி எழுச்சி. "போற்றி" எனத் தொடங்குகிறது. ஆதியும் அந்தமும் இல்லாதவன் அருளால் அந்தாதிபோல மலர்கிறது அழகுத் திருப்பள்ளி எழுச்சி மன்னும் உத்தர கோசமங்கைக்கரசன், திருப்பெருந்துறை மன்னன், அண்ணாமலையான், தேசன், சிவலோகன், தில்லைச் சிற்றம்பலத்து ஈசன், அருளில் நீராடச் சேர வாரும் செகத்தீரே! என்று பக்குவப்பட்ட வாசக நாயகி அழைக்கிறார்! இன்னுமா உறக்கம்?

8. திரு அம்மானை

பேராசிரியர். மு. அம்பிகாபதி

ஏழிசையாய் இசைப்பயனாய் இறைவனைக் கண்டவர் தமிழர். ஐவகை நிலங்களுக்கும் பண் வகுத்துப் பாடி மகிழ்ந்தவர்; பாட்டோடு பிறந்து, வாழ்ந்து, மறையும் வாழ்வுநம் தமிழர் வாழ்வு. ஒலிக்கும் இடியிலும், துடிக்கும் அலையிலும் இசை கண்டவர் நம் தமிழர். அதனால்தான் 'பா' ரதத்தில் வாழ்ந்த பாரதியும் 'ஓசைதரும் இன்பம் உவமையிலா இன்பம்' என்றார்.

நாட்டுப்புறப்பாடல்கள்

மாந்தர் இன்பத்திலும் துன்பத்திலும் இயற்கை மாற்றத்தால் எழுந்த புதிய வியப்பிலும், அச்சத்திலும் எழுந்த உணர்ச்சிப் பாடல்களே 'நாட்டுப்புறப் பாடல்கள்' 'பண்ணத்தி' எனும் இலக்கண அமைப்பிற்குள் இதனையடக்கி உரைப்பர் தொல்காப்பியர்.

இயற்கையோடு இறைவனை இணைத்துக் கண்ட நம் தமிழ் புலவர்களும், அடியார்களும் பக்திப் பனுவல்களைப் பல பா அமைப்புகளில் பாடி மகிழ்ந்தனர். அவற்றுள் ஒன்று நாட்டுப்புற பாடல்கள். வழி நடைப்பதம், அம்மானை, ஊசல், சிந்து, தெம்மாங்கு, ஏற்றப்பாட்டு என எல்லையற்று விரிந்தன அப்பாடல்கள்.

அம்மானையின் தோற்றம்

இன்பம் நிறைந்த இளம் பருவமே விளையாட்டுப் பருவம் இன்பத்தின் தோற்றக்களனோ எழில்மிகு விளையாட்டு. இந்த விளையாட்டில் விளைவதோ இசை கலந்த ஆடல்.

அந்த ஆடல் வருகின்ற சூழலுக்கேற்ப மாறுபடும். எனவே மாறுபட்ட சூழலில் வாழுகின்ற மனித மனம் பாடியும், விளையாடியும் மகிழ்வைப் பெறுகின்றது. இதனை உணர்ந்தே நம் தொல்காப்பியரும்

"செல்வம் புலனே புணர்வு விளையாட்டொன்று
அல்லல் நீத்த உவகை நான்கே"

என 'உவகை' பிறக்கும் வழிகளில் ஒன்றாய் 'விளையாட்டையும்' இணைத்து உரைத்துள்ளார்.

'வானுங்குவலயமும் எல்லோரும் காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி'

என இறைவனின் இயக்கங்களை விளையாட்டு என்கிறார் நம் மணிவாசகப்பெருமான்.

'அலகிலா விளையாட்டுடையான்' என்கிறார் நம் கவிச்சக்கரவர்த்தி கம்பர்.

ஆரம்ப நாளில் கதைப்பாடலாக மலர்ந்த அம்மானை பின்னர் விளையாட்டுப் பாடலாக மலர்தது. இலக்கியம் காட்டும் விளையாட்டுக்குள் தலையாயது கழங்கு. ஆரம்ப நாட்களில் கழங்கு எண்ணுவதற்குப் பயன்படும் கருவியாகும் வேலன் குறி கூறப் பயன்படுத்தும் கருவியாகவும் இருந்தது. பின்னரே பெண்கள் ஆடும் ஆட்டத்தின்போது பயன்படும் கருவியாக (காய்களாக) மாறியது. இக்காய்கள் பெண், முத்து, நீலம், பவளம், மரகதம், மணி, வைரம் எனும் ஏழுவித விலையுயர்ந்த மணிகளால் ஆகப்பட்டடிருக்குமாம். அவை மகளிரால் ஆடப்படும் போது வானவில்லாய் வலம் வருமாம். இக்கழங்கு விளையாட்டின் போது பாடும் பாடலே அம்மானை, முதன் முதலில் கழங்காடலை அம்மானை ஆக்கி, அதற்கோர் தனியொரு இலக்கிய இடமளித்தவர் அரசைத் துறந்து துறவைத் துணைக் கொண்ட அருந்தமிழ் அறப் புலவர் இளங்கோ. எத்தனையோ ஆட்டங்கள் கால ஓட்டத்தில் காணாது போனாலும் இன்றும் தொடர்ந்து ஆடப்படுவது இக்கழங்கு ஆடலே. இவ்வாடலை தனியாகவும், ஆயத்தாரோடும் இணைந்து ஆடலாம். ஆடலின் போது பாடலும் இணைந்து பிறக்கும். அப்பாடலே அவரவர் கவித்திறனும் கலைத்திறனும் மிளிர்ந்து நிற்கும். இவ்வம்மானை சிலம்பினைப் பின்பற்றி திருவாசக்தில் எழுந்தது. பின்னர் கலம்பகத்திலும் பிள்ளைத் தமிழிலும் உறுப்பாயிற்று தனித்தனியாக அம்மானை வரிகளாகத் திகழ்ந்து பின்னர் பாட்டாய் மாறிற்று.

திருவாசகத்தில் திருவம்மானை

அறநெறிக்கு தலையாய நூல் திருக்குறள் என்றால் அருள்நெறிக்கு தலையாய நூல் திருவாசக மாகும். அந்த அருள்நெறி வழி விட்டு நெறியைப் பெற மாணிக்கவாசகர் உரைத்த மந்திரப் பதிகங்களே சிவபுராணம், திருப்பள்ளி எழுச்சி, திருத்தசாங்கம், திருப்பாண்டிப் பதிகம், திருவம்மானை. இவற்றுள் திருப்பெருந்துறையில் பாடப்பெற்ற சிறப்பினும் பதிகம் திருவம்மானை, கருவாசம் நீக்கும் திருவாசகத்தைப் பாட மாணிக்கவாசகருக்கு அந்தணையாய் நின்று சிவன் அருள் செய்த தலமன்றோ அது! குருவருளும் திருவருளும் ஒருங்கு கண்டு 'வாசகர் ' வார்த்தெடுத்த பதிகமன்றோ திருவம்மானை! உமையொரு பாகத்தானை உடன் பெறவே, தானோடு மாதாய் தரணியில் பிறந்தது பெண்மானாய் நின்று அம்மானின் அருள்திறத்தை அணு அணுவாய் அருந்தப் பாடிய ஆரும் பாக்கவல்லவோ திரு அம்மானை.

திருவம்மானையுள் தீருவாத வூரார் இறைவனின் தன்மைகள் அவன் ஆட்கொண்ட திறம், திருவடியின் பெருமை, திருப்பெருதுறையின் தனிப் பெருமை! தன் வரலாறு கூறல், புராண நிகழ்வுகள், பக்தி பெருக்கால் பிறக்கும் ஆனந்தக்க களிப்பு, மாற்றங்கள், பாவில் புதிய படைப்பு என பலவற்றைப் படைத்தளித்துள்ளார். எல்லாம் வல்ல எம்பெருமானின் எண்ணற்ற பெருமைகள்தனை இனி இயன்றவரை இயம்புவோமாக.

ஈசனின் இயல்புகள்

சிவலோகம் காட்டும் தென்பாண்டி நாட்டான் காண்பதற்கு அரியன், அடியார்க்கோ எளியன், கருணை மனத்தன் போற்றப் பாடும் பெருமைகட்குரியன் என்கிறார் வாதவூரார் அரியன் இருபது பாக்களில் அம்மானை தந்த வாசகர். முதலில் பெம்மானின் பெறறக்கரிய பெருவடிவைப் பற்றியே பேசுகின்றார். அன்பினால் அன்றி அவனை யாராலும் காணவொண்ணாது என்கிறார்.

'செங்கண் நெடுமாலும் சென்றிடத்துங் காண்பரிய'

'பாரார் விசும்புள்ளார் பாதாளத்தார் புறத்தார்
ஆராலுங் காண்டற் கரியான்'

'இந்திரனும் மாலயனும் ஏனோரும் வானோரும்
அந்தரமே நிற்க'

'வான் வந்த தேவர்களும் மாலயனோடு இந்திரனும்
கானின்று வற்றியும் புற்றெழுந்துங் காண்பரிய'

'மாலையனோடு இந்திரனும் எப்பிறயியுந்தேட'

உயர் பிறப்பாலோ புற்றெழுந்த தவவடிவாலோ அவனைக் காணவே இயலாது என்கிறார்.

எளியன்

அவனே சரண் என்று திருவடிதனை வணங்கின். இவர் எப்பிறப்பென்று எள்ளாதே இருக்குமிடம் நாடி தானே எழுந்தருளி உய்விப்பான் என்கிறார். இதனை,

'பொங்கு மலர்பாதம் பூதலத்தே போந்தருளி
எங்கள் பிறப்பறுத்திட்டு எந்தரமும் ஆட்கொண்டு'

'எமக்கெளிய பேராளன்'

'வாரா வழியருளி வந்தென் உளம் புகுந்த'

'சிவன் அவனி வந்தருளி'

'தான் வந்து நாயேனைத் தாய்போல் தலையளித்திட்டு என்கிறார்.

கருணை உளத்தன்

பாரார், விசும்புளார், பாதாளத்தார், புரத்தார், ஆராலுங் காண்டற்கரிய அப்பெருமான் அடியார் அன்பிற்கு அகம் குழைந்து தானே காட்சி தந்து கருணை மழை பெய்விப்பான் என்கிறார். அவனே அடியாரே கூவியழைத்து, கல்போன்ற மனதையுங் கனிவித்து, குற்றங்களை நீக்கி குணங்களை மட்டும் பேணி,

பிறவித்துயர் கெட, இவருக்கு இத்துணை பெருவாழ்வா என்று பிறர் எள்ளி நகை ஆடினாலும் பெறுவதற்கரிய வீடுபேற்றை நல்கியவன் என்று பேசிப்பேசி அகம் மகிழ்கின்றார். இதனை

'அங்கணன் அந்தணனாய் அறைகூவி வீடருளும்'

'வாரா வழியருளி வந்தென் உமை புகுந்த'

'தாய்போல் தலையளித்திட்டு'

'கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன் கருணை
வெள்ளத் தழுத்தி வினை கழந்த வேதியனை'

'நாட்டால் நகை செய்ய நாம் மேலை வீடெய்த'

'இப்பிறவி ஆட்கொண்டு இனிப் பிறவாமே காத்து'

குற்றங்கள் நீக்கி குணங்கொண்டு கோதாட்டி என்று பல வாறாய் பாடி மனம் களிக்கின்றார்.

பெருமைக்குரியன்

அரியானாய், எளியனாய் காட்சி தரும் ஆனைமுகத்தானின் தந்தை,

'மெய் பொருட்கண் தோற்றமாய் மெய்யே நிலைபேறாய்
எப்பொருட்கும் தானேயாய் யாவைக்கும் வீடாகும்
அப்பொருளாம்',

எனக் காட்சி தரும் பெருமைக்குரியவன் என்கிறார்.

ஆட்கொண்ட ஆடலரசன்

'தாள் தாமரை காட்டி தன் தேன் கருணைத் தேன் காட்டி அவனி தானே அந்தணையாய் வந்து ஆட்கொண்டான் என்பதனை பற்பல இடங்களில் பாடுகின்றார். ' எங்கள் பிறப்பறுத்திட்டு எந்தரமும் அட்கொண்டு ' எனத் தான் பெருமையற்றிருந்த நிலையிலும் அவன் பேர்பாடி நின்ற காரணத்தால் பேரின்பம் கிடைத்தது என ஆங்குழைகின்றார்.

திருப் பெருந்துறையான்

'அரசு' பணி புரிய இயலாது அருட்பணி புரிய அந்தணனாய் வந்து தன்னை ஆட்கொண்ட வரலாற்றை

'பெண்ணாளும் பாகனைப் பேனது பெருந்துறையில்
கண்ணார் கழல் காட்டி நாயேனை ஆட்கொண்ட'

நாயகன் எனப்பாடி வெளிப்படுத்துகின்றார். 'அங்கணன் அந்தணனாய் அறை கூவி வீடருளினான் என்கிறார்.

புராண நிகழ்வுகள்

'மாலயனுங் காண்பரிய' எனத் திருவடி, திருமுடி காண இயலாத தீப்பிழம்பாய் நின்ற திருக்கதையும், 'கண்டங்கரியான்' என நஞ்சுண்ட கதையும், 'சந்திரனைத் தேய்த்து, தக்கன்தன் வேள்வியை' அழித்தான் என தக்கன் யாகம் ஒழித்த கதையும்,

"காண் சுமந்து நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண் சுமந்து அக்கோவால் மொத்துண்டு, புண் சுமந்த மேனி'

' என வைகை கரைஅடைக்க வந்தகதையும் 'பெண்ணாரும் பாகனே,' 'மாதிருக்கும் பாதியானை' என 'நான் பாதி, நீ பாதி' என பெண்ணுக்கு உரிமையளித்து பேணி நின்ற அர்த்த நாரியின் அழகுகதையும் வாசகரால் அம்மானையுள் பேசப்படுகின்றது.

பக்தியால் விளைந்த விளைவுகள்

அங் கருணை வார்கழலைக் கண்டதால் நெஞ்சுருகி உரோமங்கள் உயிர்ப்பித்து, சிந்தனை சீர்பட்டு உள்ளத்தில் ஒளியேற, ஈசனுடன் ஊனுருகி, உணர்வாய் கலந்தேன் என்கிறார். இதனை,

'தப்பாமே தாளந்தால் நெஞ்சுருக்கும் தன்மையினான்'

'ஊன் வந்து உரோமங்கள் உள்ளே உயிர்ப்பெய்து'

'சிந்தனையை வந்துருக்கும் சீரார் பெருந்துறையான்'

'உள்ளத்தினுள்ளே ஒளி திகழ அளிவந்த அந்தணனாய்'

'ஊனையும் நின்றுருக்கி'

'உளனாய் உயிராய் உணர்வாய் என்னுட் கலந்து'

எனப் பாடுகின்றார்.

அனலேந்தி ஆடுவான் சேவடி கண்டதால்,

'சூடுவேன் பூங்கொன்றை சூடிச் சிவன் திரள்தோள்
கூடுவேன் கூடி முயங்கி மயங்கி நின்று
ஊடுவேன் செவ்வாய்க்கு உருகுவேன்'

என உருமாறி உயிர்க்காதல் புரிகின்றார். உய்வு பெறுகின்றார்.

நிறையுரை

தானே மருந்து பொருளாய் நிற்பதோடன்றி பிற மருந்துப் பொருள்களை கெடாமல் இருக்க வைக்கும் ' தேனாய் இனிக்கின்றான்!' தானாய் ' நின்று தலையளித்திட்டு நாயான நம் நம்மையும் ஆட்கொண்டான்!' உலக உயிர்களை அனைத்தையும் தன்னுள் அடக்கி உய்வு பெறச் செய்தவன் சிவன் அவன் என திருவம்மானை மூலம் ஆடிப் பாடி அகங் குழைகின்றார்! பக்தி சிரம் குவிக்கின்றார்!

நமச்சிவாய வாழ்க! நாதன் மாணிக்கவாசகர் வாழ்க

9. திருப்பொற்சுண்ணம்

- பேராசிரியை. டாக்டர். **நா. வள்ளி**

தேன் கலந்து, பால் கலந்து, செழுங்கனித் தீஞ்சுவை கலந்து, ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிக்கும் திருவாசகப் பனுவலை, மாணிக்க வாசகப் பெருமான், தமக்கு எளிவந்து அருள்புரிந்த இறைவனது பேரருளை நினைந்து நினைந்து செஞ்சம் உருகி, காதாலகிக் கசிந்து கண்ணீர் மல்கிப் பாடியிருக்கிறார். மனம் கரைத்து மலங்கெடுக்கும் வாசகங்கள் அவை.

முதலாம் இராஜராஜசோழனின் மகன் முதலாம் இராஜேந்திரன் கால முதல் திருவாசகம் எட்டாம் திருமுறையாகப் போற்றப்பட்டது. அக்கால முதல் கோயில்களில் மணிவாசகரது பாடல்களைப் பாடுவதும், பாடல்களுக்கு ஏற்ப தேவரடியார்கள் நடனமாடுவதும் பெருவழக்காய் இருந்தது என்பதைப் பல கல்வெட்டுக்கள் உணர்த்துகின்றன. (பிறகு கோயில்களில் மாணிக்க வாசகரின் திருமேனி எழுந்தருளிவிக்கப்பட்டு, பூசை வழிபாடுகளும் நடத்தப்பட்டன.)

வீர இராஜேந்திர சோழனின் கல்வெட்டொன்று, திருவொற்றியூர் படம்பக்க நாயனார் கோயிலில் திருவாதிரைத் திருநாட்களில், இறைவன் வீதி உலா வருங்காலத்தில் 22 தளிச்சேரிப் பெண்டுகள் திருவெம்பாவை விண்ணப்பித்துப் பாடலுக்கு ஏற்ற வகையில் ஆடவும், 16 பெண்கள் அகமார்க்கத்தில் திருப்பதியம் விண்ணப்பிக்கவும் நியமிக்கப் பட்டனர் என்றும், இப்பெண்களுக்கு ஆடல்களைச் சொல்லிக் கொடுக்க இரண்டு ஆசிரியர்கள் நியமிக்கப் பட்டனர் என்றும் கூறுகிறது. (ARE 128/ 1912)

அது மட்டுமல்ல, முதற் குலோத்துங்க சோழனின் இரண்டாம் ஆண்டுக் கல்வெட்டொன்று, திருவொற்றியூர் கோயிலில் எழுந்தருளியுள்ள காரணை விடங்கருக்குத் “திருச்சாந்தாடல் விழா” எடுக்க நிவந்தங்கள் அளிக்கப்பட்ட செய்தியைக் கூறுகிறது. (ARE 143 / 1940-41)

மாணிக்க வாசகர் மகளிர் விளையாட்டைக் கருவியாகக் கொண்டு இலக்கியச் சுவைமிக்க பல பாடல்களைச் செய்திருக்கிறார் . மகளிர் விளையாட்டை அடிப்படையாகக் கொண்டு இறைவன் புகழை இலக்கியச் சுவைபடச் சொல்லும் பகுதிகள் அவை. சிவபுராணம் முதலாக அச்சோப் பதிகம் ஈறாக 51 பகுதிகளாக முறைப்படுத்தப்பட்டுள்ள திருவாசகத்தில், ஒன்பதாவது பனுவலாக விளங்குவது "திருப்பொற்சுண்ணம் "என்ற பகுதியாகும். இறைவனது திருமேனியை நீராட்ட வண்ணப் பொற்சுண்ணம் இடிக்கின்ற கோயிற்பிணாப் பிள்ளைகள் இறைவனின் பெருமைகளைப் பாடிச் சுண்ணமிடிப்பதாக மணிவாசகர்அருளிய அருமையான இருபது பாடல்கள் அவை. திருப்பொற்சுண்ணமிடித்தல் என்ற நிகழ்ச்சிதான் சாந்தாடல் விழாவாகக் கோயிலில் கொண்டாடப்பட்டது என்பதை மேற்கூறிய குலோத்துங்கனின் கல்வெட்டால் அறிய முடிகிறது.

திருப்பொற்சுண்ணம் எந்தத் தலத்தில் பாடப்பட்டது என்பதைக் குறித்து இருவேறு வகையான கருத்துக்கள் நிலவுகின்றன. திருப்பெருந்துறையில் குருவாய் வந்தருளிய இறைவன், "நில் "எனச் சொல்லிச் சென்றபிறகு திருவாதவூரர் திருப்பெருந்துறை ஊருக்குள் சென்று அங்கு நிகழும் மகளிர் விளையாடல்களைக் கண்ணுற்று அம்மானை, பொற்சுண்ணம், கோத்தும்பி, சதகம் ஆகிய பாடல்களைப் பாடினார் என்று திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம் கூறும்.

ஆனால் கடவுள் மாமுனிவர் இயற்றிய திருவாதவூர்ப் புராணமோ, திருப்பொற்சுண்ணப் பகுதி தில்லையில் அருளிச் செய்யப்பட்டது என்று கூறும். மணிவாசகர் திருப்பொற்சுண்ணப் பகுதியில் , ஒரு பாடலில் ஐயாறையும், இரண்டு பாடல்களில் தேசமெல்லாம் புகழ்ந்தாடும் கச்சித் திருவேகம்பத்தையும், மூன்று பாடல்களில் சிட்டர்கள் வாழும் தென்தில்லையும் குறிப்பிடுகிறார். தில்லையைப் பற்றிய குறிப்புக்கள் திருப்பொற்சுண்ணப் பகுதியில் காணப்படுவதாலும் திருப்பெருந்துறையைப் பற்றிய குறிப்பு அதில் இல்லாத காரணத்தாலும் கடவுள்மாமுனிவர், திருப்பொற்சுண்ணப் பகுதி தில்லையில் பாடப்பட்டது என்று கூறினார் போலும்.

பண்டு, ஆண்களும் பெண்களுமாகப் பலர் கூடி வேலை செய்யும்போது களைப்புத் தெரியாதிருக்க, ஆடியும் பாடியும் வேலை செய்வர். அதற்குத் "தொழிற்பாட்டு" என்று பெயர். அவ்வாறு ஆடிப்பாடி வேலை செய்யும்போது வேலை இன்பமளித்தது என்பது ஒரு புறமிருக்க, அந்த ஆட்டமும் பாட்டமும் அவ்வின்பத்தைப் பெருக்கவும் செய்தது. நெடு நேரம் வேலை செய்தாலும் சோர்வு வராமல் தடுத்தது. வயயில் வேலை செய்கின்ற மகளிர் பாடுகின்ற உழத்திப் பாட்டு, ஏற்றம் இறைக்கும்போது பாடுகின்ற ஏற்றப்பாட்டு, படகைச் செலுத்தும்போது பாடுகின்ற ஏலேலோப்பாட்டு, உரலில் ஒரு பொருளை இட்டு, உலகக்கை கொண்டு மாறிமாறி இருவர் இடிக்கும்போது பாடுகின்ற உலக்கைப் பாட்டு ஆகியவற்றை தொழிற்பாடல்களுக்குச் சான்றாகக் கூறலாம்.

உலக்கைப்பாட்டு, வள்ளைப் பாட்டு என்றும் அவலிடி என்றும் கூறப்பெறும். முத்தொள்ளாயிரத்தில், அகத் துறையில் அமைந்த, ஓர் அழகான வள்ளைப்பாட்டு இதோ:

பொன்னார மார்பிற் புனைகழற்கால் கிள்ளிபேர்
உன்னேனென்று ஊழுலக்கை பற்றினேற்கு- என்னோ
மன்னோடு வாயெல்லாம் மல்குநீர்க் கோழி
புனல் நாடன் பேரே வரும்!

சிலப்பதிகார வாழ்த்துக் காதையில் அம்மானை, கந்துக வரி, ஊசல், வள்ளைப்பாட்டு ஆகிய மகளிர் விளையாடல்களாக அமைந்த பாடல்கள் நாம் அறிந்தவையே.

கல்வியறிவினாற் சிறந்தவர்கள் நூல் ஆராய்ச்சியினால் அறிந்து கொள்ளும் அரிய செய்திகளைக் கல்வியறிவு நிரம்பாதவர்களும் காட்சி மாத்திரத்தால் கண்டு உணரும் வண்ணம் செய்வது ஆடல்பாடலாகும். ஆகையால்தான் நம் மணிவாசகப் பெருந்தகையும், ஆதியும் அந்தமும் இல்லாத அருட்பெருஞ்சோதியின் பெருமைகளைச் சொல்ல, மகளிர் விளையாட்டுக்களைத் தேர்ந்தெடுத்திருக்க வேண்டும்.

திருப்பொற்சுண்ணப் பகுதியில், கோயிற்பிணாப் பிள்ளைகள் அனைவரும் கூடி இறைவன் திருமஞ்சனத்துக்குரிய

நறுமணப்பொடியை இடிக்கின்ற செய்தி இருபது பாடல்களில் கூறப்படுகின்றது. சுண்ணம் இடிக்கின்ற பெண்கள் மனதினால் இறைவனைச் சிந்தித்து வாயினால் வாழ்த்தியவண்ணம் மெய்த்திருத்தொண்டில் ஈடுபாட்டுள்ளனர். இறைவனுக்குத் திருத்தொண்டு செய்யும் பேறு கிடைத்த அவர்களது உள்ளம் மகிழ்ச்சியினால் திளைத்திருக்கின்றது. அதனால் இத்திருப் பொற்சுண்ணப் பகுதிக்கு ஆனந்த மனோலயம் என்று முன்னோர் பெயரிட்டனர். அகத்தியர் 'அருளிய திருவாசகத் திரு உள்ளக்கிடக்கை' திருப்பொற்சுண்ணப் பகுதியைப் பற்றிக் குறிப்பிடுகையில்.

"மோனந்தமாக மொழி திருச்சுண்ணம்
ஆனந்த மனோலய மாமென மதிப்பர்" - என்று கூறுகிறது.

திருமஞ்சனப்பொடியை இடிக்கப் புகுகின்ற பெண்கள், முதலில் என்னென்ன செய்ய வேண்டும் என்று ஒருவருக்கொருவர் சொல்லிக் கொள்ளுகிறார்கள். முதலில் அந்த இடத்தை மெழுகித் தூய்மை செய்ய வேண்டும். பிறகு முத்துமாலை முதலியவற்றால் அணி செய்து முளைக்குடம் வைத்துத் தூப தீபம் முதலியன அமைத்துக் கவரிவீசிக் கொடி எடுக்க வேண்டும். சுண்ணம் இடிக்கின்ற கருவியாகிய உரலுக்குப் பட்டு சாத்தி, உலக்கைக்குப் பொற்பூண் அணிந்து 'நேசமுடைய அடியவர்கள் நின்று நிலாவுக' என்று வாழ்த்தி, இறைவனுக்குரிய திருப்பொற்சுண்ணத்தை இடிக்க வேணும் என்கிறார்கள் அவர்கள்.

இங்கு ஒன்றைச் சிந்திக்க வேண்டும். சுண்ணமிடிக்கப் போகின்ற பெண்கள் முதலில் சிவனை வாழ்த்துவோம் என்று சொல்லவில்லை. அடியவர்களைத் தான் முதலில் வாழ்த்துவோம் என்கிறார்கள். தொண்டர்தம் பெருமை சொல்லவும் பெரிதல்லவா? நடமாடக் கோயிலாம் நம்பர்களை வாழ்த்தினால்அது படமாடக் கோயில் பகவனை வாழ்த்தியதாக ஆகும் என்பது அவர்களுக்குத் தெரியும். அதனால்தான் அவர்கள் நேசமுடைய அடியவர்கள் நின்று நிலாவுக என்று அடியார்களை வாழ்த்திப் பொற்சுண்ணம் இடிப்போம் என்கிறார்கள்.

அத்தன், ஐயாறன் அம்மானைப்பாடி ஆடிப் பொற்சுண்ணமிடிக்கக் குழுமிய மகளிர்களாக சக்தி, சோமி, பார்மகள், நாமகள், சித்தி, கௌரி, பார்வதி, கங்கை என எண்மர் குறிக்கப்பெறுகின்றனர். இப்பாடல் குறிப்பினைக் கொண்டு அட்ட சிவ சக்தியும் திருவையாறு அகலாத செம்போற்சோதியை வணங்குதல் என்ற கருத்துரைப்பர் சீகாழித் தாண்டவராயர்.

ஆதியும் அந்தமும் இல்லாத ஐயன், அணிதில்லை வாணனுடைய திருமஞ்சனத்திற்குரிய சுண்ணப்பொடியைத் தயாரிப்பதென்றால் அவ்வளவு எளிதான காரியமா என்ன? பாதாளம் ஏழினும் கீழ் சொற்கழிவு பாதமலர். போதார்புனை முடியும் எல்லாப் பொருள் முடிவே. இப்படி விண்ணுக்கும் மண்ணுக்குமாக விரிந்திருக்கின்ற இறைவனது பெருமைக்குத் தக்கவாறு சுண்ணப்பொடி தயாரிக்க வேண்டுமென்றால் உலகத்தையே உரலாகவும் மேரு மலையை உலக்கையாகவும், மெய்ம்மையையே மஞ்சளாகவும் கொண்டு இடித்தால்தான் முடியும் என்பது அப்பெண்களின் உறுதியான எண்ணம்.

இளமையும், துள்ளலும், வேடிக்கையும் விளையாட்டுமாகச் சுண்ணமிடிக்கிறார்கள் அப்பெண்கள்.

"முத்தணி கொங்கைகள் ஆட ஆட
 மொய்குழல் வண்டினம் ஆட ஆட
சித்தஞ் சிவனொடும் ஆட ஆட
 செங்கயற்கண் பனி ஆட ஆட
பித்து எம்பிரானோடும் ஆட ஆட
 பிறவி பிறரோடும் ஆட ஆட
அத்தன் கருணையோடு ஆட ஆட
 ஆட்ப் பொற்சுண்ணம் இடித்து நாமே"

என்ற பாடலின் மூலம் நம்மையும் இளமையாக்கி, அப்பெண்களின் ஆட்ட பாட்டத்தில் கலந்து கொண்டு ஆட வைத்து விடுகிறார் மணிவாசகர்.

அயன் தலைக் கொண்டு ஆடல் பாடி, அருக்கன் எயிறு பறித்தல் பாடி, கயந்தனைக் கொன்று உரி போர்த்தல் பாடி, காலனைக் .காலால் உதைத்தல் பாடி, பெண்கள்

சுண்ணமிடிப்பதாகக் கூறும்போது இறைவனின் மறக்கருணை விரிவாகப் பேசப்படுகிறது. தேவருக்கு அரிதானவன் தம்மை வலிய வந்து ஆட்கொண்ட தன்மையைப் பல பாடல்களில் நெஞ்சு நெக்குருகி விவரிக்கிறார் மணிவாசகர்.

அம்மையோடு அப்பனுக்குள்ள பிரிக்க ஒண்ணாத தொடர்பினை உலகியல் உறவு முறை பற்றி உருவகஞ் செய்து உரைப்பதாக அமைந்தது இப்பனுவலின் 13ஆம் பாடலில் அமைந்த,

'எம்பெருமான் இமவான் மகட்குத் தன்னுடைய கேள்வன், மகன், தகப்பன், தமையன்' என வரும் தொடராகும். அப்பர் பெருமான் தன்னை நல்வழிப் படுத்திய சகோதரியாரை மனதில் கொண்டு உடன்பிறந்தாராக இறைவனைப் பார்க்கிறார். இறைவனுக்கு இறைவியோடு உள்ள தொடர்பைக் கூறவந்த மணிவாசகப் பெருந்தகையோ, 'கேள்வன்' 'மகன்' 'தகப்பன்' என்பதோடு 'தமையன்' . என்ற உறவு முறையையும் கொண்டாடுகிறார். தமையன் என்று கூறப்படுகின்ற உறவுமுறை இங்கு சிந்திக்கத் தக்கது. மணிவாசகப் பெருந்தகையோடு உடன்பிறந்தாரைப் பற்றிய குறிப்பு நமக்குக் கிடைக்கவில்லை. ஆயின் இவர் காலத்தில் மன்னனான, இவர் அமைச்சராகப் பணியாற்றிய, பாண்டிய மன்னனைப் பற்றிய குறிப்பை இவரது பாடல்களில் பார்க்கமுடிகிறது. வரகுணனாம் தென்னவன் ஏத்தும் சிற்றம்பலம், என்றும் சிற்றம்பலம் புக்கு மயல்ஓங்கு இருங்களியானை வரகுணன் என்றும் நிகழ்காலத்தில் அவர் குறிப்பிட்டுள்ளமை கருதத்தக்கது.

பாண்டியர் வரலாற்றில் இரண்டு வரகுணர்களைப் பார்க்கிறோம். முதலர்மவன் பரம வைணவன். வேள்விக்குடிச் செப்பேட்டை வெளியிட்டவன். இரண்டாமவன் சிறந்த சிவபக்தன். இந்த இரண்டாம் வரகுணனின் காலம் கி.பி.863 முதல் 911 வரையிலாகும் .இக்காலக் கட்டத்தில்தான் மணிவாசகர் வாழ்ந்தார் என்பது வரலாற்றறிஞர்கள் முடிவு.

பாண்டிய குலோதயா என்னும் வடமொழி காவியம் ஒன்றும் மணிவாசகரது வரலாற்றை விரிவாகச் சொல்லுகிறது.

வாதபுரி நாயகரான மணிவாசகர் வரகுண பாண்டியனிடம் மந்திரியாக இருந்த செய்தியும், இறைவன் மணிவாசகர் பொருட்டு நரியைப் பரியாக்கிய செய்தியும் சொல்லப்பட்டுள்ளன.

இந்த வரகுணபாண்டியன் தன் ஆட்சிக்காலத்திலேயே தன் இளவல் பராந்தக வீரநாராயணனுக்கு முடிசூட்டிச் சிவனருளைச் சிந்தித்தவனாக அரசியலில் தாமரையிலைத் தண்ணீர்போல இருந்திருக்கிறான் என்பதை, அவனது தம்பி பராந்தக வீரநாராயணனின் 45ஆவது ஆட்சி ஆண்டில் வெளியிடப்பட்ட தளவாய்புரச் செப்பேடுகூறுகிறது.

"எம்கோ வரகுணன் பிள்ளைப்பிறைச்
சடைக்கணிந்த பினாகபாணி எம்பெருமானை
உள்ளத்தில் இனிதருளி உலகம் காக்கின்ற
நாளில்" - என்பது செப்பேட்டு வாசகம்.

தம்பிக்குப் பாண்டியப் பேரரசு ஆளும் உரிமையைப் பெருந்தன்மையோடு விட்டுக்கொடுத்த தமையனும் சிற்றம்பலத்தை ஏத்துகின்றவனுமான தென்னவனுடைய செயல் கண்டு மாணிக்க வாசகரது உள்ளம் நெகிழ்ந்திருக்கவேண்டும். அதனால்தான் இறைவனுக்கு இறைவியோடு உள்ள உறவைத் தமையன் உறவாகவும் கண்டு மகிழ்கிறார் மணிவாசகர் எனலாம்.

"கனகமார் கவின்செய் மன்றில்
அனகநாடற்கு எம் அன்னை
மனைவி தாய் தங்கை மகள்"

எனவரும் குமரகுருபரர் பாடலும் இங்கு நினைக்கத்தக்கது.

'அறுகெடுப்பார் அயனும் அரியும்' எனத்தொடங்கும் திருப்பொற்சுண்ணத்தின் ஐந்தாவது பாடலில் இறைவனுக்கு ஆளான பெருமிதத்தில் 'எங்கெழில் என் ஞாயிறு' என்கிற பெருமித உணர்வோடு இருக்கின்ற பெண்களைப் பார்க்கிறோம். அயன் பிரம்மன் முதலான தேவர்கள்கூட அவர்களுக்கு ஒரு பொருட்டில்லை. முக்கண் அப்பனாகிய இறைவன் திருமுழுக்காட்டத் தொடங்குங்கால் அவன் திருமுடிக்கண் அறுகம்

புல்லை ஆன்நெய்யில் தோய்த்துத் தெளிப்பர். அத் திருத்தொண்டினைச் செய்வதற்கு அயன் அரி முதலான தேவர்கள் எல்லோரும் முண்டியடித்துக் கொண்டு முன்னே வருகிறார்களாம். அப்படி வருகின்ற அவர்களைப் பின்னுக்குத் தள்ளிவிடுவோம் என்கிறார்கள் பெண்கள். தேவர்கள் நறுமுறுத்தாலும் (முணுமுணுத்தல்) கவலை இல்லையாம்.

"அறுகெடுப்பார் அயனும் அரியும்
அன்றி மற்று இந்திரனோடு அவரர்
நறுமுறு தேவர் கணங்களெல்லாம்"

நம்மிற் பின்பல்லது எடுக்க ஒட்டோம்" என்று அது கெடுக்கும் உரிமை தங்களுக்குத் தான் முதலில் என்கிறார்கள்.

திருப்பொற்சுண்ணம் இருபது பாடல்களிலும் சிவனுடைய கருணைத்திறத்தையும், தங்களுடைய அடிமைத்திறத்தையும் சொல்லிச் சொல்லிப் பாடி இளம்பெண்கள் சுண்ணம்இடிப்பதாகக் கூறும் மணிவாசகரது பாட்ல்களைப் படிக்கும்போது, சிவப்பிரகாச சுவாமிகளின் பாடல்தான் நினைவிற்கு வருகிறது.

"செய்ய வார் சடைத் தெய்வ சிகாமணி
பாதம் போற்றும் வாதவூர் அன்ப
பாவெனப் படுவது உன் பாட்டு
பூவெனப் படுவது பொறி வாழ் பூவே"

10. திருக்கோத்தும்பி

முனைவர் . **பழ. முத்தப்பன்**

திருவாசகத்தில் திருக்கோத்தும்பி 20 பாடல்களைக் கொண்டது. இப்பதிகம் திருத்தில்லையில் மணிவாசகப் பெருமான் எழுந்தருளியிருந்தபோது பாடியது ஆகும். மலர்களில் மொய்க்கின்ற வண்டுகளில் அரச வண்டைப் பார்த்துச் சிவபெருமான் திருவடிக்கண் சென்று ஊதுக என்ற முறையில் தூது அனுப்புவது போல் பாடியிருப்பது ஆகும்.

திரு என்பது அடைமொழியாகவும். கோத்தும்பி - என்பது அரசவண்டைக் குறிப்பதாகவும் அமைந்துள்ளது. 20 பாடல்களிலும் கோத்தும்பி என்ற சொல் அமைந்திருக்கிறது. மணிவாசகப் பெருமான் குருந்தமரத்தின் அடியிலிருந்து தமக்கு ஞான உபதேசம் அருளிய குருநாதனாம் இறைவனை விட்டுப் பிரிந்த துன்பத்திற்கு வருந்திக் கோத்தும்பியைத் தூது விடுவதாகப் பாடல்கள் அமைந்திருப்பதால் திருவாசகத்தின் பழைய உரைகாரர் இப் பகுதியைச் சிவனோடு ஐக்கியம் என்று குறிப்பிடுகின்றார்.

தண்டபாணி தேசிகர் இப்பகுதிக்கு உரையெழுதும்பொழுது (திருவாவடுதுறைப் பதிப்பு) "உயர்போதம் ஒரு வண்டாக, சித்த விகாரம் தூது செப்பிவிடல் கோத்தும்பி " என்பது பழைய திருப்பெருந்துறை புராணப் பகுதி. இதனால் சிவபோகத்தை ஒரு வண்டாகவும், தமக்குத் தோன்றும் சித்த விகாரத்தை அது தூது சென்று சொல்லும் செய்தியாகவும் கருதச் செய்தல் காண்க என உரையெழுதினார்கள். எனவே சிவனோடு ஐக்கியம் ஆவதற்குரிய தத்துவக் கருத்துக்களை இப்பகுதி கொண்டிருக்கிறது. எனலாம்.

இருபது பாடல்களையும் பொருள் நோக்கோடு ஆய்ந்து பார்த்தால் இருபெரும் பிரிவுகளாகப் பாடல் தரும் பொருளைக் கொள்ளலாம். முதற்பகுதியை இறைவனுடைய பெருமைகளைப் புராண அடிப்படையிலும் தத்துவ அடிப்படையிலும் கூறும் பகுதியாகக் கொள்ளலாம். இரண்டாவது பகுதியை

இறைவனுக்கும் தனக்கும் உள்ள ஆன்மநேயத் தொடர்பை மணிவாசகர் விளக்குவதாகக் கொள்ளலாம்.

இறைவன் உலகினுக்குக் கருவாய் விளங்குகிறான். உலகினுக்கு அப்புறமாய் விளங்குகிறான். அருவாய் விளங்கி மறைபயில் அந்தணனாக விளங்குகிறான். இவ்வாறு இறைவனுடைய மூவகை நிலைகளைத் தெளிவாகப் பாடலில் குறிப்பிடுகிறார் மணிவாசகர். அதாவது உலகத்திற்கே மூலமாக இறைவன் விளங்குகின்றான். எவ்வாறென்றால் உலகப் பொருள் அத்தனையையும் தன்னகத்து அடக்கி, பேரொளிக் காலத்தில் அடக்கிய அவற்றைப் புணர்உட்பவக் காலத்தில் மீளவும் அவை விரிய மூலமாக இருக்கின்றான். இவ்வாறு கருவாக இருந்த இறைவன் உலகத்தை இயக்கும் முதல்வனாகவும் இருக்கின்றான். இயக்குகின்ற இறைவன் இயங்குகின்ற உயிர்களின் பரிபக்குவத்திற் கேற்ப ஞானமாகவும் விளங்குகின்றான். இம்மூன்று நிலையைக் கீழ்வரும் பாடல் பகுதியில் மணிவாசகர் குறிப்பிடுகிறார்.

> "கருவாய் உலகினுக்கு அப்புறமாய் இப்புறத்தே
> ....
> அருவாய் மறைபயில் அத்தணனாய் ஆண்டு கொண்ட"
> (பா. 14)

இவ்வாறு மூவகை நிலைகளில் விளங்குகின்ற இறைவன் நினைக்குந்தொறும். காண்குந்தொறும், அவனைப் பற்றிப் பேசுந்தொறும் எலும்பெல்லாம் உருக ஆனந்தத்தேன் சொரியும் இன்பத் தலைவனாக விளங்குகின்றான். (பா.3)

இவ்வாறு மெய்த்தேவனாக, சிட்டாய சிட்டனாக விளங்குகின்ற அவனுடைய உருவமோ அம்மை அப்பனாக விளங்குகிறது என்கிறார் மணிவாசகர். ஒருபால் புலித்தோலும், மற்றொருபால் பட்டாடையும், ஒருபக்கம் சங்கு குண்டலமும் மற்றொரு பக்கம் சுருண்ட தோடும், ஒருபக்கம் திருநீரும் மற்றொரு பக்கம் சந்தனமும், ஒருபக்கம் சூலமும் மற்றொரு பக்கம் பச்சைக் கிளியும் கொண்டு அர்த்தநாரீஸ்வரராக இறைவன் விளங்குகிறான். (பா. 18) என்றெல்லாம் குறிப்பிட்டு

இறைவனுடைய பெருமைகளைப் போற்றிப் புகழுகின்றார் மணிவாசகர்.

இறைவனின் பெருமைகளைக் கூறுகின்ற பகுதிகள் எல்லாம் தத்துவ அடிப்படையில் பொருள் தருகின்றன. அவற்றை விரித்துப் பார்த்தால் கட்டுரை மேலும் விரியும் என்பதால் மணிவாசகர் தனக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பினை விளக்கும் பகுதியில் சிறிது விரிவாக இக்கட்டுரை அமைகிறது.

திருக் கோத்தும்பி என்ற பகுதியில் இடம் பெற்ற ஒரு சிறந்த பாடல் திருவாசகம் பயில்வார் நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கின்ற,

"கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்
என்னப்பன் என்ஒப்பில் என்னையும் ஆட்கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை வாவென்ற வான்கருணைச்
சுண்ணப் பொன்னீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பி" (பா. 4)

என்ற பாடலாகும். இத் திருப்பாடல் பரிபக்குவம் இல்லாத தம்மை இறைவன் ஆட்கொண்டு தம்மைத் திருவருள் அனுபவத்திற்கு ஆளாக்கியதை மணிவாசகர் நெஞ்சுருகிக் கூறுகின்ற பாடலாகும்.

நாளாறில் கண்ணிழந்து அப்பவல்ல அன்பு கண்ணப்பருடையது. அந்த அன்பு தன்னிடத்தில் இல்லை என்றாலும் தன்னை இறைவன் ஆட்கொண்டிருக்கிறான். அவனுடைய கருணையை என்னவென்பது என்று கண்ணப்பனைக் குறிப்பிட்டு மணிவாசகர் பேசுவது பெரிதும் நினைவு கூரத்தக்கதாகும். என் ஒப்பில் என்ற சொல் இருவினை ஒப்பைக் குறிப்பதாகும். மேலும் இச்சொல்லுக்குக் கண்ணப்பனுடைய அன்பினை முதல் வரியில் குறிப்பிட்டிருப்பதால் அன்பு இல்லாத தீமையில் தன்னை ஒப்பார் யாருமில்லை என்று மணிவாசகர் குறித்துக் கொள்வதாகவும் மற்றொரு பொருளைக் குறிப்பிடலாம். திருப்பெருந்துறையில் தன்னை ஆட்கொண்ட திறத்தை எண்ணுகின்றபொழுது மணிவாசகருக்கு அச்செயல் அழகான கட்டளையாக இருந்திருக்கின்றது என்பதை "வண்ணப்பணித்து" என்ற

சொல்லால் குறிப்பிடுவது படித்து இன்புறத் தக்கதாகும். சுண்ணப்பொன்னீறு, சுந்தரமாவது என்று வாக்கை நினைவு படுத்துவதாகும். இத்தகைய அழகான கட்டளையால் இறைவன் தன்னை ஆட்கொள்ளவில்லை என்றால்,

"நானார் என் உள்ளமார் ஞானங்களார் என்னை யாரறிவார்
வானோர் பிரான் என்னை ஆண்டிலனேல்" (பா.2)

என்று மணிவாசகர் தன்னுடைய நிலைமையை எடுத்துக் கூறுகின்ற பகுதியும் பாடிப்பாடி நெஞ்சுருகின்ற பகுதியாகும். இப்பகுதியில், ஞானங்களார் என்றசொல் இறைவனைச் சார்ந்து பதிஞானம் பெறுதலைக் குறிப்பதாகும். பசு ஞானத்திலிருந்து பதி ஞானம் பெற்றுத் தான் உயர்ந்திருப்பதை மணிவாசகர் நினைந்து இன்புறுவதை இச்சொல் குறிப்பிடுகிறது.

அழகான கட்டளையால் இந்த உலகில் பிறப்பு இறப்பு என்னும் சித்த விகாரக் கலக்கத்தை இறைவன் தெளிவித்தான் என்று ஆறாம் பாடலில் மணிவாசகர் குறிப்பிடுகின்றார். இந்த சித்தவிகாரக் கலக்கம் தெளிவிப்பது தான், பதிஞானமாகும் என்ற தெளிவும் இப்பகுதியில் விளக்கப்படுகிறது .இத்தகைய பதிஞானத்தால் தனக்குக் கிடைத்த பெருமையை இத்திருப்பதிகத்தில்மணிவாசகர் நினைக்கும் பொழுதெல்லாம் இத்தகுதிக்குத் தான் ஏற்புடையவர் தானா என்றெல்லாம் பல இடங்களில் எண்ணிப் பார்க்கின்றார். எண்ணிப் பார்த்ததின் விளைவு, "நாய் சிவிகை ஏற்றுவித்த" (பா.8)

"நாய்மேல் தவிச்சிட்டு" (பா.20) என்ற தொடர்கள் பாடல்களில் இடம்பெறுகின்றன. இறைவனுடைய கருணைப் பெருக்கினை உயர்த்தியும் தங்களுடைய மனத்தை, செயலைத் தாழ்த்திக் கொள்கிற அடியார்களின் ஆன்மீகஉணர்வு மணிவாசகரின் இத்தொடர்களால் வெளிப்படுகின்றது.

இறைவன் குருந்த மரத்தடியில் தனக்கு அருளியதைத் தாயாக வந்த கருணை என்றுமணிவாசகர் இப்பகுதியில் பல இடங்களில் குறிப்பிட்டுப் பெருமை கொள்ளுகின்றார். "தாயுற்று வந்தென்னை ஆண்டுகொண்ட" (பா.10) "கொண்டருளுந் தாயான ஈசற்கே" (பா.12) என்ற பகுதிகள் நினைவுறத் தக்கன.

தான் இறைவனிடத்தில் அன்பில்லாமால் இருந்ததைத் தானும் இறைவனும் தான் அறிவோம் என்றும் தனக்கருள் கிடைத்ததை உலகில் உள்ளோர் அனைவரும் அறிவர் என்றும் பாடல் 13 ல் மணிவாசகர் குறிப்பிடுவதை நினைந்து பார்க்கும் பொழுது மணிவாசகர்க்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பு நிலையினை அறிய முடிகின்றது. தனக்கு இறைவனிடத்தில் அன்பில்லாமல் இருந்ததற்குக் காரணம், தன்னிடத்திலிருந்த தீய குணங்கள்தான் என்பதை மணிவாசகர் பட்டியலிட்டுக் காட்டுகின்றார்.

"கள்வன் கடியன் கலதி இவன் என்னாதே" (பா.19)
"வன்நெஞ்சக் கள்வன் மனவலியன் எண்ணாதே" (பா.11)
"நோயுற்று மூத்து நான் நுந்துகன்றாய் இங்கிருந்து
நாயுற்ற செல்வம் நயந்தறியா வண்ணமெல்லாம்" (பா.10)

என்ற பகுதிகள் மணிவாசகரின் எளிமை நிலையைக் காட்டுகின்ற பகுதிகளாகும்.

இவ்வாறு திருக்கோத்தும்பி பகுதியில் மணிவாசகப் பெருமான் இறைவனின் பெருமைகளைத் தத்துவங்களாகவும், புராணச் செய்திகளாகவும் எடுத்துக் காட்டுவதோடு, தன்னுடைய எளிவந்த தன்மையையும், இறைவன் தனக்களித்த உயர்ந்த கருணையையும் தெளிவு படுத்துகிறார். இப்பகுதிகளை உள்ளமுருகிப் பாடிப் போற்றி இறையருளைப் பெற முனைவோமாக!

11. திருத்தெள்ளேணம்

- தமிழாகரர். **தெ. முருகசாமி**

"கடவுள் கடவுள்" என்கிறாயே, கடவுளை நீ கண்டதுண்டா?" என ஒருவரைப் பார்த்துக் கேட்டால் அவர் 'விண்டவர் கண்டிலர், கண்டவர் விண்டிலர்' என்றுதான் பதில் கூறுவார். ஆனால் இவ்வுரையைப் பொய்யாக்கி 'கண்ணால் யானும் கண்டேன் காண்க' எனத்துணிந்து கூறத்தக்க ஒருவர் உண்டெனில் அவர்தான் மாணிக்கவாசகர் என்று உறுதியாகக் கூறலாம். அந்த அளவிற்குத் தாம் கண்டு களித்து அனுபவித்த கடவுள் இன்பத்தைத் தாம் எழுதிய திருவாசகம் முழுதும் பாடித் தெளித்துள்ளார் அவர். அங்ஙனம் தெளித்த துளிகளுள் ஒரு துளிதான் 'திருத்தெள்ளேணம்' என்ற திருவாசகப் பதிகம்.

தெள்ளேணம் என்பது மகளிர் விளையாடும் அம்மானை, ஊசல் போன்ற விளையாட்டுக்களில் ஒன்று. தெள்-தெளித்தல், ஏன்-உயர்ச்சி, அம்-அழகு. அழகாக உயர்த்தித் தெளித்து விளையாடுதல் என்பது இவ்விளையாட்டுத் தொடரின் பொருளாகும்.

வீடுகளில் பெண்கள் அரிசியைக் கொழிக்க அதை முறத்தில் (சுளகில்) வாரி எடுத்துக் கொண்டு முறத்தை உயர்த்தியும், தாழ்த்தியும் புடைப்பர். கட்டை விரல் பிடிப்பிலும் உள்ளங்கை அணைப்பிலும் உள்ள முறத்தை உயர்த்தும்போது முறத்தைக் கீழாகப் பிடித்துள்ள கைவிரல்கள் முறத்தை இயல்பாகத் தட்டும். அதுதான் புடைத்தலுக்கான ஓசை எனப்படும். இதைப் பார்த்துப் பழகிய சிறுமியர்கள் வீதியில் சிற்றில் இழைத்து விளையாடும் போது மணலை முச்சிலில் வாரிப் புடைத்து விளையாடுவர். பொதுவாக விளையாடும் போது பாடல் பாடுவது வழக்கமாதலால் ஈண்டு மாணிக்கவாசகர் தம்மைச் சிறுமியாகப் பாவித்துக் கொண்டு பிற சிறுமியரையும் கூவியழைத்துத் தெள்ளேணம் கொட்டிப்பாடும் பதிகமாக இத்திருத் தெள்ளேணத்தை அமைத்துள்ளார். திரு என்ற அடைமொழி இறைவனைக் குறித்தலால் இறைவனைக் குறித்த பாடலாகப் தெள்ளேணம் பாடப்பட்டுள்ளது.

இருபது பாடல்களைக் கொண்ட இப்பதிகம் இறைவன் மாணிக்கவாசகரை ஆட்கொண்ட சிறப்பைப் பலவாறாகக் கூறுகிறது. அத்துடன் மாணிக்கவாசகரை ஆட்கொண்ட இறைவன் எத்தகையவன் என்பது பற்றியும் அவரை அவன் ஆட்கொண்டதால் அவர் அடைந்த பேறுகள் எத்தகையன என்பது பற்றியும் தெளிவாகக் கூறுகிறது.

திருமாலும் நான்முகனும் காணாத இறைவன் மாணிக்கவாசகரை ஆட்கொள்ள, கண்ணால் காணும் அந்தணனாய் வந்தான். ஓரூரும் ஒரு பேரும் ஒருருவும் இல்லாத அவனுக்கு ஆயிரம் திருநாமம் கூறப்படுவதோடு அவன் திருவாரூரையும் திருத்தில்லையையும் திருப்பெருந்துறையையும் இருப்பிடமாகக் கொண்டுள்ளான். அணுவினும் அணுவான அவன் சோதி மயமானவன், பாம்பை இடுப்பிலே உடையவன், மங்கையொரு பாகன், சீகாளத்தியில் யானைக்கு அருள் செய்தவன், நெஞ்சிலே நினைப்பதற்கரியவன், வேதாகமங்கள் தேடியும் காண ஒண்ணா நுண்ணியன், ஆன்மாவை ஈடேற்ற வல்ல கருணைக் கடலானவன், ஐம்பூதமாயும் அவற்றிற்கு அப்பால் தனித்தும் நிற்க வல்லவன், பிறரை வாழ்விக்கத்தான் நஞ்சுண்டு தன்னை வருத்திக்கொண்ட தியாகசீலன், தான் செய்யும் திருவிளையாடல்களுக்கேற்ற வடிவங்களைக் கொள்ளும் இயல்பினன், என்றெல்லாம் இறைவனைப் பற்றிய பொதுச் செய்திகள் தெள்ளேணப் பதிகத்தில் கூறப்பட்டுள்ளன.

இறைவனைப் பற்றிய இப் பொதுச் செய்திகள் திருவாசகம் முழுவதும் பேசப்படுபவையே யானாலும் 'உரு நாம் அறியவோர் அந்தணனாய் ஆண்டு கொண்டான்' (1) என்றும் 'அடியோங் கண்ணார வந்து நின்றான்' (19) என்றும் கூறும் தென்ளேணத்தின் முதலும் முடிவுமான பாடல்களின் குறிப்பு மாணிக்கவாசகரை இறைவன் ஆட்கொண்ட புது அனுபவச் செய்தியாக உள்ளது.

ஒருருவும் ஓரூரும் ஒரு நாமமும் இல்லாத இறைவன் அந்தணனாய் உருக்காட்டி வந்து தன்னை ஆட் கொண்டான் என்பது மாணிக்கவாசகருக்கே வியப்பை உண்டாக்கி விட்டது. ஏனெனில் உயர்ந்தவனாகிய ஆண்டவன் தாழ்ந்த மானுடப் பிறவியாகிய

தன்னை ஆட்கொண்டது எதனால் எனக் கேட்டு விடை தெரிந்து கொள்ளமுடியாத வியப்பு அவரது உள்ளத்தில் எப்போதும் தோன்றிய வண்ணமாகவே இருந்தது. அதனால்,

'கல்நார் உரித்தென்ன என்னையும் தன் கருணையினால்
பொன்னார் கழல் பணித்து ஆண்ட பிரான் புகழ்பாடி....
தென்னா தென்னா என்று தெள்ளேணங் கொட்டாமோ'
எனப்பாடினார்.

நாளும் பக்தி செய்வோரை ஆட்கொள்வதே இறைவனுக்கு இயல்பானதும் முறையானதும் ஆகும். ஆனால் கல்லிலே நாருரிக்க இயலாததைப் போல இறையன்பே இல்லாத உள்ளத்தில் பக்தியான ஈரக்கசிவை உண்டாக்கி ஆட்கொள்ள வேண்டிய அவசியம் என்ன என எண்ணுந்தோறும் வியம்பு மேலிடுவது இயல்புதானே!

அதிலும் ஆட்கொள்ளப்பட்ட நிகழ்ச்சி கனவில் நடந்ததன்று; நனவில் யர்வருங்காண நடந்தது என்றும் ஒன்றுக்கும் பற்றாத தன்னை, இறைவன் வலிய வந்து 'வாவா' என்று பிடித்திழுத்து பூவார் திருவடியை என் தலைமேல் பொறித்தான் என்றும் வியந்து பாடுகிறார்.

மாறி மாறிப் பிறப்பெடுக்கும் தேவகதி முதலான எந்தப் பிறப்பிலும் தன்னைத் தள்ளாமல் அதாவது பிறவியாகிய ஆட்சியிலிருந்து தன்னைக் காப்பாற்றிச் சிவஞானத்தால் தனக்குப் பாச நீக்கம் செய்து, சிவமாக்கிய இறைவனின் பெருங்கருணைதான் என்னே என்றும் வியக்கின்றார்.

மேலும் தமக்குப் பணி செய்யும் பொருட்டுத்தான் இறைவன் சுய நல்த்தோடு இப்படியெல்லாம் புறம் புறம் திரிந்த மாணிக்கவாசகரை ஆட்கொண்டான் என உலகோர் ஏளனமாய்ப் பேசி நகைக்கும் படியாகவும் இருக்கிறது. எனவும் வியக்கின்றார்.

இப்படியாக மாணிக்கவாசகரின் உள்ளத்தில் எழும் வியப்பு ஓர் வினாவோடு கூடிய வியப்பாகவே இருந்தது. அதாவது ஆண்டவனை அடையத்தான் ஆன்மா பல முயற்சிகளை எடுக்கும், ஆனால் அதற்கு மாறாக ஈண்டு ஆன்மாவைப் பற்ற

ஆண்டவன் பல முயற்சிகளைச் செய்கிறான். இது ஏன் என்பதே ஒரு புதுமையான வினா வியப்பாக உள்ளது. இந்தப் புரியாத புதிருக்குத் தெள்ளேணப் பாடல் ஒன்று விடையாகக் கூறுவது தான் திருவாசகம் முழுமைக்கும் வழிகாட்டியாக உள்ளதென்பது இத்தெள்ளேணப் பதிகத்திற் கான தனிச்சிறப்பாகும்.

இறைவனுக்கு எல்லா ஆன்மாக்களையும் ஈடேற்ற விருப்பம் இருப்பினும் அவைகள் ஈடேறவல்ல தகுதியை அடைய வில்லையே என்ற ஏக்கமும் அவனுக்குள் இருந்தது. அதனால் பக்குவப் படாத ஆன்மாவைப் பக்குவப்பட்ட ஆன்மாவைக் கொண்டு ஈடேற்ற வேண்டும் என்ற நியதியில் பக்குவப்பட்ட ஓர் ஆன்மாவுக்காக் ஆண்டவன் காத்துக் கிடக்கையில் எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தவாதவூரராகிய மாணிக்கவாசகர் பக்குவப்பட்ட ஆன்மாவாகத் தோன்றியதால் அவரை ஆட்கொள்வதன் மூலம் பிறரை ஆட்கொள்ள விரும்பினான் என்ற குறிப்பைக் கீழ்வரும் தெள்ளேணப்பாடல் தெளிவுறுத்துகிறது.

"அருமந்த தேவர் அயன் திருமாற் கரியசிவம்
உருவந்து பூதலத்தோர் உகப்பெய்தக் கொண்டருளி" *(5)*

தேவர்களில் மிக உயர்ந்த பிரமனும் திருமாலும் காணரிய சிவபெருமான் நில உலகத்தவர் உயர்வடையும் பொருட்டு ஞானாசிரிய உருவில் வந்து, தன்னை ஆட்கொண்டதாக மாணிக்கவாசகர் கூறுகிறார். உகப்பு உயர்தல் என்பது தொல்காப்பியர் கருத்து. உலகத்தவரை உயர்த்த வேண்டுமெனில் இறைவன் தானாகவே செய்யலாம். அவ்வாறு செய்யாமல் மாணிக்கவாசகரை ஆட்கொள்வதன் மூலம் உலகோரை உயர்த்த நினைப்பானேன் எனில், பக்குவப்படாதவரைப் பக்குவப் பட்டவர் மூலம் பக்குவப்பட்ச் செய்வதற்காக எனத் தெளிவாகின்றதன்றோ! மேலும் ஒருவர் தன்னைத்தானே விளம்பரப் படுத்திக் கொள்ளக் கூடாதென்ற உலகியல் முறைப்படியும் ஆண்டவன் மணிவாசகரின் உதவியை நாடினான் எனலாம்.

பொதுவாகவே இறைவனது ஆட்கொள்ளும் விதமே இத்தகைய அடிப்படையைக் கொண்டதுதான் என்பது திருமூலர்

கூற்றாலும் உறுதிப்படுகிறது.

"என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யு மாறே !"

எனத் திருமூலர், இறைவன் தன்னைப் படைத்ததே, அவனைப் பாடவேண்டும் என்பதற்காகத்தான், என்பதைப் போலவே, ஈண்டும் இறைவன் மணிவாசகரை ஆட்கொள்வதால் அவர் அவனைப் பற்றித் திருவாசகம் பாட, அந்நூலைப் பாடிப்பரவுவோர்க்கு நாம் அருள் செய்யலாம் என்ற இறைவனின் சுயநல எண்ணம் நியாயமானதாகவே தெரிகிறது. ஆக ஒரே கல்லில் இரு மாங்காயைப் பெறுபவரைப் போல இறைவன் மணிவாசகரை ஆட்கொள்வதன் மூலம், தான் திருவாசகம் பெற்று, அத்திருவாசகத்தின் மூலம் உலகோரை ஆட்கொள்ளத் திட்டமிட்டான் என்பதே தெள்ளேணம் உணர்த்தும் திருவாசக இரகசியமாகும்.

அடுத்து இப்படியாக இறைவனால் ஆட்கொள்ளப்பெற்ற மாணிக்கவாசகர் இறைவனால் அடைந்த அளப்பறிய பேறுகளைப் பட்டியலிட்டுக் கூறுவதில் தெள்ளேணப்பதிகம் முதன்மை உடையதாகக் காணப்படுகிறது.

மாணிக்கவாசகர் உள்ளத்தில் எப்போதும் அருவாய் இருந்த இறைவன் அந்தணன் உருவில் கண்ணால் காணப்பட்ட அளவில் பிறவிக்குக் காரணமாகிய பாசம் முதலில் வேரோடு களையப்படுகிறது. எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்த ஆன்மா என்பதால் மானசீகமாகப் பாச நீக்கம் செய்யப்பட்டது போலும் ! இதனால் தம்மைச் சுற்றி நிகழும் அதிசயங்களை உணர முடிகின்றதன்றி வாயால் உணர்த்த முடியாமல் மெய்ம்மயிற்பொடித்த புளகாங்கிதத்தால் கண்கள் ஆனந்தக் கண்ணீரைச் சொரிந்தன. இதன் தொடர்ச்சியாக இறைவன் தன் பூவார் அடிச்சுவட்டை அவர் தலையில் பொறித்ததும் அவர் யான், எனது என்னும் புன்மைகள் நீங்கிய புனிதராகின்றார். இதனால் காற்றடிக்கும் திசைதோறும் சுழன்று பறக்கும் காற்றாடியைப்போல வினைவயத்தால் பிறந்திருக்கும் அச்சங்கள் அகன்ற நம்பிக்கை மாணிக்கவாசகருக்கு உறுதிப் படுகின்றது.

இங்ஙனம் காட்சியளவாலும் தொடு உணர்ச்சியாலும் ஆன்மாவை ஆண்டவன் ஆண்டு கொண்டதால் ஆன்மாவின் பயணத்தில் இருந்த உலகத் தடைகள் நீங்கி விட்டன. பக்தியில்லா நெஞ்சில் அழுத்தமான பக்தி வெள்ளம் கரை புரண்டு ஓடத் தொடங்கின. இதன் வெளிப்பாடாகவே இறைவன் தன்னை ஆட்கொண்டருளிய நேர்மையைத் திருவாசகப் பாடலாகப் பாடித் தான் மகிழ்ந்ததோடு பிறரையும் மகிழ்விக்க இறைவனால் ஆயத்தப் படுத்தப்பட்டார் மாணிக்கவாசகர்.

இவ்வாறாக மாணிக்கவாசகரை இறைவன் ஆட்கொள்ளப் பட்டதன் முழுப்பயனும் திருவாசகமாக உள்ளதால் அதைப்படிப்போர் அவரைப்போலவே இறையருளுக்குப் பாத்திரமாவர் என்பதுதான் இத்திருத்தெள்ளேணக் கொட்டின் பொருள் என்பது இக்கட்டுரையின் முடிவாகும்.

ஆக மாணிக்கவாசகர் தான் கண்ட இறையனுபவமாகிய அரிய பெரிய சமய உண்மைகளைத் தன்னைப் பெண்ணாகப் பாவித்துக் கொண்டு பாடிய தெள்ளேணப் பாடல்கள் மூலம் எளிமையாகத் தந்தார் என்பதை சிறுவர்களுக்கு விளையாட்டு முறையில் "ஆடல் பாடல் கல்வி" என்ற தற்காலக் கல்வி முறைக்கு ஏற்பத்திருவாசகத்தின் பங்களிப்பான சமயக்கல்வி எனலாம்.

12. திருச்சாழல்

கவிஞர் **மரு . பரமகுரு**

"சாழல்" என்பது மகளிர் விளையாட்டு வகைகளுள் ஒன்று என்று தெரிகிறது. சிலப்பதிகாரம் அரங்கேற்று காதை உரையில் (12-25) அடியார்க்கு நல்லார் "பல்வரிக் கூத்தாவன இளவ" என்பதற்கு எடுத்துக்காட்டிய சூத்திரத்துள் வரும் "நல்லார்தந் தோள்வீச்சு நற்சாழல்" என்பது இதுபற்றிக் காணப்படும் பழைமையான குறிப்பு. எனவே, சாழல் என்பது வரிக்கூத்துகளில் ஒன்றென்றும், மகளிர் விளையாட்டுகளில் ஒன்றென்றும் அறிகிறோம். "மங்கையர் சாழலார் விளையாடல்" என்று கடவுள் மாமுனிவர் பாடியிருப்பதும் இங்கே இணைத்து நினையத்தக்கது. நல்லார்தந் தோள்வீச்சு நற்சாழல் எனப்படுவதால் மகளிர் இருவர் எதிரெதிர் நின்று கைகளை மற்றொருவர் தோள்வரை கொண்டுபோய், ஒருவர் உள்ளங்கையால் மற்றொருவர் உள்ளங்கையைத் தட்டி ஆடுகின்ற ஆடலாக இருக்கலாம். அப்படி ஆடும்போது ஒருத்தி "காண் ஏடீ" "என் ஏடீ" "ஆர் ஏடீ" "இயம்பேடீ" என விளித்து எள்ள்ல் வினா எழுப்ப, மற்றொருத்தி விடை கூறிச் "சாழலோ" என வீறுடன் முடிப்பதாகத் திருவாசகத்தில் திருச்சாழல் திருப்பாடல்கள் அமைந்துள்ளன.

"குறியும் குணமும் ஒரு கோலமும் அற்று எங்கும்
செறியும் பரம் பொருள் சிவபெருமான்"

புராண வரலாற்றில் அந்தப்பரம் பொருளுக்குரியதாகச் சொல்லப்படும் பூச்சு, அணி, ஆடை, இருப்பிடம், நிலை, மொழி, செயல் முதலியன பரம்பொருள் தன்மைக்கு இழுக்காகும் எனக்கருதி எழுதப்படும் எள்ளல் வினாக்களுக்கு விடை கூறுவதாக இத்திருப்பாடல்கள் அமைந்துள்ளன. இத்திருச்சாழலில் போலவே தடை விடைகளை, கச்சியப்ப சிவாசாரியார் இயற்றியுள்ள கந்தபுராணம் தட்சகாண்டம் ததீசி உத்தரப் படலத்துள் காணலாம்.

திருச்சாழலின் உட்கிடையை அகத்தியச்சூத்திரம் அவமறு திருச்சாழல் சிவனுடைய காருண்ணியம் என்பதாலும்.

"முன்நாற் கலையும் உணரா முகையா மேடி
தன்னாற் பதிமுதன்மை சாற்றியதாம் திருச்சாழல்"

என்று பழைய திருப்பெருந்துறைப் புராணம் பேசுவதாலும் சிவனுடைய க்ாருண்ணியத்தையும் சிவபரத்துவத்தையும் விளக்குவதே திருச்சாழல் என்று அறிகின்றோம். மணிவாசகப் பெருமான் தில்லையம்பதியில் எழுந்தருளியிருந்த காலத்தில் ஈழத்திலிருந்து வந்த புத்தர்களை வாதில் வென்று அரசனுடைய ஊமைப் பெண்ணைப் பேசவைத்து அவள் வாக்காகவே புத்தர்கள் கூறிய தடைகளுக்கு விடை தரச்செய்து, அவற்றையே திருச்சாழல் திருப்பாடல்களாக அருளிச் செய்தார் என்று திருவாதவூரடிகள் புராணம் கூறும், எப்படியாயினும் சிவபரம் பொருளின் பரத்துவத்தையும் கருணைத்திறத்தையும் மக்கள் உணருமாறு வீறு பெற எடுத்து மொழிகின்றன இத்திருப்பாடல்கள் என்பது தெளிவு. இருபது திருப்பாடல்கள் அடங்கிய இத்திருச்சாழலின் முதல் திருப்பாடலைச் சிந்திக்கலாம்.

"பூசுவதும் வெண்ணீறு; பூண்பதுவும் பொங்கரவம்;
பேசுவதும் திருவாயால் மறைபோலும் காணேடீ!
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவும் கொண்டென்னை?
ஈசன்அவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ!"

இதில் முதலிரண்டு அடிகள் தடையாகவும், பின்னிரண்டு அடிகள் விடையாகவும் அமைந்துள்ளன. "சிவபெருமான் பூசுவதோ வெண்மையான நீறு; அணிவதோ சீறுகின்ற பாம்பு; அழகிய வாயால் பேசுவதோ மறை மொழி. அதாவது இரகசியப் பேச்சு. இந்த இழிவை ஏடீ, நீ காண்பாயாக!" என்கிறாள் ஒருத்தி. "வெண்மையான நீறு பூசுவதையும் மறைமொழி பேசுவதையும் பாம்பினை அணிவதையும் கொண்டு அவன் பரத்துவம் பற்றி ஐயுற வேண்டியது என்ன? எல்லாருக்கும் தலைவனாகிய சிவபெருமான் ஒருவனே ஓர் இயல்பினன். எல்லா உலகும் உயிர்களும் அவ்வாறல்ல. அவனே எல்லா இயல்பும் ஆனான்" என்று மற்றொருத்தி விடை பகர்கிறாள்.

உடல், கருவி, உலகப்பொருள்கள் யாவற்றையும் அழித்து அவற்றின் சாம்பலையே தான் பூசிக் கொள்வதால் அவன் ஒருவனே பிறப்பு இறப்பு இல்லாதவன். எல்லாவுயிர்களின் வினையை எரிக்க வல்லவன். "தொழுது எழுவார் வினைவளம் நீறெழ நீறணி அம்பலவன்" (திருக்கோவையார் 118). எனவே அவன் வெண்ணீறு பூசிய திருமேனியனாய்த் திகழ்கிறான். உலகப் பொருள்கள் எரிக்கப்பட்டால் அவை சாம்பராகும். பின்னும் அதை எவ்வளவு சுட்டாலும் பழைய சாம்பராகவே இருக்கும். எனவே, என்றும் அழியாது நிலைத்திருக்கும் பொருள் சாம்பர் ஒன்றே. அந்தச் சாம்பல் பரம்பொருளின் சின்னம். அழியும் தன்மையுடைய உடல், கருவி, உலகப் பொருள்களுக்கு ஆதாரமாக இயல்பாகவே அழியாத பொருள் ஒன்று உண்டு என்னும் பேருண்மையை விளக்கும் சின்னம் வெண்ணீறு. நிலையான ஒன்றே தலைமையானதாக இருக்க முடியும் என்பதை உணர்த்துகிறது.

கொடிய நஞ்சினையுடையது பாம்பு. தாருகாவனத்து முனிவர்கள் செய்த வேள்வியில் தோன்றிய பாம்புகள் இன்றவனை நோக்கிச் சீறிவந்தன. திருமாலின் வாகனமாகிய கருடன் அந்தப்பாம்புகளை விழுங்கி விடக்கூடாதே என்னும் கருணையால் அடைக்கலம் தந்து தம் திருமேனியில் அணியாகப் பூண்டு கொண்டான் இறைவன். நல்ல உயிர்களும் தீய உயிர்களும் கலந்து வாழ்வதே இயற்கையின் அமைப்பு. எனவே பெருங்கருணையை இயல்பாகக் கொண்டவன் இறைவன் என்பதைப் "பொங்கரவம் பூண்பது" உணர்த்துகிறது.

இறைவனால் அருளிச் செய்யப்பட்டது வேதம் என்பது ஆன்றோர் வாக்கு. "தூமறை பாடும் வாயார்" என்று பேசுவர் தெய்வச்சேக்கிழார் பெருமான். முதன்முதலில் மறையை அருளிச்செய்து தானே பயின்று கொண்டிருத்தலால் சிவபெருமான் ஒருவனே இயற்கையுணர்வினன் என்பதையும் அவனே உயிர்களுக்கெல்லாம் முதலாசிரியனாம் இயல்பினன் ஆனான் என்பதையும் இது உணர்த்துகிறது.

செயற்கையெல்லாம் அழியும். "தோற்றமுண்டேல் மரணமுண்டு" என்பது சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவாக்கு. இறைவன் ஒருவனே எவ்வுயிர்க்கும் இயல்பானான். அவன்

ஒருவனே பிறப்பு இறப்பு இல்லாதவன்; நிலையானவன் ஏனைய உயிர்களெல்லாம் பிறப்பு இறப்புக்கு உட்படுவன என்பதையும் இத்திருப்பாடல் உணர்த்துகிறது.

இவ்வாறு திருச்சாழல் திருப்பாடல் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகையில் இறைவனின் தலைமைத் தன்மையையும் பெருங்கருணையையும் உணர்த்துகின்றன. அவற்றின் திரண்ட பொருளை-விரிவஞ்சிச் சுருக்கமாகப் பார்க்கலாம்.

இறைவன், ஞானமே வடிவான வேதங்களையும், கலைகளையுமே கோவணமாகவும் அரைஞாணாகவும் கொண்டு திகழ்கிறான் (2). இறைவன் தனது பேராற்றலை உள்ளடக்கித் தனி ஒருவனாய்த் திகழ்கிறான் (3). தேவர்களை இறைவன் தண்டிப்பதும் அவர்களுக்கு வெற்றியையே அளிக்கிறது (4). தக்கன் முதலியோரைத் தண்டித்து அருள் வழங்கியது அடித்துத் திருத்தும் அவனது மறக்கருணை (5). இறைவன் அழலுருவானது அயன் திருமால் இருவரது செருக்கினைப் போக்கவே (6)..சிவபெருமான் கங்கையைத் தன் தலையில் வைத்தது அதன் வேகத்தைக் குறைத்து, பூமியைக் காக்கவே (7), சிவன் ஆலால முண்டது அயன், திருமால் உள்ளிட்ட தேவர்களைக் காக்கவே (8), திருச்சிற்றம்பலவன் பெண்ணை ஒரு பாகத்தில் வைத்தது உலகத்தார் அனைவரும் யோகிகளாகி விண்ணகம் சென்று அழியாதிருக்கவே (9), தேவர்களுக்கு எட்டாத ஒப்பற்ற பெரும்பொருளாகிய இறைவன் திருவடிகளே, மணிவாசகப் பெருமானை ஆனந்த வெள்ளத்துள் அமுத்தின (10), இறைவன் கங்காளம் தோள்மேல் அணிந்தது, திருமால் அயன் இருவரது காலத்தை வரையறை செய்யவே (11), புலித்தோலாகிய ஆடையையும் இறந்தவர் மண்டையோட்டில் உணவையும் சுடுகாடாகிய பதியையும் உடையவனேயானாலும் சிவபெருமானுக்கு அயனும் திருமாலும் வழிவழி அடியவர்களே ஆவர். (12), உமாதேவியை செந்தீமுன் சிவபெருமான் திருமணம் செய்து கொண்டது, உலகங்கள் அனைத்தும் கலை சிறந்த பொருள்கள் அனைத்தும் நிலைகுலையாமைப் பொருட்டே (13), திருச்சிற்றம்பலத்தில் இறைவன் திருநடனம் புரிவது ஊன் தங்கியுள்ள வேலினையுடைய காளிக்கு, பூமியில் உள்ள உயிர்களெல்லாம் உணவாகி ஒழியாதிருக்கவே (14), மதம் ஒழுகும்

யானையையும் விரைந்து ஓடும் குதிரையையும் தேரையும் விரும்பி ஏறாமல் இடபத்தை விரும்பி வாகனமாகக் கொண்டது திரிபுரசங்கார காலத்தில் திருமால் (அறம்) இடப வாகனமாகித் தாங்கியதாலேயே (15), ஆலின் கீழ் ஞானாசிரியனாக அமர்ந்து நான்மறையின் உட்பொருளை நால்வருக்கு உணர்த்திய அறக்கருணையும் முப்புரங்களையும் கூட்டோடே எரித்த மறக்கருணையும் உடையவன் இறைவன் (16), அம்பலத்தில் ஆடி, உண்பதற்குப் பிச்சையேற்பவராயினும் அவரை எம்பெருமானே என்றும் ஈசனே என்றும் நான்மறைகள் ஏத்தின (17). வஞ்சனையாளனான சலந்தரன் உடலைத் தடிந்த சக்கராயுதத்தை, தன் கண்ணைத் தோண்டி அதை அன்போடு பூசித்த நாராயணனுக்கு வழங்கிய அருளாளன் சிவன் (18). புள்ளிகளையுடைய புலித்தோலை ஆடையாக உடுத்தான்; ஆலகாலத்தை அரிய அமுதமாக உண்டான். எதனை உடுத்து எதனை உண்டாலும் தன் பெருமை தானறியாத தன்மையனாக விளங்குகிறான் சிவபெருமான் (19). செயற்கரிய தவத்தினையுடைய சனகாதி முனிவர்களுக்கு அறம் முதல் நான்கினையும் அன்று சிவபெருமான் அருளிச் செய்தது, திருந்த விரும்பும் அவர்கள் உலக இயற்கையைத் தெரிந்து கொள்வதற்கே (20) என்றெல்லாம் எடுத்து மொழிவதன் மூலம் திருச்சாழல், சிவனுடைய காருண்ணியத்தையும் முதன்மையையும் நமக்கு உணர்த்துகிறது.

இமயத்திலிருந்து உருகிக் கசிந்து பொங்கித் ததும்பிப் புறப்பட்டு வரும் கங்கையாறு போல், மணிவாசகப் பெருமானின் இதயத்திலிருந்து உருகிக் கசிந்து பொங்கித் ததும்பிப் புறப்பட்டு வந்த அன்புப் புனலாறு திருவாசகம். இறையின்பத் திளைப்பு, உள்ளம் உருக்கும் தன்மை, பக்தி அனுபவச் செழிப்பு முதலியன திருவாசகத்திற்குரிய தனித்தன்மைகளாகும். இத்தன்மை களிலிருந்து சற்றே விலகி இறைவனின் முதன்மையையும் கருணைப் பெருக்கையும் ஆய்வு நெறியில் பாடுகிறது திருச்சாழல். எனினும் திருச்சாழலின் பத்தாம் திருப்பாடல் திருவாசகத்திற்கே உரிய இயல்பினை வெளிப்படுத்துகிறது.

"தானந்தம் இல்லான் தனையடைந்த நாயேனை
ஆனந்த வெள்ளத்(து) அழுத்துவித்தான் காண்ஏடீ!
ஆனந்த வெள்ளத்(து) அழுத்துவித்த திருவடிகள்
வானுந்து தேவர்கட்கோர் வான்பொருள்காண் சாழலோ!"

என்பது அத்திருப்பாடல்! இத்திருப்பாடலில் உள்ள முன்னிரண்டு அடிகளில் மணிவாசகப்பெருமான் தனது அருளனுபவத்தை நேர்முகமாகவே வெளிப்படுத்துவதும், பின்னிரண்டு அடிகளில் இறைவனின் திருவடிப் பெருமையை உணர்த்துவதும் உள்ளத்தை உருக்குகின்றன. கண்ணீர் வெள்ளத்தைப் பெருக்குகின்றன.

திருச்சாழல் இறைவனைத் துதிப்பதாக இல்லாமல் இறைவன் கருணையையும் பெருமையையும் விரிப்பதாக அமைந்து படிப்போரை இறையுணர்வில் ஈடுபடுத்துவதாக உள்ளது, எண்ணிப் போற்றத் தக்கது. எனவே திருச்சாழல் திருப்பாடல்களைப் பலகாலும் ஓதி இறையுணர்வில் திளைத்து உய்தி பெறுவோமாக!

13. திருப்பூவல்லி

பேராசிரியர். **நா. சுப்பிரமணியன்**

மணிவாசகப் பெருந்தகை மகளிர் நிகழ்ச்சியாகப் பாடியவற்றுள் திருப்பூவல்லியும் ஒன்று மகளிர் பூக்கொய்தலைக் கண்டு தன்னை அவர்களது தன்மையில் வைத்துப் பாடியது.

'புண்ணியம் செய்வார்க்குப் பூஉண்டு நீர் உண்டு' என்பது திருமுறை. அரும் பெடுத்துப் பூசை செய்வாதாகவும், மலரெடுத்துப் பூசை செய்வதாகவும், பூவெடுத்துப் பூசை செய்வதாகவும் பாண்டி நாட்டில் தாலாட்டுக்கள் வழங்கும்.

சிவபூசை செய்வார் கோட்டுப் பூ 32, கொடிப்பூ 12, நீர்ப்பூ8, நிலப்பூ 17 ஆகியவற்றையும், பத்திரங்களாக வில்வம், பஞ்ச வில்வம் ஆகியனவற்றையும் பயன்படுத்துவர். தேவர்களுக்கு உகந்த மலர்கள் உண்டு. நிர்மால்யம் ஆகும். பூசைக்குப் பயன்படும் பத்திரங்களும், மலர்களும் உண்டு. பாவம் அகற்றவும், பயன் நல்கவும் இறைவர்க்குச் சாத்தும் மலர்களும் உண்டு. பறித்த மலர்களை வைத்திருந்து பயன்படுத்துதற்குரிய கால அளவும், வார நாட்களில் ஒவ்வொரு கிழமைக்கும் சூட்டுதற்குரிய மலர்களும், பத்திரங்களும், ஒவ்வொரு மாதத்திற்குச் சிறந்த மலர்களும் உண்டு. அபிடேகத்திலும் சித்திரை மாதத்திற்குக் கொழுந்து அபிடேகத்திற்குச் சிறந்தது.

நந்தவனம் அமைந்தலும், மலர்கொய்து மாலையாக்கிச் சாற்றுதலும் இறைப்பணியிற் சிறந்தன. தெய்வத்திற்குச் சாற்ற மலர் பறிப்பார், பொழுது புலரா முன் சுத்தி செய்து, நீராடி, வாய் கட்டி அஞ்செழுத்ததை உட்செபித்து, வண்டு ஊதாத நாள் மலரும் மலர்களைப் பறித்து வருவர். திருப்பூல்லியில் மலர்கொய்யும் பெண்களோ என் அத்தன், ஆனந்தன், அமுதன் என்று சிவபெருமானை அள்ளூறித் தித்திக்கப் பேசும் இயல்பினர். இராப்பகல் பேசும் போதெப்போதும் பரஞ்சோதிக்கே பாசம் உடையார் நம் பெருமான் சீர் கானும் வாய் ஓவாதவர். அதனால் தான், "தேவர் அறியாத சிவன் தேடியே ஆண்ட நலம், ஆவலொடுஞ் சொல்லி, அடியாருங் கூடிப்" பூக்கொய்கின்றனர்.

திருச்சாழல், சிவனுடைய காருணியத்தை, சிவபெருமான் செய்த அருள் விளையாடலைச் சொல்கிறது. திருப்பூவல்லி அப்பெருமானைப் பூசித்தலே செய்தற்கரியது என்பதனை மாயா விசயம் நீக்குதலாகக் கூறுகிறது. மலர்கள் நறுமணமும், பல வண்ணங்களும், மென்மையும் அழகுமாக உயிர்களை மயக்குகின்றன. மலர்களைப் பறித்தல் அம்மாலையை நீக்குதலாகவும், மலர் பறிக்குங்கால் சிந்தை புறம் போகாது சிவனடியே நினைந்து, புகழ்ந்து பாடுதல் வெற்றியாகவும் அமைய மாயா விசயம் நீக்குதல் நுண் பொருளால் அமைந்தது.

திருவெம்பாவை முதலாக அமைந்த பகுதிகளில் இருபது பாடல்கள் இருத்தல் பற்றி திருப்பூவல்லியும் இருபது பாடல்கள் கொண்ட தென்பர். பெரும் பாலான பதிப்புக்களில் 19 பாடல்களே அமைய, ' மாவார வேறி ' என்ற பாடலுடன் இருப்பதாகக் காணலாம்.

பூவல்லி நாலடித்தரவு கொச்சகக் கலிப்பா யாப்பாய் அமைந்தது. தானே வந்து தலையளித்து ஆட்கொண்ட திறத்தை, பொன்வார் கழல் பாடுதலைப் பொருளின் தந்து நிற்றலான் பாடல் யாப்பு பொருத்த முற அமைந்தது.

"உயிர் உணர்வுக் கிளர்வில் தொடங்கும் அருளியல் வாழ்க்கை, பற்று நீக்கம், ஒளிநெறி என்ற இருநிலைகளையும் ஒரு காலப் பகுதியில் கடந்து, பெருந்தடையாம் இருளிரவையும் கடந்து, இந்நிலைகளில் பெற்ற மெய்யுணர்வைத் துய்த்தற்கு இடயான மலர்ச்சியை எய்துவதே ஒன்றும் நெறி " என்பர். மணிவாசகர் தம் ஒன்றுநெறி அனுபவத்தை வெளிப்படுத்துகின்ற பாடல்களுள் திருப்பூவல்லியும் ஒன்று. "இறைவனாகிய காதலன் நீராடி யபின் அணிந்து கொள்ளுவதற்கு மாலை தொடுத்தற்காகப் பூ வல்லி கொய்ய வேண்டும் என்று தாம் ஒரு காதலியாக நின்று பாடுகின்றார்," என்பதும் கருத்தக்கது.

இப்பாடல்களின் தொடக்கத்திலேயே "இணையர் திருவடி யென்றலை மேல் வைத்தலுமே துணையான சுற்றங்கள் அத்தனையும் துறந்தொழிந்தேன் " என்று மற்றுப் பற்றினை நீங்கியமை கூறுகின்றார். 'பாத மலர்' என்றும், 'சீரார் திருவடி',

என்றும், 'உள்ளங்கொண்ட பிரான் குரை கழல்கள்' 'நாபோலும் நின்றார ஏத்தும் நிறை கழலோன்' 'பொன்னார் திருவடி' 'பூவார் கழல்' என்றெல்லாம் தீக்கை வழங்கிய திருவடிப் பெருமையைப் பரவுகின்றார் மணிவாசகர்.

தாயுமில் தந்தையிலி தான் தனியன் என்று சிவபெருமானைக் கூறும் மணிவாசகர், அப்பெருமானே தனக்கு எல்லாமாதலை, "எந்தை யெந்தாய் சுற்ற மற்றும் எல்லா" மான பாண்டிப்பிரான் எனப்பாடி மகிழ்கிறார்.

'சிவ பெருமான் ஊனாடி நாடி வந்துள் புகுந்தான்,' என்றும், 'கோலங்குளிர்ந்துள்ளங் கொண்ட பிரான்,' என்றும், தானே வந்து தலையளித் தாட் கொண்ட கருணையைப் பாடி மகிழ்கிறார்.

'என்னுடைய பந்த மறுத்து' என்றும், 'மாயப் பிறப்பறுத்தாண்டான்' என்றும் 'உத்தரகோசமங்கை வள்ளல் புத்தி புகுந்த வா' என்றும், 'நெறி செய்தருளிய' திறத்தைப் பாடுகின்றார் மாணிக்கவாசகர்.

நெஞ்சையுருக்கிக் கண்பனிப்பப்பாடும் திருவாசகப் பாடல்களுள் ஒன்றாய்ப் பூவல்லியில் திகழும் பாடல்

"வணங்கத் தலைவைத்து வார்கழல்வாய் வாழ்த்தவைத்
திணங்கத் தன்சீரடியார் கூட்டமும்வைத் தெம்பெருமான்
அணங்கொ டணிதில்லை யம்பலத்தே யாடுகின்ற
குணங்கூரப் பாடிநாம் பூவல்லி கொய்யாமோ"

என்பதாகும்.

திருவாசகம் முழுமையும் த்ம்மை அடிப்படுத்திப் பாடும் மணிவாசகர் பூவல்லியிலும், நாயிற் கடைப்பட்ட நம்மையும், "எனப் பாடுகின்றார். புண் சுமந்த பொன் மேனியைப் பூவல்லியில்,

"மண்பால் மதுரையில் பிட்டமுது செய்தருளித்
தண்டாலே பாண்டியன் தன்னைப் பணிகொண்ட புண்பாடல்"

என்று பாடுகின்றார்.

வாதவூரினில் வந்தினி தருளிப், பாதச் சிலம் பொலி காட்டிய பண்பை நினைந்து போற்றும் மணிவாசகர் பூவல்லியில், "சீரார் திருவடித்திண் சிலம்பு சிலம் பொலிக்கே, ஆராத ஆசையதாய்" வாழ்தலைப் பாடுகின்றார்.

"என்னாக முள் புகுந்து ஆண்டு கொண்டான் " என்று மகிழ்கின்றார்.

அன்றால நிழற்கீழ் அருமறைகள் தானருளியவன், கோவாகி வந்தெம்மைக் குற்றேவல் கொண்டருளும் திறமெலாம் கூறி மகிழ்கின்றார்.

படமாகத் தன் உள்ளத்தே இணைப்போதாம் திருவடியை எழுதி மகிழும் மணிவாசகர், திரு நடனஞ்செய் பேரானந்தம் பாடுதலைப் படித்து மகிழாதார் யார்?

"பேரின்பம் பெற்றும் அதை மறந்தவர்களைத் தலைவன் ஒறுத்துணர்த்துதல்" இயல்பு. அறத்திற்குச் சார்பாம் அன்பு, மறத்திற்கும் துணையாதலை நாம் பூவல்லிப் பாடல் சிலவற்றில் காண்கிறோம்.

திருவடிப்பேறு, அதனால் பற்றற்றது, திருவடியைத் துதித்தல் பூவல்லியில் பேசப்படுதலைக் காண்கிறோம். இறைவன் ஆட்கொண்டதனையும், சிவதரிசனம் அறிவுக்காட்சியாதலையும் அடியார்க்கே சிவானந்தம் பேறு வாய்த்தலையும், இறைவன் திருமேனியே பேரின்பம் என்பதையும் கண்டு மகிழ்கிறோம்.

தன்னைப் பாடுதல், தனக்காகப் பாடுதல், பிறருக்காகப் பாடுதல், இறைவனைப் பாடுதல் என பக்தி இலக்கியத்தில் வரும் பாடல்கள் நான்கு பகுப்பில் அடங்கும் என்பர். திருப்பூவல்லிப் பாடல்களிலும் இவையெல்லாம் அமைந்திருக்கக் காணலாம்.

சேக்கிழார் பெருமான் இளையான்குடி மாறர் "குழி நிரம்பாத புன்செய்க் குறும்பயிர் தடவிப் பாசப் பழிமுதல் பறிப்பார் போலப்" பறித்தமை கூறுவார்.

ஆயின் ஆர்த்த பிறவித் துயர் கெடத் தில்லைச் சிற்றம்பலவன் திருவடிக்குச் சூட்டி வணங்க மலர் கொய்யும்

போது, சிவம் தேடியாண்ட நலம் சொல்லி, அடியாரொடுங்கூடிப், பூவியந்து கொய்தலாகத் திருப்பூவல்லியை மணிவாசகப் பெருந்தகை பாடி மகிழ்கிறார். நாமும் படித்து மகிழ்வோம்.

புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு

14. திருவுந்தியார்

சி.இராம. நாகப்பச்செட்டியார்

வாடகை வீட்டில் குடியிருந்து வருகிற ஒருவன் குடியிருந்து வருகிற காலம் வரை, வீட்டுக்குச் சொந்தகாரனுடன் அனுசரித்துப் போய், அவனுக்கு உதவியாகயிருந்து வருவதே முறை. இல்லையெனில் இதைப்போல நல்லவீடு வேறு அமையக்கூடுமா? என்பதும் முன்கூடியே தெரியாதே? ஆகவே வாடகைக்கு இருந்து வரும் வீட்டையே சொர்க்கமாக நினைப்போரும் உண்டல்லவா.

அதே போல்தான் உயிரும் உடம்பையே வீடாகக் கொண்டு, நோய்க்கே இருப்பிடமான உடம்பினுள், தான் இருக்கிற இடத்தினையும் வெளிக்காட்டாமலும் (இருந்து கொண்டு) உடம்பு படுகின்ற துன்பங்களையெல்லாம் போக்க உதவியும் செய்து கொண்டு, வேறு போக்கிடமும் தெரியாமல் இருந்தும் வருகிறது. பிறவிக்குப் பிறவி வேறு (வாடகை வீடாகவே) புதுவீடு அமைத்துக்கொண்டு இருந்து வருகிறதே ஒழியத் தனக்கு என்று ஒரு சொந்த வீடு (நிலையான வீடு அதாவது வீடு பேறு) அமைத்துக் கொள்ள வகை தெரியாது உயிர் வாழ்கிறது. ஆனாலும் அழியாமல் நிலைத்து வாழ்கிறது.

"புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்
துச்சில் இருந்த உயிர்க்கு" குறள் - 340

அது மட்டுமல்ல, இந்த உயிர் உடம்பில் இருக்கும் வரை உடம்பு நன்றாகயிருக்க வேண்டுமேயென்று உயிர் உடம்பை நேசிக்கிறதாம். இல்லை காதலிக்கிறதாம். உயிருக்கு உடம்பின் மேல் எவ்வளவு ஆசை.

"இழுத்தொறூஉம் காதலிக்கும் சூதேபோல் துன்பம்
உழத்தொறூஉம் காதற்று உயிர்" -குறள் 940

உயிர்ப்பொருள் மற்றொரு உயிர்ப் பொருளையே நேசிக்கும். காதலிக்கும், அன்பு காட்டும், உதவி செய்யும், உலக இயற்கை. ஆனால் என்றும் நிலைத்து நிற்கும் உயிர், அழிந்து

மறையக்கூடிய உடம்பைக் காதலிக்கிறதே. உடம்பு நோயுற்று அவதிப்பட்டு நொந்து வதங்குவதை நினைந்து, உடம்பு நன்றாக இருக்க வேண்டுமே என்று எண்ணி, உயிர் உடம்பை நேசிக்கிறதாம். காதலிக்கிறதாம். ஏன் தெரியுமா? உயிர் சில காலமாவது தங்கியிருப்பதற்கு இந்த உடம்பை விட்டால் வேறு போக்கிடம் இல்லையாம். பாவம் உயிர். உடம்பைக் காதலித்துத்தானே ஆக வேணும். வேறு வழி?

ஆகவே உயிர் உடம்பைச் சார்ந்தே வாழ வேண்டியதிருக்கிறது. உயிர் சார்ந்ததன் வண்ணம்.

"சார்புணர்ந்து சார்பு கெட ஒழுகின் மற்றழித்துச்
சார்தரா சார்தரு நோய்" (குறள் 359)

உயிருக்குச் சார்புகள் இரண்டு. ஒன்று இறைவன் மற்றொன்று உடம்பும் உலகமும் ஆகிய மலச்சார்புகள்.

இன்பமே வடிவான இறைவனைச் சார்ந்து நின்று, நிலைபெற்ற இன்பத்துள் மகிழ்ந்திருத்தலே உயிரின் தன்னியல்பு. அதாவது சிறப்பு இயல்பு. அதுதான் உயிரின் வேட்கை. ஆனால் ஆணவம் கன்மம் மாயை என்ற மும்மலச் சார்புகளால் பிறப்பு இறப்புக்களையும் அதன் வாயிலாக ஐந்து அவத்தைகளையும் அடையும் நிலையே உயிரின் பொது இயல்பாகிறது. பொது இயல்பிலேயே உயிர் உழ்ன்று துவழ்கிறது. சிறப்பியல்பாகிய தன்னியல்பை அடைய வேண்டுமென்பதே உயிரின் வேட்கை. இறைவன் திருவுள்ளக் கிடைக்கையும் உயிர்களைக் காப்பதே ஆகும்.

உயிரானது மும்மலச் சார்பிலிருந்து (உலக ஆசைகளில் இருந்து) உடம்பையும் மிகையென்று கருதி பிறப்பு இறப்புக்களை வெறுத்தொதுக்கி இறைவனை நாட விரும்பும் செயலே உயிரின் இயல்பான உந்துதல் ஆகும்.

"மற்றும் தொடர்ப்பாடு எவன்கொல் பிறப்பறுக்கல்
உற்றார்க்கு உடம்பும் மிகை" - குறள் 345

உந்துதல் : உயிர் விரும்புவதை முந்திச் செய்வது. உள்ளிருந்து எழும் வேட்கையென்ற விருப்ப வெளிப்பாடு. மகிழ்ச்சிக் களிப்பால் எம்பிக் குதிப்பது. இந்தக் காலத்தில் மகளிர் விளையாடும் "ஸ்க்கிப்பிங்" விளையாட்டுப் போல என்று கூட நினைக்கலாம். உலக இன்ப துன்பங்கள் என்னவென்று அறியாத இளம் வயதில் துள்ளிக் குதிக்கும் மகளிர்கட்கே உரிய விளையாட்டு. இது உயிரின் வெற்றிக்களிப்பு. அடக்கி வைக்க முடியாமல் உயிர் தன்னை அடையாளம் காட்ட வெளிப்படுத்தும் மகிழ்ச்சியான சிறப்புத் தன்மை. இத்தன்மையே, இந்த வெளிப்பாடேவயது முதிர்ச்சியில் இறையருளை நினைந்து வெளிப்பட வேண்டிய உயிரின் இயல்பு. இந்த நிலை ஏற்பட்டால் இதுவே உயிர் தேடும் ஞான வெற்றியாகும் ஞானக்களிப்புமாகும்.

மாயா மலமாகிய துரோதான சக்தி சிவசக்தியாக அருட்சக்தியாக ஆதிசக்தியாக மாறி அறக்கருணையுடன் செயல்படும் காலம் இதுவேயாகும்.

சிவஞானியர்கள் மகளிர் மக்கள் விளையாட்டுக்களிலும் கூட மகேசன் சிந்தனையை மறக்க மாட்டார்கள்.

திருவுந்தியாரில் பல வரலாற்றுச் சிறப்புக்கள் அடங்கியிருந்தாலும் மும்மலங்களை வெல்லும் திறன் கூறப்படுவதே திருவுந்தியாரின் உட்கிடையாகும் என்பதை நாம் உணர்ந்து உய்யலாம்.

"ஆணவ மலமாகிய அச்சு முறிந்தது என்று உந்தீபற" இறைவனின் திருவுள்ளக்கிடகை உயிர்களை ஆணவப் பிடிப்பிலிருந்து விடுபெறச் செய்து உயிர்களைக் காப்பதே காவல் ஆகும். காவல் என்பது கவசம் ஆகும். கவச்ம் என்பது இறைவனை நினைந்து பூசும் திருநீறே. அதுவே ஞானம். ஞானம் உயிருடன் என்றும் கூடவேயிருந்து ஆணவம் காரியப்படாதவாறு அடக்கியே வைத்திருக்கும்.

வினைக்கு ஈடாகப்பிறவியும், பிறவிதோறும் பழவினை கழியக் கழியப் புது வினையச் செய்தும், உயிர் மறு மறு பிறப்பு இறப்புக்களைச் சந்தித்துக் கொண்டே இருக்கிறது. அதனையே

"தொடந்த பிறப்பு அற உந்தீபற" என்கிறார்.

மலச்சார்பு மட்டுமல்லாமல் இறைவனை வழிபடாமலும், உலகியலில் சார்ந்தும், தீவினை செய்து ஓயாது பிறந்துஇறந்து உழலாமை வேண்டி கருக்கெட உந்தீபற என்றார். பிறவிக்கு ஏதுவாகிய கருவானது அழிய என்றவாறு. நமது பழமையான தொன்று தொட்டு வரும் வினைகளும் கெட உந்தீபற வென்றார்.

"தொல்லை வினை ஓட உந்தீபற",

உயிர்களுக்கு முழுமையான காப்பாளன் இறைவனே. இறைவன் ஆகாயம் மட்டுமல்லா அதற்கப்பாலும் அவனே காவல் என்று சொல்லி உந்தீபற

"ஏகாசமிட்ட விருடிகள் போகாமல்
ஆகாசங் காவவென் றுந்தீபற
அதற்கப்பா லுங்காவலென் றுந்தீபற"

திருவுந்தியார் தொல்லை வினை நீங்கவும் இன்பப் பொருளாகிய இறைவனை அடைந்து உய்தி பெறவும் வழிகாட்டி உதவுகிறது. இறைவனே பிறவி நோயைத் தீர்ப்பவர். இறைவனே துன்பம் நீக்கி நம்மைத் தாங்கிக் கொள்பவன். பிறவிப் பிணிக்கு மருந்தானவன். உயிருக்கு வாழ்முதல். வாழ்க்கைக்கு முல காரணமானவன். என்பதை உணர்த்துவது திருவுந்தியார்.

திரு-திருவருள். வாசகம்-வாக்கு திருவாக்கு அதாவது திருவாசகம். திரு என்பது பிறவித்துன்பம் அகன்று எய்தப்பெறுவதாகிய வீடு. வாசகம் இறை உபதேசமாகிய திருவைந்தெழுத்து "சொல்லியபாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார் செல்வர். சிவபுரத்தின் உள்ளார்" சொல்லியபாட்டின் பொருள் பரம்பொருளாகிய சிவனே, இறைவன். திருவுந்தியார் தொல்லையிரும் பிறவித் துன்பத்தை நீக்க வழி வகை புரிகிறது.

"தென்னாருடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவனே போற்றி"

15. திருத்தோள் நோக்கம்

- புலவர் மாமணி **தி.சு. மலையப்பன்**

"மனிதன் கேட்கக் கடவுள் சொன்னது கீதை". "கடவுள் கேட்க மனிதன் சொன்னது திருவாசகம்".

சாத்திர நூல்களில் தலையாயது சிவஞான போதம். அறநூல்களில் தலையாயது திருக்குறள். இலக்கண நூல்களில் தலையாயது தொல்காப்பியம். தோத்திர நூல்களில் தலையாயது திருவாசகம். எட்டாம் திருமுறை என்று போற்றப்படும் நூல். "திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்" என்பது மறைமொழி. மனித உறுப்புக்களுக்கிடையே சிறந்தது தலை. கண்டு, கேட்டு, உண்டு உயிர்ப்பதும், பிற உறுப்புக்களுக்கு ஆணையிடும் அதிகாரத்தைப் பெற்றதும் தலை. எனவேதான் "எண்சாண் உடம்பிற்குச் சிரசே பிரதானம்" என்றார்கள். மந்திரங்களில் பலவகை உண்டு. சிறந்த மந்திரம் 'சிகா மந்திரம்'. சிகா மந்திரத்தைக் காட்டிலும் சிறந்தது வேறு எதுவும் இல்லை. அதைப்போல திருவாசகத்தைக் காட்டிலும் சிறந்த பக்தி நூல் இல்லையென்று செப்புவர் சான்றோர்.

வேற்று நாட்டிலிருந்து மதம் பரப்ப வந்த 'ஜி.யு. போப்' என்பவர் திருவாசகத்தைப் படித்து மனம் உருகிப் போனார். திருவாசகத்தை ஓதுங்கால் அவரை அறியாமலேயே கண்களிலிருந்து கண்ணீர் பெருக்கெடுக்கும். அவர் எழுதும் கடிதங்களில் திருவாசகம் பற்றிக் கூறும்போது கண்ணீர் துளிர்த்திருப்பதைக் காண முடியும். தேன்தானும் அழியாது, தன்னைச் சார்ந்தவர்களையும் அழியாது, கெடாது காப்பாற்றி வைக்கும் அற்புதப் பொருளாகும். அதைப்போல, ஜாதி, மதம், இனம், மொழி கடந்து தன்னைச் சார்ந்தவர்களை தன்பால் ஈர்த்து அவர்களையும் வாழ வைத்த நூல் திருவாசகம்.

அத்தகைய அற நூலாம் திருவாசகத்தில் திருத்தோள் நோக்கம் பற்றிச் சிந்திப்போம். வாதவூரர் எனப் பிள்ளை நாமம் பெற்ற பெரியார் காந்தம் கண்ட இரும்பைப் போல ஈர்க்கப் பெற்றுத் தன்வசம் இழந்து , பரவசமாகி, சிவபெருமானால்

ஞானதீக்கை பெற்று மாணிக்கவாசகர் எனத் திருநாமம் சூட்டப் பெற்றார்.

திருத்தோள் நோக்கம் என்பது, மகளிர் ஒருவர் தோளை ஒருவர் தொட்டு விளையாடி மகிழ்வதும், விளையாட்டின் முடிவில் ஒருவர் கையை மற்றவர் பிடித்து மகிழ்ந்து ஆடலுமாம். மகிழ்ச்சி தோன்றுவதற்கு அடிப்படை யாது? நிலைத்த மகிழ்ச்சியையும், நிறைவான மகிழ்ச்சியையும் பெறுதல் எவ்வாறு?

"வேண்டுதல் வேண்டாமை இலான் அடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல"

- என்பது வான் மறை தந்த வள்ளுவர் வாக்கன்றோ!

உலகம் நிலையற்றது. உலகத்தில் தோன்றிய மனிதன் உள்ளிட்ட நாம் நிலையற்றவர்கள். வாழும் காலத்தே சித்தத்தைச் சிவமாக்கி அப்பன் அருளைக் காண வேண்டும் என்பதே இதன் உள்ளீடு. உள்ளத்தையும் நம்மைச் சார்ந்து இருக்கிற உணர்வுகளையும் சுத்தப்படுத்திச் கொள்வதே அதன் நோக்கம். அழுக்கடைந்த பொருளைச் சுத்தப்படுத்துவது யார்? இறைவன் இணையடிகளே. பொறிகள் பெற்றிருக்கிற மனிதன், அதன் பயன் எண்குணத்தான் தாளை வணங்குவதே தலை என்பார் திருவள்ளுவர்.

வாழ்க்கைக் கடலிலே சிக்கி வாழ்நாளை வீணாக்காமல் இருப்பதற்கு வழி யாது? இறையடி சேர்தலே. எனவேதான் தில்லை அம்பலத்தே திருநடம் செய் கூத்தன் சேவடியே பொய்கைப் புனலாய் கருதி, தோள் நோக்கம் ஆடுவோம் என்றார். பொய்கை என்பது மலர் பூத்துக் குலுங்க, தண்ணளிதாய் விளங்கும் நீரைப் பெற்றிருக்கும். பூக்களில் தேனைப் பருக வண்டுகள் மொய்த்த வண்ணம், நீக்கமற நிறைந்திருக்கும். ஆன்மா என்ற வண்டுகள் மோட்சம் என்ற தேனைப் பருக, புண்ணியச் செயல்களாம் மலர்களை நாடி வட்டமிடும் பொய்கையே இறைவன் திருவடிகளாகும். உடல் சூட்டைக் குளிர்ந்த நீர் நீக்குதல் போல, இறைவன் அடிகள் வாழ்வின் வெம்மைச் சூட்டைப் போக்கும் இயல்பினதாம்.

இறைவனை நாடிச் செய்யும் பக்தி இருவகைப்படும். ஒன்று ஆகம விதிநெறிகளுக்கு உட்பட்டுக் கடமைக்காகச் செய்யும் பக்தி. மற்றொன்று விதிமுறைகளை மீறியதாக உள் அன்போடு உணர்வு பூர்வமானது. ஆகம விதிநெறி அறியாது காட்டிலே திரிந்த வேடன், திண்ணப்பன் செருப்பணிந்த காலோடு இறைவன் திருமுடியில் இருந்த மலரை நீக்கியும், வாயில் கொணர்ந்த நீரைக் கலச நீராகக் கருதி திருமஞ்சனம் செய்வித்ததையும், வாயிலிட்டு அமுக்கிப் பார்த்து, உண்பதற்கு ஏற்றதா என்று ஆராய்ந்து, தாய் அன்போடு படைத்ததையும் ஏற்றான் இறைவன். ஆண்டாண்டு காலமாக ஆகம விதிமுறைப்படி, வழுவாது வழிபடும் சிவகோசரியாருக்கு, கிடைக்காத பேறு ஆறு நாட்களில் திண்ணப்பன் பெற்றுக் கண்ணப்பன் ஆனான். திண்ணப்பன் செய்த ஆகம விதிகளுக்கு அப்பாற்பட்ட செயலோ இறைவனால் ஏற்கப்பட்டது. விருப்போடு அன்பினால் செய்யப்படுகிற வழிபாட்டை இறைவன் ஏற்பான் என்பதை அறிகிறோம்.

"பொருட்பற்றிச் செய்கின்ற பூசனைகள் போல் விளங்கச்
செருவுற்ற சீரடி வாயகலலும் ஊன் அமுதம்
விருப்புற்று வேடனார் சேடறிய மெய்குளிர்ந்தாங்கு
அருட்பெற்று நின்றவா தோள்நோக்கம் ஆடாமோ"

(திருவாசகம்)

"அவாவினை ஆற்ற அறுப்பின் தவாவினை
தான்வேண்டு மாற்றான் வரும்"

- என்பது மறைமொழி

கல்போன்ற நெஞ்சினையும் கசிந்து உருக வைத்து, தன் கருணையால் தம் மனத்துள் நுழைந்து அருள் செய்வான் இறைவன். திருசேய்கலூரில் பிறந்த விசாலசர்மர் என்பார் ஆடு, மாடுகளை மேய்க்கும் அருட்செயலை மேற்கொண்டார். இவர் காட்டிய பரிவால் இவரைக் கண்டபோதெல்லாம் பசுக்கள் தானே பாலைச் சொரிந்தன. மாடு மேய்க்கச் செல்லுங்கால் மண்ணியாற்றங்கரையில் மலரால் லிங்கம் அமைத்து அதற்குப் பால் அபிசேகம் செய்து பூஜை செய்து வந்தார். ஊரார் முறையீட்டால் அவரது தந்தை எச்ச தத்தர் குராமரத்தில் மறைந்திருந்து தன் குமரன் செயலைக் கண்ணுற்றார். மகன்

செயலைக் கண்டு மனந்துணுக்குற்று வெகுண்டு கோலால் மகனை விளாசித் தள்ளினார். பூசைக்கு வைத்திருந்த பாலையும் காலால் எட்டி உதைத்தார். இதனால் தாம் இயற்றும் சிவபூசைக்கு இடையூறு வந்ததே என்று எண்ணி, தந்தையென்று பாராமல் கோலை எடுத்து தந்தை மீது வீசினார். 'கோலோ மழுவாக' மாறி எச்ச தத்தர் காலை வீழ்த்தியது. பூசைக்குற்ற இடையூறு நீங்கியது என விசால சர்மர் சிவ பூசையினைச் செய்தார். "இறைவன் நாம் உண்ட கலமும், உடுப்பனவும், சூடுவனவும், உனக்கே ஆகுக" என்று மகிழ்ந்து கூறி விசால சர்மருக்கு சண்டேசுவர பதம் அருளினார். 'அறனடியார்க்கு இனியதாக அன்பர் செய்யும் பாவமும் அறமாகும்' என்பது சிவஞான சித்தியார் வாக்கு. இறைவன் வார்கழலை நினைந்து செய்யும் பூசை ஒன்றே ஆன்மாவை ஈடேற்ற வல்லது என்று அறுதியிட்டுக் கூறுகிறார்.

"தீதில்லை மாணி சிலகருமம் இனத்தாலும்
சாதியும் வேதியன் தானைத்தான் தாள் இரண்டும்
சோதிப்ப ஈசன் திருவருளால் தேவர் ஓதப்
பாதகமே சோறு பற்றினவா தோள் நோக்கம்"

(திருவாசகம்)

ஒரு நோக்கத்தோடு செய்யும் பூசையைக் காட்டிலும், அன்போடு செய்யும் ஆராதனையே சிறந்தது, என மணிவாசகப் பெருமான் அறுதியிட்டுக் கூறுவார். திருமால் சக்கரப் படைபெற சிவனை நோக்கிப் பூசனைச் செய்ய முயன்றபோது ஆயிர மலர்களில் ஒரு மலர் குறைந்ததால் அதை ஈடுசெய்ய, மலராக தன் கண்ணைப் பிடுங்கி அர்ச்சனை செய்தார். ஆனால் திண்ணப்பனோ அய்யன் கண்ணில் நீர் வந்தபோது அரட்டிஅழுது மெய்விதிர்த்து "அப்பனுக்கு யார் இது செய்யப்பெற்றார்" எனக் கலங்கினார். பின் ஒருவாறு தேறி மருந்து இது கை கண்டேன். ஊனுக்கு ஊன் என தன் கண்ணை இடந்து அப்பினான். எனவே திண்ணப்பன் கண்ணப்பன் எனப் பெயர் பெற்றான். இவர்கள் செயலில் தலையாயது யாது? கண்ணப்பன் என இறைவனால் அழைக்கப்பட்ட திண்ணன் செயலல்லவோ ஓங்கி நிற்கிறது.

"பங்கயம் ஆயிரம் பூவினிலோர் பூக்குறையத்
தங்கண் இடந்தரன் சோ வடிமேல் காத்தலுமே
சங்கரன் எம்பிரான் சக்கரமாற் கருளியவாறு
எங்கும் பரவிநாம் தோள்நோக்கம் ஆடாமோ"

மக்களாய் பிறந்த நாம் பிறவிப் பெருங்கடலை நீங்க இறைவனடி போற்ற வேண்டாமா ? பாழுக்கிறைத்தே வாழ்நாளை வீணாக்காது பரமனைப் பணிந்து, அவன் அருள் பெற்றுப் பிறவிப் பயன் பெறவேண்டும் என்பார்.

கழுகானது இரை தேட ஆசை வலைப்பட்டு, அங்குமிங்கும் பறந்தோடித் திரிவதைப் போல, உலக இன்பத்தைத் தேடி இந்திரியங்கள் அலைகின்றன. இந்திரியப் பறவை திரிந்து ஓட வாழ்ந்தேன். உத்தமன் வந்து என் உள்ளொளியை உயர்வித்து, ஞானத்தைப் பெருக்கி, அருள் செய்தலின் விளைவால், என் சித்தம் சுத்தியாகி உள்ளீடான ஞானத்தை அறிந்தேன்.

"உரைமாண்ட உள்ளொளி உத்தமன் வந்து உளம்புகலும்
கரைமாண்ட காமப் பெருங்கடலைக் கடத்தலுமே
இரைமாண்ட இந்திரியப் பறவை இரிந்தோட
துரைமாண்ட வாபாடித் தோள்நோக்கம் ஆடாமோ"

"தன்னை யறிய தனக்கு ஒரு கேடில்லை. தன்னையறியார் தானே கெடுகின்றார்" என்பது திருமந்திரம். உடம்பின் உள்ளுறுப்புக்கள் சுத்தமடைதல் வேண்டும். முதல் பாட்டில் உலக மயக்கம் நீங்கினால் இறைவனை அடையலாம் எனத் தொடங்கி, இறைவனை அடையும் பாக்கியம் உண்மையான அன்பினால் மட்டுமே முடியும் என்பதை விளக்கி, அவனருளால் அவன்தாளை வணங்க ஆன்மாவைச் சுத்தப்படுத்திக் கொள்ள வேண்டும் என இறுதியாகக் கூறும் பகுதியே தோள் நோக்கமாகும்.

உண்மையான பக்தி விருப்பமுடன், அன்போடு செய்வதே என்பதை இப்பகுதி விளக்குதலைப் உணரலாம்.

16. திருப்பொன்னூசல்

முனைவர். தே. சொக்கலிங்கம்

பொன்னூசல்-அறிமுகம்

திருவாசகத்தின் பதினாறாம் பகுதி பொன்னூசல்; திருப்பூவல்லி, திருவுந்தியார், திருத்தோணோக்கம் என்று பெண்கள் விளையாட்டாக வருகின்ற வரிசையில் திருப்பொன்னூசல் இறுதியாகக் காணப்படுகின்றது. இதனை அடுத்து ஆத்தும பூரணத்தை விளக்கும் அகப்பொருள் சார்ந்த 'அன்னைப்பத்து' வருகின்றது. மகளிரும் ஆடவருமாகவும், மகளிராகவும் இருந்து ஊஞ்சலாடுதல் (ஊசல்) தொன்மை வழக்கம். திருவெம்பாவையில் "கோதில் குலத்தரன்தன் கோயிற் பிணாப்பிள்ளை நாள் ஏது அவன் ஊர்? ஏது அவன் பேர்? உற்றார் ஆர்? அயலார் ஏது? அவனைப் பாடும் பரிசு" என்று அடிகள் வினவினார். அவ்வினாவுக்கு விடையிறுப்பனவாய்த் திருவம்மானை முதலான மகளிர் விளையாட்டொடு பாடிய திருவாசகப் பகுதிகள் அமைகின்றன. பத்து என்றோபதிகம் என்றோ பெயர் பெறாமையால் இதன்கண் ஒன்பது பாசுரங்களே உள்ளன. இந்த ஒன்பது பாசுரங்களும் ஆறடித்தரவு கொச்சகக் கலிப்பாவால் ஆனவை. இதனை மாணிக்கவாசகர் தில்லையில் அருளினார்.

உள்ளுறைப் பொருள் :

ஒற்றைத்தாள அறுதிப்படியே ஊசலாடலும் பாடலும் நிகழும். திருப்பொன்னூசல் 'அருட்சுத்தி'யைப் பாடியதாகும். சிவபெருமான் கருணையினால் ஆன்மாவைச் சுத்தி செய்தலே பொன்னூசலின் பிழிவு. மாணிக்கவாசகர், சிவபெருமான் சிவசக்தியாக உத்தர கோச மங்கையில் தோன்றி அவருடைய கருணையால் பழ வினைகளைப் போக்கிப் பல்பிறவிகளை அறுத்துத் தன்னை ஆட்கொண்டான் என்ற தன் சொந்த அநுபவத்தைப் பாடுகிறார்.

பொன்னூசலின் உட்பொருள் அருளொடு கலத்தல் என்பது பழைய குறிப்பு. "அருட்சுத்தி என்பது அருளொடு

கலத்தலால் ஆன்மா அடையும் சுத்தியை அறிவிப்பது" என்பர் மகா வித்துவான் ச. தண்டபாணி தேசிகர்.

ஊசலாடலும், பாடலும் :

வைணவர்கள் திருமாலையும் பெரிய பிராட்டியாரையும் ஊஞ்சலில் எழுந்தருளுவித்து அவர்கள் புகழைப்பாடி மகளிர் ஆடுவதாகப் பாடுவர். சைவர்களோ சிவபெருமான் புகழைப்பாடி மகளிர் ஆடுவதாகப் பாடுவர். பழைய புராண ஆசிரியர், அருட்சத்தி இருந்து ஆடத் தாலாட்டுதல் பொன்னூசல் என்று கூறுவர். இதனால் ஊஞ்சலில் இருந்தாடுவது அருட்சத்தியும் ஆட்டுவது ஏனையோரும் ஆவர். எட்டுப் பாடல்களில் (8-ஆவது பாடலில் இல்லை) மகளிரை விளித்து மகடூஉ முன்னிலையாகப் பாடி ஊசலாட அடிகள் வேண்டுகிறார். இதன் கண்ணுள்ள ஒன்பது பாடல்களும் 'ஆடாமோ' (ஆடுவோமாக) என்று முடிகின்றன.

பாடல் பிறந்த பதி :

மாணிக்கவாசகர், பொன்னூசல் பாடல்களைத் தில்லையில் அருளினார் என்பது மரபு; தில்லையின் நான்கு வெளி வீதிகளிலுள்ள வீடுகளின் முன் பகுதியில் ஊஞ்சல் அமைக்கப்பட்டிருப்பதையும், மாலைப் போதில் அவ்வீட்டார் ஊஞ்சலாடுவதையும் காண முடியும். தில்லை ஆகாயத் தலமாதலின் இப்போக்கு உள்ளது. அடிகள், இந்த ஒன்பது பாடல்களிலும் பாண்டிய நாட்டுத் தலமாகிய திரு உத்தரகோசமங்கையைச் சிவபெருமான் எழுந்தருளிய திருத்தலமாக உரைக்கின்றார். இரண்டாம் பாடலில் 'உத்தர கோசமங்கைக் கோன்றங்கு இடைமருது' என்று திருவிடை மருதூரையும் நவில்கின்றார். மருதூரும் பாண்டியர் தொடர்புடைய ஊர் என்பது அறியத்தக்கது. 'நாண்மலர்த்தாள் நாயடியேற்கு ஊராகத்தந்தருளும் ' (1) என்று பொன்னூசலிலும் 'உத்தரகோசமங்கை ஊராகவும்' (120) என்று கீர்த்தித் திருவகவலிலும் மணிவாசகர் தன்னை ஆட்கொண்ட வகையை அறைகுவர். 'இடைமருதனில் ஈண்ட இருந்து படிமப் பாதம் வைத்தவப் பரிசு ' (75 - 76) என்று கீர்த்தித் திருவகவலிலும் திருவிடை மருதூரை உரைப்பர். இவ்விரு திருப்பதிகளும்

மாணிக்கவாசகர் உகந்தவை. ஆனால் தில்லையம்பதி பற்றிய சுட்டு ஈண்டில்லை.

பெயர் பொருத்தம் :

மகளிர் விளையாட்டுடன் பாடிய திருவாசகப் பகுதிகள், அவ்விளையாட்டுப் பெயர் பாடலில் அமையுமாறு மாணிக்கவாசகர் பாடிப்போந்தார். இந்த ஒன்பது பாசுரங்களுக்கும் 'பொன்னூசல்' என்ற பெயர் அமைந்தமைக்குப் பொருத்தமாக முதற்பாசுரம் மாத்திரம் ஊசலமைப்பை விவரிக்கிறது. ஊஞ்சல் மரத்தில் கட்டப்பட வில்லை. திருவாக ஊஞ்சற்கால்கள் பவளத்தாலானவை. அதன் கண் தொங்கும் ஊஞ்சற்பலகையும் பிறவும் பொன்னாலானவை. ஊஞ்சற்கயிறு பவளம் முத்து, பொன் என்றும் அரும்பொருள்களால் ஊஞ்சல் அமைக்கப்பட்டிருக்கிறது. ஆனேறேறி அமரர் நாடாண்ட சிவ சத்தியைப்பாடு வோருக்கு விலை மதிப்பு மிக்க பொருள்களால் மணிவாசகர் ஊஞ்சலை அமைத்திருக்கிறார்.

நுதலிய பொருள் : அடிகள் அனுபவம் :

பொன்னூசலில் அமர்ந்து நாராயணன் அறியாத அன்று மலர்ந்த தாமரைத் தாள் போன்ற திருவடியைத் தனக்கு வாழும் ஊராகக் கொடுத்த உத்தரகோசமங்கைக்கரசின் திருவடிகளைப் பாடி ஊஞ்சலாடுவோம். *(1)*. முனிவர்களும் தேவர்களும் நிறைந்த குழுவினர் சிவனருள் பெறாது வெளியே நிற்கின்றனர். சிவனோ திருநீற்றை அருளித்தன் அருள் வெள்ளத்தில் மாணிக்கவாசகரைத் திளைக்க வைத்தான். அத்தகைய சிவன் வீற்றிருக்கும் மின்னேறும் மாடவியன் மாளிகை உள்ள உத்தரகோசமங்கையைப் பாடி ஊசலாடுவோம் *(3)* பெண்ணொரு பாகத்தில் கொண்டு உத்தர கோசமங்கையில் எழுந்தருளித் தாதாடு கொன்றையைச் சடையில் சூடியவன், அடியாருள் ஒருவனாகப் பாராட்டி நாயனைய மணிவாசகரையும் ஆட்கொண்டான். அடிகளின் முன்னைப் பிறவித் தீமை ஒறுக்கா வண்ணம் காப்பாற்றிப் பிறப்பை அறுத்த சிவபெருமானுடைய காதுகளில் ஆடும் குண்டலங்களைப் பாடிக் கசிந்தன்பால் பொன்னூசல் ஆடுவோமாக(6) நினைத்தற்கரிய திருமிகும் உத்தரகோசமங்கைச் சிவபெருமான் மாமறையோனாய்

எழுந்தருளியிருக்கின்றான். அவன் புகழ் பேசிப் பணிந்து வணங்கினால் அவன் பாவங்களின் பற்றை அறுப்பான். மணிவாசகருக்கு அத்தனாகி அவரை ஆட்கொண்டான் எழிலைப்பாடி அன்னத்தின் மேல் ஏறி ஆடும் அணிமயில் போல் பொன்னூசல் ஆடுவோமாக (7) சிவபெருமான் கைலாய மலையில் தோன்றிக் குவலயத்துச் சால அமுதுண்டான்; அவன் கடலலையைப் போல உலகம் உயரப் புரவி மீது இவர்ந்து அடியாரை அடிமை கொண்டான். சீலம் திகழும் உத்தர கோசமங்கைக் கோனைவாயாரப்பாடிப் பூரித்து உள்ளம் குழைந்து ஊசல் ஆடுவோமாக (8) உத்தரகோசமங்கையின் சோதித் தனியுருவம் வந்தருளி எங்கள் பிறப்பறுத்திட்டு எந்த நிலையிலும் ஆட்கொள்வான் மாதொரு பாகனாக வந்து பணி கொண்ட கொன்றைச்சடையான் குணம் பரவிப் பொன்னூசல் ஆடுவோமாக (9)

இந்த ஆறு பாசுரங்களாலும் மணிவாசகருக்கு உத்தரகோச மங்கைப் பெருமான் அருளிய திறம் பொன்னூசலாடும் மாறு பேசப்படுகின்றது. சிவன் புரவி ஏறி வந்த வரலாற்றை 'ஞாலமிகப் பரிமேற் கொண்டு நமையாண்டான்'(8) என்ற திருவாசக அடிகள் உணர்த்துகிறது.

பொன்னூசலும் பொதுக்குறிப்பும் :

பொன்னூசலின் ஆறு பாடல்களில் தன் அனுபவத்தைத் தனக்கு சிவனருளிய திறத்தைப்பாடிய மாணிக்கவாசகர், ஏனைய மூன்று பாடல்களால் இறைவன் அடியார்க்குப் பொதுநிலையில் அருளிய வகையைப்பாடியுள்ளார். முக்கட்பெருமானான சிவன் மூவாத தேவர்களும் காணாமலரடிகளையுடையவன், தேன் தங்கித்தித்திக்கும் அமுதும் கலந்தது போல உருக்குகின்ற உத்தரகோசமங்கைக் கோன் எழுந்தருளிய இடை மருதுபாடிக் குலமயில் போன்ற அன்ன நடைப்பெண்களே! பொன்னூசல் ஆடுவோமாக (2) நஞ்சமர் கண்டத்தன்; தேவர்கள் தலைவன்; மேகம் தவழும் மாடங்கள் நிறைந்த உத்தரகோசமங்கைக்கு அரசன்; அஞ்சொல் உமாதேவியுடன் வீற்றிருப்பவன்; அடியார்கள் நெஞ்சுக்குள்ளே நின்று அமுதமூறிக் கருணைசெய்பவன் பிறப்பிறப்பைப் போக்குபவன்; அவனுடைய தூய புகழைப்

பாடித்திரண்ட வெள்வளையீர்! பொன்னூசல் ஆடுவோமாக (4) திருமாலும் நான் முகனும் இன்ன தன்மையன் என்று காண முடியாத கடவுள்; தேவர்கள் மீது வைத்த கருணையால் நஞ்சையுண்டு அவர்களைக்காத்த உத்தர கோசமங்கைக்கு அரசனாய்ப்பிறையைச் சென்னியிலே சூடிய கூத்தன்தன் குணத்தைத் துதித்து ஊசலாடுவோம் (5)

இம் மூன்றுபாடல்களால் சிவபெருமானுடைய குண நீர்மைகளான முக்கண்ணுடைமை, அவன் திருவடிவம் காணமுடியாமை, நஞ்சமர்கண்ட முடைமை, அம்மையுடன் இருந்தமை, பிறப்பிறப்பறுத்தல், ஆகியவற்றை எடுத்துரைத்துச் சிவன் அடியார்க்கு அருள் செய்தலை விவரிக்கின்றார். மணிவாசகர் மனத்தகத்தே சிவனே எழுந்தருளியிருந்தாலும், அவர் உள்ளத்தே உத்தரகோசமங்கைப் பெருமானே வீற்றிருக்கின்றார்; அப்பெருமானே அடிகளின் வழிபடு கடவுளாவார்.

ஆடுவோரும் பாடுவோரும் :

பாவையர் ஊஞ்சலாடப்பரமன் புகழ்பாடப் பொன்னூசலாடுகிறது. ஆடுவது மகளிர் செய்கை; பாடுவது மணிவாசகர் பணி.

17. திரு அன்னைப் பத்து

புலவர். பெ. ஆறுமுகம்

செல்வமிகு செந்தமிழ் நாட்டில் தோன்றிய மக்கள் சிறப்புடன் வாழ வழிவகுத்தவை, சிறந்த நூற்களே அந்நூற்களுள் ஒல்காப் புகழ் படைத்தது, தொல்காப்பியமெனும் இலக்கண நூல். இது ஏனைய மொழிகளில் உள்ளது போல் மொழிக்கு மட்டும் இலக்கணம் கூறாது. மக்களது உயர்வுக்கும் இல்லற நெறிக்கும் வழிவகுத்துக் கூறுகிறது. எழுத்து, சொல், பொருள் என்ற மூன்றிதிகாரங்களைக் கொண்டது அதில் பொருளதிகாரம் என்பது உயர்தனிச் செம்மொழியாம் தமிழ்மொழிக்கே உரியது. அகம், புறம், களவு, கற்பு என்று இல்லற வாழ்வின் மேன்மையை எடுத்தியம்புவது, இல்லறமல்லது நல்லறமன்று என்று ஔவைப் பிராட்டியும், அறன் எனப்பட்டதே இல்லறமென்று வள்ளுவரும் பாடிய இலக்கியங்களுக்கு சான்றளிப்பது பொருளதிகாரம் ஆகும்.

'இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை' - (களவியல் க.)

ஐந்திணை ஒழுக்கப்படி, தலைவன் - தலைவி தங்கள் வாழ்க்கையைத் தொடங்குவது அக்கால மரபு. அதற்குத் துணையாகத் தோழி அறத்தோடு நிற்பாள்.

"தோழி தானே செவிலி மகளே"- என்றும் ஆய்பெருஞ்சிறப்பில் அருமறை கிளத்தலின் தாயெனப்படுவாள் செவிலியாகும் என்பது பொருள். ஒவ்வொரு தலைவிக்கும். நற்றாய், செவிலித்தாய்- தோழி என்ற மூவர் உடன் இருந்து உதவியதைத் தொல்கர்ப்பிய வழி அறிய முடிகிறது. ஒத்த அன்புடைய இருவரின் வாழ்க்கை இனிதே நடைபெற இவர்களது வழிகாட்டல் பயன்படுகிறது. இல்வாழ்க்கையை மேற்கொண்ட இவர்கள் தென்புலத்தார், தெய்வம், விருந்து , ஒக்கல், தான் என்ற ஐவரை ஓம்ப வேண்டிய கடமையை மேற்கொண்டுள்ளார்கள்.

தெய்வம் தெளிமின், தெளிந்தோர் போற்றுமின் என்பது சிலம்பு. "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்

தெய்வத்துள் வைக்கப்படும்" என்பது - வள்ளுவம். மனிதனாகப் பிறந்தவன் பிறவா நிலையை அடைய வேண்டும். அதற்கு வாய்ப்பான பிறவி இம்மானிடப்பிறவி. எத்தனை பிறவி எடுத்தோம் என்பது தெரியாது. பிறவாமை வேண்டும் பிறந்தால் உனை மறவாமை வேண்டும் என்றார்- அம்மையார். மானிடராகப் பிறந்தவர்கள் நான்கு வழியில் இறைவனை அடையலாம். (1) ஆண்டான் அடிமை (2) தந்தை- மகன் (3) தலைவன்- தோழன் (4) நாயகன் - நாயகி. நான்காவது வழியாகிய தலைவன் - தலைவி என்று தொல்காப்பியர் காட்டும் வழியில் இறைவனடி சேர்ந்தவர் தான் திருவாசகம் தந்த மணிவாசகப் பெருமான். அவருடைய 51 பகுதிகளுள் அன்னைப் பத்தைப் பற்றிக் காண்போமாக.

பத்து என்ற சொல் பண்டைய சங்க காலத்திலிருந்து இலக்கிய உலகில் எடுத்தாளப்பட்டுள்ளது. பத்துப்பாடல், பதிற்றுப்பத்துப் போன்ற நூல்களே இதற்குக் கரியாகும். அதுபோலவே ஏழாம் நூற்றாண்டில் தோன்றிய தேவாரம், திருவாய்மொழி, திருவாசகம் போன்ற நூற்களிலும் பத்து என்று வருகிறது. எடுத்துக்காட்டாக வள்ளுவர் பெருந்தகை பத்து குறட்பாக்களையே ஒரு அதிகாரமாக அமைத்துள்ளார். இவ்வரிசையில் மணிவாசகப் பெருமானும் தன் நூலில் அச்சப்பத்து முதல் வாழாப்பத்து வரை பத்தொன்பது பகுதிகளாகப் பத்து என்று தலைப்பில் பாடல்க்ளைப் பாடியுள்ளார். அதில் தலைசிறந்தது அகப்பொருளுக்கு ஏற்றது அன்னைப் பத்தாகும்.

மக்களாகப் பிறந்தவர்கள் இறைவனது மாணடிசேர வேண்டும். ஜீவாத்துமா பரமாத்துவாகிய சிவனை அடைய வேண்டும். சிவபெருமானது சேவடியைச் சிக்கெனப் பிடிக்க மனமுருகிப்பாட வேண்டும். மனத்தை உருக்கக் கூடிய சக்தி திருவாசகத்திற்கு உண்டு. இதனைத் "தென்னா என்னா முன்னும் தீசேர் மெழுகொப்பாள்" என்பதனால் அறியலாம். மணிவாசகப்பெருமாள் தன்னைத் தலைவியாக எண்ணித் தலைவனாகிய சிவபெருமானை எண்ணி உருகுவதை அன்னைப் பத்துவால் அறியமுடிகிறது.

உலக வாழ்வில் பருவ மங்கை தான் கண்ட உளம் விரும்பிய தலைவனை மனதில். எண்ணி எண்ணிப் பார்ப்பாள்.

அவனது உடை, நடை, உருவம் போன்றவை அவள் மனதில் ஓவியமாகப் பதிந்து விடும். இங்கும் அன்னைப் பத்தில் மணிவாசகப் பெருமான் இறையனுபவத்தால் தம்மைத் தலைவியாக எண்ணித் தோழியிடம் கூறுவதுபோல் பாடுகிறார். இதோ, தலைவியாகத் தன்னைப் பாவித்துக் கொண்டு சிவபெருமானின் தோற்றத்தை எண்ணி எண்ணி இரும்பூது எய்துகிறார். அயனாலும், அரியாலும் அறிய முடியாத தலைவன் என் தலைவன். அவனது தோற்றம் அழகானது. அத்தோற்றத்திற்கு மேலும் அழகு சேர்ப்பது உடலில் பூசியிருக்கும் பால் வெண்ணீறாகும். வானவர் மேலெல்லாம் விளங்கினாலும் எம் தலைவனுக்குத் தனி அழகைக் கொடுக்கிறது வெண்ணீறாகும். அவரது திருவாய் வேதத்தை கூறிக்கொண்டேயிருக்கிறது. வேதங்கள் எல்லாம், ஐயனே என்று போற்றுகிறது. சிவந்த மேனியை உடையவர். செம்மையான தோற்றம் அதைக் கண்டவர்கள் மறக்கமுடியாது. திருமேனியாலும் கண்டவர்களை மயங்கச் செய்பவன். ஒருகால் பார்த்தாலே பலகாலும் அவன் நினைவு இருக்கும். நாதம் என்றால் ஒலி, ஓசை என்பது பொருள். பறை சாற்றினால் மக்கள் மனதில் மகிழ்ச்சி பெருகும். இன்னும் திருக்கோவில் வழிபாட்டில் நாதசுர இசை முழங்குவதைக் காண்கிறோம். இறைவனே நாதப் பறையை எல்லா ஒலிகளுக்கும் மூலப் பொருளாகக் கொண்டுள்ளார். அவ்வேடத்தைப் பார்த்து என்னுள்ளம் மிக வருந்துகிறது என்றாள் என்று தன் தோழி தாயிடம் சொன்னாள்.

அன்பின் வழியது உயிர் நிலை என்பர் வள்ளுவர். அதுபோல் அன்பே வடிவான சிவபெருமானும் என்னிடத்தில் அன்பைக் காட்டி அடிமையாக்கிவிட்டார். அவரது அன்பினால் வேறொன்றும் அறியாது அவரது தோற்றத்தையே பார்க்கிறேன். அதில் நீண்ட கைகளும், அடர்ந்த சடையும், அழகான திருமேனியும்தான் தெரிகிறது. அவரது பாண்டி நன்னாடும் என் நினைவில் நிலைத்திருக்கிறது. இவ்வளவு சிறப்புடைய அவருக்கே நானடிமை என்று தோழியிடம் கூற அதை அவள் தாயிடம் அறிவிக்கிறாள்.

நம்முடைய மனம் காற்றைவிட வேகமாக ஓடக்கூடியது மனத்தை அடக்குவது மனிதனால். முடியாத செயல். சும்மாயிருக்கும் திறம் அரிதென்றும், 'சும்மாயிரு சொல்லற' என்றும் கூறியுள்ளார்கள். நீண்டு பரந்து செல்லும் நினைவை, சிந்தனையை அடக்க அவனருள் வேண்டும். அருளைப் பெற அவனை நினைக்க வேண்டும்.

"எண்ணிய எண்ணியாங் கெய்துப என்பர்" தெய்வப்புலவர். நினைப்பதற்கே அரியவரான உத்தரகோச மங்கைப் பெருமான் என் நெஞ்சில் புகுந்து நிலையாக உள்ளார். அவரை மாலும், அயனும் காண முடியவில்லை. புறக்கண்ணால் தேடினால் காணமுடியாது. அகக்கண்ணால் தேடினால் காண முடியும். யான் என்ற அகந்தை ஒழிந்தால் தான் அகக்கண்ணால் காண முடியும். வாதவூரார் ஆட்கொள்ளப்பட்டதால் மும்மலம் நீங்கி முழு அடியாரக ஆக்கப்பட்டார். அதனால் அவர் ஐயனை அகத்தே கண்டு மகிழ்ந்து கொண்டிருப்பதாகத் தோழியிடம் சொன்னார்.

என்முன் அவர் குதிரைச் சேவகனாகி அதன்மீது அமர்ந்து வருகிறார். வெண்மையான உடையை அணிந்துள்ளார். நெற்றியில் திரிபுண்டரமாகத் திருநீற்றை அணிந்தவர். குப்பாயம் என்னும் மேலங்கியை அணிந்து என் உள்ளத்தைக் கவர்ந்தவர் தோழி என்று புகழ்கிறாள்.

திருநீற்றை கையால் எடுத்துச் சிவ, சிவ என்று ஓதி வடக்கேனும், கிழக்கேனும் திரும்பி இட வேண்டும். இடும்போது துகளாக நெற்றி நிறைய பூச வேண்டும். எக்காரணம் கொண்டும் விபூதியை நெற்றியில் திலகம் போல் சிறிதாக இடுதல் கூடாது. குழைத்துப் பூசினால் முப்பட்டையாகப் பூசவேண்டும். இதுவே திரிபுண்டரகம் எனப்படும். இதுவே முறை என்று முன்னோர்கள் கூறியுள்ளார்கள்.

யோக நித்திரையில் இருந்து என்னை ஆட்கொண்டாரே ஏன்? என் உள்ளத்தையே கொள்ளை கொண்டவர். அறுகம்புல்லையும், மணமிக்க சந்தனத்தையும் உடையவர். எங்களை அடிமையாகக் கொண்டு ஆளுபவர். அவர் கையில் ஏன் தாளமிருக்கிறது என்று கேட்டாள். தாளம் ஒலி மட்டும் எழுப்பும்

கருவி அல்ல. அது கால தத்துவத்தை அறுதியிட்டுக் காட்டும் கருவியாகும். காலத்தத்துவத்தை அறுதியிடும் பேராற்றல், அவருடைய ஒருகையில் தாளம் உளதால் இருக்கிறது என்பதை அறிந்தால் அவர் எத்தகையவர் என்பதை நீ அறிவாய் தோழி என்றார். அதனால் உலகில் உள்ள எல்லா ஒலிகளுமே அவரிடமிருந்துதான் தோன்றுகிறது. நாதத் தத்துவத்தைக் கடந்து நிற்பவன் என்பதால் அயன் திருமால் ஆகியோருக்குத் தலைவன் என்பதும் ஆதி நாதத்திற்கு அப்பாற்பட்டவன் சிவபெருமானே. என்பதும் புலனாகிறது.

வாக்குத் தேவதை கலைமகளின் கணவனாக இருக்கும் நான்முகனுக்கும், அவரைப் பெற்ற திருமாலுக்கும் இந்த வெண்ணீற்றுச் செம்மேனியன் தலைவனாக உள்ளான்; என்பதைத் தலைவி என்னிடம் (தோழியிடம்) கூறினாள் என்று தாயிடம் கூறினாள். இதைத் தோழி அறத்தோடு நிற்றல் என்று இலக்கணம் இயம்புகிறது.

மணிவாசகப்பெருமான் நாயகியாக இருந்து பாடினாலும் அவர் காமவயப்பட்டவர் அல்லர். நாம் ஈடேற நாம் இறைவனை அடைய இவ்வாறு அவரது செயல்களை எண்ணி ஏங்க வேண்டும் என்பதே குறிக்கோள். பத்துப் பாடல்களிலும் இவ்வாறே பாடியிருப்பது நம் நெஞ்சையே உருக்குகிறது. இப்போது அவர் காட்டிய எழிற்கோலத்தை அவர் வாய்மொழியால் அறிவோம்.

“வேதமொழியர் வெண்ணீற்றர் செம்மேனியர்
நாதப் பறையினர் அன்னே! என்னும்
நாதப் பறையினர் நான் முகன் மாலுக்கும்
நாதர்இந் நாதனார் அன்னே!”

என்றும் - பாடினார் உள் நின்று உருக்குவார்.

தாயே உன்மகள் (அடியார்)தன் தலைவனைப் பற்றி மேலும் கூறியதாவது. உணர்ச்சிப்பெருக்கால் உள்ளம் தடுமாறி கண் அஞ்சனத்தர் என்றும் கருணைக்கடல் என்றும் பேசுகிறார். தன்னைப் பற்றிப் பேசும்போது உள்நின்று உருக்குவார் என்கிறார். இதனால் சாதாரண ஆத்துமாவாக இருந்தால் உலகியல்

வழக்கப்படி செயல்படும். இது ஜீவாத்துமாவாக இருப்பதால் கருணைக்கடலா இருப்பவர் என் மனத்தினுள் குடிபுகுந்து கரையச் செய்கிறார் என்றாள். என்னுள்ளத்துள் இருப்பதால் கெடுதல் இல்லாத ஆனந்தக் கண்ணீரைப் பெருகச் செய்து என்னை உய்விக்கிறார் என்றும் கூறுகிறாள். நான் பிறந்ததிலிருந்து எத்தனையோ விதமான மகிழ்ச்சிகளை அனுபவித்து இருக்கிறேன். ஆனால் இதுபோன்ற ஆனந்தத்தை அனுபவித்தது இல்லை. இது எதனால் என்று கேட்கிறாள்.

உலகியல் தலைவர்போல் இவரில்லை. இவர் பேரழகுடைய மணவாளர். என் உள்ளம் நிறைந்தவர். என்னுடனேயே இருக்கிறார். அவருடைய அழகை வார்த்தைகளால் விவரிக்க இயலாது. நிரம்பிய அழகுடையவர். அவரைப் பல பெயர்கள் சொல்லி அழைக்கிறார்கள் எப்படித் தெரியுமா!? தென்னன், பெருந்துறையன், அத்தன், ஆனந்தன், அமுதன், ஏன்? ஆனந்தப் பேருருவன் என்றெல்லாம் கூறப்படுகிறார் என்று கூறினாள் தாயே என்று தோழி பகர்ந்தாள். அவருக்குப் பாம்பு அணிகலனாகும். புலித்தோல் உடை அணிந்தவர். உடல் முழுவதும் வெண்ணீறு அழகு செய்யும். ஒப்பற்ற, எண்ண முடியாத வேடதாரியாக இருந்து என்னை ஆட்கொள்ளுகிறான். உமா மகேஸ்வரியை இடப்பக்கம் கொண்டும், அதே நேரத்தில் துறவுக் கோலத்தையும் மேற்கொண்டு வாசலில் வந்து பிச்சை கேட்டு நின்றார். அவர் போன பின்னும் என்னுளம் அவரை நினைந்து நினைந்து நைகின்றதே ஏன்? சைவ சமயம் போல் வேறு எச்சமயத்திலும் ஆண், பெண் சேர்ந்த கடவுள் கிடையாது. ஆனால் நம் தமிழரோ உமா மகேஸ்வரன், அர்த்தநாரி என்று இருவரையும் இணைத்துக் கூறியுள்ளனர். மணிவாசகர் இதையே தையலோர் பாங்கினர் தாபத வேடத்தர் என்று கூறுகிறார்.

கொன்றை மதியமும் கூவிள மத்தமும்
துன்றிய சென்னியர் அன்னே! என்னும்
துன்றிய சென்னியின் மத்தம் உன் மத்தமே
இன்று எனக்கு ஆனவா என்னே! என்னும்

இறுதியாக இப்பாடலில் மாணிக்கவாசகப் பெருமான் தலைவி அடைந்த நிலையை நம் கண்முன் காட்டுகிறார். வேதமொழியும், வெண்ணீறும், வெள்ளை உடையும், அன்புவடிவும், மாலயன் காணா மாண்பும், பரந்தெழு சிந்தையும், பாய்பரி மேற்காட்சியும், கையில் தாளமும் தையலை ஒரு பாகத்திலும், தவ வேடமும் கொண்ட அவர் தலையில் கொன்றை மலர், பிறைச்சந்திரன், வில்வம், ஊமத்த மலர் போன்றவற்றை அணிந்து வந்தார். அவரைக் கண்டேன். அதுவரை நன்றாக இருந்த யான் இப்பொழுது அவருடைய பைத்தியமாக (உன்மத்தம்) ஆகிவிட்டேன் இது ஏன்? என்றாள் தோழி

மணிவாசகப்பெருமான் அன்னைப் பத்தில் கூறிய கருத்துக்கள் யாவும் நமக்கே. சிவனொடு கலக்க, மறுபிறவி இல்லாதிருக்க இறையுணர்வு பெற்றுப் பேரின்பம் அடைய, உன் மத்தம் (பைத்தியம்) நீங்கி அவனடி சேர இம்மருந்தை (திருவாசகத்தேனை) அருந்துவோம்.

18. குயிற்பத்து

கலைமாமணி டாக்டர். **விக்கிரமன்**

வள்ளலாருக்கு முன்பு கடின சொற்களைக்கொண்ட பாடல்களைத் தமிழில் எழுதி வந்தார்கள். வள்ளலாரின் பக்திப் பாடல்கள் மிக எளிமையாகத் திகழ்ந்தன. அவருக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு தோன்றிய திருவாதவூரர் மாணிக்கம் போன்று ஒளிவீசும் பாடல்களைப் பாடினதனால், வள்ளலார் அவர் வழியில், அரும்பாக்களை அருளினார். திரு அருட்பாவுக்கு வழி காட்டியது திருவாசகம்.

'அம்பலத்தரசே அருமருந்தே' என்று ஆனந்தக் கூத்தாடும் நடராசப்பிரான், தமிழுக்கு இரு ஒப்பற்ற செல்வங்கள் தோன்ற அருளினார். வள்ளலாருக்கு மாணிக்கவாசகரின் திருவாசகத்தின் மீது எவ்வளவு பற்று, மரியாதை. திருவாசகத்தேன் தெவிட்டாத இன்பத்தை வள்ளலாருக்கு ஊட்டியது. திருவாதவூராரின் பாடல்களில் வள்ளலார் இரண்டறக் கலந்து விட்டார். கருப்பஞ்சாற்றில், தேன் கலந்து பால் கலந்து செழுங்கனிச் சுவை கலந்தால் எவ்வாறு இருக்கும் என்பதை ருசித்தறியோம். ஆனால், வள்ளலார் அந்த அமர அமுதத்தைச் சுவைத்து இன்பமுற்றிருப்பதிலிருந்து, வள்ளலார் உணர்ந்த அமுதருசியை நாமும் சுவைக்கிறோம்.

"வான் கலந்த மாணிக்க வாசக
        நின் வாசகத்தை
நான் கலந்து பாடுங்கால்
        நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன் கலந்து பால் கலந்து
        செழுங்கனித் தீஞ் சுவைகலந்தென்
ஊன் கலந்த உயிர் கலந்து
        உவட்டாமல் இனிப்பதுவே"

மேல் நாட்டுப் பாதிரியார் உட்பட திருவாசகத்தேனில் திளைத்து உருகியிருக்கின்றனர்.

'திருவாசகத்துக்கு உருகார் ஒரு வாசகத்துக்கும் உருகார்' என்பது எவ்வளவு பெரிய உண்மை.

திருவாசகத் தேனமுதத்தில் திளைக்கும் முழு வாய்ப்பு நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு எனக்கு ஏற்பட்டது.

உரையாசிரியரைத் தேடியலையாமலேயே மாணிக்கவாசகரின் தேவ அமுதத்தை உணரக் கூடிய எளிமை திருவாசகத்துக்கு உண்டு என்பதற்கு நானே சான்று.

இறைவன் திருவருளைப்பெற, பற்றிக்கொள்ளப் பாடல்களாக எவ்வளவு தலைப்புகள்!

குயிலைப் பார்த்துக் கூறுவது போன்ற அகத்துறைப் பாடல்கள் நிறைந்த குயிற்பத்துப் பாடல்கள் இறைவனைக் காதலனாகக் கொண்டு தன்னைக் காதலியாகப் பாவித்து பாடப்பட்டவை.

சின்னஞ் சிறுகதையைக் காணலாம். மாணிக்கவாசகர் பெண்ணாக மாறி விடுகிறார். சரியான பருவத்தில் அவளுக்குக் காதல் உணர்வு ஏற்படுகிறது. அவள் காதலன் மிக உயர்ந்தவன். அவன்மீது அவள் உயிரையே வைத்திருக்கிறாள். பலமுறை சந்தித்திருக்கிறான். சந்திக்காமலிருக்கும் போது ஏற்படும் ஏக்கத்தைவிட சந்தித்துப் பிரியும் போது ஏற்படும் ஏக்கம், துயரம் ஆவல், வேதனை சொல்லுந் தரமன்று. சந்திப்பு, பிரிவு இவற்றைக் காதல் வயப்பட்டவர்களால்தான், உணர்ந்தவர்களால்தான் துல்லியமாக வெளிப்படுத்தமுடியும். ஒரு பெண்ணுக்குத்தான் அந்த உணர்வு புரியும். பிரிவாற்றாமை எனும் துயர நிலையை மனத்துக்குள்ளேயே அடக்கிக் கொள்ள முடியாது. மகிழ்ச்சியைவிடத் துக்கத்தை வெளிப்படுத்தினால்தான் இதயச்சுமை குறையும். தோழியிடம் அவ்வப்போது மனநிலையை வெளிப்படுத்துவதில் ஒரு சுகம் இருக்கும்.

இந்தச் சிறு கதைக் காவியத்தில் தலைவியின் காதலன் யார் தெரியுமா? தென்னாடுடைய சிவன்!

ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றுமில்லாதவன் சிவன். ஆனால் சிவன் திருவிளையாடல்கள் கணக்கிலடங்கா. தென்னிலங்கை அழகமர் மண்டோதரிக்குப் பேரின்பமளித்தவன். திருஉத்தரகோசமங்கை எனும் தலத்தில் இருந்த நாயகன். அவன் குதிரை மீதேறி கம்பீரமாக வருவான். நரியைப் பரியாக்கி பரியை நரியாக்கிய வன்னல்லவா?

சேர, சோழ, பாண்டிய, மூவரசர்களும் போற்றும் உயர்ந்த மனிதன்.

இந்தச் சின்னஞ்சிறுகதையின் காதலன் ஒப்புயர்வற்றவன் அவன் சிவபெருமான்! சிவனைக் காதலிக்கும் பாக்கியசாலி - வேறு யாருமல்லர் - அவரும் மிகப் பெரியவர். அரிமர்த்தன பாண்டியனுக்கு அமைச்சராக இருந்த திருவாதவூரர். சிவபெருமான் மீது தனியாக பக்தி - காதலாகியது. காதலியாகவும் மாறிவிட்டார். காதல் வளர்ந்தது ஒரு கணங்கூட ஆத்மாவைவிட்டு அகலக் கூடாத காதல். சிறு பிரிவு நேர்ந்துவிட்டது. தாங்கமுடியுமா ? மனநிலையை எடுத்துக்கூறத் தோழியை தூது விட்டார். தோழி யார் தெரியுமா ? குயில்! இன்னிசை பரப்பும் குயில்.

புள்ளினங்களுக்குள் மிகவும் பாராட்டப் பெறுவது குயில். இனிய குரலுடையது குயில். பார்க்க அழகாயில்லாவிட்டாலும் அது இசைப்பது மெய்மறக்கச் செய்யும். எந்த புள்ளினத்துக்கும் இல்லாத பெரும் பேறு ! தோழியாக மாறிய குயிலைத் தலைவி புகழ்கிறார்.

கீதமினிய குயிலே ! நீல உருவுடைய குயிலே ! தேன்பழச் சோலை பயிலும் சிறுகுயிலே ! சுந்தரத்தின்பக் குயிலே ! சோலைக் குயிலே ! என்று புகழ்ந்து குயிலை அழைப்பது எதற்காக ?

"என் நெஞ்சைக் கவர்ந்தவனோ சாதாரணமானவன் அல்லன்"

அவன் புகழ், பெருமை கேட்கிறாயா ? - சொல்லட்டுமா எங்கள் பெருமான் பாதமிரண்டும் வினவினால் பாதாளம் ஏழினுக்கப்பால்! சோதி மணிமுடியைப் பற்றிச் சொல்லுவ தென்றால் அது சொல்லின் அளவையும் கடந்து சராசரங்களையும் கடந்து நிற்கும் தன்மை வாய்ந்தது. சுருக்கமாகக் கூறுவதென்றால் முதலும் முடிவும் இல்லாதவன். இப்படித் தொடங்குகிறது. தலைவனின் பெருமை. குயிலைப் பார்த்து காதலியாக மாறிய மாணிக்கவாசகர் தலைவன் பெருமையை சிறப்பைப் பத்துப் பாடல்களில் விவரிக்கிறார்.

முதற்பாடல் :

"கீதமினிய குயிலே கேட்டியேல் எங்கள் பெருமான்
பாதமிரண்டும் வினவில் பாதாளம் ஏழினுக்கப்பால்
சோதிமணிமுடி சொல்லிற் சொல்லிறந்து நின்றதொமை
ஆதி ஞானம் ஒன்றும் இல்லான் அந்தமில்லான்
அத்தகையவன் என்னிடம் வர இனிய
குரலால் கூவுவாய்"

குயில் பத்து - பத்துப் பாடல்களும் வர்ணனைச் சிறப்பு வாய்ந்தவை. சிவபெருமானின் உயர் குணங்களையும், பெருமையையும் குயிலுக்குச் சொல்வதுபோல் தலைவன் சிவனைப் புகழ்ந்து கூறுபவை.

தூதுவராகச் செல்லும் குயிலின் சிறப்பை, வர்ணிக்க மாணிக்கவாசகரைத் தவிர மற்றவரால் இயலாது. யாரிடம் தூது செல்லவேண்டும் என்று சொல்கிறாரோ அந்தத் தலைவர் பெருமையை வர்ணிக்கவும் வார்த்தைகள் போதா.

உண்மையாக மாணிக்க வாசகர் பெண்ணாக மாறி விட்டாரா?

ஆத்ம இரக்கம் என்ற வகையிலுள்ள பாடல்கள். ஆத்மா இறைவனோடு சேராதிருக்கும் நிலையினை எண்ணி அதற்காக இரக்கப்பட்டுப் பாடுவது.

மிக எளிமையாகச் சொல்ல வேண்டுமானால் தலைவியைவிட்டுப் பிரிந்து சென்றுவிட்ட தலைவனை எண்ணி வருத்தமடைந்த தலைவி மரக்கிளையில் அமர்ந்திருந்த குயிலைப் பார்த்து 'ஏ! குயிலே என் தலைவன் மீண்டும் என்னை வந்து சேருமாறு கூவ வேண்டும்' என்று கேட்பது போன்ற பாடல்கள்.

தத்துவார்த்தங்களை விளக்க இங்கே நான் வரவில்லை பத்துப் பாடல்களிலுமுள்ள எளிமை, சிவன் பெருமையைக் கூறும் திறமை, தமிழ் எப்படியெல்லாம் கொஞ்சி விளையாடுகிறது என்பனவற்றை எளிதில் படித்துப் புரிந்து கொண்டு மகிழக் கூடிய பாடல்கள்.

தில்லைச்சிற்றம்பலத்தில் பாடப்பட்டது. தேவர் உலகை விட்டு மண்ணுலக மாந்தரையே விரும்பி ஆட் கொண்ட தேவன்

சிவபெருமான் என்று மாணிக்கவாசகர் புகழ்கிறார்.

கடவுள் மனிதனுக்குக் கூறியது கீதை. மனிதன் மனிதனுக்குக் கூறியது திருக்குறள், ஓர் எளிய மனிதன் இறைவனுக்குக் கூறியது திருவாசகம்.

இன்னும் பாடல்களிலே - சிவபெருமானிடம் தூது சென்றால் என்னென்ன பரிசுகள் தருவான் என்று ஒவ்வொரு பாடலிலும் பட்டியலிடுவது குயிலுக்குக் கிடைத்த பெரும்பேறு.

தமிழுக்குக் கிடைத்த ஒப்பற்ற மாணிக்கம் குயிற்பத்து.

19. திருத்தசாங்கம்

- புலவர். **முத்துசண்முகம்**

"செய்யவார் சடைத் தெய்வ சிகாமணி
பாதம் போற்றும் வாதவூ ரன்ப
பாவெனப் படுவதுன் பாட்டு
பூவெனப் படுவது பொறிவாழ் பூவே"

எனக் கற்பனைக் களஞ்சியம் சிவப்பிரகாச சுவாமிகள் கூறுவதுபோல் மாமணியாம் மாணிக்க வாசகர் மலர்ந்த திருமறையில் திருத்தசாங்கம் சிறப்புடையதாகும்.

பத்து நேரிசை வெண்பாக்களில் சிவபெருமானுக்குரிய பத்து அடையாளச் சிறப்புகளை எடுத்து இயம்புகிறது.

தன்னைக் குருவாக வந்து ஆட்கொண்டருளிய சிவபெருமானை, பஞ்சபூதங்களாலான உலகில் ஓரறிவு முதல் ஆறறிவு வரை உள்ள உயிர்களை ஆண்டருளுவதால் சிவபுரத்து அரசனாக மாணிக்க வாசகர் நினைத்தார். ஆகவே அரசருக்குரிய பத்து அங்கங்களாகிய பெயர், நாடு, ஊர், ஆறு, மலை, ஊர்தி, படை, பறை, தார், கொடி, ஆகியவற்றால் பெருமை பேசுகிறார். தேவர் கோனாய் வந்து தன்னை ஆட்கொண்ட சிவபெருமா்னுக்குக் கூறும் தசாங்கம் தெய்வீகச் சிறப்புடையதாகும் என்பதை அவர் கூறும் உறுப்புகளால் அறியலாம். அரசற்குரிய சிறப்புகளைத் தெய்வத்திற்கும் செய்வது என்ற வழிபாட்டு மரபு, உலகில் ஒவ்வொரு பாகத்திலும் ஒவ்வொரு காலத்திலும் பரவி இருந்தது. இந்த வழிபாட்டு மரபை 'தேவராஜ' மரபு என வழங்குவர். அம்மரபோடு ஒத்தது தசாங்கம் பாடுதல்

முன்னரும் 'கீர்த்தித் திருவகவலில் 104 முதல் 20 அடிகளில் தசாங்கம் கூறப்பெற்றுள்ளது.

தசாங்கத்தில் தலைவியின் வினாவிற்குக் கிளி விடை கூறுவது போலவோ, தலைவி கிளிக்கு வினாவிடை முகமாக அறிவுறுத்துவது போலவோ கொள்ளும்படி அமைந்துள்ளது.

முன் பதிகத்தில் குயிலை அழகாகப் பாராட்டியது போலவே இப்பதிகத்தில் அவ்வளவு அழகாய்க் கிளி பாராட்டப் பெற்றுள்ளது.

குயிற்பத்து என்பது போல் கிளிப்பத்து என்று கூறாமல் சிவபிரான் அடிமையாய்க் கொண்ட முறையின் சிறப்பு நோக்கித் தசாங்கம் எனப் பெயரிட்டார் என கருதலாம்.

இப்பதிகத்தில் குருமணியான சிவபிரானின் பத்துப் பெருமைகளை எடுத்துப் போற்றுகிறார்.

பெயர் : எங்களுடைய திருப்பெருந்துறைக் கோமானது சிறப்புப் பொருந்திய திருப்பெயர்களைத் 'திரு ஆரூரனே !' செம்மை ஆகிய பெருமானே எனவும், வெண்டாமரை மலரவனான பிரமனும், பாற்கடலில் துயில்பவனாகிய திருமாலும் போற்றிக் கூறுவது போல், எம்பெருமானே தேவர் பிரான், என ஆராய்ந்து கிளியே சொல்வாயாக. தேவர் பிரான் மகாதேவன் ஆவர். இதற்கு மேல் உயர்வுப்பெயர் இல்லை என்பதாம்.

நாடு : ஏழு உலகத்திற்கும் நாதனாய் விளங்குபவனும் நம்மை அடிமையாக உடையவனுமான பெருமான் நாடு கூறுவாய்.

எம் காதலை உடையவரான அவருக்கு அன்பினாலே ஆட்கொண்டு மீளவும் பிறவியை அடையாது அருள் புரிகின்ற நாடாக இருப்பது, எக்காலத்தும் தென்பாண்டி நாடேயாகும்.

அகிலாண்டமும் அவனுடைய நாடு ஆகும். பக்தியின் பான்மையினால் அவருக்குச் சிறப்பான இடம் தருகிறது. மன்னுமா மகேந்திரம் அதனிற் சொன்ன ஆகமம் தோற்றுவித்து அருளியும், என்றபடி சிவபிரான் அறமுதலாகிய உறுதிப்பொருள்களை உரைத்தருளிய சிறப்பு, தென்பாண்டி நாட்டிற்கும் உரியதாகும். மேலும் தடாதகைப் பிராட்டியை மணந்து பாண்டிப்பிரானாய் இருந்த திருவிளையாடலை உளங்கண்டு உரைத்ததுமாகும்.

'தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி'

என்பதால் தென்பாண்டி நாட்டுச் சிறப்பறியலாம்.

ஊர் : "பத்தரெலாம் பார்மேற் சிவபுரம் போற் கொண்டாடும் உத்தரகோச மங்கை ஊர்"

பக்தர்கள் எல்லாம் சீரர்ட்டி உலகத்தினிடத்தே ஒரு சிவபுரம் எனப் பாராட்டிக் கொண்டாடுகின்ற சிறப்பினை உடைய உத்தர கோசமங்கை என்கின்ற ஊரேயாகும் என்பதனை அறிவாயாக .

"ஏதவன் ஊர்" எனப் பாடுகின்ற மணிவாசகர் உத்தர கோசமங்கையைச் சிறப்பான ஊராகக் கூறுகின்றார்.

குருமணியின் திருவுருக்காணாது கலங்கிய அவர், "நீத்தல் விண்ணப்பம்" பாடி ஆங்கே உருக் கண்டு மகிழ்ந்தார்.

திருப்பொன்னூசல் பதிகத்தில் "நாய்.அடியேற்கு ஊராகத் தந்தருளும் உத்தரகோச மங்கை", நமை ஆண்டான் சீலந்திகழும் திருஉத்தர கோசமங்கை எனப் போற்றிப் புகழ்கிறார். திருப்பள்ளியெழுச்சியில் "மதுவளர் பொழில் திரு உத்தர கோச மங்கையுள்ளாய்", எனப் புகழ்கிறார்.

குரு மணி ஆணைப்படி உத்தரகோச மங்கையில் தங்கித் திருவருள் பெற்ற சிறப்புக்கருதி உத்தரகோசமங்கையை ஊராகக் கொள்கின்றார்.

தத்துவப்படி பத்தர்களின் உள்ளமே அவருடைய ஊர் ஆகிறது. மாணிக்கவாசகரின் உள்ளம் நிறைந்ததால் உருகி இவ்வாறு உரைக்கிறார்.

ஆறு : "வான் வந்த சிந்தை மலங்கழுவ வந்திழியும்
ஆனந்தங் காணுடையான் ஆறு"

நம்முடைய சிந்தை இடத்தே வந்து சேர்ந்த அப்பனாகிய திருப்பெருந்துறையானுடைய ஆறு யாதெனில் பெருமையமைந்த, ஆணவ மலத்தினைக் கழுவிப் போக்குவதற்காக வந்திறங்கும் ஆனந்த வெள்ளமே சிவனுக்குரிய ஆறாகும் என அறிவாய்

சாதாரண நிலையில் தூலமாகப் பார்க்கும் பொழுது ஆறு கங்கையாகும். அதனால் கங்காதரன் எனும் பெயர் வந்தது. ஆனந்தமே இறைவனுக்கு நதியாகிறது. சிவானந்தத்தில் திளைப்பவர் சித்தம் சுத்தியடைகிறது. அஞ்ஞானம் அகல்கிறது. அஞ்ஞான இருள் நீக்கும் ஆனந்த வெள்ளமாக விளங்குவதே சிவபெருமானின் ஆறு ஆகும்.

மலை : "நெஞ்சத்து , இருளகல வாள்வீசி இன்பமரு முத்தி
அருளுமலை என்பது காண் ஆய்ந்து.

நெஞ்சத்தின் அறியாமையாகிய இருளானது அகலுமாறு, தன் ஞான ஒளியினைப் பரப்பி, இன்பம் பொருந்திய முக்தியாகிய பேரின்பத்தினை அருளுகின்ற மலை என அறிவாய்.

இங்கு மகேந்திர மலையாகும். மானுட அமைப்பில் சுழுமுனைநாடி என்னும் மகாமேரு அவருடைய மலையாகிறது.

ஊர்தி :

"எப்போதும் தேன் புரையுஞ் சிந்தையராய்த்
தெய்வப் பெண்ணேத் திசைப்ப
வான்புரவி யூரும் மகிழ்ந்து"

எப்போதும் தேனைப் போன்று இனிக்கின்ற உள்ளத்தினராய்த் தெய்வப் பெண்கள் வாழ்த்திப் பாடியிருப்பவனுமாகிய புரவியின் மீதிலேயே அவன் மகிழ்வுடன் ஊர்ந்து வருபவன்.

சிவனுக்குக் காளையே வாகனமாகும் இங்கு வான் புரவியூர்தி என்பது மதுரையில் குதிரைச் சேவகனாய் வந்து ஆண்டருளிய தன்மையால் வான்புரவி எனக்கூறியதாகக் கருதலாம்.

தத்துவப்படி பரசிவம் நிர்குணப் பிரமமாயிருக்கும்போது அவருக்கு வாகனம் சித் ஆகாயம். சகுணப் பிரமாயிருக்கும் போது அவர் காளை வாகனர். ஜீவர்கள் அனைவரும் வாகனமாகின்றனர் என்பது சித்பவா்னந்தர் கருத்து.

படை : -ஏற்றார்

"அழுக்கடையா நெஞ்சுருக மும்மலங்கள் பாயும்
கழுக்கடைகாண் கைக்கொள் படை"

அவனை எதிர் நின்று நோக்குபவர்களுடைய மலமானது பற்றிச் சேராத, உள்ளத்திலுள்ள மும்முலங்களையும் பாய்ந்து அழிக்கின்ற சூலப்படையே அவன்கைக் கொள்ளும் படையாகும்.

திரிசூலமே சிவனுடைய ஆயுதமாகும். அது ஞானத்தின் சின்னம். அஞ்ஞானத்தில் தோன்றுகின்ற ஆணவம், கன்மம், மாயை என்பன மும்மலங்கள். மனிதனின் உடலில் உறைகின்ற ஆன்மா இயல்பாகத் தூய்மையானது. ஆனால் தூய்மையைப் பாழ்படுத்துபவை இம்மும்மலங்கள். மும்மலங்களை நீக்கி நற்கதியைச் சேர்க்க திரிசூலமாகிய படையைக் கைக்கொண்டுள்ளார், அறிவாயாக.

முரசு : - அன்பால்

"பிறவிப் பகை கலங்கப் பேரின்பத் தோங்கும்
பருமிக்க நாதப் படை"

உயிர்கள் மீதுள்ள அன்பினாலே பிறவியாகிய உயிர்ப் பகையானது கலங்கி நீங்கும்படியாகப் பேரானந்தத்தோடு ஓங்குகின்ற பெருமை மிகுந்த நாதமாகிய பறையாகும்.

நாத தத்துவமாகிய ஓங்கார தத்துவமே சிவனாரது முரசு. உடுக்கை அல்லது "டமரு" புறச்சின்னமாக ஆகிறது.

மாலை :

"நாளும் அணுகா வண்ணம் நாயேனை தீயவினை ஆளுடையான்
தாளி அறுகுமாம் உவந்த தார்"

கொடிய வினைப் பயனானது எந்நாளும் என்னை வந்து நெருங்காதபடிக்கு நாயினைப் போன்றேனையும் ஆட்கொண்டவர் விரும்பி அணிந்த மாலையானது தாளி அறுகுமாம்.

தாளி அறுகு என்பது கணுக்களில் கிளைக்கும் இயல்புடைய அறுகு.

உண்மையில் உலக தத்துவங்கள் எல்லாம் சேர்ந்தது சிவனது மாலையாகும்.

கொடி :

"ஏதிலார் துண் என்ன மேல் விளங்கி ஏர்காட்டும்
கோதிலா ஏறு ஆம் கொடி"

மிகவும் பகை கொண்டு வந்தாரும் அஞ்சும் படியாக அவருக்கு மேலாக விளங்கித் தோன்றி அழகினைச் செய்கின்ற குற்ற மில்லாத இடபக் கொடியாகும்.

சிவனுக்கு உரியது இடபமாகிய காளைக் கொடி. அந்தந்தத் தெய்வத்திற்கு உரிய ஊர்தி கொடியில் அமைவது மரபு

சிவனைப் போற்றாதவருக்கு ஏமாற்றத்தை உண்டு பண்ணும் என்பது பொருள்.

இவ்வாறு கிளியிடம் விடை கூறுவதாக அமைந்தது இப்பதிகம்.

அடிமை கொண்ட முறையைத் தசாங்கத்தால் (பத்து அங்கங்கள்) சிறக்கக் கூறி வீடு அருள வேண்டுகிறார் மணிவாசகப் பெருமான்.

20. திருப்பள்ளி எழுச்சி

ஆய்வுரைஞர். **சோ. முத்தமிழ்ச்செல்வன்**

பக்திப் புரட்சியில் எட்டாவது திருமுறையாக அமையப் பெறுவது மாணிக்கவாசகரின் திருவாசகமாகும். அதில் இருபதாவது பகுதியாக திருப்பள்ளி எழுச்சி இடம் பெற்றுள்ளது. திருப்பள்ளி எழுச்சியினை சேக்கிழார் பெருமான்.

"கறவிந்தார் அகத்திருளும் திறை கங்குற் புறத்திருளும்
மாறவருந் திருப்பள்ளி எழுச்சி எனில்"

எனப் பெரியபுராணத்தில் போற்றுகின்றார். இத்தகைய சிறப்புமிகு திருப்பள்ளி எழுச்சியினை மாணிக்கவாசப் பெருமான் எங்ஙனம் அமைத்து இறைவனைப் போற்றிப் பரவுகின்றார் என்பதனை இக்கட்டுரை சுட்டுகின்றது.

திரோதான சுத்தி ;

திருப்பள்ளி எழுச்சி தலைப்பாக அமையப் பெறுவது திரோதானசுத்தி என்பதாகும். இதற்கு பல்வேறு அறிஞர்களும் பற்பல கருத்துக்களைக் கூறுகின்றனர். "இறைவனுடைய பஞ்ச கிருதயங்களுள் திரோதானம் என்பது ஒன்று. மறைத்தல் என அது பொருள்படுகிறது. சொருப ஞானத்தைத் தமோகுணம் மறைத்திருக்கிறது. அதிகாலையில் எழுந்து திருப்பள்ளிஎழுச்சி வாயிலாக இறைவணக்கம் செய்து வருகின்றவர்களுக்குத் தமோகுணம் தெளிவடைகிறது. அச்செயல் " திரோதான சுத்தி என்னும் தலைப்புப் பெறுகிறது " என இதற்கு தமது திருவாசக உரையில் ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் விளக்கம் கூறுவர். அறிஞர் க. வெள்ளைவாரணம், "திரோதானசுத்தி" என்னும் இத்தொடருக்கு ஏகமாகிய திரோதாயி மறைப்பான மலம் நீங்குதல்" எனப் பொருள் உரைப்பார்" என்று பன்னிரு திருமுறை எனும் நூலில் சுட்டுவார். இக்கருத்துக்களின் வழி, திரோதான சுத்தி என்பது 'மறைப்பு நீக்கம் எனும் பொருள் பெறப் பெறுகின்றது.

திருப்பள்ளி எழுச்சி- விளக்கம் ;

திருப்பள்ளிஎழுச்சி என்னும் தொடர் திரு+ப்ள்ளி+எழுச்சி எனப் பிரியும். திரு என்னும் சொல் சிறப்புப் பொருளைக் காட்டி நிற்கின்றது. பள்ளி என்னும் சொல் படுக்கையைக் குறிக்கின்றது. எழுச்சி எனும் சொல் எழுந்திருத்தலைச் சுட்டுகின்றது. பள்ளி என்பது எழுச்சிக்கு அடையாக நிற்கின்றது.அதாவது படுக்கையை விட்டு எழுந்திருத்தல் என்னும்பொருளைத் தருகின்றது. ஒவ்வொருபாடலின் இறுதி அடியிலும் "பள்ளி எழுந்தருளாயே" என்று வேண்டுதலால் இது திருப்பள்ளி எழுச்சி என்னும் பெயர் பெறலாயிற்று.

திருப்பள்ளி எழுச்சியின் முந்திய வடிவம்;

சங்க காலத்தில் மன்னரை அதிகாலையில் துயில் எழுப்புவதற்குக் பாடப்பெறும் இசைப்பாட்டு " துயிலெடைநிலை " என வழங்கப் பெற்றது. இதனைத் தொல்காப்பியமும்,

"தாவி னல்லிசை கருதிய கிடந்தோர்க்குச்
சூதர் ஏத்திய துயிலெடை நிலையும் "

எனும்நூற்பாவால் சுட்டும். இத் "துயிலெடை நிலை" என்பதற்கு பன்னிரு பாட்டியல்

"கண்படை மன்னவா முன்னர்த் தண்பத
விடியல் எல்லை இயல்புறச் சொல்லித்
தந்த திறையரும் தாராத் திறையரும்
ஏத்தி நின்மொழி கேட்டினி தியங்க
வேண்டினர் இத்துயில் எழுகென விளம்பின்
அதுவே மன்னவர் துயிலெடை நிலையே"

என மன்னனின் துயிலெடை நிலைக்கு இலக்கணம் வகுத்துக் காட்டும்.

இவ்வாறு ஒரு காலகட்டத்தில் மன்னர்களைப் பாடிய இலக்கிய வகைமையான பிறிதொரு காலத்தில் இறைவனின் புகழையும், பெருமையையும் போற்றும் விதமாகவும், அவனைத்

துயிலினின்றும் எழுப்பும் விதமாகவும் பெயர் மாற்றம் பெற்று திருப்பள்ளி எழுச்சி என வழங்கப் பெற்றது. இக்கருத்தையே அறிஞர் மு. வரதராசனாரும், "சங்க காலத்தில் அந்தப் பாடல் மரபு துயிலெடைநிலை" என்று கூறப்பெற்றது. இடைக் காலத்தில் ஆழ்வார் நாயன்மார்களின் பக்தியியக்கத்தின் போது, அது திருப்பள்ளியெழுச்சி என்ற பெயரால் வழங்கியது" எனக் கூறுவர்.

இன்றைய காலகட்டத்தில் மன்னர்களைப் பாடிய "துயிலெடைநிலை" நூல்கள் காணப் பெறவில்லை. கடவுளரைப் பற்றிப் பாடப்பெற்ற திருவாசகத்திலும், நாலாயிரத்திவ்வியப் பிரபந்தத்திலும் காணப்படும் பாடல்களையும், பிற்காலத்தில் எழுந்த திருப்பள்ளி எழுச்சிகளையும் துயிலெடை நிலையின் எச்சங்களாகவே அறிஞர் உலகம் போற்றிவரக் காணலாம்.

அதிகாலையின் இயல்புகள் ;

மாணிக்கவாசகர் சிவபெருமானை வைகறையில் துயில் எழுப்புகின்றார். அவ்வாறு துயில் எழுப்பும் போது.

"அருணன் இந் திரன்திசை அணுகினன் இருள்போய்
அகன்றது, உதயம்நின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணல் அங் கண்ணாம்
திரள்நிரை யறுபதம் முரல்வன " (திருப்பள்ளிஎழுச்சி-2)
என்றும்.

அழகிய குயில்கள் கூவிவிட்டன; கோழிச்சேவல்களும் கூவி விட்டன; குருகுகள் முதலான பிற பறவையினங்களும் ஒலித்து விட்டன; சங்குகளும் சந்தித்தன; நட்சத்திர வெளிச்சங்களும் வானில் மறைந்தன; சூரியனின் ஒளி தோன்றிவிட்டது " *(திருப்பள்ளிஎழுச்சி-3)* என்றும் வைகறைப் பொழுதின் இயல்புகளைச் சுட்டிச் செல்கிறார்.

பப்புஅற வந்த அடியார்கள் ;

மாணிக்கவாசகர் விடியற்காலையில் சிவபெருமானைத் துயில் எழுப்புகின்றார். அப்போது, சிவபெருமானின் அருளைப்

பெற வேண்டிவந்திருக்கும் அடியார்களின் பட்டியலைத் தமது திருப்பள்ளி எழுச்சியில்,

"இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சல் கூப்பினர் ஒரு பால்"

என்றும்

மன விரிவு நீங்க பற்றுவிட்ட நிலையிலிருந்து மெய்யுணரும் உனது அடியார்கள், உன்மேல் செலுத்துகின்ற அன்பினால் பந்த பாசத்தை விட்டு விட்டார்கள். அவர்கள் எல்லோரும் மனித இயற்கையில், அன்பு நீர் பெருக்குந் தலைவியர்போல் நின்னைத் தொழுகின்றார்கள், என்றும் போற்றுகின்ற விதம் உள்ளத்தை உருக்கி ஊனுடம்பை நெகிழச் செய்கின்றது.

அடியாரை ஆற்றுப்படுத்தும் விதம் ;

ஆற்றுப்படுத்துதல் என்பது தமிழில் தொன்றுதொட்டு வரும் மரபாகும். ஆற்றுப்படுத்தல் என்பது நெறிப்படுத்துதல், வழிப்படுத்துதல் எனும் பொருள்களில் வரலாம். இங்கு அடியாரை நெறிப்படுத்தவும், வழிப்படுத்தவும் மாணிக்கவாசகர் தம் திருப்பள்ளி எழுச்சிப் பாடலில், இச்சொற்களைப் பயன்படுத்துகின்றார்.

"அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ளவல்லாய்" *(திருப்பள்ளி-10)*

"இப்பிறப் பறுத்தெமை ஆண்டருள்புரியும் எம்பொருமான்" *(திருப்பள்ளி-8)*

"எங்கள் முன்வந்து ஏதங்கள் அறுத்தெம்மை
ஆண்டருள் புரியும் எம்பொருமான்" (திருப்பள்ளி-5)
"எது எமைப் பணிகொளு மாறது கேட்போம்
எம்பொருமான் பள்ளி எழுந்தருளாயே" (திருப்பள்ளி-7)
"போற்றி என் வாழ்முத லாகிய பொருளே " (திருப்பள்ளி-1)
"கண்ணகத்தே நின்று களிதரு தேனே" (திருப்பள்ளி-9)
"கேட்டறியோம் உனைக் கண்டறிவானே" (திருப்பள்ளி-5)
"......பூங்கழற் கிணைதுணை மலர்கொண்
டேற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில் நகை கொண்டுநின் திருவடி தொழுதோம்" (திருப்பள்ளி-9)

இவ்வாறு அடியவர்கள் நெறிப்படவும், வழிப்படவும் வேண்டுகின்றார்.

வேண்டுதலும் ஆட்கொள்ளுதலும்;

மாணிக்கவாசகர் தமது திருப்பள்ளி எழுச்சியில் இறைவன் எவ்வாறெல்லாம் தம் கண்முன் காட்சியளித்தார் என்பதையும் , அவ்வாறு காட்சியளித்துத் தன்னையும் இம்மானிடப் பிறவியினின்று பற்று அறுத்து ஆட்கொள்ள வேண்டும் என்றும் தனது வேட்கையை திருப்புலம்பலாக வெளிப்படுத்துகின்றார்.

"....... விருப்பொடு நமக்குத்
தேவநற் செறிகழல் தாளிணைக் காட்டாய்" (திருப்பள்ளி-3)

எனும் இப்பாடலில் உனது திருவடியை நமக்குக் காட்ட வேண்டும் என வேண்டுகின்றார்.

"இது அவன் திருவுரு இவனவன் எனவே எங்களை
ஆண்டுகொண்டிங் கெழுந்தருளும்" (திருப்பள்ளி-7)

எனும் இப்பாடலடிகளில் உனது திருவுருவத்துடன் தோன்றி எம்மை நீ ஆட்கொள்ள வேண்டும் என வேண்டுகின்றார்.

"பந்தனை விரலியும் நீயும் நின் அடியார்
பழங்குடில் தொறும் எழுந் தருளிய பரனே "(திருப்பள்ளி-8)

எனும் இப்பாடலடிகளில் நீயும் உன் துணையாகிய திருவருட்சக்தியும் எங்கள் அடியாருக்கு அருள்புரிந்து ஆட்கொண்டு காட்சி தந்தாய் .

"செந்தழல் புரைதிரு மேனியுங் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலுங் காட்டி
அந்தண னாவதுங் காட்டிவந் தாண்டாய் "(திருப்பள்ளி-8)

இவ்வடிகளில் தன்னை இறைவன் எவ்வாறெல்லாம ஆட்கொண்டான் என்பது விளக்கப்பெறும்.

"....... நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்"
"அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய் "(திருப்பள்ளி-10)

எனும் அடிகளில் சிவபெருமான் பூலோகத்தில் பிறந்து உயிர்களை ஆட்கொள்ள வல்லவன் என்ற முறைமை கூறப்பெறுகின்றது. .

இவ்வாறு இறைவன் அடியவர்களையும், தம்மையும் ஆட்கொண்ட ·முறைமைகளையும், வேண்டுதல்களையும் விளக்குகின்றார்.

உவமைகள் :

மாணிக்கவாசகர் தமது திருப்பள்ளி எழுச்சியில் எந்தெந்த வகைகளில் உவமையைக் கையாண்டுள்ளார் என்பதனை அவர் பாடல் வழிகளின் வழி அறிய முடிகிறது.

"நின் திருமுகத் தெமக்கருள் மலரும்" (திருப்=1)

இவ்வ்டியில் புறவிருள் நீங்கக் கதிரவன் விரிதல் போல, அகவிருள் நீங்கத் திருமுகத்தே அருள் மலர்தல் என இருள் பற்றிய உவமை கூறப்பெற்றுள்ளது.

"அதுபழச் சுவையென அமுதென அறிதற்
கரிதென எளிதென அமரரும் அறியார்" (திருப்=7)

இவ்வடிகளில், கனியின் சுவைபோன்றும், அமுதம் போன்றும், அது அறிவ்தற்கு முடியாதெனவும் அறிதற்கு

எளிதாமெனவும் வாதித்துத் தேவர்களும் அதனை அறியா நிலையில் இருப்பர் என இறைவனின் இயல்புகளை உவமை வாயிலாக விளக்குகின்றார்.

"செந்தழல் புரைதிரு மேனி"

எனும் இவ்வடியில் சிவபெருமான் மேனிக்கு செந்நெருப்பு உவமையாகின்றது.

இவ்வாறு பல்வேறு உவமைகளை மாணிக்கவாசகர் தம் திருப்பள்ளிஎழுச்சியில் சுட்டியுள்ளார்.

பிற்காலத் திருப்பள்ளி எழுச்சிகள் :

தொண்டரடிப் பொடியாழ்வாரின் திருமால் திருப்பள்ளி எழுச்சி, தத்துவராயரால் பாடப்பெற்ற அருள் திருப்பள்ளி எழுச்சி, சிவப்பிரகாச சுவாமிகள் திருப்பள்ளி எழுச்சி, சொருபானந்த சுவாமிகள் திருப்பள்ளி எழுச்சி, தத்துவப்பிரகாச நாயனார் திருப்பள்ளி எழுச்சி இவைகள் ஒவ்வொன்றும் பத்துப்பத்துப் பாடல்களைக் கொண்டே பாடப் பெற்றுள்ளன. இவை யாவையும் மாணிக்கவாசகரின் திருப்பள்ளி எழுச்சிப் பாடல்களின் பொருள் அமைப்பையும் வடிவத்தையும், அசையமைப்பையும் ஒட்டியே காணப்பெறுகின்றன. இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த மகாகவி பாரதியார் பாரத மாதா திருப்பள்ளி எழுச்சி எனும் தலைப்பில் ஐந்து பாடல்கள் பாடியுள்ளார். இதுவும் மாணிக்கவாசகரின் திருப்பள்ளி எழுச்சியைப் போன்றே அமைந்துள்ளன. அந்த வகையில் திருப்பள்ளி எழுச்சியின் முதல்வராக, முன்னோடியாக மாணிக்கவாசகர் திகழ்கின்றார்.

முடிவுரை :

ஆழ்வார் நாயன்மார்கள் பக்திப் பாடல்கள் விளைவித்த புரட்சிகளுள் ஒன்று - கடவுளுக்கு முன் மக்கள் எல்லோரும் சமமானவர்கள். கடவுள் ஒருவரே எல்லா மக்களுக்கும் தலைவர் என்ற கருத்தைப் பரப்ப அந்தப் பாடல்கள் உதவின. அதனால் அரசர்களையும், செல்வர்களையும் பாடப்பயன் பெற்ற பக்திமொழியான தமிழ், கடவுளைப் பாடுவதற்கு மட்டுமே பயன்பட வேண்டும் என்ற கொள்கையை வளர்த்தது.

மன்னர்களுடைய அரண்மனைகளையும் செல்வர்களின் மாளிகைகளையும் நாடிச்சென்று ஏங்கி நின்றவர்களைத் திசை திருப்பித் திருக்கோயில்களை நாடி நிற்கச் செய்தார்கள். அரண்மனைக்குப் பெயராக அதுவரையில் வழங்கி வந்த கோயில் என்ற சொல்லே கடவுளின் ஆலயத்துக்கு உரிய சொல்லாகுமாறு மாறுதல் ஏற்பட்டுவிட்டது. நாட்டில் அதுவரையில் மிக உயர்ந்த கட்டிடமாக இருந்தவை அரண்மனைகளே. பக்திப்பாடல்கள் செய்த புரட்சியின் விளைவாக, அரண்மனைக்கு இருந்த சிறப்பெல்லாம் கோயிலுக்கு உரியன ஆயின. அரண்மனைகளை விட உயர்ந்த கட்டிடங்களாகக் கோயில்களின் கோபுரங்கள் ஓங்கி நிற்கும் படியான மாறுதலைச் செய்த பெருமை பக்திப் பாடல்களுக்கே உண்டு. அரண்மனைக்குச் சென்று விடியற்காலையில் அரசன் துயில் எழுமாறு பாடி வந்த இசைப் புலவர்களையும், திருக்கோயிலை நாடிச்சென்று வைகறையில் துயிலெழுப்பும் பாடல் பாடும்படியாகச் சமயத்தார்கள் செய்து விட்டார்கள். அரண்மனையில் இருந்த அரசனும், வைகறையில் துயில் எழுந்து திருக்கோயிலுக்குச் சென்று மக்களோடு சேர்ந்து திருப்பள்ளி எழுச்சி வழிபாட்டில் கலந்து கொள்ளும்படியான நிலைமை ஏற்பெற்றது. அரண்மனையில் நிகழ்ந்து வந்த விழாக்கள் பல, திருக்கோயில்களில் கடவுளுக்குரிய திருவிழாக்களாக மாறின. மனிதர்க்குள் இருந்து வந்த உயர்வு தாழ்வுகளும், சாதி வேறுபாடுகளும் ஒருவாறு புறக்கணிக்கப்படுவதற்கும் இந்தத் திருப்பம் பயன்பெற்றது. என்று மு.வ. கூறும் கருத்து நினைப்பதற்குரியது.

சங்க இலக்கியத்தில் தோன்றிய துயிலெடை நிலை என்ற ஒரு சிறிய புள்ளி, பக்தி இலக்கிய காலத்தில் முழுமையான கோலமாக மலர்ச்சியுற்றது. மாணிக்கவாசகரின் திருப்பள்ளியெழுச்சிப் பாடல்கள் இன்றையக் கால கட்டத்திலும் சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் திருக்கோயில்களில் முறையாக விடியற்காலப் பொழுதுகளில் பூபாள ராகத்தில் பாடப்பெற்று வருகின்றன

21. கோயில் மூத்த திருப்பதிகம்

- பெரும்புலவர், முனைவர்.
ச.வே. சுப்பிரமணியன்

“திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்” என்பது தமிழகப் பழமொழி. ஜி.யு. போப் என்ற மேல் நாட்டினர் திருவாசகத்தைப் படிக்கும்போதெல்லாம் கண்ணீர் விடுவார்.அவர் கிருத்துவ சமயத்தைச் சார்ந்தவர். ஆனால் விவிலியத்தைப் படித்தால் அவருக்குக் கண்ணீர் வருவதில்லை. அவர் உருகுவதில்லை. திருவாசகத்தைப் படித்தால் உருகுவார். ஒரு முறை அவர் டாக்டர். உ.வே. சாமிநாதையர் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதினார். அக்கடிதம் திருவாசகத்தைப் பற்றிய செய்தி அதனால் கடிதம் எழுதிக்கொண்டு இருக்கும்போதே கண்ணீர் விட்டார். கடிதத்தில் உள்ள எழுத்துக்கள் கலைந்தன. தெளிவாக இல்லை இருப்பினும் அக்கடிதத்தை சாமிநாதையர் அவர்களுக்கு அனுப்பினார். திருவாசகத்தால் நனைந்த கடிதம் அதனால் அக்கடிதத்தை மாற்றி எழுத விரும்பவில்லை என்று எழுதினார். உருகுதல் என்பது உள்ளம் உருகுதல்வேண்டும் அதனால்தான் இராமலிங்க சுவாமிகள் ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிப்பதுவே என்று திருவாசகம் பற்றிப் பாடினார்.

திருவாசகத்தில் கோயில் திருப்பதிகம், கோயில் மூத்த திருப்பதிகம் என்று இரண்டு உள்ளன. இரண்டும் சிதம்பரத்தில் பாடியதாகக் கூறுவர். கோயில் என்ற சொல் எல்லாக் கோயில்களையும் குறித்தாலும் சிறப்பு நிலையில் சிதம்பரத்தை மட்டும் தான் குறிக்கும். கோயில் மூத்த திருப்பதிகம் அந்தாதிப்பாடல்களால் அமைத்து பதிகம் என்றாலே பத்துப் பாடல்கள் தான். ஏற்கனவே இறைவன் மாணிக்கவாசகரை ஆட்கொண்டு விட்டான். இருப்பினும் மறுபடியும் அவன் விட்டு விடுவானோ? என ஐயம் அவருக்குத் தோன்றுகிறது. அதனால், என்னை விட்டு விடாதே என்று இறைவனிடம் கேட்கிறார். அதோடு என்னைவிட்டுவிட்டால் என்னைச் சார்ந்த அடியார்கள், உன்னை வழிபடும் அடியார்கள் என்னை இகழ்ந்து பேச மாட்டார்களா? என்றும் கேட்கிறார்.

"முன்னின்று ஆண்டாய் எனைமுன்னம் யானும் அதுவே முயல்வுற்றுப்
பின்னின்று ஏவல் செய்கின்றேன் பிற்பட்டு ஓழிந்தேன் பெம்மானே
என்னின்று அருளி வரநின்று போந்திடு என்னா விடில் அடியார்
உன்னின்று இவனார் என்னாரே பொன்னம் பலக்கூத்து உகந்தானே"

என்று பாடுகிறார்.

சக்தியும், சிவனும் ஒன்று என்பது பொதுக்கருத்து. அதைத்தான் அர்த்த நாரீசுவரர் என்ற கொள்கை எடுத்துக்காட்டுகிறது. அடியார் சக்திக்கும் சிவனுக்கும் நடுவில் இருக்கின்றார். எல்லா அடியார்களுக்கு மத்தியிலும் அவர் இருக்கின்றார். இறைவன் ஆதியும் அந்தமும் இல்லாதவன். மாணிக்கவாசகருக்கு முதலாக இருப்பவன் அவ்வாறு இருக்கின்றவன் என்று அந்த நிலையில் இருக்கவேண்டும் என்று கேட்கிறார்.

இறைவனை நேரில் கண்டு பேசவேண்டும் என்று துடிக்கிறார். நாம் பலமுறை குழந்தைகள்ளைப் பார்த்தாலும், நம்மிடம் அன்பு செலுத்துகின்ற பெற்றோரைப் பார்த்தாலும் அடிக்கடி பார்க்கவேண்டும் என்று தோன்றுகிறது. அவருக்கும் அதுபோன்று தோன்றுகிறது. உன்னைப் பார்க்காவிடில் நான் இறந்துவிடுவேன் என்று பேசுகிறார்.

"முகம்தான் தாரா விடின் முடிவேன்
பொன்னம் பலத்து எம் முழு முதலே"

என்று பேசுகிறார்.

ஐம்புலன்களை ஆள்வது மனம். மனத்தையும் ஆள்பவன் இறைவன். கன்றுக்கு இரங்கும் பசுப்போன்று அடியார்க்கு இறைவன் இரங்குகின்றான். அருள் செய்கிறான். குழந்தைக்குத் தாய் அருள் அமுதத்தை ஊட்டுகிறாள். குழந்தை தாயின் பார்வைக்கு ஏங்குகிறது. அதுபோன்று ஏங்குகிறார் மாணிக்கவாசகர்.

காலத்தை எதிர் பார்த்திருக்கும் மனிதர்களைப் போன்று மீனை எதிர்பார்க்கும் கொக்கு. மாணிக்கவாசகரின் உள்ளம்

இறைவனாகிய மீனை எதிர்பார்க்கின்ற கொக்குப்போல் இருக்கின்றது. இதனை

"இரைதேர் கொக்குஒத்து இரவு பகல்
ஏசற்று இருந்தேன் வேசற்றேன்
கரைசேர் அடியார் களிசிறப்பக்
காட்சி கொடுத்து உன் அடியேனை" - நீ காப்பாற்றவேண்டாமா என்று கேட்கிறார்.

இறைவன் இருக்கின்றானா? என்று கேட்பவர்களுக்கு, சாதாரண நிலையில் விளக்குவது, பாலில் நெய் இருப்பதுபோன்ற என்று விளக்குவர். பாலில் நெய் உள்ளது. ஆனால் பாலை பிரைச்சேர்த்து தயிராக்கிக் கடைந்து வெண்ணெய் எடுத்துப் பின்பு நெய்யாக்க வேண்டும். பாலில் நெய் உள்ளது என்பது உண்மை. அதுபோன்று உள்ளத்தில் இறைவன் உள்ளான் என்பது உண்மை. ஆனால் அந்த உள்ளத்ததை எந்த நிலையில் பக்குவப்படுத்தினால் இறைவன் தோன்றுவான், அருள் புரிவான் என்பதை நன்கு உணர்ந்தவர் மாணிக்கவாசகர். இருப்பினும் இறைவனை நெய்யாக நேரடியாகப் பெற விரும்புகின்ற மாணிக்கவாசகர் இன்னும் அவன் பாலாக இருக்கிறானே என்று நினைந்து ஏங்குகிறார்.

இறைவனுடைய அன்பு இல்லாத மனிதன், ஆள்வார் இல்லாத மாடுபோன்று மாணிக்கவாசகருக்குத் தோன்றுகிறான். ஆள்வானாக இறைவனைக் கூறுவது எல்லா சமயத்தினருக்கும் உண்டு. கண்ணன் ஆடுமேய்ப்பவன். கிருத்துவை மேய்ப்பன் என்றே கூறுவது உண்டு. அதேபோன்று மாணிக்கவாசகர் தனது மேய்ப்பனாக இறைவன் இருத்தல்வேண்டும் என்று நினைக்கின்றார்.

சமுதாயத்தில் நல்ல நிலையில் இருக்கின்ற ஒருவன் தாழ்ந்த நிலைக்குச் செல்லும்போது நல்ல நிலை பற்றிச் சிந்தித்துப் பார்க்கிறான். ஏற்கனவே இறைவன் மாணிக்கவாசகருக்கு அருள் புரிந்து விட்டான். இப்போது மாணிக்கவாசகருக்கு ஐயம் ஏற்படுகிறது. தன்னைச் சார்ந்தவர்கள் தெளிவுடையவர்களாக இல்லை. அதனால் தன்னையும் தெளிவற்றவனாக, சார்ந்தவர்கள் நினைக்கின்றார்கள். அவ்வாறு நினைக்கும்போது அவர்

சார்ந்தவர்களால் ஏளனப்படுத்தப்படுகிறார். அதை அவரால் தாங்க இயலவில்லை. அதனால் இறைவன் அருள் இன்றி இறந்து விட்டால் தன்னைச் சார்ந்தவர்கள் சிரிக்கமாட்டார்களா? என்று கேட்கிறார்.

உன்னுடைய அருளை நினைந்து மகிழ்வார் பலர் புகழ்வார். பலர். பலரும் கூடி உன்னைப் பற்றிப் பேசி விவரிப்பார். பலர் அதை கேட்பர் மகிழ்ந்து மெச்சுவார் பலர். மகிழ்ந்து சிரிப்பார் பலர். எள்ளி நகையாடிச் சிரிப்பாரும் பலர். இவ்வாறு பலவகையான விலங்குத் தன்மையுடைய மனிதக்கூட்டத்தில் நான் இருந்து துன்புறுவதை நீக்குவதற்கு நீ அருள்புரிய வேண்டாமா? என்று கேட்கிறார்.

இறைவனை நினைத்தாலே என்பு நெக்கு உருகி கண்ணீர் வடிதல்வேண்டும். அந்த நிலையை எனக்குத் தருதல்வேண்டும். என்னுடைய மனம் அந்த நிலைக்கு இன்னும் வரவில்லை என்பதை நான். உணருகின்றேன். நீ அருள் புரிந்தால் அது கிடைக்கும் என்பது என் நம்பிக்கை.

கோயில் மூத்த திருப்பதிகத்தில் மாணிக்கவாசகர் இறைவனோடு நேரடியாகப் பேசுகிறார். மனிதசமுதாயத்தில் தன் நிலையை என்றும் முழுநிலையாக அமைத்துக்கொள்ளவேண்டும் என்று அவர் விரும்புகிறார். ஏற்கனவே இறைவன் அருளை முழுநிலையில் பெற்றவர். இருப்பினும் மறுபடியும் மறுபடியும் அவருக்கு இறைவன் நம்மைக் கைவிட்டுவிடுவானோ என்ற ஐய உணர்வு தோன்றுகிறது. அதன் வெளிப்படையாக, கோயில் மூத்த திருப்பதிகம் அமைகிறது. பொன்னம்பலத்தில் ஆடுகின்ற கூத்தன் அனைவரையும் ஆட்டுவிக்கின்றான். மாணிக்கவாசகரையும் ஆட்டவேண்டும்என்று அவர் நினைப்பதில் வியப்பில்லையே?

22. கோயில் திருப்பதிகம்

வேம்பைப் புலவர். மெய்யாண்டவன்

தோற்றுவாய்

இறைவனைக் குறித்து எழுந்த நூல்களைச் சாத்திரநூல்கள் தோத்திர நூல்கள் என இரண்டாம் பிரிப்பது மரபு. சிவஞான போதம் திருக்களிற்றுப் படியார் முதலானவை சாத்திர நூல்கள், தேவாரம் திருவாசகம் முதலிய திருமுறை நூல்கள் தோத்திர நூல்கள் ஆகும்.

தோத்திர நூல்களிலும் சாத்திரக் கூறுகள் காணக் கிடைக்கின்றன. ஆயினும் இசையொழுங்கும் இலக்கிய நயமும் அவற்றின் சிறப்பியல்புகள் ஆகும். இவ்வகையில் தமிழில் பல தோத்திர நூல்கள் உள்ளன. எனினும், திருவாசகம் இந்நூல்களிடையே ஈடும் எடுப்பும் அற்றது மனங் கரைந்து மலங்கெடுக்கும் மாண்புடையது. திருவாசகத்துக்கு உருகாதார் ஒருவாசகத்துக்கும் உருகார்" எனும் வரி திருவாசகத்தின் சிறப்பைச் சுட்டுவதாகும், திருவாசகத்தில் தோய்ந்த கிறித்துவப் பாதிரியார் ஜி.யு. போப், உள்எலும்பினையும் உருக்கும் பாட்டு "என்று வியந்து போற்றினார்.

பாண்டிய நாட்டில் மதுரைக்கு அண்மையில் உள்ள திருவாதவூரில் வாதவூரர் தோன்றினார். கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் மதுரையை ஆண்ட அரி மர்த்தன பாண்டியன் அமைச்சராய் இருந்தவர். திருப்பெருந்துறையில் சிவபெருமானே ஞானாசிரியராக எழுந்தருளி அவருக்கு உபதேசம் செய்து மாணிக்கவாசகர் என்ற பெயரும் வழங்கினார். அவர் பொருட்டு நரியைப் பரியாக்கியும் பிட்டுக்கு மண்சுமந்தும் ஆடல் புரிந்தருளினார். இவர் வரலாறு திருவாதவூரர் புராணத்தில் விளக்கமாகக் கூறப்படுகிறது.

உள்ளுறை

மாணிக்கவாசகர் பாடிய பாடல்கள் திருவாசகம் 658 திருக்கோவையார் 400 ஆக 1058 பாடல்கள் ஆகும். சைவத் திரு

முறைகள் பன்னிரண்டில் எட்டாவதாக வைத்துப் போற்றப்படுகின்றன. நால்வர் நான் மணி மாலையில் சிவப்பிரகாச சுவாமிகள் வேதத்திற்கும் திருவாசகத்திற்கும் இடையே உள்ள சிறப்பான வேறுபாடு இன்னதெனக் கூறுதல் நுட்பமாக நோக்கத்தக்கது.

விளங்கிழை பகிர்ந்த மெய்யுடைமுக்கண்
காரணன் உரையெனும் ஆரணம் மொழியோ
ஆதிசீர் பரவும் வாதவூர் அண்ணல்
மலர்வாய்ப் பிறந்த வாசகத்தேனோ
யாதோ சிறந்தது என் குவீராயின்
வேதம் ஓதின் விழிநீர்பெருக்கி
நெஞ்சம் நெக்குருகி நிற்பவர்க் காண்கிலேம்
திருவாசகம் இங்கு ஒருகால் ஓதின்
கருங்கல் மனமும் கரைந்(து) உகக்கண்கள்
தொடு மணற்கேணியிற் சுரந்து நீர்பாய
மெய்ம் மயிர்பொடிப்ப விதிர் விதிர்ப்பெய்தி
அன்பர் ஆகுநர் அன்றி
மன்பதை உலகின் மற்றையர் இலரே"

இப்பாடல் மூலம் திருவாசகச் சிறப்பு தெற்றென விளங்கும்.

மாணிக்க வாசகர் பாடிய பல்வேறு பதிகங்களில் 22 -ஆம் பதிகமாய் அமைந்துள்ள கோயிற் றிருப்பதிகம் ஒப்புயர்வற்றது. உணர்ந்து இறைவனை நினைந்து நெகிழ்ந்து மகிழத்தக்கது. ஆவுடையார் கோவிலாகிய திருப்பெருந்துறையை எண்ணித் தில்லை அம்பலமாகிய சிதம்பரத்தில் அருளியது என்பர். எழுசீர் ஆசிரிய விருத்தத்தில் உள்ளம் உருக ஊன் உருகப் பத்துப்பாடல்கள் பாடியுள்ளார். ஒவ்வொரு பாடலின் ஈற்றடியும் அடுத்த பாடலின் தொடக்க அடியாக அமைத்து அந்தாதித் தொடையில் அற்புதமாய்ப் பாடியுள்ளார்.

மாறு பாடாய் என்னுள்ளத்தினுள்ளேநிலைபெற்று ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களில் ஒன்றான மாயா மலம் என்னை (என் அறிவை) மயங்கச் செய்து மெய், வாய், கண்,

மூக்கு, செவி ஆகிய ஐம் பொறிகளை இடமாகக் கொண்டு இயங்கும் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் எனும் ஐம்புல வேடராகிய ஐந்து அறிவை நெறி மயங்கவைத்த மாயா மலத்தின் இயக்க வழியை அடைத்த அமுதமயமாய் இயங்கும் சிவனே, உள்ளத்தில் அழியா அமுத ஊற்றாய் எழுப்பி உயிர்களின் உண்மையான தன்மையை அறிய வைக்க வந்து அருள்செய்த பேரொளிப்பிழம்பாய் இருக்கும் இறைவனே. சுவைமிக்க தேறலின் தெளிவாய் உள்ளவனே. சிவபெருமானே. திருப்பெருந்துறையில் உறையும் சிவபரம் பொருளே.முடிவில்லாத வீடுபேறு போன்ற பெரும்பதங்களைக் கடந்த பேரின்ப வடிவே. அழியாப்பேரன்பு வடிவானவனே எனும் சிவனும் சீவனுமாய் விளங்கும் பரம்பொருளுக்கும் உயிர்களுக்கும் உள்ள தொடர்பை அற்புதமாய் விளக்கும் முதற்பாடல் இதோ,

"மாறி நின்றென்னை மயக்கிடும் வஞ்சப்
புலனைந்தின் வழியடைத்தமுதே
ஊறிநின்றென்னுள் எழு பரஞ்சோதி
உள்ளவா காணவந் தருளாய்
தேறலின் தெளிவே சிவபெருமானே
திருப்பெருந்துறையுறை சிவனே
ஈறிலாப் பதங்கள் யாவையுங்கடந்த
இன்பமே என்னுடை அன்பே."

மேற்கண்ட பாடல் வாயிலாக மாணிக்கவாசகப் பெருமான் சைவ சித்தாந்தத்தின் சாறைப்பிழிந்து நமக்குச் சுவை ததும்பத் தருகிறார்.

உயிர்கள் ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலத்தால் பிணிக்கப்பட்டுள்ளன. இம்மூன்று மலங்களைப் பெற்றவர் சகலர் எனப்பட்டனர், ஆணவம், கன்மம் எனும் இருமலங்களால் பிணிப்புண்டவர் பிரளயாகலர் எனப்படுவர். இவர்க்கு மாயையின் காரியமாகிய தநு. கரண, புவன போகங்கள் இருப்பினும் அவற்றால் இவர் தொடமுடியாதவராய் இருப்பார். இத்தகைய ஆன்மாவாய் மாணிக்கவாசகர் விளங்குகிறார்.

மாணிக்கவாசகர் தம் ஐந்தாம் பதிகத்தால் பின்வரும் செய்திகளை அழகொளிர எடுத்தியம்புகின்றார். இறைவனாகிய சிவபரம் பொருள் என்றும் அழியாத குற்றமற்ற அமுது. நிறைவு வடிவமானது. முடிவற்றது. கொழுஞ்சுடர்க் குன்றாம் பேரொளிப் பிழம்பாய் இலங்குவது. உயிர்களுக்குள் தான் மறைந்து நின்று அவற்றை இயங்கவைப்பது. வேதப்பொருளாகவும் இருப்பது. உள்ளத்தில் நிரந்தர வைப்பாய் இருப்பது. தடுக்கப் படாத நீர்போல் உள்ளத்துக்குள் பேரின்ப வெள்ளமாய்ப் பாயும் திருப்பெருந்துறையில் உறையும் சிவபெருமானே, இறைவனே நீ என் உடலை ஆலயமாய்க் கொண்டு வாழ்கின்றாய், இதற்கு மேல் உன்னை என்ன சொல்லி இரங்குவேன் என மாணிக்கவாசகர் குறிப்பிடுகிறார். அந்த அற்புத அழகுப் பதிகம் இதோ:

"குறைவிலா நிறைவே கோதிலா அமுதே
ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்தென்
மனத்திடை மன்னிய மன்னே
சிறை பெறா நீர்போல் சிந்தை வாய்ப்பாயும்
திருப்பெருந்துறையுறை சிவனே
இறைவன் நீயென் உடலிடங் கொண்டாய்
இனியுன்னை யென்னிரக்கேனே."

இப்பாடலில் உலகம் என்றுளதோ, அன்றே இறைவனும் நிறை பொருளாய் உள்ளான் எனும் சைவ சித்தாந்தக் கருத்தும், நீயென் உடலிடங்கொண்டாய் எனும்வரியால் நம் உடலை இறைவன் உறையும் திருக்கோவிலாய் ஆக்கவேண்டும் எனும் கருத்தும் மாணிக்கவாசகப் பெருமானால் வலியுறுத்தப்படுகின்றன. திருமூலரும் "உள்ளம் பெருங்கோவில் ஊனுடம்பு ஆலயம்" எனும் வரியால் இக்கருத்தையே வலியுறுத்துகிறார்.

தம் ஆறாம் பதிகத்தில் ஆகாயம், நீர், நிலம், தீ, கால் (காற்று) ஆகிய ஐம்பூதங்களில் மறைந்து நின்று களிப்பை உருவாக்குகிறாய். உன்னைக் கண்ணுறக் கண்டு கொண்டு இன்றே களித்தனன் "எனும் வரிகளால், "காணும் கண்ணுக்குக் காட்டும் உளம்போல் காண உள்ளத்தைக் கண்டு காட்டலின் அயரா அன்பின்

அரன் கழல் செலுமே" எனும் சிவஞானபோதம் பதினொன்றாஞ் சூத்திரத்தை நம் நினைவில் நிழலாட வைக்கிறார். இப்படி ஒவ்வொரு பதிகமும் ஆன்ம விழிப்பையும் அகவொளி வழியையும் நமக்கு நல்கிடும் அற்புதத் தமிழ் மறையே கோயிற்றிருப்பதிகமாகும். தம்பத்தாம் பதிகத்தில் "நீ உன்னை எனக்குத் தந்தாய் என்னை ஆட்கொண்டாய்" இச்செயலில் யார் கெட்டிக் காரர்? முடிவிலாப் பேரின்பம் உன்னால் அடைந்தேன். அதற்கு ஈடாக நீ என்னிடம் என்னபெற்றுக் கொண்டாய். எம் தந்தையே, ஈசனே, என் உடலிடங்கொண்ட உத்தமனே, நீ செய்த இப்பேரருளுக்கு ஈடாய் நான் என்ன கைம்மாறு செய்யப் போகிறேன்? இறைவனுக்கு நாம் ஒன்றும் செய்ய இயலாது. பக்தி ஒன்றே அவன் வேண்டுவது எனும் அற்புத ஆனந்தக் கருத்துகளை உள்ளடக்கிய அந்த அற்புதப் பதிகம் நினைந்து நினைந்து உருகத் தக்கது. உணரத்தக்கது. அப் பதிகத்தைப்பாடி மகிழ்வோம்.

"தந்த துன் தன்னைக் கொண்டதென் தன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்
அந்த மொன்றில்லா ஆனந்தம் பெற்றேன்
யாதுநீ பெற்ற தொன்றென் பால்
சிந்தையே கோயில் கொண்ட எம் பெருமான்
திருப்பெருந்துறையுறை சிவனே
எந்தையே ஈசா உடலிடங்கொண்டாய்
யான் இதற்கிலன் ஓர் கைம்மாறே"

தமிழ் மறையாய்ச் சைவ சமயச் சாரமாய் இலங்கும் திருவாசகம், நாள் தோறும் ஊன் கலந்து உயிர்கலந்து பாடிப் பேரின்பவாயிலை அடையும் அற்புத வழிகாட்டியாய் விளங்கும் திறத்தைப்பின் வரும் பாடல் விளக்குகிறது எனக் கூறி நிறைவு செய்வோம்,

"தொல்லை இரும்பிறவிச் சூழுந்தளை நீக்கி
அல்லல் அறுத் தானந்தம் ஆக்கியதே- எல்லை
மருவா நெறி அளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்.

23. செத்திலாப் பத்து

"சிவ நெறிக்கவிஞர்" இராகவன் முத்து

தோற்றுவாய்

தேனினும் இனியது திருவாசகத் தமிழ்மறை, திருவாசகம் ஓதினால், "கருங்கல் மனமும் கரைந்து உருகும்"

"கண்கள், தொடுமணல் கேணிபோல் சுரந்துநீர் பெருக்கும்" "கேட்டிருக்கும் கீழ்ப்பறவைச் சாதிகட்கும் ஞான நாட்டம் பிறக்கும்;" "ஊன் கலந்தும் உயிர்கலந்தும் உவட்டாமல் இனித்திருக்கும்" - என்றெல்லாம் "நால்வர் நான்மணிமாலை" ஆசிரியர் சிவப்பிரகாச அடிகளாலும், வடலூர் வள்ளற் பெருமானாலும் புகழாரம் சூட்டப்பெற்றது திருவாசகம். ஆங்கிலப் பாதிரியாரும் தமிழ் ஆர்வம் மிக்க மொழிபெயர்ப்புப் பேரறிஞருமான ஜி. யூ. போப் அவர்களைக் கவர்ந்து, ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கும்படி தூண்டி ஆட்கொண்ட தகைமை உடையது திருவாசகம். யாவுக்கும் மேலாக, "வாசகம் "ஆகிய இந்நூல், "வாச்சியம்" (உரை) ஆகிய அம்பலத்கூத்துப் பெருமானாலேயே "கைப்பட" எழுதிவைக்கப்பெற்ற மாபெரும் பெருமைகளை உடைய இந்தத் தமிழ் மறையை உலகுக்குக் கொடை செய்த பெருமானாகிய வாதவூரடிகள்,"பணியுமாம் என்றும் பெருமை"என்ற தமிழ் மறைக்கு இலக்கணமாய்ப் பணிவின் வடிவமாய்க் காணப் பெறுகிறார். திருவாசகத்தை ஓதினால்-உள்ளம் நெகிழ்தலும் திருவருள் உணர்தலும் கைகூடுவது போலவே, பழுத்த தமிழ்ப்புலமையும் இலக்கியச் சுவையும் துணைப் பயன்களாக (By -Product /ancillary benfits)எய்தப்பெறும் என்பது அனுபவ உண்மை. அதற்குக் காரணம், பேரருளாளராகிய மணிவாசகப் பெருமானின் தொழுபுலமை, நிறைபுலமை, இலக்கிய ஊற்றம் முதலிய புறத்தகுதிகளும் நிகரிலாச் சிவானந்தத் தேன்பருகித் தேக்கெறியும் அகத்தகுதியும் ஒரு சேர இணைத்தமையாம்.

பதிகம் எப்பக்கம் தொட்டாலும் இனிக்கின்ற வெல்லம் போல, திருவாசத்தின் எல்லாப் பகுதியும் பக்திச்சுவை அருள்

அமுதம் இரண்டும் கலந்த சுவைக்கட்டியாக அமைந்து மணிமொழிப் பெருமானின் இணையில்லாப் புலமைக்கும் பெருந்தகைமைக்கும் சான்றும் காட்டிமும் கூறிநிற்கும், அதனை, "செத்திலாப்பத்து "என்ற பதிகத்தின் பாடல்களில் விரவிக் கிடக்கும் செய்திகளிற் சிலவற்றைக் கொண்டு காட்டுவோம்.

முறை வைப்பு

22-வது பதிகமாகிய, கோயில் திருப்பதிகம், "அனுபோக இலக்கணம்" கூறுவதாக, தில்லையில் அருளப் பெற்றது. 24 வது பதிகமாகிய அடைக்கலப்பத்து, "பக்குவ நிண்ணயம் "பேசும் பகுதியாக, திருப்பெருந்துறையில் அருளப்பெற்றது. இவ்விரு பதிகங்கட்கும் இடையில் அமைந்த "செத்திலாப் பத்து" ப் பதிகமும் திருப்பெருந்துறையில் அருளப் பெற்றது. "சிவானந்தம் அளவறுக்க ஒண்ணாமை" என்ற பொருளைப் பாடிப் போந்தது. திருக்குறளின் உரையாசிரியர்களில் தலைமைசான்ற பரிமேலழகர். "அதிகார முறைமையும் இதனுனே விளங்கும் "என்று ஒவ்வொரு அதிகாரத்தின் முன்பும், இயைபு கூறும் உரை நயப் பாங்கினைத் திருவாசகத்திலும் பொருத்திச் சுவைக்கலாம். சிவன் அருள் ஆகிய பேரமுதை உண்டு திளைத்த ஆன்மா, தன் அருள் அனுபவத்தை "இவ்வண்ணம் இத்தன்மை உடையது "என்று சுட்டி இனங்காட்டிய பகுதி 22 -ம் பதிகம் ஆகும். அருளில் மூழ்கி மூழ்கித் தேக்கெறிந்த ஆன்மா, நல்ல பழுத்த (பக்குவ) நிலையில்தான், "கரும்பும் துவர்த்துச் செந்தேனும் புளித்து அறக்கைத்தது "- திருவருள் சுவை ஒன்று மட்டுமே பேரின்பம் தருவது என்று மெய்யுணர்வு கொள்ளும். அந்தப் பேரின்பப் பெருவாழ்வு நிலையே "சிவானந்தம் அளவறுக்க ஒண்ணாமை " என்ற நுண்ணிய பேரானந்த நிலையாகும். அந்நிலையில் ".உயிரும் உடம்பும் மிகை", "தசைப்பொதியாகிய ஊன் உடல் கழித்து உகுத்தல்வேண்டும்" என்ற துடிப்பு ஆன்மாவைப் பற்றிப் பிடித்து ஆட்டுவிக்கும். அதையே, இந்தச் "செத்திலாப்பத்து "ப் பதிகத்தில் அடிகள் வழங்குகிறார். இந்தப் படிநிலையினைத் தாண்டிய போது, "உடலும் உடைமையும் ஆவி எல்லாமும் இறைவன்பால் அடைக்கலம் "என்ற முழுச் சரணாகதி நிலை வருகிறது. இதை வைணவம், "அனன்ய சரணாகதி" என்று பேசும். இந்நிலையில்,

மனமும் இறைவன் அடைக்கலமாகிவிட, எண்ணுதலாம் செயல் கூடத் "தன்வினை" நிலையில் மாறி, இறையாணை ஆக, "பிறவினை" ஆகும் சாலப் பெரும்பதம் அமைந்துவிடுகிறது. அதையே, "பக்குவ நிண்ணயம்" ஆகிய "அடைக்கலப்பத்து" என்று அடிகள் அமைந்தருளினார். எனவே, பதிக முறைவைப்பின் இயைபு தெற்றென விளங்கும்.

பத்திமைப் பண்புகள்

"பத்தி வலையில் படுவோன் காண்க" என்றும் "நூல் உணர்வு உணரா நுண்ணியோன் காண்க" என்றும் பரம்பொருளை, வேறு பகுதியில் (திருவண்டப் பகுதியில்) தொட்டும் சுட்டியும் காட்டி இனம் காட்டிய மணிவாசகப் பெருமான், இப்பதிகத்தில் இறைவனை எய்த வேண்டிக் கடும் தவமும் நோன்பும் கொள்வார்களைக் காட்டுகின்றார். அவ்வன்பர்கள் நெருப்பின் வாய்மெழுகுபோல் நினைந்து உருகுதல் ஆகிய அகவழிபாடும் புரிகின்றனர்; "பாடு கிடத்தல் ஆகிய புறவழிபாடும் புரிகின்றனர். புறவழிபாட்டு நோன்பு முறைகளில், அவர்கள் தம்மை மறந்து நெடுநாள் தவம் மேற்கொள்தலால், உடல் முழுமையும் புற்றுமண் மூடிப் புற்றே ஆகின்றனர். உடல் உணர்ச்சி யாதொன்றும் இல்லாதவராய் மரம் (அஃறினை) போல் உள்ளனர். நீரும் காற்றும் மட்டுமே நிறைவுணவாக உண்டு உடல் வற்றியுள்ளனர்.

"புற்றுமாய் மரமாய்ப் புனல் காலே
உண்டியாய் அண்ட வாணரும் பிறரும்
வற்றியாரும் நின் மலரடி காணு மன்ன" (பா-2)
"அன்பராகி மற்று அருந்தவம் முயல்வார்

"அயனும் மாலும் (மற்று) அழலூறு மெழுகாம்
என்பராய் நினைவார் எனைப் பலர் நிற்க" (பா-4)

என்ற பாடல் வரிகள் இவ்வண்ணம் அயனும் மாலும் ஏனை விண்ணோரும் கடும்பாடு கிடந்து நோன்பு நோற்ற பரிசைக் காட்டும். அவர்கள் யார்க்கும் திருவருட்பேறும் திருவடிப் பரிசும் இறைவன் தாரானாகி, மணிவாசகரை ஆட்கொண்ட பெருங் கருணைத் திறம் வியப்புக்கு உரியதாம், "யாதொரு தவமும் புரியாத, தகுதியற்ற என்னை ஆட்கொண்டு அருள்செய்தாய்"

என்று அடிகள் பேசும் பொழுது, "அவ்யாஜ கருணா மூர்த்தி" (காரணம் இல்லாமலும் பேரருள் புரிவோன்) ஆகிய பரம்பொருளின் அளவற்ற வான்கருணைத்திறம், எளிவந்த தன்மை இவற்றை விளக்குமுறப் பேசும்பொருட்டாக, தன்னைத் தானே இழிவுடையவராக, வலிந்து, விரும்பிப் பேசிக்கொள்கிறார்.

சாவு - உரிமையும் விருப்பமும்

பரம்பொருளின் திருவருள் தனக்கு வாய்க்கப் பெற்றுச் சிவானந்தத் தேனைப் பருகிய நிலையில், "அற்புத மாகிய அமுத தாரைகள் எற்புத்துளை தோறும் ஏற்றினன்" என்று தேக் கெறிந்து செம்மாந்து நிற்கின்றார் மணிவாசகப்பெருமான்.

இந்நிலையில், "விளைப் போகம் ஆகிய" இந்தத் தூல (பரு) உடம்பு ஒரு தேவையற்ற சுமை என்று அடிகள் எண்ணுகின்றார்; உணர்கின்றார். "உடம்பும் உயிரும் உறவு அறுதல் வேண்டும்" - "தசைப் பொதி கழிதல் வேண்டும்" - என்று விரும்பித் துடிக்கின்றார். ஆனால் , தானே உடல் உயிர் வேறு செய்தலுக்கு உரிமை இல்லை என்று தன்னுடைய முழுமை அடைக்கலத்தை (பரிபூரண சரணாகதி) நினைவு கொள்கின்றார். அன்றே இவர்தம் உடலும் உயிரும், உடைமை எல்லாரும்- ஆட்கொண்ட போதே - இறைவன் ஏற்றுக்கொண்டு விட்டான், இவரும் ஒப்புவித்து (Handed over) விட்டார்; எனவே, அம்மூன்றும் இப்பொழுது, இறைவனின் உடமைப் பொருட்கள் ஆய்விட, அடிகளாகிய "வெள்ளுயிருக்கு "அவற்றின் மீது யாதொரு பற்றுக்கோடும் (HOLD) இல்லை. எனவே, என் விருப்பினை ஏற்று, என்னைச் "செத்திடப் பணியாய் "(பாடல் 3);"காய மாயத்தைக் கழித்தருள் செய் "(பாடல் 5)என்று அடிகள் இறைவனிடம் முறையீடு செய்கின்றார்.

மாயா காரியம் இவ்வுடலும் உலகமும். தனுகரண, புவன, போகங்கள் இறைவனால் வழங்கப்பெற்றன. அவன், அவற்றை விச்சின்றி விளைவு செய்த "மகாவல்லவன்". அவற்றை, "சங்கற்ப மாத்திரையினாலே "தோற்றுவித்தவன். கடவுள். எனவே, இவை மாயமே; மாயமே, வல்லவனாகிய கடவுள் எவ்வாறு

தோற்றுவித்தானோ, அவ்வாறே ஒடுக்கிக் கொள்வான். (அழிவு), - இவை சித்தாந்த சாத்திரச் செய்திகள்.

மாயா காரியம் ஆதலால், அதனைத் தோற்றுவித்த மாயாவியாலேயே அதனை ஒடுக்கவும் இயலும்- அன்றி, பிறர் யாரும்"ஊன் உடல் வேறு செய்ய" வல்லார் அல்லர். அவ்வாறன்றி எவரெனும், தன் உயிரையும் உடலையும் செயற்கை முறையினால் பிரித்துக் கொள்ளத் தலைப்படுவார் என்னில், அவர்களைக் "கருவி" (Instrument) ஆகக் கொண்டு, "அதிட்டித்து நின்று", இறைவனே அவ்வினையே நிகழ்த்துவதாக உணர்தல் வேண்டும்.

இவ்வளவு எண்ணங்களையும், அறிவுக் கூறுகளையும் அடிமனத்தில் தேக்கி வைத்துக் கொண்டு, அடிகள் ஆறாம் திருப்பாட்டில் இவ்வண்ணம் அழுது கூவி முறையிடுவார்.

"அறுக்கிலேன் உடல் துணிப்படத், தீப்புக்கு
ஆர்கிலேன்;திருவருள் வகை அறியேன்!
பொறுக்கிலேன் உடல்; போக்கிடம் காணேன்!
போற்றி! போற்றி! என் போர்விடைப் பாகா !
இறக்கிலேன்! உனைப் பிரிந்து இனிதிருக்க
என் செய்கேன்! இது செய்க என்றருளாய்!
சிறைக்கணே புனல் நிலவிய வயல்சூழ்
திருப்பெருந் துறை மேவிய சிவனே" (பா. 6)

உவமைகள், உருவகங்கள்

தேனும் அமுதும் கைக்கப் பாடிய தமிழ் அருள் இலக்கியமாகிய திருவாசகத்தில் இலக்கிய அழகுகள் ஏராளம். அவற்றில் உவமைகளும்உருவகப் பகுதிகளும் தனிபெருஞ் சிறப்புடையன. அவற்றுக்கு எடுத்துக்காட்டுகள் செத்திலாப் பத்திலும் காணப்பெறுகின்றன.

"பிராய் என்பது ஒருமரவகை; சற்றே உலர்ந்து பசையற்றே யாண்டும் என்றும் இருக்கும்" என்று உரையாசிரியர் கூறுவர். "பிராய்" அல்லது "பராய்" (திரிபு) மரத்தைப் போலும் நன்கு காய்ந்த முருட்டுவிறகுக் கட்டையையும் ஒத்து, என் மனமும் ஈரமில்லாத வன்னெஞ்சம் ஆயிற்று என்று அடிகள் கூறிக் கொள்கின்றார்.

உலோகங்களில் இரும்புதான் மிக வலியது, பழுக்கக் காய்ச்சினும் வளைக்கவும் நீட்டி அடிக்கவும் எளிதில் இடம்தராது துன்பூட்டுவது. அந்தக் கடின இரும்பையும் விடக் கடினமான ஒரு பொருளாம் அடிகளின் செவிகள்! மரத்தின்பால் உள்ள கணுக்களை, மரக்கண் என்று அழகுவரக் கூறுவர். காணவேண்டியவற்றைக் கண்டு மகிழத் துணை செய்யாமையால் அடிகளின் கண்கள் மனிதக் கண்கள் அல்லவாம்; மரக்கண்களாம். (பாடல் 4-9)

தன்னைத் தானே தாழ்த்திக் கூறிக்கொள்ளும் பணிவுடைமைக்கு இவ் இலக்கிய உத்திகள் அடிகளுக்குப் பெருந்துணை செய்து, நம்மை வியக்கவைத்து அறிவுறுத்துகின்றன.

தேவர்கள்

இப்பகுதியில், 5-ம் திருப்பாட்டில், ஆட்டுத்தேவர், நாட்டுத்தேவர், சேட்டைத் தேவர் - என்ற மூன்று தொடர்களை அடிகள் பெய்கின்றார். இவற்றின் பொருள் ஆழத்தை உரையாசிரியர்கள் பெரும் முயற்சியினால் விவரிக்கின்றனர்.

சேடு என்றால் பெருமை. தேவர்கள், தம்மைத் தாமே பெருமை உடையவர்கள் என்றும், பெருமைக்கு உரியவர்கள் என்றும் கருதிக் கொள்வார்கள் . அவர்களுக்கும் வணங்கத் தக்கதலைவராய், "தேவர் சிங்கமாய்" விளங்குபவர் சிவபிரான். "விண்ணாளும் தேவர்க்கும் மேலாகிய வேதியன்" என்பார் வேறு ஒரு பதிகத்தில் (திரு அம்மானை)

மூவர் தேவர்கள் உலகையும், உயிர்களையும் படைத்தும் காத்தும் துடைத்தும் தொழில் நிகழ்த்தும் அரி, அயன், அரன் என்பவர். அவர்கள் பரம்பொருளாகிய சிவச் சோதியின் அருள் ஆணைவழியே தொழிற்படும் தகுதியும் வாழ்வும் உடையவர். அவர்களை அடிகள், "ஆட்டுத் தேவர் "என்கின்றார்.

"நாட்டுத் தேவர் " என்பவர், நாட்டில் (நிலவுலகில்) வணங்கத் தக்கவர்களாய், உலக உயிர்களின் வழிபாட்டினை ஏற்று மகிழ்வூட்டுபவராய் அமையும் தெய்வ மூர்த்தங்களாம்.

நாட்டுத் தேவர் என்று சொல்லத் தக்கவர் இவர்கள் என்று புறநானூற்றில் ஒரு பட்டியல் கிடைக்கிறது.

"ஏற்றுவலன் உயரிய எரிமருள் அவிர்சடை
மாற்றரும் கணிச்சி மணிமிடற் றோனும்,
கடல்வளர் புரிவளை புரையும் மேனி
அடல்வெந் நாஞ்சில் பனைக்கொடி யோனும்,
மண்ணுறு திருமணி புரையும் மேனி
விண்உயர் புட்கொடி விறல்வெய் யோனும்,
மணிமயில் உயரிய மாறா வென்றிப்
பிணிமுக ஊர்தி ஒண்செய் யோனும் என " (புறம் 56)

என்று பேசும் பகுதியில், இவ்வுலகில் காணப்பெறும் வழிபாட்டு மூர்த்தங்கள் யாவும் நாட்டுத் தேவர் ஆவராம். மேலும், மக்களுட் சிறந்த மாண்புடை மறவரையும் மறக்கற்பினரையும் கல்நாட்டிநெல் உகுத்துப் பரவும் வழிபாடும் நாட்டுத் தேவர் வழிபாடாம். "ஒளிறேந்து மருப்பின் களிறு எறிந்து வீழ்ந்து " (புறம் 335) நடுகல் நின்ற மறவரும், சிலம்பில் பரவப் பெறும் கண்ணகியாகிய பத்தினித் தெய்வமும் இந்த வரிசை (நாட்டுத் தேவர்) நிரலில் வருவர்.

சேட்டைத் தேவர்கள் தம்பிரானும், நாட்டுத் தேவரும் நாடரும் பொருளும் ஆகிய சிவபரம் சோதி, தன் அடியார் தம் வினையறுத்து, "ஆட்டுத் தேவர் உயிர்கள் மேல் இழைத்த, இறுத்த (விதித்த) விதியினை ஒழித்து" அருள் செய்வாராம். (பா-5)

அருள் செய்திறம்

இருவினையும் ஒத்துவரும் காலத்தே, சத்தி நிபாதம் (திருவருட்பேறு) நிகழும் என்பது சாத்திரம். அவ்வாறு நிகழும் பேற்றின் வெளிப்பாடு-(1) உயிர்களின் குற்றங்களைக் கணக்கில் எடுக்காது "தள்ளுபடி "செய்திறம்-"கோதாட்டுதல்" (2) திருவடிகள் (சிவஞானத்தை) வழங்கி நிலையில் மேல் ஏற்றும் கருணை-குரைகழல் காட்டுதல் (3) திருவருள் நோக்கம் பெற்றுவிட்ட பெருமையைக் குறித்துக் கொள்ளப் பணித்தல் - தகுதி வழங்கி ஆட்கொண்ட திறம் உணர்த்தல் - குறிக்கொள்க எனல் (4) பலவடியார்களாம் பெருந்தொண்டர் குழுவைக் காட்டி,

அக்கூட்டத்தில் இணைவித்துப் பெருவாழ்வு வழங்கல் "தொண்டரில் கூட்டுதல் "- என்று நான்கு நிலைகளோடு அமையுமாம். நல்அடியார் இணக்கம் என்பதே தலைமைப் பேரின்பமாம் (பாடல்8)

நிறைவுரை

திருவாசகம் முழுமையும் கற்கவும் ஓதவும் சுவைக்கவும் - ஊறிக் கொண்டே போகும் தேன் கடல்; அமுத வெள்ளம்; அதன் ஒவ்வொரு பகுதியிலும் எண்ணற்ற இலக்கியச் சுவைகளும் சாத்திரக் கூறுகளும், அடிகளின் அருள்மேலீட்டுடன் பின்னிப் பிணைந்து கோல் ஓச்சக் காண்கின்றோம். "செத்திலாப்பத்து "என்ற 23வது பதிகத்தின் உள்ளீடாகிய பருமணிகளிற் சிலவற்றை ஈண்டுத் தொகுத்தமைத்தோம். திருவாசகத்துள் திளைத்து "தம்மை மறக்கும்" பேரின்பம், தகவுடையார் யாவர்க்கும் வாய்ப்பதாக!

24. அடைக்கலப்பத்து

கவிஞர். பால.நடராசன்

திருவாசகம்

திருவருள் வாசகம் என்பதே திருவாசகம். இது ஒரு தெய்வ நூல். தெய்வமெனப் போற்றப்படும் திருவாசகத் தெய்வம் எழுப்பும் கண்ணீரும் தெய்வமே! இத் தெய்வநூலில் உள்ள ஐம்பத்தோரு பதிகங்களுள் உயிர்ப்பகுதியாக விளங்குவது அடைக்கலப்பத்து.

அடைக்கலம்

நம்மையெல்லாம் படைத்துக் காத்து அருளும் ஒரு சக்திதான் இறைவன். அந்த இறைவனிடம் நம்மை ஒப்படைத்து விடுவது தான் பொருத்தமுடையதாகும். இந்த உலகில் உள்ள அனைத்து உயிர்களும் அதன் உடைமை. அதன் அடைக்கலம். அந்தச் சக்தி இயக்க, இயங்கும் பொருள் என்பதனை மறந்தாலும், நாம் அதன் பாதுகாப்பில்தான் ·உள்ளோம் என்பதை உணரவேண்டும்.

இறைவனிடத்தில் உள்ள தொடர்பை உணர்ந்த பெரியோர்கள், அந்தச் சக்தியிடம் பாதுகாப்புக் தேடித் தம்மையே அடைக்கலமாக்கிக் கொள்ள வேண்டுகிறார்கள். அதுவே சரணாகதித் தத்துவம் என்று சொல்லக் கூடிய அடைக்கலப் பற்றுள்ளம்.

மணிவாசகப்பெருமான் திருப்பெருந்துறையில் எழுந்தருளியிருக்குங்காலை, மெய்யடியார்கள் அனைவரும் இறைவனது திருவடியை அடைந்து பேரின்பக் கடலுள் மூழ்கியிருக்கத் தாம் மட்டும் தனித்தமைக்குக் காரணம், தமக்குப் பரிபாகம் இன்மையே என உணர்ந்து, இறைவன் திருவடி அடைவதற்குரிய பக்குவத்தை வரையறுப்பாராக, இப்பத்துப் பாடலாகிய "அடைக்கலப் பத்தை"ப் பாடி அருளுகிறார்.

செத்திலாப் பத்தில், தான் இறைவனைப் பிரிந்து இருப்பதை விட இறப்பதுவே மேல் என விண்ணப்பித்தது குறித்துப் பார்க்கையில் சாதல் கிடைக்காமையால் வருந்தி, 'ஆன்ம போத நிலையில் வழி காண முயன்று' அது முடியாத நிலையில், அதாவது செயலற்ற நிலையில், எனை, ஆண்டவனே! நீ எது செய்யினும் செய்; நான் உன் அடைக்கலம் எனத் தன்னையே ஈசன் திருவடிக்கண் அளித்தமையே அடைக்கலம் என்பதை உணரவேண்டும்.

இதனை எல்லோரும் அறியும் வண்ணம் கூற வேண்டுமெனில் தலையில் தீப்பற்றிய ஒருவன் ஓடோடியும் திரிந்து வந்து குளத்தினுள் அடைக்கலம் புதுவது போல, வாசனாமலம் வந்து தாக்க அதற்கு அஞ்சி ஓடி வந்து அருட்கடலில் அடைக்கலம் புகுதலை அறிவிப்பது என்பதை அறியலாம்.

அடைக்கலப்பத்து தரும் செய்திகள்

பரிபாகம் பெற்ற அடியார்கள் வீட்டுலகம் சென்றனர். இதைக் கண்ட மணிவாசகர் தன்னைப்பாவி என்றும், வினைவயத்தாற் பெற்ற உடற்கூட்டில் உறைபவன் என்றும், அழுக்கு மனத்தினன் என்றும் கூறித் தன்னின் அழுக்ககற்றிக் காத்தருள வேண்டும் என்றும் கூறும்பொழுது, உண்மையடியார்கள் இடைவிடாது தியானத்திலும், மனமொழிமெய்கள் பொறிவழி பற்றிப் புலன்களின் செல்லாது அடங்குதலுமாகிய இயல்பினை உடையவர்கள் என்பது உணரப்படுகிறது. இதுவே பக்குவ நிண்ணயமாதல் என்பதாகும். ஆணவம் அடங்கிய நிலையில் விண்ணப்பிக்கும் பக்குவ நிண்ணய விண்ணப்பப் பாடலாக அமைகிறது முதற்பாடல்.

'சிறியோர் செய்த சிறுபிழையெல்லாம் பெரியோராயிற் பொறுத்தலும் கடனே' என்ற உயரிய நெறியை உணர்த்தும் பாடலாக அமைகிறது இரண்டாம் பாடல். தன்னை, வெறுக்கத் தக்கனவையே செய்யும் இழிவினை உடையவன் என்று கூறிப் பின்னர், பாம்பும், கங்கையும் செய்யாத தீமைகளை அடியேன் செய்திலேன்; அவற்றைத் தாங்கி ஆட்கொண்டது போல என்பிழையை மன்னித்து, என் பிறவியை நீக்கிச் சிறியேனை

ஆட்கொள்ளவேண்டும் என்றும் விண்ணப்பிப்பதும், உன்னை உடையான் என்றுணர்தலும், அடைக்கலம் புகுதலும் ஆகிய இவை பரிபாகச் சின்னமாதலின் இப்பாடல் வழி பக்குவ நிண்ணய மாதல் என்பதைக் காணமுடிகிறது.

அடுத்து வரும் பாடலில் மணிவாசகர், இறைவனைப் பெரியவற்றுள் பெரியவன், அரியவற்றுள் அரியவன், எல்லாம் தருபவன் எனக் கூறி, "நீ என்னை உடையாய் ஆதலால் நான் உன் அடைக்கலம்" என்று கூறுகிறார். 'என் மனம்' என்ற குறிப்பு இறைவன் எழுந்தருளுவதற்குத் தகாத அறுவகைப் பகைகளும் நிரம்பியது என்பதாம். ஆயினும் கருணையினால் வருகின்றான் என்று எளிமை தோன்ற 'என் மனத்து வரும் பெருமான்' எனக் கூறுவதிலிருந்து இறைவன் பெருமை உணர்த்தப்படுகிறது. இப்பாடலில் பிரமனும், திருமாலும் அறியாமல், அவர்கள் எதிரே அண்ணாமலையாக நின்ற அரிய பெருமானே என்ற புராணச் செய்தியை நினைவுப்படுத்துகிறார் மாணிக்கவாசகர்.

அடியார் பெருமானைப் பலப்படப் புகழ்ந்து போற்றுதலும், இறைவன் தானே வந்து எழுந்தருளுதலுமாகிய பக்குவங்கள் நிண்ணயிக்கப் பெறுகின்ற தன்மையை இப்பாடல் வழி காண முடிகிறது.

தொடர்ந்து வரும் நான்கு பாடல்கள், மணிவாசகர், தான் சிற்றின்ப வலையில் அகப்பட்டுத் தவிப்பதாகவும் அதிலிருந்து விடுவித்துத் தனக்கு ஈசன் திருவடிவாகிய பேரின்பத்தில் அடைக்கலம் கொடுக்க வேண்டும் என்று கூறும் பாடல்களாக அமைந்துள்ளன.

'பிறவித் துன்பத்தில் அகப்பட்ட அன்பர்கள்' திருவடியாகிற தெப்பத்தை உறுதியாகப் பற்றியமையின் கரை சேர்ந்தனர். நான் அதனைப் பற்றாமையால் துன்பக்கடலுள் வீழ்கின்றேன். மாதர் அலை மோதுகிறது, காமச்சுறா எதிர்த்து வருகிறது, அதனால் கெடுகின்றேன், அடியேன் உன் அடைக்கலம் என வேண்டுகிறார் மணிவாசகர்.

ஐம்புல இன்பங்களை ஒன்றன்பின் ஒன்றாகக் ஊட்டி, தம் இன்பம் சிற்றின்பம் ஆயினும் அதனைப் பேரின்பமாகக் காட்டிக்

பிரியவும் முடியாமல், கூடியே இருக்கவும் முடியாமல் அலைக் கழித்தனர் என்பார். மாதர்களைத் திரையாக உருவகித்தும், சுறாமீன் வயப்பட்டது மீளாதது போலக் காமத்தின் வயப்பட்டார் மீளாது, சிறிது சிறிதாக நசித்துப் போதலின் காமத்தைச் சுறாவாகக் காட்டியதும் சிறப்புடையதாகும். மேலும், பொழிகின்ற துன்பம் என்றதால் துன்பம் மழையாகவும், பிறவி புயலாகவும், வான் ஏறினார் என்பதால் 'வான்' கரையாகவும் கொள்ளப்பட்டன.

இதிலிருந்து நாம் உணர்வது, பிறவியும் அதனால் வரும் துன்பமும் யாரையும் விடா. ஆதலின் அன்பர்கள் அதனுட்பட்டு இழிவராயினார். ஆயினும் அவர்கள் திருவடிப்புணை பற்றிக் கிடந்தார்கள்; அதனால் கரை ஏறினார்கள் என்பதாம். ஆகவே மணிவாசகருக்கும் அந்தத் திருவடித் தெப்பம் கிடைத்தும் அறியாமையால் அதனைப் பற்றாமல் துன்பக் கடலில் வினைச்சுழியில் அகப்பட்டு வருந்தினார் என்பதாகும்.

உமையொரு பாகனாக விளங்கும் ஈசனிடம் அடியார், பூமியில் மாதர் மயக்கிலகப்பட்டு ஈசனின் க்ருணைத் திறத்தினை மறந்து இப்பூமியில் அறியாமையை விளைவிக்கின்ற உடல் என்னும் வலையில் அகப்பட்டுக் கிடந்து வருந்துவதாகக் கூறி அடைக்கலம் வேண்டுகிறார்.

இதன் மூலம் மாலை மாதர் போகத்தை வெறுத்தலும், உலகப் பற்றைத் துறத்தலும், இறைவன் உடையான், யாம் என்றும்உடைமை என உணர்தலும் திருவடிச்சார்பிற்குரிய பக்குவங்களாக உணரமுடிகிறது.

சிற்றின்பமே பெரிது என மயங்கி இருந்த நிலைமாறி அதன் இழிவு புலப்பட, ஈசன் தாளை வணங்குவது எந்நாள்? .என்ற எண்ணம் மணிவாசகர் மனதில் தோன்றிய மறுகணமே பக்குவம் விளைந்தமைக்கு உண்டான அறிகுறியைக் காண முடிகிறது. மேலும் அடியார் ஈசனை அடைக்கலம் புகுதல், பக்குவ நிண்ணய மாதலை வெளிப்படுத்துகிறது.

அடுத்து மணிவாசகர், பேரின்பம் விரும்பி உன்னைச் சரணடையாமல், சிற்றின்ப ஆசையில் அகப்பட்டது என் பிழைதான். அதனை மறந்து என் பிழை பொறுத்து. என்னை

ஆட்கொள்ள வேண்டும், நான் உன் அடைக்கலப் பொருள் என்று கூறி வருந்துவது, தவறு செய்வது மனித இயல்பு, அதனைப் பொறுத்து ஆட்கொள்வது இறைவன் மாண்பு என்ற உயரிய கருத்தைப் புலப்படுத்துகிறது.

எட்டாம் பாடல் வழி மணிவாசகர், தான் அமைதி காண ஈசன் கழலில் அடைக்கலமாவதைக் குறிக்கும் நிலையை உணர்த்துகிறது. "இறைவா உனக்கு நான் அடிமை, என்னை உன் திருவடியில் சேர்த்திடு, இல்லையேல் நரகத்தில் தள்ளி விடு. உன் விருப்பம் அறியேன். என் மனம், பாவில் குழல் போலத் தடுமாறுகிறது. எனக்கு அமைதி தேவை. அதனால் உன் கழலில் நான் அடைக்கலம்" என ஏதும் செய்வதறியாது, அமைதியை நாடும் மணிவாசகரை நம்மால் கண்டுணர முடிகிறது.

ஒன்பதாம் பாடல்வழி மணிவாசகர், "பிரியாத நின் அடியார் உன், நீங்காச் செல்வமாகிய திருவடிப்பேரின்பம் பெற்றார். நான் உன்னை வழிபடும் வகையறியேன். இருப்பினும் நான் உனக்கு அடைக்கலம்" என்று அடைக்கலம் தேடுவதிலிருந்து அவரின் பக்குவ நிண்ணயம் உணரப்படுகிறது.

பத்தாம் பாடல்வழி, "ஆண்டவன் அருளமுதம் கொடுத்ததையும், அதனை உண்ண மணிவாசகருக்கு நல்லூழ் துணை செய்யா நிலையையும், அருளமுதம் கொடுத்த ஈசனுக்காக அதை விழுங்குகையில், விக்கி வருந்தித் தண்ணீர் கொடுத்துக் காப்பாற்று, உன் அடைக்கலப் பொருள் நான்" என்று மணிவாசகர் இறைவனிடம் இறைஞ்சும் நிலையைப் பார்க்கிறோம்.

இங்கு அமுதம் என்பது திருவருள்; அது இனிமையானது; என்றும் அழியாமையை அளிப்பது. அப்படிப்பட்ட இறைவனால் கொடுக்கப்பட்ட அந்தச்சுவையான அமுதத்தைச் சிறிது சிறிதாகச் சுவைத்து உண்ணாமல் வாரி விழுங்கினமையால் விக்கியது. உடனே மணிவாசகர், "கொடுக்கின்றவர்கள் கொடுத்தாலும், உண்ண எனக்கு ஊழ் இல்லையே! அதனால் விக்கினேன்! இறைவா குடிக்கத் தண்ணீர் கொடு, தொண்டை அடைக்கிறது. நான் உன் அடைக்கலம்" என்று உணர்ந்து வருந்தி நிற்கையில் அவரது ஞானவாழ்வு நமக்குப் புப்படுகிறது.

திருவருள் வாசகத்தின் உயிர்ப்பகுதியாக விளங்கும் இப்பத்துப் பாடல்வழி திருவடித் தியானம், முதிர்ந்த அன்பு, திருவருட் சிறப்பு விளங்கும். கல்வி ஞானம், விதித்தன செய்தல், விலக்கியன செய்யாமை, திருவடிக்கே பிச்சாதல், காமதாபங்களின்மை, திருவடிச் சார்பை எதிர்நோக்கல், தம்முடைய நலந் தீங்குகளைத் தலைவனிடத்தில் ஒப்பித்தல், தனக்கு எதிலும் முதன்மையில்லாமை, அவன் அருள்துய்க்க வன்மையில்லாமையை உணர்தல் ஆகியவை பக்குவங்கள் நிண்ணயஞ் செய்யப் பெறுதலைக்காண முடிகிறது.

அற்புதத் பாடலும், அதிசய நிகழ்வும்

"மாவடு வகிரன்ன கண்ணி பங்கா நின் மலரடிக்கே
கூவிடுவாய் கும்பிக்கே யிடுவாய்நின் குறிப்பறியேன்
பாவிடை யாடுகுழல் போற் கரந்து பரந்ததுள்ளம்
ஆகெடுவேன் உடையாய் அடியேன்உன் அடைக்கலமே"

இந்த அற்புதப்பாடல் வழி நடந்த ஒரு செய்தி மனதை நெகிழ வைக்கும் ஓர் அதிசய நிகழ்வு. தஞ்சாவூர் பள்ளியகரம் தமிழறிஞர் நீ. கந்தசாமி பிள்ளை வாழ்வில் நடந்த சம்பவம்.

கந்தசாமி பிள்ளைக்கு ஓர் ஆசிரிய நண்பர். இலத்தீன் மொழி கற்றவர். கத்தோலிக்க கிறித்தவர். வழக்கறிஞர். அழுத்தமான சமயப் பற்றுடையவர். நான்காம் வகுப்புக்கு மேல் தமிழ் பயிலாதவர். இலத்தீன், ஆங்கிலம், பிரெஞ்ச் மொழி கற்றவர்.

ஒரு சமயம் நண்பர் களைப்பாய் வீடு வருகிறார். கந்தசாமிப் பிள்ளையைப் பார்த்து, "தம்பி! என் வாழ்க்கை ஆண்டவனைத் தூற்றுவதிலேயே கழிகிறது. என்ன செய்வது? மனம் அமைதி அடைய வில்லை. a broken and a contrite heart O god thou wilt not despise. (Psalms 51-17) இச் சொற்கள்தான் எனக்கு ஆறுதல்" என நாற்காலியில் அமர்கிறார். மேலும் விவிலிய நூலின் சொற்றொடர் அருமையை எல்லாம் எடுத்துக் கூறி இந்தச் சொற்றொடர் உள்ளத்தை எவ்வாறு அமைதிப்படுத்துகின்றது. இத்தகைய அரிய வாசகங்கள் நம் தமிழல் இல்லையே" என்றார்.

உடனே கந்தசாமி பிள்ளை நண்பர் கூறிய விரிவுரைக் கெல்லாம் பொருத்தமானதும், இனிய சொற்களால் ஆனதுமான "ஏசினும்யான் உன்னை ஏத்தினும் என் பிழைக்கே குழைந்து வேசறுவேனை விடுதி கண்டாய்" (நீத்தல் விண்ணப்பம் 50) என்ற திருவாசகத் தொடரைக் கூறிப் பின் திருவாசகம், மணிவாசகர் பற்றியெல்லாம் விளக்கமாக எடுத்துரைத்தார். உடனே அந்தக் கிறித்தவ நண்பர் மனம் மகிழ்ந்து, அதன் அருமை உணர்ந்து, தான் இது காறும் திருவாசகம் பற்றித் தெரிந்து கொள்வதற்கு இயலாது போயிற்றே என்று எண்ணி, இனியும் தெரிந்து கொள்ள வாய்ப்பில்லையே என வருந்தி ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு திருவாசகப் பாட்டை வாசித்துச் சொல்லும்படி கந்தசாமி பிள்ளையிடம் கூறினார்.

கந்தசாமி பிள்ளையும் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு திருவாசகப் பாடலை நண்பர்க்குச் சொல்லிவந்தார். நாட்கள் பல கடந்தன. கிறித்தவ நண்பர் நோய்வாய்ப்பட்டார். ஆவி அகத்ததோ, புறத்ததோ என்ற நிலையில் படுத்திருந்தார். அப்பொழுது அவரைக் காண வந்த கந்தசாமிப் பிள்ளையிடம், "தம்பி! அதிகம் பேசுவதற்கில்லை. நீயும் என் நலம் பற்றி எதுவும் கேட்க வேண்டாம். காலத்தைப் போக்காது திருவாசகப்பாடல் ஒன்று சொல்" என்றார். கந்தசாமி பிள்ளை, "மாவடு வகிரன்ன..." என்ற பாடலைப் பாடினார். பாடலைக் கேட்ட கிறித்தவ நண்பர், "போதும்... ஒரு தாளை எடுத்துப் பெரிய எழுத்துக்களில் 'மலரடிக்கே கூவிடுவாய் அடியேன் உன் அடைக்கலமே' என்ற வரியை மட்டும் பெரிய எழுத்துகளில் எழுதிக் கொடு" என்றார்.

அவர் சொன்னபடி கந்தசாமிப் பிள்ளையும் பெரிய எழுத்துகளில் அதை எழுதிக் கொடுக்க அதை நண்பர் வாங்கி அருகில் வைத்துக் கொண்டு ஒரு முறை பார்த்தார். படித்தார். பின் கந்தசாமிப் பிள்ளையிடம் "நீ... போகலாம் ... இனி வர வேண்டியது இல்லை" என்று கூறிவிட்டுக் கண்களை மூடிக்கொண்டார். மறு நாள் அந்த நண்பர்...! ஆம் ! இறைவனடி சேர்ந்தார். அற்புதப் பாடல் வழி நடந்த அதிசய நிகழ்வு நம்மை எல்லாம் கண்கலங்க வைக்கிறது.

அறியப் பெறும் உண்மை

மணிவாசகரைப் பற்றிச் சிந்திக்கும் வேளையில் நாம் மனதில் இருத்திக் கொள்ள வேண்டிய செய்தி, மிகப் பெரிய பாவங்களைச் செய்து விட்டதாகச் சில இடங்களில் அவர் வருத்தினாலும் உண்மையில் அவரது வாழ்க்கை அத்தகைய கீழ் நிலைக்குப் போனதற்குரிய ஆதாரம் எங்கும் இருப்பதாகத் தெரிய வில்லை. பிறவி முதற்கொண்டே அவர் தூய வாழ்வு வாழ்ந்தார் என்பதே உண்மை.

உலகில் உள்ள அனைவரிடத்திலும் இருக்கிற கீழ் நிலைகள் தம்மிடத்து மிகுந்திருந்ததாக வைத்துக் கொண்டு அவர் விமோசனம் தேடினார் என்றே கொள்ள வேண்டும். "முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்" என்ற உயரிய வாக்கின்படி முயல்கின்ற அனைத்து மக்களும் உயர்வு அடையலாம் என்பதுதான் மணிவாசகரின் வாழ்க்கை நிலை. அதுதான் அவர் அருளிய திருவாசகத் தெளிவு. இதையேதான் வள்ளுவரும் "பிறவிப் பெருங்கடல் நீந்துவர், நீந்தார் இறைவனடி சேராதார்" எனக் கூறி விளக்குகிறார்.

25. ஆசைப்பத்து

- பேராசிரியர் டாக்டர். அய்க்கண்

பொன்னாசை, பெண்ணாசை, மண்ணாசை ஆகிய மூவாசைகளையும் மனிதன் விட்டு விட வேண்டும் என்பர். ஆசைகளே மனிதனுக்குக் கூடாது என்று சொல்வதற்கில்லை. எத்தனையோ நியாயமான ஆசைகள் மனிதனுக்கு இருக்க வேண்டியது தான்.

'ஆசைபற்றி அறையலுற்றேன்
காசில் கொற்றத்து இராமன் கதை'

என்று தன் ஆசையை வெளிப்படுத்துகிறார் கவிப்பேரரசர் கம்பர்.

இறைவனின் திருவடியை அடைய நல்லான்மாக்கள், ஆசைப்படவேண்டும் என்று திருவாசகம் படைத்துள்ளார் மணிவாசகப் பெருமான்.

'மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசுதென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறைப் பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே'

என்று அப்பர் சுவாமிகள் அருளும் இறைவனின் இணையடியைப் பெற மனித உயிர்கள் ஆசைப்படவேண்டும்.

'பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு'

என்று, பற்றாலேயே பற்றினைத் துறக்கும் வழியைக் காட்டுகிறார் வள்ளுவப் பெருமான்.

கருடக் கொடியோன் காணமாட்டாக்
கழல்-சேவடி என்றும்
பொருளைத் தந்து இங்கு என்னை ஆண்ட
பொல்லாமணியே ஓ
இருளைத் துரந்திட்டு இங்கே வா என்று
அங்கே கூவும்
அருளைப் பெருவான் ஆசைப்பட்டேன்
கண்டாய் அம்மானே!

என்று தனக்குத் திருவடி தந்தருளிய ஒப்பிலா மணியைப் பாடுகிறார் மணிவாசகர்.

'இந்த வுலகமாம் இருட்டுக்குள்ளே உழன்று தடுமாறும் எனக்கு, வழிகாட்டும் ஒளியாய் திருவடி வழங்கினாய்' என்று போற்றுகிறார். இவ்வுலக வாழ்வு எனும் அஞ்ஞானத்தை உதறிவிட்டு பரநிலை என்னும் ஞானவாழ்வைப் பெறுவதே ஒவ்வொரு மனித உயிரின் ஆசையாயிருக்கவேண்டும்.

நம்முடைய ஐம்புலன்களும், புறத்தே போகும்படியாகவே படைக்கப்பெற்றுள்ளன. புலன்கள் எல்லாம் புறத்தேயேசென்று இன்பங்களைத் தேடி அலைகின்றன. அந்தப் புலன்களை உள்ளே திருப்பி உண்மையான இன்பத்தைத் தேடுகின்றவன், நல்லான்மாவைத் தரிசித்துப் பேரின்பம் அடைகிறான் என்பது மறைகூறும் மெய்ம்மை.

'இப்பிரபஞ்ச வாழ்வாகிய மருளை விட்டுவிட்டு, அப்பாலுள்ள பரநிலை என்னும் அருளைப் பெற ஆசைப்படுகிறேன்' என்கிறார் மாணிக்கவாசகர்.

மொய்ப்பால் நரம்பு கயிறாக
மூளை என்பு தோல் போர்த்த
குப்பாயம் புக்கு இருக்க கில்லேன்
கூவிக் கொள்ளாய் கோவே ஓ
எப்பாலவர்க்கும் அப்பால் ஆம்
என் ஆரமுதே ஓ
அப்பா காண அசைப்பட்டேன்
கண்டாய் அம்மானே

குப்பாயம் என்றால் சட்டை என்று பொருள். உடம்பு மேல் போர்த்துகின்ற துணியையே குப்பாயம் என்பர். ஆனால், தோல் போர்த்த உடம்பையே குப்பாயம் என்கின்றார் மணிவாசகப்பெருமான்.

'குடம்பை தனித்தொழியப் புள் பறந்தற்றே
உடம்பொடு உயிர் இடை நட்பு'

என்ற குறளில் உடம்பை, முட்டைக் கூடு என உவமிப்பது நினைவு கூரற் குரியது.

'சட்டை, முட்டை முதலானவை போன்று அழியும் தன்மையுடைய உடல் வாழ்க்கை எனக்கு வேண்டாம்; நிரந்தர மான ஆன்மாவுக்கு, அமுத சொரூபத்தை அளித்தருள்' என்று வேண்டுகிறார் பெம்மான்.

'சீ வார்ந்து ஈமொய்த்து அழுக் கொடு திரியும்
.சிறு குடில் இது சிதையக்
கூடவாய் கோவே கூத்தா காத்து
ஆட் கொள்ளும் குருமணியே
தேவா தேவர்க்கு அரியானே சிவனே
சிறிது என் முகம் நோக்கி
ஆஆ என்ன ஆசைப்பட்டேன்
கண்டாய் எம்மானே'

சிறுகுடிலாக இருக்கின்ற இந்த உடல் வாழ்க்கையில் வெறுப்பும், ஆன்ம சொரூபத்தில் ஆர்வமும் கொண்டிருப்பதே, இறையன்பர்களின் இன்றியமையாத மனநிலையாகும். உடம்பாகிய சிறு குடிலுக்குள் கிடந்து அல்லல் உறாமல், இறைவ்னது ஆனந்தப்பெருவெளியான பர உலகத்தில் இடம் பெற விழைகிறார் மணிவாசகப் பெருமான்.

'மிடைந்து எலும்பு ஊத்தை மிக்கு அழுக்கு ஊறல்
வீறுஇலி நடைக்கூடம்
தொடர்ந்து எனை நலியத் துயர் உறுகின்றேன்
சோத்தம் எம் பெருமானே
உடைந்து நைந்து உருகி உள் ஒளி நோக்கி
உன் திரு மலர்ப்பாதம்
அடைந்து நின்றிடுவான் ஆசைப்பட்டேன்
கண்டாய் அம்மானே'

முந்தையப் பாடலில் உடம்பைச் 'சிறு குடில்' என்று குறித்தவர் இப்போது குடிலினும் சிறிய கூடமாக உடம்பைச் சுட்டுகின்றார்.

'என்பின் ஊத்தை நிறைந்த அழுக்குக்கு இடமான உடல் வாழ்க்கை வேண்டாம்' என இறைவனை வணங்கி, மனம் உருகி உருகி நைந்து, உள்ளுக்குள்ளே நிலவும் ஒளியை நாடி ஆனந்த மய வாழ்க்கையைத் தேடுகின்றார் மணிவாசகர்.

உள்ளத்திற்குள்ளே நோக்கி ஒளியைத் தேடினால், இறைவனின் அருள் கிட்டும்.

'உள்ளம் பெருங்கோயில்; ஊனுடம்பு ஆலயம்' என்பது நிலைபெற்ற உறுதி. உடம்பாகிய ஆலயத்திற்குள் உள்பார்வையைச் செலுத்தி நாடினால், இறைவனைக் காண முடியும்.

தன்னை, உடல் சொரூபமாக உணர்பவன் பொய்யன். அதனால் தான் , மாணிக்கவாசகர், தம்மைப் பொய்யன் என்று பல இடங்களில் கூறிக்கொள்ளக் காண்கிறோம். நிலைத்த பொருளாகிய ஆன்மாவாகத் தன்னை உணர்பவனே, ஆன்ம ஈடேற்றத்திற்கு உட்படுத்திக் கொள்பவனாவான்.

'அளிபுண் அகத்துப்புறம் தோல் மூடி
அடியேனுடை யாக்கை
புளியம் பழம் ஒத்துஇருந்தேன் இருந்தும்
விடையாய் பொடி யாடீ
எளிவந்து என்னை ஆண்டு கொண்ட
என் ஆர் அமுதே ஓ
அளியேன் என்ன ஆசைப்பட்டேன்
கண்டாய் அம்மானே'

'நன்றாகக் கனிந்த புளியம்பழம், அதனுடைய ஓட்டில் ஒட்டாமல் தனித்து இருப்பது போல, நானும் இந்த உடல் ஓட்டுக்குள் ஒட்டாமல் தனித்திருந்து உன் அருளுக்காக நாடி நிற்கின்றேன். இல்லங்கள் தோறும் வந்து அருளும் நீ, எளியேனுக்காக வந்து ஆட்கொள்ள வேண்டும்' என்று வேண்டுகின்றார். 'என்னுடைய பற்றற்ற தன்மையை நீ உணர்ந்து உன் அருளுக்கு உரியவன் நான் என்பதை நீ சொல்லவேண்டும் என்று ஆசைப்படுகிறேன்' என்பது மணிவாசகரின் உட்கிடக்கை.

'எய்த்தேன் நாயேன் இனி இங்கு இருக்க
கில்லேன் இவ்வாழ்க்கை
வைத்தாய் வாங்காய் வானோர் அறியா
மலர்ச் சேவடியானே
முத்தா உன் தன் முகம் ஒளிநோக்கி
முறுவல் நகை காண
அத்தா சால ஆசைப்பட்டேன்
கண்டாய் அம்மானே'

'இப் பிரபஞ்சத்தில் பல பிறவிகள் எடுத்து இளைத்து விட்டேன்: இவ்வாழ்க்கையை நீ த்தான் வைத்தாய்; 'நீயே இதை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும்' என்று வேண்டுகிறார்.

'புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரராகி முனி வராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் எம்பெருமான்'
(சிவபுராணம் - 26-31)

என்று வேறிடத்தும் இவர் கூறுகிறார்.

'விண்ணோர்கள் ஏத்துதற்குக் கூசும் மலர்ப்பாதம்' (திருவெம்பாவை-2) என்றவிடத்தும், இறைவனின் சேவடி, விண்ணோர்களைவிட, பக்தர்களுக்கே எளிதில் கிட்டும் என்பதை நிறுவுவதைக் காண்கிறோம்.

'பாரோர் விண்ணோர் பரவி ஏத்தும்
பரனே பரஞ்சோ தீ
வாராய் வாரா உலகம் தந்து
வந்து ஆட்கொள்வானே
பேர் ஆயிரமும் பரவித் திரிந்து
எம்பெருமான் என ஏத்த
ஆரா அமுதே ஆசைப்பட்டேன்
கண்டாய் அம்மானே'

'இவ்வுலகம் பிறவிகள் வந்துவந்து போகின்ற உலகம்; பிறவியே இல்லாத 'வாரா உலகம்' எனக்குத் தந்து ஆட்கொள்ள வேண்டும்' என்று வேண்டுகிறார். 'வாரா உலகம்' என்பது பிறப்பறுத்த முத்தி நிலையைக் குறிக்கும். 'சிவ சகஸ்ர நாமம் ஆகிய ஆயிரம் திருப்பெயர்களையும் ஓதி உன்னை வழுத்திக் கொண்டிருப்பேன்' என்று தன் செயல் நிலையை எடுத்துக் கூறுகிறார்.

'கையால் தொழுது உன் கழல் சேவடிகள்
கழுமத் தழுவிக் கொண்டு
எய்யாது என்தன் தலைமேல் வைத்து
எம்பெருமான் பெருமான் என்று
அய்யா எந்தன் வாயால் அரற்றி
அழல் சேர் மெழுகு ஒப்ப
அய்யாற்று அரசே ஆசைப்பட்டேன்
கண்டாய் அம்மானே'

'உன் திருவடியைப் பற்றிக் கொண்டும் அதை என் தலைமேல் தாங்கிக் கொண்டும், உன் திருப்பெயர்களை ஓதிப் போற்றி, தீயிலிட்ட மெழுகாய் உள்ளம் உருகி வழிபடுவேன்' என்று கூறுகிறார் மணிவாசகர்.

ஐம்புலன்களையும் இறைவன் பால் திருப்பி, புறவுலகத்தினும் மேம்பட்ட பர உலகத்தின் இன்பங்களைத் துய்க்கச் செய்ய வேண்டும்.

'சிந்தனை நின்தனக்கு ஆக்கி நாயினேன் தன்
கண்இணை நின் திருப்பாதப் போதுக்கு ஆக்கி
வந்தனையும் அம்மலர்க்கே ஆக்கி வாக்கு உன்
மணிவார்த்தைக்கு ஆக்கி, ஐம்புலன்கள் ஆர
வந்தனை ஆட்கொண்டு உள்ளே புகுந்த விச்சை
மால் அமுதப் பெருங்கடலே மலையே உன்னைத்
தந்தனை செந்தாமரைக் காடனைய மேனித்
தனிச்சுடரே இரண்டு மிலித் தனியனேற்கே'

(திருச்சதகம் 26)

என்ற பாடலில், அகக் கரணங்கள் புறக்கரணங்கள் எல்லாவற்றையும் இறை வழிபாட்டுக்கே பயன்படுத்தும் முறை தெரிவிக்கப்பெறுகிறது.

விழிகள், விக்கிரகத்தில் மூர்த்தியைக் காண்கின்றன: காது அவனது திருப்புகழைக் கேட்கிறது: மூக்கு, வழிபாட்டோடு சம்பந்தப்பட்ட நறுமணத்தை நுகர்கிறது: நா, நைவேத்தியமான பிரசாதத்தைப் பக்திபூர்வமாகச் சுவைக்கிறது: இறைவன் திருநாமத்தையே கூறிப் பரவுகிறது. இறைவற்குச் சூட்டிய

பூமாலையையும் சந்தனம், திருநீறு ஆகியவற்றையும் பக்தன் தன்மேனியில் அணியும்போது அவனுடைய ஊறு, இறைவனோடு இணைக்கப்பெறுகிறது. இவ்வாறு கருவி கரணங்களையெல்லாம் இறை வழிபாட்டிலேயே பயன் படுத்துவது, உடன்பாட்டு நெறியென்றும், மனதையும் புலன்களையும் அடக்குதல் என்பது எதிர்மறை நெறியென்றும் கூறுவர்.

'செடியார் ஆக்கைத் திறம் அற வீசிச்
சிவபுரம் நகர்புக்குக்
கடியார் சோதி கண்டு கொண்டு என்
கண்இணை களி கூரப்
படிதான் இல்லாப் பரம்பரனே உன்
பழ அடியார் கூட்டம்
அடியேன் காண ஆசைப்பட்டேன்
கண்டாய் அம்மானே'

'குற்றம் நிறைந்த இந்த உடம்பின் தொடர்பை அறவே ஒழித்துவிட்டு, ஒப்பற்ற ஒளியாய்த் திகழ்கின்ற உன் சந்நிதியை அடைந்து ஆங்குள்ள நின் அடியார் திருக்கூட்டத்தில் திளைத்திருக்க விழைகின்றேன்' என்று தன் ஆசையை விண்ணப்பம் செய்கிறார் மணிவாசகர்.

'வெம் சேல் அனைய கண்ணார் தம்
வெகுளி வலையில் அகப்பட்டு
நைஞ்சேன் நாயேன் ஞானச்சுடரே
நான் ஓர் துணை காணேன்
பஞ்சு ஏர் அடியாள் பாகத்து ஒருவா
பவளத் திருவாயால்
அஞ்சேல் என்ன ஆசைப்பட்டேன்
கண்டாய் அம்மானே'

'விருப்பத்தை ஊட்டுகின்ற மீனைப்போன்ற கண்களையுடைய பெண்களால் காமவலையில் சிக்கி மெலிந்தவன் நான். ஞானச்சுடராகிய உன்னைத் தவிர வேறு துணை எனக்கு இல்லை. உமையவளைப் பாகம் ஏற்றிருக்கிற

சிவபெருமானே! உன் பவளத் திருவாயால் அஞ்சாதே என்று கூறி என்னை ஆட்கொள்ள ஆசைப்படுகிறேன்' என்று வழுத்துகிறார் மணிவாசகர்.

'இந்த உலக வாழ்க்கையில் நாயேனாகிய நான் அலைப்புண்டு நைந்தேன்' என்று அரற்றும்போது 'நைந்தேன்' என்ற சொல்லே 'நைஞ்சேன்' என நைந்து ஒலிப்பது சொன்னயம் காட்டுகிறது.

முந்தைய ஒன்பது திருப்பாட்டுக்களிலும், சிவபெருமானை 'உமையொரு பங்கா!' என்று விளிக்காத மாணிக்கவாசகர் 'வெஞ்சேல் அணைய கண்' உடைய பெண்கள் பற்றிய பற்றைக் கூறும் இப்பாடலில் மட்டும், இறைவனைப் 'பஞ்சேரடியாள் பாகத்து ஒருவா!' என்று போற்றுவது, குறிப்பிடற்குரியது.

நூல் முழுமையும், ஒரே மாதிரியான கூற்று , திரும்பத் திரும்ப வருவதாகச் சிலருக்குத் தோன்றலாம். ஒருவர், குறிப்பிட்ட நூல் செய்யும்போது இவ்வாறு வந்தால் 'கூறியது கூறல்' எனலாம். ஆனால் மணிவாசகப்பெருமானின் திருப்பாடல்கள், ஒரு நூலாக அமைப்பதற்காக அருளியவை அல்ல. ஒவ்வொரு முறையும் அவர், உள்ள உருக்கத்தால் தோன்றிய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார். ஒரே சொல்லுக்கு, களம், காலம், கர்த்தாவைப் பொறுத்துப் பொருள் வேறுபாடுகள் தோன்றும். திரும்பத் திரும்பச் சுட வைக்கும்போது நல்ல ஆவின் பால், செறிந்த சுவையாவதைப் போல், மணிவாசகரின் கருத்துக்கள் ஒவ்வோரிடத்தும் அனுபவ ஆழத்திலும் உணர்வுச் செறிவிலும் வேறுபடுவதை நுண்ணிதின் உணர வேண்டும்.

தேங்கியுள்ள தண்ணீர், எல்லாவிடத்தும் தண்ணீர்தான் என்றாலும், அதனுடைய பரப்பையும் ஆழத்தையும் பொறுத்துத் திறனில் வேறுபடும். அதைப்போன்றே மணிவாசகப் பெருமானின் பாடல்கள் சில, ஒரு தன்மையனவாகத் தோற்றமளித்தாலும், ஒவ்வொன்றும், உணர்வாலும் அனுபவத்தாலும் வேறுபட்டவை என்பது போதரும்.

26. அதிசயப் பத்து

கல்லாடர் க. கிருட்டிணமூர்த்தி

"அருள் பழுத்த மாணிக்க வாசகன் தோய்ந்து
பொருள் பழுத்த மெய்ம்மை பொழிந்தான்- இருள் பழுத்து
வாடுவதேன் உய்திகண்டாய் ஏழை மடநெஞ்சே
நாடுகவே நாளும் நவின்று"

மணிவாசகர், திருவாய் மலர்ந்தருளிய திருவாசகம் ஒப்பற்ற தேனாகும். தேன், கெடாத இயல்பினது; தன்னைச் சார்ந்தன வற்றையும் கெடாது பேணும் தன்மைத்தாம். அவ்வாறே திருவாசகமும் ஓதவோத உள்ளொளி பெருக்கி உலப்பிலா ஆனந்தப் பெரு வெள்ளத்துள் திளைக்க வைப்பதாம்.

கீதை பாசத்தால் மயங்கிய மாந்தனுக்கு அறம் கூறிக் கடமையாற்றத் தூண்டத் தோன்றியது என்பர்.

வள்ளுவமோ வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வ நிலையை மாந்தன் எய்த வழிகாட்டுகிறது.

திருவாசகமோ சிவனின் அநாதியான முறைமையையும் திருத்தலங்களில் திருவருள் புரிந்தமையையும், அண்டம் முழுதும் தூல சூக்கும நிலையில் வியப்புற விளங்கும் நீர்மையையும், உலகத் தோற்றத்தையும் உரைத்து, அவன் மீது அளப்பரிய நாட்டமுற்ற நல்லுயிர் அவனால் தடுத்து ஆட்கொள்ளப்பட்டு உலகநிலை மறந்து மல பரிபாகம் உற்றுச் சிவானாந்தப் பேரின்பத்தில் திளைக்கத் தொழுகையும், அழுகையும்ஆனந்தப் பெருக்கும் எய்தும் அனுபவப் பிழிவாக அமைந்து விளங்குகிறது.

"இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க"

என மணிவாசகப்பெருமான் உரிமை கலந்த உணர்வோடு உரைத்து, ஜி.யு.போப் போன்ற வெளிநாட்டவரையும் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்க வைத்துத் திருவாசகத்தை ஓதியுள்ளார்.

வாட்டமிலா மாணிக்கவாசகனின் வாசகம் மாந்தர்களை மட்டுமின்றி எவ்வுயிரையும் இன்பில் ஆழ்த்தும் என்பார் வள்ளார்.

ஐம்பத்தொரு திருப்பதிகங்களாக அறுநூற்று ஐம்பத்தாறு செய்யுட்கள் திருவாசகத்துள் உள்ளன.

"செம்மைநலம் அறியாத சிதடரொடும் திரிவேனை
மும்மை மலம் அறுவித்து முதலாய முதல்வன் தான்
நம்மையும் ஓர் பொருளாக்கி நாய் சிவிகை ஏற்றுவித்த
அம்மை எனக்கு அருளியவாறு ஆர்பெறுவார், அச்சோவே"

எனச் செம்மாந்து பாடும் மணிவாசகர் எண்ணிறந்த இடங்களில் இறைவனின் பேரருட் பெருங்கருணையை எண்ணி வியக்கிறார். தமது உள்ளத்தின் மையக் கருத்தே இறையருளிற்கு நன்றி பாராட்டலே என விளக்குமாப்போல் நூலின் மையப் பகுதிக் கண்ணும் இதனைப் பதித்துள்ள பாங்கு எண்ணி எண்ணி இன்புறற் பாலது. ஆம். பதிகங்கள் ஐம்பத்தொன்று எனும்போது அவற்றின் மையம் இருபத்தாறேயாம் அன்றோ?, முத்தி இலக்கணம் மொழிந்து தடுத்தாண்ட தண்ணளியைப் போற்றும் அப்பதிகமே "அதிசயப்பத்து."

இறைவனின் எளிவந்த தன்மை தம்மைத் தடுத்தாண்ட தென்று வியந்து போற்றுகிறார். அஃதே "அதிசயம்". எனினும் இச்சொல்லை அதி - சயம் (ஜெயம்) எனப்பிரித்து

"தந்தது உன் தன்னைக் கொண்டது என் தன்னைச்
சங்கரா ஆர்கொலோ சதுரர்"

என அன்புரிமை மீதுறக் கேட்ட மணிவாசகரின் "பெருவெற்றிச்" செயல் எனப் பொருள் கொள்ளலும் ஏற்புடைத்தே.

பத்து என வரும் திருப்பதிகங்கள் செத்திலாப் பத்தில் தொடங்குகின்றன. சிவானந்த நாட்டம் மீதுற்ற உயிர், உலகியலின் சிறுமையைச் சிந்தித்து உடலினை இழிவென உன்னுகிறது; துன்பில் துவள்கிறது. வள்ளுவப் பெருந்தகையும்,

"மற்றும் தொடர்ப்பாடு எவன்கொல் பிறப்பறுக்கல்
உற்றார்க்கு உடம்பும் மிகை"

என இயம்புகின்றார். "குறிக்கோளின்றிக் கெட்டேனே" என ஏங்கிப்

பக்குவ நிண்ணய நிலை எய்தி உயிர், இறைவனன்றி உய்தி தருவார் யாருமில்லை எனத் தெளிந்து அவனைச் சார்தலே "அடைக்கலப் பத்து"

அடைக்கலம் எய்திய நல்லுயிர் இறைவனின் திருநோக்கால் அருள்பெற ஆசையால் உந்தப் பெறும் நிலையே ஆசைப்பத்து.

உயிரின் உந்துதலை உணர்ந்த இறைவன் எளிமையாய் மண்ணிடை வந்து தடுத்தாளும் தன்மையினை விளக்குவதே அதிசயப் பத்து.

இளமை தொட்டே இறை நாட்டம் உற்ற மணிவாசகரைத் திருப்பெருந்துறை மேய பிரான் அவ்வூரின் கண் குருவடிவினராய் எழுந்தருளி ஆட்கொண்டான். மணிவாசகரைப் பேரின்பப் பெருநெறியாம் ஞான நெறிக்கு இட்டுச் செல்ல அருளுரை அருளியதால் அவ்வூர் "திருப்பெருந்துறை" ஆயிற்று என்க. அவ்வூர்க்கண் இலங்கி, இன்றும் பக்குவ ஆன்மாக்களைப் ப்ரமன் ஈர்த்தலின் "ஆவுடையார் கோயில் " எனவும் வழங்கக் காண்கிறோம்.

குருவடிவினராய் இறைவன் அமர்ந்திருந்து ஆட்கொண்ட மரமே "குருவிருந்த மரம்" என்றாகிப் பின் "குருந்த மரம்" என ஆனது போலும்.

உடல்கள், உட்கருவிகள், உலகம், துய்ப்புப்பொருள்கள் என்பன இறைவனின் கருணைக் கொடைகளாம். இவை உயிர்கள் கடைத்தேற உதவுவன. இவை "தோற்றியதிதியே " ஆதலின் "ஒடுங்கி மலத்துள" தன்மையனவாம்.

நிலையா நீர்மைப் பொருள்களை ஓர்ந்து நீக்கி, நிலையான இறைவனைத் தெளிந்து, தாமும் அத்தன்மை பெறத் தகுதியுடையவரே எனத் தேறி உயிர்கள் பக்குவம் உறுதல் வேண்டும் என்பதே இறைவனின் திருக்குறிப்பாகும்.

மாறாக, மும்மலக் கட்டுள் மூழ்கிய உயிரோ, புறத்தே இன்பம் காணப் புறப்பட்டு அல்லற்பட்டு வினையின்

நிலைக்களமாகிப் பிறவிப் பெருங்கடலில் கரை காணாது உழல்கிறது. என்னே அவலம்!

எலும்பு துண்டில் ஏதோ இருப்பதாய் எண்ணித் தானே தனித்துத் துய்க்கும் தாங்கொணா வேட்கை தலைதூக்கப் பன்முறை கடித்துக் கடித்து வாய் புண்ணாகிய பின்னர் தெளிந்து அதனை விடும் நாயினைப் போன்றே, மாந்தன் புறப்பொருள்கள் இன்பம் தருவன என மயங்கி உடல் கெட்டு, உளம் கெட்டு உலகிடை உலவி உயிர்விடுதலையே பெரும்பாலும் நாம் கண்ணுறுகின்றோம்.

"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்"

என்னும் வள்ளுவரின் வாய்மொழியினையும்

"தீதும் நன்றும் பிறர்தர வாரா
நோதலும் தணிதலும் அவற்றோ ரன்ன"

என்னும் கணியன் பூங்குன்றனாரின் அறக்கோட் பாட்டையும் பக்குவம் பெற்ற உயிர்கள் எண்ணத் தலைப்பட்டுப் "பட்டதெல்லாம் போதும்" "என்றும்" "இனித் துயரம் படமாட்டேன்" "என்றும்" "ஆற்றேன் எம் ஐயா அரனே ஒ..." என்றும் நைந்து உருகுகின்றன. இந்நிலையே பக்குவ நிலையாகும்.

பக்குவம் எய்திய மாந்தன் உலகியல் நாட்டத்தை வேரறுக்கத் தொடங்குகின்றான். பொருளியல் நாட்டம் கொண்டோர் அவனைப் பித்தன் என ஏசுகின்றனர்.

"மத்த மனத்தொடு மால்இவன் என்ன மனநிலையில்
ஒத்தன ஒத்ன சொல்லிட ஊர் ஊர் திரிந்து"

என மணிவாசகர் குறிப்பிடும் நிலை அத்தன்மையதே.

இறைவன் தன்னையே எண்ணி வாடும் உயிர்களுக்காகவே குருவடிவில் குவலயத்தே வருகின்றான். அதிசயப்பத்து இவ்வாறு இறைவன் தோன்றி அருளுரை ஈந்து ஆட்படுத்திய செய்தியை வியந்து போற்றிய பகுதியேயாகும். பல்வேறு இடங்களில் தம்மை நாயினும் கடையேன் எனக் கூறிக் கொள்ளும் மணிவாசகர்

இத்திருப் பதிகத்தின் கண்ணும் தம்மைத் தாழ்த்திக் கூறி இறைவனின் எளிவந்த தன்மையை எண்ணி இறும்பூ தெய்துகின்றார்.

மண், பெண், பொன் என்னும் மூவாசைகளுள் அடிகள் மூழ்கியிருப்பாரோ?. ஒருக்காலும் இருந்திரார். மாந்தர் பலரின் குற்றங்களையும் தம் குற்றமாகவே ஏற்று உரைத்தலே அடியார்களின் மரபாம். அவ்வாறு உரைத்தல் ஆணவம் தலைக்க விடாதிருக்க உதவும்; அன்றியும் படிப்போரும் இக்குற்றங்கள் தம்பால் மலிந்திருத்தலை மீண்டும் மீண்டும் படிக்குங்கால் உணரத் தலைப்படுவாரன்றோ? அகநோக்கம் தோன்றி அனைவரையும் அருளாளர்களாய் ஆக்க வேண்டும் என்பதே அடியார்களின் பெருவிழைவு. என்னே செழுங் கருணை !

உயிர் அநாதி. மாயையும் அநாதியே. மாயை ஒளிப்பொருள் எனச் சைவ சிற்தாந்தம் கூறும். எனினும் அது மயக்கமும் தரவல்லது.

சைவ சித்தாந்தத்தில் உயிரை 'ஆ' என்றும் மலத்தை 'ம' என்றும், அருளை 'வ' என்றும் குறிப்பர். "வைப்பு மாடு" என அதிசயப் பத்தினை மாணிக்கவாசகர் தொடங்கியதின் மூலம் அருள் முன்னிற்பின் மலம் பின் தள்ளப்படும் என்பதை உணர்த்தினார் போலும். என்னே நுண்மை!

இப்பதிக முதற் செய்யுளில் இறைவனை 'அப்பன்' எனக் குறிப்பிடுகிறார். உலகின் தலையாய இன்பம் எனப் பெண்ணின்பத்தை எண்ணி மயங்கும் உயிரைக் கண்டித்தன்றோ மாற்ற வேண்டும். பொதுவுறக் கூறின் தாயினும் தந்தையே கண்டிப்புக் காட்டுபவன். ஆகவேதான் அடிகளார் அவ்வாறு அழைத்தனர் போலும்.

நீதியை நினைக்காமை, நல்லோருடன் கூடாமை இவை பிற குற்றங்கள் என்கிறார். நீதியை அன்பால் அரவணைத்து எடுத்துரைப்பதே உளத்தில் நன்கு பதியவைக்கும். ஆதலால் இரண்டாம் செய்யுளில் 'பாதி மாதொடுங் கூடிய பரம்பரன்' என அம்மையப்பராய் இறைவனைக் காட்டுகிறார்.

"முப்புரமாவது மும்முல காரியம்" என்றவாறு வல்வினை மாய்க்க "முக்கணது உடைய எந்தை" எனப் போற்றிய மணிவாசகர் அச்செய்யுளிலேயே அடியார்க்கு எளியவராகவும் இளமதி சடையில் ஏந்தி நிற்கும் அன்னை எனக் குறிப்பிடுதலைக் காண்கிறோம்.

திருவருள் திறம் அறியாது நரகிடை வீழ நான் முயன்றேன் இக்காரணம் பற்றியே உலகம் தன்னைப் பித்தன் என ஏசிற்று என்கிறார். "உலகம் என்பது உயர்ந்தோர் மேற்றே நிகழ்ச்சி அவர்கட்டாலன" என்னும் மரபின்படியே உலகவரை ஈண்டு உயர்ந்தோராகவே கண்டார்.

பரமன்புகழ் பாடிப் பரவாமலும், ஐந்தெழுத்தை ஓதாமலும், கலை ஞானியர் கூட்டுறவின்றி மண்ணில் பிறந்து மண்ணாக விருந்தேன் என நொந்து கூறும்போது படிப்போர் உள்ளம் பதறாமல் இருக்குமா? என்னே உருக்கம்!

நான் என் உயிரை எண்ணாது உடலைக் கருதுதலே உலகவரின் மயக்கம். உடலின் நிலையாமையை எடுத்து விளக்கும் அடிகளின் பாவடிகள் நெஞ்சினை நெகிழ வைப்பன.

இறைவன் தோன்றி அருளுரை அருளினன். அவ்வுரை ஐந்தெழுத்தாம். ஐந்தெழுத்தின் சீர்மை நுண்ணியது. அணுவுள் ஆற்றல் அடங்கியிருக்குமாப்போல், அவ்வாற்றல் அடங்கியுள்ளது. சிந்தனையால் வெளிப்படுகையில் அதன் நுண்மை புலனாகும். எனினும் "நொடிக்குள்" அவன் அவ்வுரையை அருளினன். உயிர் உணர்த்த உணரும் தன்மைத்து. பாறையுள் பொங்கி வரும் வற்றாத நீர்போல், மெய்யறிவும் பொங்கும் தன்மையதே. வடலூர் வள்ளல் பெருமான்.

"அண்டகோடிகள் எல்லாம் அரைக்கணத் தேகிக்
கண்டுகொண்டிட ஒளிர்கலை நிறை மணியே"

என விளக்கும் பாங்கு ஈண்டு எண்ணத் தக்கது. இறைவனின் திருநோக்காலும், அருளுரையாலும் உயிரும் அந்நிலை பெறலாமன்றோ?

"உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டேன்"

எனத் திருமந்திரம் கூறுமாப்போல், உடலின் கண்ணே உறுபொருள் திகழும் உண்மையை இப்பதிகத்துள் தெளிவுறுத்துகின்றார்.

உயிர்கள் மும்முலங்களில் ஆட்பட்டுப் பிறவிப் பெருங்கடலுள் வீழ்ந்து, பொய்மைப் பொருள்களைப் புணை எனத் தேடித் துயருழந்து, வாழாமல் வாழ்ந்து துன்புறுங்கால், "ஆற்றேன் எம் ஐயா அரனே" என்று அலறுங்கால் இறைவன் குருவாய் வந்து அருளுரை வழங்கி ஆட்படுத்திப் பேரின்பப் பெருங்கடலுள் ஆழ்த்துவதே அதிசயப் பத்தில் விளக்கப்படும் செய்தியாம்.

அவன் அருளாலே அவன் தாள் வணங்க வைத்து ஆட்படுத்தும் அதிசயம் அநாதியானதே. அம்மெய்ஞான நிலை எய்தி எவ்வுயிரும் இன்புறுக.

"வாதவூர் வாரானை வாலறிவு பெற்றானை
வாதவூ ராருருகி வாய்மலர்ந்தார்- வாதவூர்
நாடிநீ நையா திறைமலர்ப் பாதவூர்
தேடியே இன்பில் திளை"

வாழ்க வாதவூரர் பொற்றாள்! வாழ்க உலகெலாம்!

27. புணர்ச்சிப் பத்து

- ஆய்வாளர், க. சொல்லேருழவன்

உலகில் மனித குலம் ஆய்ந்து காணவேண்டியது மனிதனைப் பற்றிதான். இதனை "The Proper study of Man kind is Man" என ஆங்கில நாட்டுக் கவிஞர் போப் கூறுவர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் கிரேக்க நாட்டில் அப்போலோ என்ற தெய்வத்திற்கு எடுக்கப்பெற்ற கோயிலில் "உன்னை நீ அறிந்துகொள்" என்பதை நோக்குமிடத்து உயிருக்கு உயிராக உள்ள ஆன்மாவை விட அருமையானது வேறொன்றும் இல்லை என்பதை உணர முடிகிறது. அத்தகைய ஆன்மாவும் சிவமும் கலப்பினால் ஒன்றாய்ப் பிரிவறக்கலந்து ஒன்றியுடனாகும். அத்து வித நிலையைப் புணர்ச்சிப் பத்தில் மாணிக்கவாசகர் மொழிவர். அப்புணர்ச்சிப் பத்து குறித்து ஆய்வது இங்கு நோக்கமாக அமைகிறது.

புராணம் கூறும் சிறப்பு

"ஆண்ட குருவைப் பிரியா தணைந்து பணி
புரிந்து மிகும் அன்போ டின்பம்
பூண்டு கிடக்கப் பெறுவதென்று கொலோ
எனும் விருப்பம் புணர்ச்சிப் பத்தாம்"

எனத் திருப்பெருந்துறைப் புராணம் குறிப்பிடும். ஈண்டு திருப்பெருந்துறையில் குருவாக எழுந்தருளி வந்து ஆட்கொண்டருளிய இறைவனைப் பிரியாது போற்றும் பேரன்பராகிய திருவாதவூரடிகள், அம்முதல்வன் திருவடிகளைப் பூண்டு அப்பெருமானைப் பிரிவின்றி ஒன்றியிடனான பேரின்ப நிலையினை விரும்பி 'என் பொல்லா மணியைப் புணர்ந்து புயப்பட்டிருப்பது என்று கொல்லோ, என்று நெஞ்சம் நெக்குருகிப் போற்றும் நிலையில் இப்பத்தினை அருளிச் செய்தது, எனக் கூறுவது நோக்கத்தக்கது.

அத்து விதம்

புணர்ச்சிப் பத்திற்கு இலக்கணமாக அமைவது அத்துவிதமாகும். அவ் அத்துவிதம் என்பது 'ஒன்று மல்ல இரண்டு மல்ல' என்பது நம் முன்னோர் கருத்துரையாகும். ஆன்மாவும் சிவனும் ஒரு பொருளெனில் ஆன்மா சிவத்துடன் கூட வேண்டியதில்லை. ஆன்மா வேறு சிவன் வேறு என இரண்டாய் நிற்கும் எனச் சொல்லின் அந்நிலையைச் சாயுச்சியம் (ஆன்மா கடவுளிடம் ஐக்கியமாகும் நிலை) என்று சொல்லுவதற்கு இடமில்லை. ஆயின் இறைவனிடம் இருந்து பிரிந்த ஆன்மா இறைவனை அடைய எப்பொழுதும் அவாவி நிற்கின்றது. ஆணும் பெண்ணும் கலந்த முழுமையான வடிவு ஒன்றிலிருந்தே அவ்வினைகள் பிரிந்தன என்றும் அதனால் அவை மீண்டும் ஒன்றின்னொன்று கூடி முழுமையடையவே வேட்கை கொண்டு நிற்கின்றன. இவ்வேட்கை விண்ணப்பமே இப்புணர்ச்சிப் பத்தின் அத்துவித இலக்கணமாகும்.

செய்யுளின் அமைப்பு

இதில் சீர்கள் ஆறு, ஏழு, எட்டு கலந்துள்ளன. ஆதலின் இது ஒரு கலவைப் பாட்டு. இப்புணர்ச்சிப் பத்து ஒருவாறு சுந்தரர் தேவாரத்தில்

"முதுவாய் ஒளி" (VII : 41) என்னும் பதிகத்திற்குரிய பண் கொல்லிக் கேள வானத்தில் (ராகம்- நவரோசு) பாடுதற்கு உரியது.

இறைவன் எத்தன்மையன்

மணிவாசகர் இறைவனின் தனித்தன்மைகளைப் பலவாறு புகழ்கின்றார். "ஒளி தரும் பொன் மலைப் போன்றவன் (*27: 1)!* 'தொளைக்கப்படாத முத்தை ஒப்பவன்' *(27:1)* 'கருணையின் இருப்பிடம்' *(27:1)* "திருமாலும் பிரம்மனும் தடைசெய்யப்பட்டு இன்னமும் சென்றடைய இயலாத தன்மையன் " *(27:1)*" நெடுமாலும் பிரம்மனும் அஞ்சும் படியாக நெடிதுயர்ந்து நின்ற தன்மையன்"(*27:3)* "அவன் சொல்லுக்கு அப்பால் உள்ள சோதி" *(27:4)* "கீழ் என்றும் மேல் என்றும் பாகுபடுத்த முடியாத

அகண்ட சோதியானவன் "(27:5) " செவ்வானம் போல் விளங்குபவன் "(27:8) என்றும் "பிறர்க்கு நினைத்தற்கு அரிதான நெருப்பு, நீர், காற்று, நிலம், வானம் ஆகிய ஐந்தும் ஆனவன்"(27:8) "மூவேழ் உலகங்கள் அனைத்திற்கும் தந்தையும் தாயும் ஆனவன்" (27:9) "பிறவி நோயின் மருந்து" (27:9) எல்லாவற்றையும், காப்பவனும், படைப்பவனும், ஒடுக்குபவனும், தேவர்க்கெல்லாம் முன்னவன், என்னும் யாண்டும் இளமையோடு இருக்கும் மூலப் பொருளன் "(27:10) என்றெல்லாம் இறைவனின் தனித் தன்மையைப் போற்றிப் புகழ்பாடுகின்றார்.

ஆன்மக் காதல்

ஒருமுறை இறைப் புணர்ச்சி இன்பத்தை அனுபவித்தவர் அதனை மீண்டும் பெற பேரவா கொள்வர். அதுபோல் மணிவாசகர் ஒரு முறை இறைப்புணர்ச்சி அடைந்ததை,

"நீண்ட மாலும் அயனும் வெருவ
நீண்ட நெருப்பை விரும்பிலேனை
ஆண்டு கொண்ட என் ஆரமுதை " (27:3)

என்றும்

"........... இம்மா நில முழுவதும்
திகழப் பணிகொண் டென்னை ஆட்கொண்டவா "(27:5)

என்றும்

"பரிந்து வந்த பரமா னந்தம்
பண்டே அடியோர் அருள்செய்ய"(27:6)

என்றும்

"............நாயேன் தனை யாண்ட "(27:8)

எனக் கூறுவதன் வழி இறைவனுடன் முன்பே உறவு கொண்டு அவ்வுறவுடன் அவனை அவனது அன்பைத் தொடர்ந்து பெறமுடியாமல் அவன் மறைந்ததைக் குறித்து, வருந்தி மீணடும் அவனை அடைவதற்கு மற்றும் அவ்வுறவிற்கு வழி செய்ய வேண்டும் என்பதை

"நெக்கு நெக்குள் உருகி உருகி
நின்றும் இருந்தும் கிடந்தும் எழுந்தும்
நக்கும் அழுதும் தொழுதும் வாழ்த்தி
நானா விதத்தாற் கூத்தும் நவிற்றிச்
செக்கர் போலுந் திருமேனி திகழ
நோக்கிச் சிலிர்சி லிர்த்துப்
புக்கு நிற்ப தென்று கொல்லோ என்
பொல்லா மணியைப் புணர்ந்தே "*(27:8)*

என்பர். ஈண்டு உள்ளம் நெக்கு நெக்கு இடைவிடாது உருகி நின்றும், இருந்தும், கிடந்தும், எழுந்தும், சிரித்தும், அழுதும், தொழுதும், வணங்கியும் வாழ்த்தியும், பல வகையாகக் கூத்தாடலைச் செய்தும் செவ்வானம் போல விளங்கும் திருமேனியினை விளங்கப் பார்த்து, மெய் சிலிர் சிலிர்த்து என் தொளைபடா மணியினைச் சேர்ந்து யான் புகுந்து நிற்பது தான் எந்நாள் என வேண்டுகிறார்.

மற்றும்

"புடைபட்டிருப்ப தென்று கொல்லோ "*(27:1)*
"போற்றி நிற்ப தென்று கொல்லோ"*(27:2)*
"பூண்டு கிடப்ப தென்று கொல்லோ" *(27:3)*
"புல்லி புணர்வது தென்று கொல்லோ" *(27:4)*
"புகழப் பெறுவ தென்று கொல்லோ"*(27:5)*
"புரிந்து நிற்ப தென்று கொல்லோ" *(27:6)*
"புனையப் பெறுவ தென்று கொல்லோ" *(27:7)*
"புக்க நிற்ப தென்று கொல்லோ" *(27:8)*
"போதாயந் தணைவ தென்று கொல்லோ " *(27:9)*
"பூப்போ தணைவ தென்று கொல்லோ " *(27:10)*

என உரைப்பதன் வழியும், " முன்பு ஆண்டது போல் இப்போதும் அருட்காட்சி கொடுத்து முற்றிலும் அடைக்கலமாக ஏற்றுக் கொண்டு விட்டால் சிக்கல் ஒழிந்தது. அப்போது தான் உலகம் ஏற்கும், உலகம் அடியாரையும் ஏற்றவரையும் புகழும், சிறப்பாக எண்ணும், என்று உரைப்பதன் வழி இறைவன் மீது மணிவாசகர் கொண்ட ஆன்மக் காதல் புலப்படும். மற்றும் பிரிவின் அவலமும்

வேட்கையும் உலகில் பரந்து தத்தளிக்கும் ஆன்மாவின் அவலக் குரலாக ஒலிக்கிறது. ஆன்மா அனைத்தின் வேட்கையையும் மாணிக்கவாசகர் குரல் எடுத்து இயம்புகிறது.

புறப்பற்று விலகி நின்று மீண்டும் வந்து சூழ்வது போல அகப்பற்றாகிய நான் என்னும் உணர்வு இறைக்காட்சியின் எழுச்சியில் விலகி பின்பு மீண்டும் வந்து உயிரைப் பற்றிக் கொள்ளும்; ஆயினும், இக்காட்சியில் மனத்தில் விளைந்த அன்பு மட்டும் தன் ஆற்றலில், அளவில் குறைவதில்லை. அந்த அன்பின் வெளிப்பாடே புணர்ச்சிப் பத்தாய் அமைந்துள்ளது என்பது வெளிப்படை.

28. வாழாப் பத்து

- பேராசிரியர். **கு.ப. கண்ணன்**

திருவாசகத்தில் வாழாபத்து என்பது ஓர் அழகிய சிறு பகுதி. அது பத்துப் பாடல்கள் கொண்டது; திருப் பெருந்துறையில் அருளப் பெற்றது. அப்பதிகத்தின் கருத்துக்குத் தரப்பட்ட பழைய தலைப்பு 'முத்தி உபாயம்' என்பது.

வாழா வாழ்வருள் வாழாப் பத்து

தத்துவ ஞான முத்தி உபாயம்" என்று அகத்தியர் அருளிய திருவாசகத் திருவுள்ளக்கிடை தெரிவிக்கிறது. பிரபஞ்ச மயல் நீங்கிப் பரபோகத்தைக் கூடுகிற உபாயத்தை உரைக்கும் பகுதி என்று அப்பதிகத்தைப் பழைய குறிப்புக்கள் விளக்குகின்றன. பற்றறுதல் முத்திக்கு உபாயம் ஆகலின் அது முத்தியுபாயம் ஆயிற்றுப் போலும். உலகப் பற்று துன்பம் தருவது. பற்றற்றான் பற்று இன்பம் தருவது. உலக வாழ்க்கையை வெறுத்து இறைவனின் திருவடிப் பேற்றினை விரும்பிப் பாடிய பதிகம் அது.

"நீண்ட கடல் சூழ்ந்த இவ்வுலகில் பற்று ஒன்றும் இலேன், இவ்வுடற்கண் நின்று வாழ்கிலேன், நின் திருவடி நிழற் கீழ் வருக என்று எனக்கு அருள்புரி" என்று இறைவனிடம் வேண்டுகிறார் மணிவாசகர்.

"ஆரோடு நோகேன் ஆர்க்கெடுத்து உரைக்கேன்
ஆண்ட நீ அருளிலை யானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்"

என்னும் திருவாசக அடிகள் இளம் வயதில் இராமலிங்க வள்ளலாரின் இதயம் ஈடுபட்ட இனிய வரிகள் என்பர் அறிஞர்.

திருவாசகம் ஓர் அனுபவம், அந்த அனுபவம் தமக்கு வேண்டும் என்று வாதவூரடிகளை வடலூர் அடிகளார் வேண்டுகிறார். "மாசகன்ற நீ திருவாய் மலர்ந்த தமிழ் மாமறையின் ஆசகன்ற அனுபவம் நான் அனுபவிக்க அருளுதியே" என்னும்

வள்ளலாரின் வரிகள் வைர வரிகளாக இன்பம் பயக்கின்றன.

மணிவாசகர் இறைவனிடம், 'என்னை ஆட்கொண்ட நீ வீடுபேறு வழங்கி அருளவில்லை யானால் உன்னைத் தவிர வேறு யாரொடு நொந்து கொள்வேன்? வேறு யாரிடம் என் குறையை எடுத்துரைப்பேன்?' என்று உரிமையோடு வினவுகிறார். இறைவனை அன்றி வேறோர் ஆதரவு தமக்கு இல்லை என்று மணிவாசகர், உணர்த்தும் திறன் அறிதற்குரியது.

உலகத் தொடர்பால் வரும் துன்பத்தை வெறுக்கும் மணிவாசகர் திருவுள்ளம், "வார்கடல் உலகில் வாழ்கிலேன்" என்று துணிகிறது. "வருக என்று அருள் புரியாயே " என்பதனால் துன்பத்தில் இருந்து விடுதலை பெற விரும்பும் மணிவாசகரின் ஏக்கம் (longing for release) புலப்படுகிறது.

'எம்பெருமான்' என்று எல்லாராலும் ஏத்தப்படுகிற இறைவன் தம்மை ஆட்கொண்டவனாகவும் இருப்பதால் 'என்னை யாள்வானே ' என்று அழைத்து, தம்மை அவன்பால் அழைத்துக் கொள்ள வேண்டும் என்று வேண்டுகிறார் மணிவாசகர்.

"ஊடுவது உன்னோடு உவப்பதும் உன்னை"

தம்மீது அனைத்து உரிமைகளும் கொண்டவன் இறைவன் அந்த உரிமை பற்றியே, என்று உளம் திறந்து உரைத்து மகிழ்கிறார் மணிவாசகர். மேலும் வாடிய பயிருக்கு நீர் வார்த்து வாட்டம் தீர்ப்பது போல இறைவன் தமக்கு அருள் செய்ய வேண்டும் என்று உணர்த்த "வாடினேன்" என்று குறிப்பிடும் திறம் தெரிந்து மகிழத் தக்கது.

திருபுரம் எரித்த விரிசடைக் கடவுளை "வாள் அரக்கர் புரமெரித்தானே" என்று பேசுகிறார் மணிவாசகர். முப்புரம் எரித்த சிவபெருமான் மும்மலக் கோட்டையாகிய தம் உடம்பினை அழிக்க வேண்டும் என்று மணிவாசகர் வேண்டுவது பொருத்தமேயன்றோ?

திருப்பெருந்துறையில் குரு வடிவாக வந்து மணிவாசகரை ஆட்கொண்டு அருளிய கருணை வள்ளல் சிவபெருமான். ஆதலின் தம் கருவி கரணங்கள் எல்லாம் அவனுடையன என்று

உணர்த்தவே,

"எண்ணமே உடல்வாய் மூக்கொடு
செவிகண் என்றிவை நின்கணே வைத்து"

என்று பாடுகிறார் மணிவாசகர். தம்மை இறைவனிடம் முழுமையாக ஒப்படைத்தல் (Alsolute self - Surrender) இங்கு பேசப் படுகிறது.

இறைவன் திருவருளை மயக்கத்தின் காரணமாக மறந்தாலும் அவ்வாறு மறத்தல் வஞ்சகரது செயலன்றோ? ஆதலின் "அருளினை மருளினால் மறந்த வஞ்சனேன்" என்று மணிவாசகர் பேசும் திறம் கருதத் தக்கது.

சூரிய மண்டலத்தில் சிவபெருமான் எழுந்தருளி இருக்கிறான் என்று ஆகமங்கள் பேசுகின்றன. இறைவனைப் "பரிதி வாழ் ஒளியாய்" என்று மணிவாசகர் அழைப்பது இது பற்றி என்னலா மன்றோ? செம்மேனி எம்மானின் மேனி ஒளிக்கு உவமையாகப் பரிதியின் ஒளி பேசப் படுகிறது என்றும் குறிப்பிடலாம்.

இறைவன் திருவருளை மறந்து வாழ்வது மருள். ஆதலின் மணிவாசகர், "கருணையே நோக்கிக் கசிந்துளம் உருகிக் கலந்து நான் வாழுமாறு அறியா மருளலேன்" என்று தம்மைப் பற்றிக் குறிப்பிடுகிறார்

இறைவன் அழிவில்லாதவன், முடிவில்லாத நித்தியன். ஆதலின் "அந்தமில் அமுதே" என்கிறார். அடியார்களை வாழ வைக்கும் பெருங்கருணைத் திறம் மிக்கவன் இறைவன் என்பதால் "ஆரமுதே" என்கிறார் மணிவாசகர்.

மூவுலகங்களையும் ஊடுருவும்படி பிரம்மனும் திருமாலும் மேலும் கீழும் சென்று தேடும்படி தீப்பிழம்பாய் உயர்ந்து நின்றவன் என்று இறைவனின் பேராற்றலைப் புலப் படுத்துகிறார் மணிவாசகர்.

அடைக்கலமாகத் தன்னை வந்தடைந்த சந்திரனுக்கு அருள்புரிந்து முடியின் மேல் அணிந்து கொண்டவன் ஆதலால்

சிவபெருமானைச் 'செழுமதி அணிந்தாய்' என்கிறார் மணிவாசகர். சந்திரன் இறைவனை அடைந்து செழுமையுற்றதால் 'செழுமதி' ஆகின்றான். மேலும் மணிவாசகர் இறைவனை நோக்கி, 'உன்னைத் தவிர பிற தேவர்களை வணங்குவேனோ, வாழ்த்துவேனோ, எனக்குத் துணையாகக் கருதுவேனோ' என்றமையால் மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் பிறரை வழிபடேன் என்னும் திரிகரண வழிபாடும் சிவபெருமானுக்கே உரியது என்றும் உணர்த்தும் திறன் சிந்தனைக் குரியது. 'வருக என்று அருள்புரிதல் அறம்' என்பதை உணர்த்த அறத்திற்கு அறிகுறியாகிய விடையை நினைவு படுத்தும் வகையில் "மழ விடையானே" என மணிவாசகர் 'வாழாப்பத்தினை ' நிறைவு செய்யும் அழகு அறிந்து இன்புறத்தக்கது.

'இவ்வுலக வாழ்க்கையில் மகிழ்ச்சி இல்லை; யான் வாழ கில்லேன்' என்று ஊனினை நீக்கி உணர்பவர் மட்டுமே இறைவன் திருவடியைச் சேர இயலும் என்கிறார் திருமூலர்.

"கானுறு கோடி கடிகமழ் சந்தனம்
வானுற மாமலரிட்டு வணங்கினும்
ஊனினை நீக்கியுணர்பவர்க் கல்லது
தேனமர் பூங்கழல் சேரவொண் ணாதே"

(திருமந்திரம், 1848.)

திருவாசகத்தின் 28 ஆம் பதிகமாகிய வாழாப்பத்து, தெய்வ நலங்கனிந்த சொற்களால் அமைந்து இனிமை, எளிமை, ஆழமுடைமை என்னும் அரும் பண்புகள் அமையப்பெற்று, ஓதுவார், கேட்பார், உணர்வார் ,அனைவர்க்கும் உண்மை ஞானத்தை உணர்த்தும் ஆற்றல் மிக்கது என்பது ஒருதலை.

29. அருள் பத்து

முனைவர். இரா. பாலசுப்பிரமணியன்

அழகிய தெய்வத்தன்மை வாய்ந்த சொற்களால் ஆகிய செய்யுள் நூல் திருவாசகம். திருவாசகத் திருப்பாட்டுகளைத் திருவாய் மலர்ந்தருளியவ மாணிக்கவாசகர் திருவருளின் திரு ஒளி பெற்றவர். தாம் பெற்ற இன்பத்தையும் அனுபவத்தையும் திருவாசகப் பாடல்களில் பதிவு செய்து, உலகத்தாரும் உய்யப் புலப்படுத்தியவர்.

'நமச்சிவாய' எனத் தொடங்கி இறைவனை வணங்கி 'அம்மை எனக்கு அருளிய ஆறுஆர் பெறுவார் அச்சோவே' என முடியும் திருவாசகத் திருத்தேனில் 51 பதிகங்கள் உள. அதில் அவ்வகையில் இருபத்தொன்பதாவது பத்து அருள் பத்தாகும். அருள் வாசகரின் அருள் பத்தின் செய்திகளைக் காணலாம்.

அது என்ன....?

அருள் பத்தின் பாடல்களின் இறுதி வரி அதெந்துவே என்றருளாயே என்று அமைகிறது. 'அதெந்து' என்னும் சொல்லிற்கு 'அது என்ன' என்பது பொருளாகும் இறைவனை ஆர்வத்தோடு மாணிக்கவாசகர் அழைக்கிறார். அது என்ன , எதற்காக அழைக்கிறாய் என்று இறைவன் கேட்டு அருள் புரிய வேண்டும் என்பது மாணிக்கவாசகரின் வேண்டுதலும் விழைவும் ஆகும்.

இப்பதிகத்தின் இறுதிப்பாடலில், இறுதி வரி,

> "பொருந்தவா கயிலை புகுநெறி இதுகாண்
> போதரா என்றரு ளாயே" -467

என்று அமைகிறது. அம்முறையில் திருக் கயிலைக்குச் செல்லும் திருநெறியினை அருளிச் செய்யும் வேண்டுதலையும் காணலாம்.

சுந்தரலிங்க முனிவர் இயற்றிய திருவாசக உண்மை அருள்பத்தைப் பற்றிக் கீழ்க்கண்டவாறு குறிப்பிடும்.

"சோதியருட் சுடர்விளக்கே துயர் பிறவிக் கூடல் விடுத்துன்றாள் சேர்த நீ காதரித்துங் குனையழைத்தா லதந்து வெனக் கேளெனுஞ் சொல்
அருட்பத்தாகும்"

மகாமாயாசுத்தி சார்ந்தவை இப்பத்தின் பாடல்கள். மகாமாயா அல்லது பிரபஞ்ச மயமாய் இருக்கும் உமாதேவி யாண்டும் பரிசுத்தமாகவே இருக்கிறாள். சித்த சுத்தி அடைபவனுக்கு அவ்வுண்மை விளங்குகிறது என்றும் கூறுவர்.

மூர்த்தி, தலம், தீர்த்தம், தலமரம் பற்றிய செய்திகள் இப்பத்தின் பாடல்களில் செறிவாக இயைந்திருப்பதைக் காணலாம்.

மூர்த்தியான நீதிசிவன்

சோதியே, சுடரே, தாழாளி விளக்கே, நிருத்தனே, நிமலா, நீற்றனே, நெற்றிக் கண்ணனே, விண்ணுளோர் பிரானே, செங்கண் நாயகனே, எங்கள் நாயகனே என்னுயிர்த்தலைவா, விமலனே, துப்பனே, தூயாய், ஆர் அமுதே, மெய்யனே, விகிர்தா மேருவே, முத்தனே, முதல்வா, முனிவா, சித்தனே, பொருளனே என்று பல சொற்களில் மாணிக்கவாசகர் சிவனை விளிக்கும் திறம் மனங்கொள்ளத்தக்கதாகும்.

பங்கயத்து அயனும்மால் அளியோ
நீதியே.....................

என்ற வரிகளில் இறைவனை நீதியுடன் இணைத்துக் கூறுவது மாணிக்கவாசகருக்கே உரிய தனித்தன்மையாகும்.

நிர்மலன், அமலன், விமலன் ஆகிய சொற்கள் இறைவன் மாசு இல்லாத "சுத்தவஸ்து" வைக் குறிப்பிடுவதாகக் கூறுவர். அத்தகு வஸ்துவை அணுகுபவர் மாசு நீங்கப்பெறுவார்.

மாயாசக்தியும் மாசு அற்றவள் என்பது அப்போதுதான் விளங்கும். சித்தன் என்ற சொல் இறைவன் சித்தி அல்லது பரிபக்குவம் வடிவெடுத்தவன் என்பதை குறிப்பதாகும்.

வேண்டுகிறேன்...

"கமலம் நான் முகனும் கார்முகில் நிறத்துக்
கண்ணனும் நண்ணுதற்கு அரிய
விமலனே எமக்கு வெளிப்படாய் என்ன
வியன்கழல் வெளிப்பட்ட எந்தாய்"

என்ற பாடலில் அரியும் அயனும் வேண்டினார்கள். இரங்கி உன் அகண்டாகாரத்தை விளக்கினாய். நானும் உனைக்கான ஆசைப்படுகிறேன் என்று வேண்டுதலை முன் வைக்கிறார்.

இறைவன் வேண்டுவாரின் விருப்பத்தை நிறைவேற்றுவான் என்பதில் மாணிக்கவாசகருக்குப் பெரும் நம்பிக்கையிருப்பதை,

"ஒப்பனே உன்னை உள்குவார் மனத்தில்
உறுசுவை அளிக்கும் ஆர் அமுதே" -

என்ற வரிகளின் வழி உணரலாம்

மேலும்

"முத்தனே முதல்வா முக்கணா முனிவா
மொட்டறா மலர் பறித்து இறைஞ்சிப்
பத்தியாய் நினைத்து பரவுவார் தமக்குப்
பரகதி கொடுத்தருள் செய்யும்
சித்தனே......................................"

என்றும் பாடுகிறார். மொட்டு அறா மலர் நைஷ்டிக பிரம்மச்சரியத்தையும் குறிக்கும். அதற்கு நிகரான நித்திய வழிபாடு ஆத்ம சாதகனுக்கு வேறு என்றும் இல்லை என்றும் இவ்வரிகளுக்கு விளக்கம் தருவர்.

இறைவன் இருப்பதைப் புரிய வைப்பதற்காக

"ஒருத்தனே உன்னை ஓலம் இட்டு அலறி
உலகு எலாம் தேடியும் காணேன்" -

எனக் குறிக்கிறார். புறவுலகில் தென்பட மாட்டான். அருளை நாடினால் தான் தென்படுவான். அப்போது அகத்திலும் புறத்திலும்

இருப்பான் என்று தெளிவு படுத்துகிறார்.

தலம், தீர்த்தம், தல மரம்

திருப்பெருந்துறையில் அருளியது அருள் பத்தாகும். ஒவ்வொரு பாடலிலும் இத்தலத்தைக் குறிக்கிறார். செல்வத் திருப்பெருந்துறை, திருத்தமாம் பொய்கைத் திருப்பெருந்துறை, நான் மறைசேர் திருப்பெருந்துறை, பொழில் சூழ் திருப்பெருந்துறை, மறைசேர் திருப்பெருந்துறை என்றெல்லாம் குறிப்பிடுகிறார். "செல்வத் திருப்பெருந்துறையைப் பலபாடல்களில் குறித்துச் செல்வது கருதத்தக்கதாகும்.

"திருத்தமாம் பொய்கைத் திருப்பெருந்துறை" என்ற வரியில் தூய்மையான தீர்த்தம் பற்றி குறித்துச் செல்கிறார்.

நிறைமலர்க் குருந்தம், செழுமலர்க் குருந்தம் என்ற சொற்களால் தலமரத்தைக் குறிக்கிறார் மாணிக்கவாசகர். செருமலர்க் குருந்தம் என்ற சொல்லாட்சியைப் பல பாடல்களில் குறிக்கிறார்.

"அன்று நீ அரிய சூழ்நிலையில் வீற்றிருந்து என்னை ஆட்கொண்டாய் அதனை எண்ணுகிறேன். அற்றிலை மீண்டும் கிட்டுமா என்று ஏங்குகிறேன் . அருளனே வேண்டுகிறேன்" என்ற பொருள் அமைய இறுதிப்பாடலில்,

"அருளனே அடியேன் ஆதரித்து அழைத்தால்
அதெந்துவே என்று அருளாயே"

என வேண்டி, நிறைவு செய்வது நினைக்கத் தக்கது.

30. திருக்கழுக்குன்றப் பதிகம்

- சொல்லின் செல்வர் எல்.கே. சுபாஸ் சந்திரபோஸ்

முன்னுரை

தேன் கலந்து பால் கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்து ஊன் கலந்து உயிர்கலந்து உவட்டாமல் இனிக்கின்ற திருவாசகக் கடல் மூழ்குவோர் மணிவாசகப் பெருமானின் அனுபவ முத்துக்களை அள்ளி மகிழலாம். அம் முத்துச்சுடரொளியால் அறியாமை இருள் நீங்கி ஆன்ம ஒளிபெற்றுக் கருப்பையூர் செல்லா நிலை எய்தி, பிறவா யாக்கைப் பெரியோனின் திருவடிப் பேரின்பப் பேரியாற்றில் நீந்தித் திளைக்கலாம். எல்லாமாய் இல்லதுமாய் இருந்ததனை இருந்தபடி இருந்து காட்டிய இறைவன் திருப்பெருந்துறையில் குருந்தின் கீழிருந்து சொல்லாமற் சொன்ன சுருதிப் பொருளை உணர்ந்த திருவாதவூரர், தாம் பெற்ற பேரின்பத்தை உலகோர் அனுபவிக்க அள்ளித்தந்த அமுதம் தான் திருவாசகம் என்னும் தெய்வப் பனுவல். மணிவாசகரின் மனச்சிறையில் அடை பட்டுக் கிடந்த ஆன்மீகக் கருவூலம் திருப்பெருந்துறையில் திருவாசகமாய் விடுதலைபெற்றது. திருவாசக மணிவயிறு கண்ணுதற் கடவுளைக் கருவாகத் தாங்கித் தந்தது. திருப்பெருந்துறையில் குருதரிசனம் தந்த பேரருளாளனின் பேரானந்தப் பெருவெள்ளத்தில் மூழ்கித் திளைத்த வாதவூரர் திருத்தலங்கள் தோறும் சென்று எந்நாட்டவர்க்கும் இறைவனாகிய தென்னாடுடைய தேவர் பிரானின் திருவடி மலர்களுக்குத் · தீந்தமிழ் மலர்களால் திருப்பதிகப் பாமாலைகள் சூட்டி மகிழ்ந்தார்.

துதிக்கும் பதிகம்

திருவாசகத்தில் அமைந்த பதிகத் தலைப்புக்கள் ஐம்பத்தொன்றனுள் (51) பதிகம் என்றே பெயர் பெற்றவை ஆறு. அவை 1. அச்சோப்பதிகம் 2. எண்ணப்பதிகம் 3. கழுக்குன்றப் பதிகம் 4. கோயில் திருப்பதிகம் 5. கோயில் மூத்த திருப்பதிகம் 6. பாண்டிப் பதிகம் என்பன. மற்றவை பத்து, பகுதி, புராணம், அகவல், விண்ணப்பம் என அமைபவை. பத்தொன்பது

பத்துக்கள், அகவல் இரண்டு, எழுச்சி இரண்டு, அம்மானை, மாலை, உந்தியார், பாவை, சாழல், புராணம், பகுதி, சதகம், தசாங்கம், ஏசறவு, தும்பி, நான் மறை, தெள்ளேணம், தோணோக்கம், விண்ணப்பம், புலம்பல், பூவல்லி ஊசல், சுண்ணம், வார்த்தை, வெண்பா, படையாட்சி என வகைக்கு ஒன்றாய் ஐம்பத்தொரு பதிக வைரங்கள் பதிக்கப் பெற்ற அணிகலனாக ஞானஒளி வீசுகிறது திருவாசகம் என்னும் தெய்வத்தமிழ் மாலை.

காட்டிய கழுக்குன்று

திருக்கழுக் குன்றப் பதிகம் எண் குணத்தானின் இணையிலாக் கருணைத் திறத்தை ஏழு திருப்பாடல்களில் எடுத்தியம்புகிறது. எழுபிறப்பும் இல்லாமல் செய்யவல்லவை இந்த ஏழு திருப்பாடல்கள். பிறவிப் பிணிக்கு மாமருந்தாய்த் திகழ்பவை. எம்பெருமானின் திருநாமங்கள் பேசுவார்க்கு என்றும் குறைவு வராது. ஒப்பிலாப் பேரின்பம். வாய்க்கப்பெறும். துன்பங்கள் தீயினில் தூசாகும். வினைவித்து முளைக்காது. எனவே வினைவழித் தோன்றும் பிறவியறும். பிறவியறவே பேரின்பப் பெருவெள்ளத்தில் மூழ்கித் திளைத்து இறைவனோடு இரண்டறக் கலக்கலாம். அப்போது எம்பெருமானின் திருக்கோலத்தினை உடனிருந்து கண்டு மகிழ்ந்து அனுபவிக்கலாம். திருக்கழுக்குன்றில் எம்பெருமானின் அளவிடற்கரிய திருக்கோலத்தைக் கண்டு மகிழ்ந்து பேரானந்தம் கொள்கிறார் திருவாதவூரர். அவனே உவந்து வந்து காட்டிய திருக்கோலமல்லவா? "கணக்கிலாத் திருக்கோலம் நீ வந்து காட்டினாய் கழுக்குன்றிலே" என்று அடிகளே அனுபவித்துப் பாடுகிறார்.

மண்சுமந்த விண்ணமுதம்

கல்லினுள் தேரைக்கும் கருப்பையில் உயிர்க்கும் புல்லுணவே தந்து போற்றும் தயாளன், எல்லோருக்கும் எளிவந்து இன்னல் களைந்து அன்பு பொழிந்து இன்புறச் செய்வான். இமைப்பொழுதும் தன்நெஞ்சில் நீங்காதான் தாளினைப் போற்றி ஐந்தெழுத்து மந்திரத்தை அரை நொடியும் மறவாச் சிந்தையராம்

வாதவூரருக்காக, மகாதேவன் மண் சுமக்க மதுரையம்பதி வந்து மண்வெட்டி தோளேந்தி மாநிலம் அடிதோய வந்தியின் கூலியாளாய் எளிவந்தான் இமவான் மருகன். அதுவும் அடிகளைக் காக்கும் பொருட்டன்றோ? அங்ஙனம் ஆட்கொள்ள வந்த எந்தைபிரான் வந்து காட்டினான் கழுக்குன்றில். வேத வித்தாம் விண்ணமுதம் மண் சுமந்த காட்சியை மணிவாசகரின் பண் சுமந்த பாடல் படம் பிடித்துக்காட்டுகின்றது.

திருவடித்தடம் உளத்திற் பதிந்தால் கலக்கம் நீங்கித் தீவினை எய்தாது சிறக்கலாம். வித்தின்றி விளைவு செய்யும் உலக வித்தாகிய எம்பெருமானின் திருவடித்தடம் பதிந்தால் குழம்பிய மனம் தெளிவு பெறும். குழம்பிக் கலங்கிய மணிவாசகரின் மனக்கலக்கத்தைப் போக்குவான் பொருட்டுத் தனது திருக்கோலத்தைக் கண்ணுதற் கடவுள் "கலங்காமலே வந்து காட்டினான் கழுக்குன்றிலே". இறைவன் திருவுளப்படிதான் எதுவும் நடக்கும். அவனை வணங்கவும் அவனருள் வேண்டும். உள்ளம், உரை, உடல், (மனம், வாக்கு, காயம்) மூன்றும் ஒன்றாய்ப் பொருந்த இடையறாது எம்பெருமானை வழிபட்டவர் வாதவூரர். மெய்தானரும்பி, விதிர்விதிர்த்து, விரையார் கழற்குக் கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பி உள்ளம் பொய்தான் தவிர்த்து போற்றி செய செய போற்றி என்று புகழ்ந்தேத்திய பொற்புடையார் மணிவாசகர். அதனாற்றான் எம்பெருமானின் பொன்னார் திருவடிக் கமலங்கள் தன்முடிதோயும் பேறுபெற்றார். "அவன்அருளாலே அவன்தாள்" வணங்கிய அருளாளர் அழுதால் அவனைப் பெறலாம் என்கிற அசைக்க முடியாத நம்பிக்கை உடையவர். தென்னாடுடையானின் திருவடிப்பேறு ஒன்றே பிறவிப் பெருங்கடல் கடக்கப் பெருந்தோணியாய் அமையும் என்ற கொள்கையர். அயரும் மாலும் அரிதின் முயன்றும் அறியாத் திருவடி அடிகட்கு வாய்த்தது. தேவரும் காணாத திருவடிப் பேறுபெற்ற மணிவாசகருக்குக் காணொண்ணாத் திருக்கோலத்தைக் கழுக்குன்றிலே வந்து காட்டினான் கருணைக் கடல். அடிமுடி தேடிப் போனவர்க்கும் தெரியாத திருக்கோலத்தைத் தானே தேடிவந்து கழுக்குன்றிலே மணிவாசகருக்குக் காட்டியருளினான் எனில், இதனை எம்பெருமானின் கருணைத்திறம் என்பதா? மணிவாசகரின்

மாண்பு என்பதா? வாதவூரரின் மகிமை சொல வார்த்தையும் உண்டோ?

தோணித் தொழில் பூண்ட தூயன்

பிறவிக் கடல் கடக்கும் பெருந்தோணி இறைவனின் திருவடிகளே என்பது வள்ளுவர், வாகீசர் முதல் எள்ளறு சிறப்பின் இமையவர் வரை எல்லோரிடமும் இலங்கும் உண்மை. பிறவிப் பெருங்கடல் நீந்திக் கரை சேர இறைவனின் திருவடித் தோணி ஒன்றே துணை. வேணியஞ் சடையனார் தோணித் தொழில் பூண்ட தூயர் என்கிறார் நாவுக்கரசர் பெருமான். "துன்பக் கடலிடைத் தோணித் தொழில் பூண்ட தொண்டர் தம்மை இன்பக் கரைமுகந்து ஏற்றும் திறத்தன மாற்றயலே பொன்பட்டொழுகப் பொருந்தொளி செய்யும் அப்பொய்பொருந்தா அன்பர்க்கு அணியன காண்கவை ஆறன் அடித்தலமே" என்பது அப்பர் வாக்கு. இறைவன் அடி சேர்ந்தாலன்றி பிறவிப் பெருங்கடல் நீந்துதல் அரிது என்பது அய்யனின் அருள்வாக்கு. அத்தகு திருவடியை வாதவூரருக்குத் திருக்கழுக் குன்றிலே வந்து காட்டினான் எம்பெருமான். காணொணாத் திருக்கோலத்தைக் கழுக்குன்றில் கண்டு மகிழ்ந்த வாதவூரர் தென்னாடுடையானின் திருவடிக் கமலங்களிலேயே தம் சிந்தையைச் செலுத்திச் செந்தமிழில் அந்தத் திருவடிகளின் சிறப்பினைச் செப்புகிறார்.

கருணை மாக்கடல்

பன்னிரு குட்டிகளை ஈன்ற தாய்ப்பன்றி ஒன்று மாண்டு விட்டது. பிறந்த குட்டிகள் பாலின்றிக் கதறின. அதுகண்டு பொறுக்காத ஆலவாய் அண்ணல் தானே தாய்ப்பன்றி உருவில் வந்து பால் கொடுத்துக் குட்டிகளைக் காத்தருளினார். இது மதுரையம் பதியில் மகாதேவன் நிகழ்த்திய திருவிளையாடல். கருணைகூர் இக்காட்சியைத் திருக்கழுக்குன்றில் நின்று கொண்டு நினைவு கூர்கிறார் மணிவாசகர். "சீலம் சிறிதுமிலாத எனது சிந்தையில் திருவடி பதித்த சிகாமணியே, உலகமே உருவாக அமைந்த உத்தமனே உனது கருணைக்கு நானே உலகறிந்த சாட்சி. நின் திருவடிப் பேற்றினை விரும்பி எப்போதும் ஐந்தெழுத்து மந்திரத்தை அடியேன் ஓதுதலானே நீயே வந்து உனது

திருக்கோலத்தைக் கழுக்குன்றிலே காட்டினாய் எனில் என்னே உனது கருணை. பண்பியாய் நிற்கும் நின்னைப் போற்றுவதா? நின் கருணை கூர் பண்பினைப் போற்றுவதா? எதைப் போற்றினால் என்ன? எல்லாம் நீதானே. பன்றியும் நீ; பாருலகும் நீ; நாமமும் நீ; காமமும் நீ; நல்லதும் நீ; இல்லதும் நீ" என்று எல்லாமுமாய் இறைவன் நிறைந்திருக்கிறான் என்கிற கருத்தைத் திருக்கழுக்குன்றப் பதிகத்திலே நிலை நாட்டுகிறார் மணிவாசகர்.

அன்பின்பப் புணர்ப்பு

"காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார் தமை நன்னெறிக்கு உய்ப்பது வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவது நாதநாம நமச்சிவாயவே" என்றார் காழி மேவிய கருணை வள்ளல். நாத நாமத்தைக் காதலால் ஓதினால் திருவடிப்புணர்ப்பினை அவனே வந்து கூட்டுவிப்பான். பேதமிலாத கற்புடைய மணிவாசகிக்குப் பெருந்துறைப் பெருமான் சரணகமலாலயத்தைத் தந்தருளி அவளோடு கூடிக் கலந்து ஆடி மகிழ்ந்தான். முதன்மைக் கற்புடைய மணிவாசக நாயகியுடன் புனித மெய்ப்புணர்ப்பு நிகழ்த்தினான் இறைவன். கழுக்குன்றிலே நிகழ்ந்த காதல் அனுபவத்தை எண்ணி எண்ணி மகிழ்கிறாள் மணிவாசகி. அடியார்களுக்கு நாயகி பாவத்தில் பதியைப் பராவுவது சுகானுபவம். முன்னம் அவனுடைய நாமம் கேட்டுத் தன்னை மறந்து தன் நாமம் கெட்டுத் தலைவன் தாளில் தலைப்பட்ட நாவுக்கரச நாயகியும், சந்நிதியில் சென்று நான் பெற்ற பேறு சாமி அறிவாரடி அம்மா சாமி அறிவாரடி" என மகிழும் அருட்பா நாயகியும் தலைவனிடம் பெற்ற அன்பின் புணர்ப்பை அளவிட்டுச் சொல்ல இயலாது அனுபவித் தறிந்தாலன்றி எழுதிக் காட்டொணாதது. மணிவாசகியும் பாவை பாடிய வாயால் கோவையும் பாடியளாதலின் கற்பு நெறி நிற்கும் காரிகை கணவனையன்றி கனவிலும் வேறொருவரை நினையாதல் போல "உள்ளேன் பிறதெய்வம் உன்னையல்லால் எங்கள் உத்தமனே" என்று உருகிப்பாடி தனது அன்பின்பப் புணர்ப்பினை உறுதிப் படுத்துகிறாள். "கற்புறு சிந்தை மாதர் கணவரை அன்றி வேறோர் இற்புறத்தவரை நாடார்; யாங்களும் இன்பவாழ்வும் தற்பொறியாக நல்கும் தலைவநின்னலதோர் தெய்வம் பொற்புறக் கருதோம்

கண்டாய் பூரணானந்த வாழ்வே" எனத் தாயுமானவத் தையலாளும் தன் பேரின்ப அனுபவத்தை மகிழ்ந்து கூறுவது நோக்கத் தக்கது. "சென்று நாம் சிறுதெய்வம் சேர்வோ மல்லோம் சிவபெருமான் திருவடியே சேரப் பெற்றோம்" என அப்பர் சுவாமிகள் அருளுவதையும் அறிந்து மகிழலாம்.

எண்குணம் செய்த ஈசன்

எந்நாட்டவர்க்கும் இறையாய் நின்றிலங்கும் எம்பெருமான் தென்னாடுடையான். தென்னாட்டிலும் பாண்டிநாடதனில் உத்தரகோச மங்கையைத் தனது ஊராக்கி மகிழ்ந்தவன். "பத்தரெலாம் பார்மேல் சிவபுரம்போல் கொண்டாடும் உத்தர கோசமங்கை ஊர்" என மாதொரு பாகத்தன் வாழ்பதியைத் திருத்தசாங்கத்தில் திருவாதவூர் சிறப்பிக்கிறார். மங்கையூர் என்பதனால் மாதரைப் பெருமையுறச் செய்ய பெரும்புரட்சி ஒன்றினைப் பெருந்துறைப் பெருமான் செய்தருளினான். திருவுத்தர கோசமங்கையில் இசை வல்லாராகிய இயக்கர் நல்லார் அறுபத்து நான்கு மகளிரையும் திருவடி ஞானம் பெறச்செய்து தனக்குரிய திருவருட் குணங்கள் எட்டனையும் எய்துமாறு செய்தருளி வீடு பேறளித்தனன். "பெண் பாலர்க்கு வீடுபேறு இல்லை" என்னும் ஏனைச் சமயத்தார் கொள்கை அறிவியலுக்கும் அருளியலுக்கும் சிறிதும் ஒவ்வாமை இதனால் வலியுறுத்தப் பெறும். இத்தகு கருணை வள்ளல் தனக்குத் திருவடித் தாளிணைகளைக் கழுக்குன்றிலே வந்து காட்டிய பேரருட் பெருங்கருணைத் திறத்தை நெகிழ்ந்து நெக்குருகப் போற்றுகிறார் மணிவாசகர். "இலங்குகின்ற நின் சேவடிகள் இரண்டும்", நின் தூய்மலர்க் கழல்" தந்து எனவரும் சொற்றொடர்கள் திருவடிச் சிறப்பினையே பேசுகின்றன. பதிகத்தில் வரும் ஏழு பாடல்களின் ஈற்றடியும் "காட்டினாய் கழுக்குன்றிலே" என்று அமைவது திருவடியைக் குறிப்பதாகவே எண்ணலாம்.

பதிகப் புதைபொருள்

திருக்கழுக்குன்றப் பதிகத்தில் வரும் சொற்றொடர்கள் நயமிக்கவை. ஆய்வுக்குரியவை அவற்றுள் சில 1. பிணக்கிலாத

பெருந்துறைப் பெருமான் 2. பெருந்துறைப் பெரும் பித்தனே 3. பெருந்துறைப் பெருந்தோணி 4. குணமாம் பெருந்துறைக் கொண்டலே 5. மாற்றி மலங்கெடுத்த பெருந்துறை 6. பெருந்துறைப் பெருவெள்ளமே. 7. எண்குணம் செய்த ஈசன் பதிகம். முழுக்க திருப்பெருந்துறையே சிறப்பாகச் சுட்டப்பெறுகின்றது. வாழ்வுப் பயணத்தில்மணிவாசகரைத் திசைமாற்றிய திருத்தலம் திருப்பெருந்துறையல்லவா? அதனை மறக்க அவரால் இயலுமோ?

ஆண்டவனின் அருள்வெள்ளத்தில் நீந்திட அவாவுறும் அடியார்கள் மூழ்கி எழுந்து முதல்வனின் திருக்கோலம் காண விழைவர். உலக முதல்வன் பேரருளால் தன் திருக்கோலம் காட்டி மகிழ்விப்பான். மகிழ்ந்த அடியார் தம் அனுபவத்தைத் தாம் கண்டவாறே கழறி, பிறரையும் கடைத்தேற்ற உதவும் கொள்கையர். அந்த வகையில் பார்த்தால் இந்தத் திருப்பதிகத்தில் ஒரு சிறப்பினைக் காணலாம். இது 30 ஆவது பதிகம். முந்திய 29 ஆவது பதிகம் அருட்பத்து பின்னது 31 ஆவது பதிகம் கண்ட பத்து. 29 இல் (அருட்பத்தில்) அருள் கிட்டி 30 இல் திருக்கோலம் கண்டு 31 இல் கண்டதை விண்ட நிலையில் அமைந்த அழகு எண்ணி வியக்கத்தக்கது. 29 அருட்பத்து 30 திருக்கழுக்குன்றப் பதிகம் 31. கண்ட பத்து.

திருக்கழுக்குன்றப் பதிகத்தில் வேளாண் அறிவியற் கருத்து விளக்கம் அமைந்திருப்பது வியக்கத் தக்கதாக உள்ளது. நன்றாகக் காய்ந்த (உணங்கிய) விதைதான் முளைக்கும் திறன் பெறும் என்பது தாவர அறிவியற் கருத்து. மணிவாசகர் வினைக்கு உவமையாக்கிப் பாடுங்கால் "உணக்கிலாததோர் வித்து மேல் விளையாமல்". எனக்குறிப்பது வேளாண் அறிவியற் கருத்தை விளம்புவதாக அமைகிறது. எம்பெருமான் ஆலவாயில் நிகழ்த்திய அறுபத்து நான்கு திருவிளையாடல்களில் பிட்டுக்கு மண் சுமந்த திருவிளையாடலும், பன்றிக்குட்டிக்கு முலை கொடுத்த திருவிளையாடலும் இப்பதிகத்தில் சுட்டப்பெறும் திருவிளையாடற் புராணச் செய்தியாகும்.

முடிவுரை

இறைவனின் திருநாமம் செப்புவோர் பெருவாழ்வு பெறுவர். நாமம் நலம் யாவும் நல்கும்.. திருக்கழுக்குன்றப் பதிகத்தில் எம்பெருமானின் நாம மகிமை நலமுறச் சுட்டப் பெறுகின்றது. பிணக்கிலாத பெருந்துறைப் பெருமானின் கணக்கிலா நாமங்கள் துன்பம் துடைக்கும். இன்பம் கிடைக்கும் என்கிறார் மணிவாசகப் பெருந்தகை. குலம்தரும் "செல்வம் தந்திடும் அடியார் படுதுயர் ஆயின" எல்லாம் நிலந்தரம் செய்யும் நீள்விசும்பு அருளும் அருளோடு பெருநிலம் அளிக்கும் வலந்தரும் மற்றும் தந்திடும் பெற்ற தாயினும் ஆயின யாவையும் செய்யும் நலந்தரும் சொல்லை நான் கண்டு கொண்டேன் நாராயணா என்னும் நாமம்" என்று ஆழ்வாராதிகளும் பாலாறாய்த் தித்திக்கும் நாலாயிரத் திவ்ய பிரபந்தத்தில் நவின்றுள்ளனர். "பயந்த தனி வழிக்கு துணை முருகா எனும் நாமங்கள்" என்கிறது அருணகிரித் தமிழருவி. தென்னாடுடையானின் திருநாமம் செப்புவோர் எந்நாட்டவராயினும் இன்பமே எய்துவர். எம்பெருமானின் திருநாமம் சொன்னால், வாய்மணக்கும், நினைத்தால் நெஞ்சினிக்கும். சிந்தையில் நட்டால் சிவமாய் முளைக்கும். சொல்லும் பொருளும் என நடமாடும் "எம்பெருமான் வாசகமாய் திருவாசகமாய்த் திகழ்கிறான். திருவாசகத்தில் ஒரு வாசகமாய்த் திகழும் மறைவாசகம் எம்பெருமானின் திருநாமம். அத்திருநாம மகிமை நிறைந்த திருக்கழுக்குன்றப் பதிகத்தில்"குருதரிசனம்" தனக்குக் கிட்டியதை, அவனே கழுக்குன்றில் வந்து காட்டிய பேரருட் பெருங்கருணைத் திறத்தை மணிவாசகப் பெருந்தகை மனமுருகிப் பாடுகிறார். நாமும் தென்னாடுடையானின் திருநாமம் மொழிந்து பெருவாழ்வு பெறுவோம்.

31. கண்டபத்து

புலவர். சு. முத்தையா

முன்னுரை

திருவாசகத்தின் 31- வது பதிகம் கண்ட பத்து ஆகும். பாடல்தோறும் "கண்டேனே "என்று முடிவதால் அம்முடிவை வைத்து இப்பதிகம் இப்பெயர் பெற்றது.

இறைவன் செய்யும் நடனம் மூவகையாகச் சொல்லப்படுகிறது. அவை ஊனநடனம், ஞான நடனம், ஆனந்த நடனம் என்பன. உயிர்களை உலக வாழ்வில் கட்டுண்டு நிற்கும்படி செய்து, பிறப்பில் செலுத்துவது "ஊன நடனம்" எனப்படும். அதன் பயனாக பக்குவம் பெற்ற உயிர்கள் தம்மையும் தலைவனையும் உணர்ந்து அருள் வழியில் நிற்கும். அவரை மும்மலங்களிலிருந்து நீக்கிப் பேரின்பத்தை நுகரச் செய்யும் நிலையே "ஞா்ன நடனமாகும், இனிப்பக்குவ ஆன்மாக்களுக்கு சீவன் முத்தி நிலையில் பேரானந்தத்தை இடையறாது தருகின்ற கூத்து"ஆனந்த நடனமாகும் "

நமது நால்வர் பெருமக்களும் தில்லைச் சிற்றம்பலத்தில் இந்த ஆனந்த நடனத்தைத் தரிசித்து அளவிலாப் பேரின்பம் உற்றனர்.

ஆளுடைய பிள்ளையார் : மெய்ஞானமாகிய திரு அம்பலத்தினையும், ஆனந்த நடனத்தினையும் கண்டு கும்பிட்டுக் களித்தார். கண்களினின்றும் ஆனந்தக் கண்ணீர் பொழிந்தார். ஆனந்த நடனமாகிய அமுதத்தைக் கண்களால் பருகினார். "உணர்வின்னேர்" பெறவரும் சிவபோகத்தை ஒளிவின்றி உருவின்கண் அணையும் ஐம்பொறி அளவினும் எளிவர அருளினை"எனப் போற்றினார்.

அப்பர் சுவாமிகள் : "குனித்த புருவமும் கொவ்வை செவ்வாயிற் குமிண் சிரிப்பும் பனித்த சடையும் பவளம் போல் மேனியிற் பால் வெண்ணீறும் இனித்த முடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால் மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த

மாநிலத்தே" என்ற திருப்பாட்டில் ஆனந்த நடனத்தைக் காண்பதற்கு எத்தனை மனிதப் பிறவியும் எடுக்கலாம் என்று மகிழ்ந்து பாடினார்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் :

"ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள
அளப்பருங் கரணங்கள் நான்கும்
சிந்தையே யாகக் குணம் ஒரு மூன்றும்
திருந்து சாத்து விகமே யாக
இந்து வாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிப்பெருங் கூத்தின்
வந்த பேரின்ப வெள்ளத்துள் திளைத்து
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார் "

என்று அவர் பெற்ற அனுபவத்தைச் சேக்கிழார் எடுத்துக் காட்டுகிறார்.

இனி மாணிக்கவாசகர் சுவாமிகள் தில்லைத் தரிசனத்தால் பெற்ற பேரின்ப நிலையை எங்ஙனம் கூறுகிறார். என்பதை நோக்குவோம்.

நிருத்த தரிசனம்: இப்பதிகத்தின் உட்பொருளை "இந்திரிய வய மயங்காதே யெடுத்துத் தானாக்கும் எழிலான கந்தமலி தில்லையினுட் கண்டேன் என்று உவந்துரைத்தல் கண்டப்பத்தாம்" என்று திருப்பெருந்துறைப் புராணம் கூறுகின்றது.

இப்பதிகம் பாடப்பட்ட சூழலை :

"விண்டே இரு கண்ணீர் விழ
வீழ்ந்து இன்னடி முடிமேல்
கொண்டே பின் எழுந்து அன்பொடு
குறையா அருள் நிறையா
வண்டேர் குழல் உமை பங்கனை
வண் தில்லையுள் இன்னே
கண்டேன் என நற்பாடல்
கருத்து ஆர உரைத்தார் "

என்று மணிவாசகர் வரலாறு கூறும் திருவாதவூரடிகள் புராணம் விளக்குகின்றது.

அடிகள் தில்லைக்கூத்தன் தரிசனத்தை அனுபவித்துக் கொண்டிருக்கும் மன நிலையில் பாடப் பெற்றவை இப்பத்துப் பாடல்கள் எனலாம். அதுபற்றியே "நிருத்த தரிசனம்" - என இப்பதிகத்திற்கு குறிப்புரைத்தனர் முன்னோர். இது நாலடித்தரவு கொச்சகக் கலிப்பாவால் ஆகியது.

அடிகளார் தம் சிறுமை கூறல்

இப்பதிகத்தின் 3 ஆம் பாடல் 5ம் பாடல் தவிர ஏனைய 8 பாடல்களிலும் இறைவனுக்குத் தாம் ஆட்படுவதற்கு முன் இருந்த தமது சிறுமை நிலையை குறிப்பிட்டுள்ளார்.

பொறிகளின் வயப்பட்டு உலக வாழ்வில் மயங்கி நரகில் விழத் திரிந்தேன் என்றும், வினையினால் விளையும் பிறவியாகிய வேதனையில் அகப்பட்டு, இறைவனைச் சற்றும் நினையாமல் தளர்வெய்திக் கிடந்தேன் என்றும், புல்லறிவு உடையவனாய்க் கடைப்பட்டேன் என்றும், சாதி, குலம், பிறப்பு என்னும் மூன்றும் உலகியலால் செருக்கை உண்டாக்கி அதனுள்ளே அழுந்தச் செய்வதினால் அவற்றுள்ளே அகப்பட்டுத் தடுமாறினேன் என்றும், நோய், முதுமை என்ற இரண்டினாலும் துன்புற்றேன் என்றும், காற்றாடியின் ஓலை போல உள்ளத்தில் மாறி மாறி இடைவிடாது தோன்றி உயிரைப் பந்திக்கும் பல்வேறு நினைவுகளால் அழுத்தப்பட்டு உண்மை ஞானம் தோன்றுவதற்கு வழியில்லாது கிடந்தேன் என்றும் தனது சிறுமையைப் புலப்படுத்தியுள்ளார்.

தம்மை ஆட்கொண்ட அருள்திறம்

இக்குறைபாடுகள் எல்லாம் நம்போன்ற சாதாரண மனிதர்களுக்கு உரியவை. இவற்றை அடிகள் தம்மேல் ஏற்றிக்கொண்டு இவ்வாறு கூறுகிறார் என்று கருதலாம்.

இவ்வாறு ஆட்படுவதற்கு முந்திய தமது நிலையைக் குறிப்பிட்ட அடிகளார், இறைவன் தமக்குச் செய்த பெருங்கருணைத் திறத்தினையும் வியந்து கூறுகிறார்.

அரு நரகில் வீழ்வேனாகிய எனது மனத்தைத் தெளிவித்து தூய்மையாக்கி சிவமாம் தன்மையை வழங்கினார் என்றும், எனது பிறவித் தளையை நீக்கினான் என்றும், கருவிலேயே என்னுள்ளே புகுந்து என் மனத்தில் நிலைபெற்று ஞானத்தைப் பதியச் செய்து தன் பெருங் கருணையினால் ஆட்கொண்டார் என்றும், பல்லோரும் காண என்னுடைய ஆன்ம அறிவைப் பற்றியுள்ள மலங்களைப் போக்கினான் என்றும்;

எனது துன்பத்தினைக் களைந்து அடிமை கொண்டு அறியாமைக் குணத்தையும், யான், எனது என்று சொல்லும் அகப்புறச் செருக்கையும் மாய்த்தான் என்றும்;

'இவன் பித்தன்' என்று கண்டோர் கூறும்படி செய்து நான் அவனது திருவடியை விட்டு அகலாமல் சித்தமென்ற திண் கயிற்றால் கட்டுண்டு கிடக்கும்படி செய்தான் என்றும்;

எனக்கு அளவற்ற இன்பத்தைக் கொடுத்து ஆண்டருளினான் என்றும், என் மனத்தில் ஞானஒளி மிகுந்து வளர முடிவில்லாத அன்பினை அருளிச்செய்து வினைப் பயன் என்னை அடையாதவாறு நீக்கி ஆணவ மலத்தை அடக்கி வான் கருணை தந்தான் என்றும் வியந்து கூறுகிறார்.

சைவ சித்தாந்தக் கருத்து

சிவமாதல் : சிவத்தின் தன்மையை ஆன்மா பெறுதல். சீவத்தன்மை போதல், சிவத்தன்மை பெறுதல். மலங்கள் நீங்கித் தூய்மை பெற்று இறைவனது பேரறிவு (அருள்) பெறல், எனவே சீவத்தன்மை நீங்கிட அருள் (ஞான) வடிவு பெறுகிறார்கள்.

(எ.கா) நெருப்பில் காய்ச்சிய இரும்பு "துரு நீங்கி" அது ஒளியுடையதாகிறது. அதே போல் மலம் நீங்க உயிர் ஞானம் பெறுகிறது.

(இரும்பு - நெருப்பு மயமாயிருப்பது போல் சீவன் சிவமாய் நிற்கிறது. இந்நிலையில் அந்த பக்குவ ஆன்மா சிவத்தின் செயலுள் அடங்கியிருக்கிறது. இந்நிலையில் ஆன்மா எச்செயல் செய்தாலும் அது சிவச் செயலாகவே கருதப்படும் (எ.கா) சண்டேசுரர்

நாயனார் செயல்

ஆன்மா சிவமான நிலையிலும் அவனுக்கு அடிமையாகவே நிற்கும்,

"மலம் நீங்கிய முத்தி நிலையில் ஆன்மா பேரறிவு பெற்று சிவத்திற்குச் சமமாய் நின்று ஐந்தொழில் புரியும் எனும் கொள்கையைச் சைவ சித்தாந்தம் ஏற்பதில்லை இது "சிவசம வாதம்" எனப்படும். இதனை மணிவாசகரின் திருவாக்கு தெளிவுறுத்துகிறது. எந்நிலையிலும் (பெத்தம், முத்தி) ஆன்மா சிவத்திற்கு அடிமையே. இதனை மெய்கண்டார், தம் முதற் நூற்பாவின் இறுதி வெண்பா ஈற்றடியில் "பலவாறே தொழும்பு ஆகும் அங்கு" எனக் குறிப்பிட்டுள்ளார்.

"சிவமாக்கி எனையாண்ட" என்ற தொடரில் "சிவமாக்கி" என்று மட்டும் கூறாது, அந்நிலையிலும் இறைவனுக்கு அடிமைப்பட்டு நிற்கும் என்பாராய் "எனையாண்ட "என்று கூறியுள்ளமை உணரத்தக்க்து.

பசு - மலங்களால் கட்டுண்ட உயிரின் நிலை.
பாசம் - மலமாகிய கட்டு
வினை - நான் என்ற முனைப்போடு வருவது.
மலம் - அறியாமையை உண்டாக்கி அறிவைப் பந்திக்கும்
ஞானம் - "சிந்தை தனைத் தெளிவித்தல்

32. பிரார்த்தனைப் பத்து

- புவலர். **அர. பிரஹுதாம்பாள்**

திருவாசகம்

மாணிக்கவாசகருக்கு இறைவன் குருவாக எழுந்தருளி உபதேசித்து அருளினான். காட்சி கொடுத்தான். 'வா' என்று அழைத்தான். ஆனால் அழைத்துக் கொண்டு போகாமல் இறைவன் மறைந்து விட்டான்! ஏன்? மணிவாசகரின் அன்பு பெருகி வளர்தல் வேண்டும். அந்த அன்பைத் துய்க்க வேண்டும் என்ற திருவுள்ளம்தான். கடவுள் மறைந்தான். புணர்ச்சி அன்பை வளர்க்காது! பிரிவுதான் அன்பை வளர்க்கும்! மணிவாசகர் கடவுளைக் கண்டார். அனுபவித்தார். கடவுள் பிரிந்து போனார். மணிவாசகர் கடவுளிடம் கொண்ட பிரிவு திருவாசகம் தந்தது; திருவாசகத்துள் அமைந்த பிரார்த்தனைப்பத்தையும் தந்தது.

பிரார்த்தனைப் பத்து

மணிவாசகர் சதாசர்வகாலமும் வீடுபேற்றை அடைய நினைத்துப் பாடிய பாடல்களின் பகுதியே பிரார்த்தனைப் பத்து . பத்து எனப்படுமாயினும் பதினோறு பாடல்களைப் பெற்று அந்தாதித் தொடையாக விளங்குவது இதன் சிறப்பு! "அந்த மிலா ஆனந்த சத்தகலாமல் எனை அழுத்தி ஆள்வாயென்று சிந்தை கலந்துரைத்ததுவே பிரார்த்தனைப் பத்தாய்ப் புகலும் செய்கையாமே" என்ற பழைய புராணக் கூற்றின் வழி, இடையீடு இல்லாது சிவானந்தப் பெருங்கடலில் திளைக்கத் திருவருள் புரிக என மணிவாசகர் வேண்டிக் கொள்ளுதலே பிரார்த்தனைப் பத்தாகும்.

மணிவாசகர் திருப்பெருந்துறையில் எழுந்தருளியிருந்த போது, தில்லையில் இறைவனைக் கண்ட ஆனந்தத்தால் சிந்தைமகிழப், பசியால் வாடிய ஒருவர்க்கு உணவு கண்டார் போலக் கண்டதில் அமைதியுறாது அவரிடம் இடையறா அன்பு செய்யவும், ஒய்வில்லாது உருகவும், பரமானந்தப் பழங்கடல் மூழ்கவும், தளிர்ப்பாதம் பெறவும், பேரரமைப் பேரானந்தம் வைக்கவும். ஆனந்தமே யாக அபேதமாகி விளங்கவும்,

இறைவனை நோக்கிப் பிரார்த்தித்தலின் இப்பகுதி பிரார்த்தனைப் பத்தாயிற்று.

இப் பிரார்த்தனைப் பத்து, தில்லையில் அருளப் பெற்றது என்றும் கூறுவர்.

இதனுள், அடியாரெல்லாம் அருளார் அமுதப் பெருங்கடல் புக்கு அழுத்தத் தாம் மட்டும் இருளார் யாக்கை பொறுத்து எய்த்து அலந்தமையும், பேராஒழியாப் பிரிவில்லா, மறவா, நினையா, அளவிலா, மாளா இன்பமாகடல் புகுதற்கு மெய்யன்பு தனக்கு வேண்டுமென்பதும் கூறுமுகத்தான் அடியார்க்குக் கிடைத்த பேரின்பம் தமக்குக் கிடையாமை பற்றிய வருத்தக் குறிப்பித்தார் மணிவாசகர். இறைவனிடம் வேண்டுதல் என்பதே பிரார்த்தனை எனக் கொள்ளல் வேண்டும்.

பிரார்த்தனை என்றால் என்ன?

பிரார்த்தனை என்றால் இறைவனிடம் வேண்டுதல் என்பதாகும். உள்ளம் உருகிக் கண்ணீர் மல்க ஒரு முறையாவது இறைவனிடம் பிராத்தனை செய்யாதவர்கள் இருக்க முடியுமா? முடியாது. நமது விருப்பங்கள், ஆசைகள், ஒவ்வொன்றும் ஒரு மலராத பிரார்த்தனைதான். எல்லா முயற்சிகளிலும் தோற்று வேறு கதியற்ற நிலையில் பலர் இறைவனை நோக்கித் திரும்புகிறார்கள். எதிர்பார்ப்புகளாலும், ஏமாற்றங்களாலும் விரட்டப்பட்டு, துன்பங்களிலும், துயரங்களிலும் அலைக்கழிக்கப்பட்டுப் பலர் பிரார்த்தனையில் ஈடுபடுகிறார்கள் இவர்கள் தங்கள் உலகியல் ஆசைகளும், தேவைகளும் நிறைவேறுவதற்கு இறைவனிடம் பிரார்த்தனை செய்கின்றனர். இது ஒரு வகைப் பிரார்த்தனை. இதனை லௌக்கப் பிரார்த்தனை அதாவது காமியப் பிரார்த்தனை என்கிறோம்.

மற்றொரு பிரார்த்தனை ஆன்மீகப் பிரார்த்தனை. அதாவது நிஷ்காமியப் பிரார்த்தனை. இறைவனை அடைதற்குரியச் சாதனையாகச் செய்யப் படுகின்ற பிரார்த்தனைதான் ஆன்மீகப் பிரார்த்தனை. ஆன்மீகப் பிரார்த்தனையில் கடவுள் நிச்சயமாக செவிசாய்க்கிறார் என்பது மேலோர் கண்ட உண்மை. ஆன்மீக வெற்றிக்குத் தெய்வத்தின் துணையைத் தேடுவதே

பிரார்த்தனையின் நோக்கம். ஆன்மீகப் பிரார்த்தனை என்பது புலன்களிலிருந்து தன்னை விடுவிக்கும்படியும், அறியாமை இருளிலிருந்து உண்மைப் பேரொளிக்கு இட்டுச் செல்லும் படியும் கடவுளிடம் வேண்டுவது என்பது உணர்தல் வேண்டும். ஆன்மீகப் பிரார்த்தனை மூலம் இறைவனின் அருகில் செல்லமுடியும். இறைவனிடம் உறவை வலுப்படுத்த முடியும். ஆக இறைவனிடம் நெருங்கி இருந்து பேசுவதே ஆன்மீகப் பிரார்த்தனை எனவும் கொள்ளலாம். அப்படிப் பட்ட ஆன்மீகப் பிரார்த்தனை இதய ஆழங்களிலிருந்து தானாக எழுகிறது என்பதை ஒருபோதும் மறந்து விடக் கூடாது.

இப்படிப்பட்ட ஆன்மீகப் பிரார்த்தனையைத்தான் மணிவாசகர் மேற்கொண்டு பிரார்த்தனைப் பத்தாகப் பதினோறு பாடல்களாகப் பாடி இறைவனை இறைஞ்சுகிறார்.

மணிவாசகரின் பிரார்த்தனை

'அன்று உன் அன்பர் கூட்டத்தில் என்னை மறந்து இன்புற்றிருந்தேன். இனிமையான அந்த நாட்கள் கடந்து போயிற்று. உனது ஜோதியால் ஒன்றுபட இன்று நான் வாடிக்கிடக்கிறேன். ஆதலால் அடியேனுக்கு அன்பு மிகும்படி அருள் செய்க' என வேண்டுகிறார் மணிவாசகர்.

மணிவாசகர் இறைவனிடம் நேராகப் பேரின்பம் அருளுக என வேண்டியிருந்தால் பெருமான் அதனை உடனே அருள்வர். இருப்பினும் மணிவாசகர் அன்பு செய்து, சிவஞானம் பெற்றுச் சிவபோகம் துய்க்க விரும்பி எனக்குப் போதும் என்று அமையாத அன்பைக் கொடு என்று வேண்டுகிறார். இடையீடில்லா அன்பே சிவமாய் இன்பம் ஆதலின் சதாமுத்தியாதல் இதன்மூலம் காண முடிகிறது. அடுத்து அடியார் வேண்டுவது, 'அடியார்கள் அருள் பெற்று உன்னை அடைந்தனர். பிணமாகவிருக்கும் இந்த உடலைப் பேணியதால் வினைகளைப் பெருக்கிக் கொண்டேன். அந்த வினைகளைப்போக்கி, அன்பைத் தந்து மனம் கசிந்து உருகும்படியான கருணை செய்' என்பதாகும்.

உள்ளத்தே அன்பை உதவி, என் நெஞ்சு ஓயாது உருகவும் வேண்டியதின் காரணமாய் இப்பாடல் மூலம் சதாமுத்தி உணர்தலைக் காண்கிறோம்.

மேற்கூறிய இரு வேண்டுதல் வழி மணிவாசகர்

"அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு"

என்ற குறள் கருத்தை வலியுறுத்திச் செல்கிறார். மூன்றாவதாக "அடியார்கள் அருள் கடலில் ஆனந்தம் அடைய, நான் மட்டும் உடலைச் சுமந்து இளைத்தேன். அதைக் கண்டு உலகம் என்னை பித்தன் என்று ஏளனம் செய்யாமல் நின் திருவடி அன்பைத் தர வேண்டும்" என வேண்டுகிறார்.

சதாமுத்தியடைதலின் பயனை விரும்பி, அதற்குண்டான மெய்யான அன்பை விரும்புவதால் இவ்வேண்டுகோள் பதிகக் கருத்திற்குப் பொருந்துமாறு அமைவதைக் காண முடிகிறது.

நான்காவது பாடல்வழி மணிவாசகர் வேண்டுவது, "மிக நெருக்கமான அடியார்களுக்குள் என்னையும் ஒருவனாக நீயே விரும்பி ஏற்றாய். எனக்கும் விரும்பத் தகாத ஒன்றையும் விரும்பாது, உயர்ந்து அன்பினை பொருந்துதலாகிய செய்கை ஏற்படுமா? அதுவே எனக்கு வேண்டும்" என்பதாகும்.

'என்னையும் ஒருவனாக நீயே விரும்பி ஏற்றாய்' என்பதிலிருந்து இறைவனது எளிவந்த கருணை இனிதாக விளக்கப்படுகிறது. மேலும் என்னை ஆண்டது என் தகுதியால் அன்று, நின் கைம்மாறு வேண்டாத கருணைப் பெருக்கால் என்பதிலிருந்து

"வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல"

என்ற குறட்கருத்தும் புலப்படுகிறது.

இத்திருப்பாடலில், மணிவாசகர் மிகுதியான அன்பை வேண்டுதலிருந்து சதாமுத்தி தெளிவாகிறது.

அடுத்து வரும் வேண்டுதலில் மணிவாசகர், "பழைய பேரின்பக் கடலில் புகுந்து உடல்பற்று, சிற்றுணர்வு, செருக்கு எல்லாம் நீங்க உன் திருவருள் வேண்டும்" என வேண்டுகிறார். அதாவது அது எனக்கும் உண்டாகுமோ என வினாவுதல் வாயிலாகத் தம் பிரார்த்தனையை விண்ணப்பிக்கின்றார்.

மணிவாசகர் பரமானந்தப் பழங்கடல் சேருதலை வேண்டுதலின் இத்திருப்பாடல் சதாமுத்தியைக் குறிக்கிறது.

ஏழாவது பாடலில் மணிவாசகர் "உன் அடியார் எல்லாம் உனது பேரானந்தக் கடலில் திளைத்திருக்கின்றனர். நானோ இந்நிலவுலகில் துன்பத்தைப் பெருக்கி இளைத்துக் கிடப்பது அழகாகுமோ? நீ என்னை வலிய ஆட்கொள்வாய்" என வேண்டுகிறார்.

அழுத பிள்ளைதான் பால் குடிக்கும், கேட்டால்தான் பெறலாம் என்பதை உணர்ந்த நிலையில் மணிவாசகர் இதுவரை இருந்த அறியாமையை நீக்கி, உண்மை அன்பை உதவு என வேண்டுகிறார். இன்ப விழைவால் அன்பு வேண்டுதலின் இத்திருப்பாடல் சதாமுத்தியாயிற்று.

அடுத்து வரும் எட்டாவது பாடலில் "உன் அடியார் முற்றிலும் பக்குவமானவர்கள். நானோ இன்னும் பக்குவம் ஆகாது இருக்கிறேன். ஆயினும் என்னை விரைவில் நீ பக்குவப்படுத்துவாயாக" என வேண்டுகிறார் மணிவாசகர்.

ஒன்பதாவது பாடலில் மணிவாசகர் "நின்னடியார்கள் அருள் அனைத்தையும் அளித்து விட்டாய் என்று அகக்களிப்போடு அருளை அனுபவிக்கின்றார்கள். நான் மட்டும் அயலானா? நான் வருந்த வேண்டுமா? விரைந்து வந்து என் மனதை ஒழுங்கு படுத்தி என்னையும் உனது நிலைத்த அருளுக்கு ஆளாக்குக" என்று வேண்டுகிறார்.

பின்னர் பத்தாம் பாடலில் மணிவாசகர் "மனம் நெகிழாத அடியேன் துளைக்கப்படாத ஒரு சுரைக்காயை ஒத்திருப்பேனாயின் இதனை நம்பி நீ வாழ்ந்தாய்; இவ்வுடலில் புகுந்த உன்னை நன்றாக உணர்ந்து உருகி அதனால் ஆக்கத்தை அடையும் மனத்தை நீ

அருளுங்காலம் கொடியேனாகிய எனக்கு என்று கூடும்? இயம்பி அருளுக" என்று வேண்டுகிறார்.

இப்பாடல்கள் வழி, உருகிப் பெருகும் உள்ளத்தை வேண்டுதலால் சதாமுத்தியை விழையும் பாடல்களாக அமைகிறது.

இறுதியாக மணிவாசகர் "அடியார்கள் இடைவிடாது சேர்ந்து, சேர்ந்து ஆடிப்பாடி மகிழ்ந்திருப்ப, நான் பால் வற்றிய மரம் போல் வாடி நிற்பேனா? ஆட்கொண்ட உன்னுடன் சேர்ந்து அன்பு பெருகிக் கூத்தாடி இன்பமயமேயாகும்படி நீ அருள் செய்வாயாக" என்று இறைவனிடம் வேண்டுகிறார்.

அதாவது சதாமுத்தியை (ஆன்மாக்களுக்கு முத்தியை நிச்சயம் பண்ணுதல்) பிரார்த்திப்பதாகிய இப்பிரார்த்தனைப்பத்தில் மணிவாசகர்.

"வாடினேன், பிணம் போலப் பயனின்றி வெறுப்பால் வளர்கின்றேன், யாக்கை பொறுத்து எய்த்தேன், புறமே கிடந்து புலம்புகின்றேன், தேய்கின்றேன், அயலார் போல் அயர்கின்றேன், வாடி வாடி வழியற்றேன் என்றெல்லாம், சிவானுபவம் பெற்று இழந்த பிரிவுத்துன்பத்தைக் கூறி, ஆனந்தமேயாக இருக்க அருள் நிலையை வேண்டிக்கொள்கிறார் என்பது புலனாகிறது.

அன்பு நிலையே ஆன்மீக நிலை :

மணிவாசகர் அருளிய பிரார்த்தனைப் பத்தின் வழி, நாம் அறிவது 'அன்பு நிலையே ஆன்மீக நிலை' என்பதே. அப்படி அன்பை, திருவடி அன்பை, மிகுந்த அன்பை, மெய்யன்பை, உண்மை அன்பைப் பெறுவதற்கு வழியாக அமைவது ஆன்மீகப் பிரார்த்தனைதான். ஆன்மீகப் பிரார்த்தனை மூலம் ஆன்மீக வளர்ச்சியடைய முடியும். அப்பொழுது இறைவனின் திருவருளாகிய பொற்கிரணங்கள் நம்மேல் பட்டு இதயத்தாமரை மலர்ந்து விரிகிறது. இந்தத் திருவருளை, தெய்வீக ஆற்றலை வேண்டுவதே நமது பிரார்த்தனையாக இருக்கட்டும். அதுவே சிறந்தது. அதுவே நம் வாழ்வை வளம் பெறச்செய்யும்.

33. குழைத்த பத்து

ஆய்வுரைஞர். **துரை. இராஜகோபாலன்**

திருவாசகத்தின் பெருமை விரிப்பின் பெருகும். தொகுப்பின் எஞ்சும். திருவாசகம் படிப்போரையும் கேட்போரையும் மனம் உருக வைக்கும். வான் கலந்த மாணிக்கவாசகரின் திருவுள்ளம் அத்தகையது. இறைவனது பெருமையினையும் அவர் காட்டிய கருணையையும் நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து பாடிய பாடல்கள். அப்பாடல்களில் சிறந்த பகுதி குழைத்த பத்து ஆகும்.

குழைத்தலாது வாடச் செய்தல். இறைவன் அடிகளை வாடச்செய்தமை குறித்துப் பேசப்படுவது குழைத்த பத்து ஆகும். துன்பத்திலிருந்து மீட்க வேண்டும் என்பது பதிகக் கருத்தாம். இறைவன் தன்னை யாட்கொண்டு மீட்டும் விடுத்துத் தன்னைக் குழைவித்த திருக்கருணையைப் பாடியது என்றும் கொள்ளலாம்.

ஆன்மாக்கள் இறைவன் திருவருளைப் பெறுதற்குப் பெரு முயற்சி செய்ய வேண்டும். உழைக்க வேண்டும். உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ? பிழைகள் செய்வது மனித இயற்கை. தப்பேதும் நாம் செய்யினும் இறைவன் பொறுத்தருள்வான் என்ற திட நம்பிக்கை கொள்ள வேண்டும். பழமையாகிய வினைகளும் அவற்றின் காரியங்களும் வருத்தினால், இறைவனிடம் முறையிட்டால் போதும். அவன் அருளாவிட்டால் அது அவனது தகுதிக்கு இழுக்காகும்.

மாணிக்கவாசகருக்குத் தன் திருக்கோலத்தைக் காட்டி, வலிய ஆட் கொண்டான். ஆனால் அவரது மனம் இன்னும் ஒடுங்க வில்லை. தீவினையால் கொண்ட உடல் இன்னும் தடையாக இருக்கிறது. இந்த உடம்பையும் அழித்து ஒழிக்க வேண்டும் என்பதே அவர் முறையீடு. தலைவராய் இருப்பவர் அடித்தல் இயற்கை. அடித்தது போதும், என்னை அணைக்கவும் வேண்டும் என்பது அடிகளாரின் வேட்கை. இதனால் இறைவன் வீடு பேறு அளிக்க வல்லவன் என்பது தெளிவு.

மாணிக்கவாசகர் இறைவனை நோக்கி, "அன்று என்னை ஆட்கொண்டு அருளியது உண்மை. அந்தக் கருணை இப்பொழுது இல்லாமற் போனது ஏன்? குற்றங்கள் பல என்னிடம் உண்டு. அவற்றைக் குணம் என்று கொள்ளலாகாதா ? அவ்வாறு குணமாகக் கொண்டால் உன்னை யார் என்ன செய்யக் கூடும். எப்பிழை செய்யினும் பொறுப்பது நின் கடன். இரங்கி அருள்தல் வேண்டும் என்றும்

"நின் பெருமையை மறந்தேன். நின் சீரினை உணரத் தவறினேன். அதற்குக் காரணம் நான் இந்த உடலின் மீது கொண்ட பற்றும் அவாவும். இது என் அறியாமையால் விளைந்தது. இந்த அறியாமையை நீக்கி நல்லறிவினை எனக்கருளி உன் பெருமையைப் பாடும் பணியே பணியாய் அருள்வாய்" என்றும் கூறுகிறார்.

இறைவனை அடைதற்கு அகக்காரணங்கள், புறக்காரணங்கள் எல்லாமே ஒரு காரணமாக அமையும். இறைவனை அகத்தே கண்டு களித்தல் வேண்டும். தீமை, நன்மைகள் எல்லாம் அவனே. இதை முழுதும் உணரும் போது திகைப்பு உண்டாகிறது. இத் திகைப்பினின்று தெளிவை அருள்பவன் இறைவன் ஒருவனே. அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவும் அவனே.

இறைவன் வள்ளல். நாம் கேட்பதெல்லாம் கொடுக்கும் கற்பகத் தரு.

"வேண்டத்தக்கது அறிவோய் நீ
வேண்ட முழுதும் தருவோய் நீ
வேண்டும் அயன் மாற்கு அரியோய் நீ
வேண்டி என்னைப் பணி கொண்டாய்
வேண்டி நீயாது அருள் செய்தால்
யானும் அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரிசு ஒன்று உண்டு என்னில்
அதுவும் உன் தன் விருப்பன்றே."

தன்னை எப்போதும் சிந்தித்து வந்திக்கும் அடியார்கள், அவர்களுக்குத் தேவையானது எது என்று உணர்பவன் இறைவன்.

நாம் அவன் பால் ஒன்றையும் வேண்டுதல் தேவையில்லை. அவ்வாறு இருப்பினும் உயிர்கள் அறியாமையால் பலவற்றை வேண்டினாலும் அவற்றையும் கொடுக்கும் அருள் ஊற்று. அயன் மாலுக்கு அவன் அரியவனாக இருக்கலாம். ஆனால் அடியார்களுக்கு எளியவன். தன்னையே ஆத்தும நிவேதனமாக அளித்த அன்பருக்கு அவன் அன்பு தவிர எதுவும் வேண்டுவதில்லை. அதை அருள்வதற்கு அவன் அருள்வதற்குத் தடையாக இருக்கமாட்டான்.

"அன்றே என்தன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னை ஆட்
கொண்ட போதே கொண்டிலையோ
இன்று ஓர் இடையூறு எனக்கு உண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே"

இறைவனே ! அன்றே என்னை ஆட்கொண்டாய். அப்போதே என் உயிர், உடல், பொருள் எல்லாவற்றையும் ஆட்கொண்டாய். இனி அவைகளின் மீது எனக்கு எந்த உரிமையும் இல்லை. எந்த இடையூறு வந்தாலும் உன் திருவடி மீது நான் கொண்ட பற்று என்னைக் காப்பாற்றும். நன்றும் தீதும் நான் அறியேன். நீ நின் திரு உள்ளப்படி நல்லது செய்யினும், அல்லது செய்யினும் அவை நின் திருவுளப்பாங்கின்படி ஆகும். என் செயலால் இனி ஆவது ஒன்றுமில்லை. எல்லாம் நின் செயலே என உணரப் பெற்றேன். வினையென்ற பெயரால் நின் மலைபோலும் துன்ப வெயிலில் வாட்டுவதும் நின் விளையாட்டு. இரங்கி மனம் கனிந்து அன்னைபோல் பரிந்து இன்பத் தாலாட்டுவது நின் அருளாட்டு - எதுவும் உன் விருப்பப் படி நடப்பதே என்கிறார்.

இறைவா! உன் கழலிணைகள் கண்டேன். அத் திருவடிகளைச் சிந்திக்கும் செயல் ஒன்று அன்றி வேறில்லை. மண்மேல் இவ்வுடலை விடும் வகை குறித்து நினைக்க எனக்கு என்ன உரிமை உள்ளது? என்றும் கூறுகிறார். இதனால் உயிர்களின் சுதந்திரமின்மை கூறப்பட்டது.

"முன்னம் புரிந்த நல்வினைப் பயனால் உன் திருவடிகளை அடைந்தேன். அந்தணன் ஆகிக் கண்டு கொண்டு அருளினாய். உன் திருமேனி காட்டி என்னைப் பணி கொண்டாய் வீடுபேறு அருளி என் விருப்பத்தை நிறைவேற்றுதல் வேண்டும். இதுவே நல்லதருணம் இனியும் என்னை வாடச் செய்வது முறையல்ல" என்று முறையிடுகிறார்.

இறைவன் திருவடியே அழியா இன்பம் தரவல்லது என்பதை இதன் வழி நாம் உணரலாம்.

34. உயிருண்ணிப்பத்து

முனைவர். தி. பூங்குன்றன்

தமிழ் மொழியின் ஞானக் கருவூலம் திருவாசகம். அது சைவத்திருமுறை பனிரெண்டனுள் எட்டாம் மறையாகத் திகழும் அருள் நூல். மக்களின் மனத்தைக் கரைத்து மாசு நீக்கும் வல்லமை இப்பனுவலின் ஆக்க நெறி. திருவாசகத்தில் சிவபுராணம், கீர்த்தித் திரு அகவல், திரு அண்டப்பகுதி, போற்றித் திரு அகவல் என்னும் நீண்ட அகவற்பாக்களும் 47 பதிகங்களும் உள. அவற்றுள் 34ம் பதிகம் உயிருண்ணிப்பத்து. இது மணிவாசகர் கலி விருத்தத்தால் இப்பதிகத்தைச் சிவனை எண்ணி எண்ணித் திருப் பெருந்துறையில் பாடியதாகும்.

வினையின் நீங்கிய விளங்கிய அறியனாகத் திகழும் மாணிக்கவாசகரின் சிவானந்த நிலையின் சித்தரிப்பே இப்பத்து என்பது மெய்ப்பொருள். மாசற்ற சோதியால் இருள் ஒடுங்கி ஒளி விளங்கும் மாணிக்கவாசகர் தற்சிறுமையினையும் இறை பெருமையினையும் இங்கு விளக்குகிறார். இறைவன் தம்மை ஆட்கொண்ட கருணையை நினைந்து நினைந்து உருகிப் பாடிய இப்பதிகம் பக்தி மார்க்கத்தின் மகுடமாகும். உயிருண்ணல் என்பது இறைவன் மணிவாசகர் உடல் புகுந்து உயிர் கலக்கும் நிலையாகும். அதுவே சிவானந்த மேலீடாகும்.

இதனையே அத்துவிதம் என்பர். "அ" என்னும் எதிர்மறை முன்னொட்டுச் சேர்ந்த துவைதம் என்னும் சொல்லுக்கு இரண்டு இல்லை என்பது பொருள். இங்கு இரண்டு எனப்படுவன பரம்பொருளும் உயிருமே ஆகும். அதில் பரமாத்மாவாகிய ஒரு பொருளைத் தவிர வேறு எதுவுமே இல்லை. என்பதை அழுத்தமாக மணிவாசகர் பாடியுள்ளார். உயிர் உண்ணப்பட்டுப் பிரம்மமான சத்துப் பொருளை இப்பதிகத்தில் முழுக்க முழுக்க அனுபவித்துப் பாடியுள்ளார்.

"ஊனார் உடல் புகுந்தான் உயிர்கலந்தான் உளம்பிரியான்
தேனார் சடைமுடியான் மன்னு திருப்பெருந்துறை உறைவான்
வானோர்களும் அறியாத ஓர்வளம் ஈந்தனன் எனக்கே" *(34:2)*

என்ற மணிவாசகரின் கூற்று இறைகலந்து ஒன்றிய பேரின்ப அனுபவத்தைச் சுட்டும்.

"உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே"

என்பார் திருமூலர். மாணிக்கவாசகரோ தன் உயிரையே உண்டு தனக்குச் சிவானந்தம் தந்தவன் சிவபெருமான் என்றார். இவ்வொருமை நிலையை,

"இன்பே அருளி எனை உருக்கி உயிர் உண்கின்ற எம்மானே" *(44-3)*

என எண்ணப் பதிகத்தில் விதந்துரைக்கின்றார். நம்முள் பேரின்பம் தழைத்து ஓங்கினால் உயிர் தோன்றாத் தன்மை பெறும். இதனை

"உடலும் எனது உயிரும் புகுந்து
ஒழியா வணம் நிறைந்தான்" *(34-6)*

என்ற பாடல் வரிகள் விளக்கும். ஞானசம்பந்தரோ

"சிந்தையுள்ளும் நாவின் மேலும் சென்னியும் மன்னினர்ன்
வந்தென்னுள்ளம் புகுந்து மாலை காலை ஆடுவான்"

எனப் பரவசப்படுவார்.

"அடியேன் உட்புகுந்தான் அகல்வானும் அல்லன் இனி எனத் தோய்வார் நம்மாழ்வார். மாணிக்கவாசகரின் உயிருண்ணும் நிலை அகநிலை பற்றிய மெய்ஞ்ஞானத்தை விளக்குகிறது.

"உள்ளம் பெருங்கோவில் ஊனுடம்பு ஆலயம்" *(1823)*

என்றும்,

"சிந்தையது என்ன சிவன் என்ன வேறில்லை" *(2853)*

என்றும் சிவன் சீவன் இரண்டின் ஐக்கியம் பாடப்பட்டு உடல் புகுந்து உயிர் கலத்தல் ஒன்றே உண்மை என்பது நிலை நிறுத்தப்படுகிறது.

அனுபவ வெளிப்பாடு

'பற்றுக பற்றற்றான் பற்றினை' என்பது வள்ளுவம். பற்றற்றவனாகிய சிவபெருமானைச் சிக்கெனப் பற்றியதன்

விளைவே மாணிக்கவாசகரின் சிவானந்த நிலையாகும். உயிருண்ணிப் பத்தில் உலக வாழ்க்கையைத் துறந்து இறைவனிடம் இரண்டறக் கலக்கும் ஆன்ம நிலை அழுத்தம் பெறுகிறது. நிலையில்லா இவ்வுலக வாழ்க்கையின் பற்றினைக் களைந்த மணிவாசகர் இற்றவனின் மெய்ஞ்ஞான உணர்வைத் தெளிந்தார். அத்தெளிவின் விளைவால்,

"கடலின் திரை அதுபோல் வருகலக்கம் மலம் அறுத்து என்
உடலும் எனது உயிரும் புகுந்து ஒழியாவனம் நிறைந்தன்"

என உள்ளம் நெக்கு உருகுவார் மணிவாசகர். இங்குத் தாம் அனுபவித்த அனுபவ உண்மையை அறிவுக்கு விருந்தாக விளக்கும் தத்துவ ஞானியை இப்பத்தில் காண முடிகிறது. இறைவன் தானே வந்து ஆட்கொண்ட நெறி மாணிக்கவாசகரின் உள்ளம் ஒன்றிய மெய்ப்பொருளை மெய்ப்பிக்கின்றது.

"உணர்வினில் நின்ற ஒன்றை உணர்ந்தேனே" 5-8-4

எனத் திருவாய் மொழியும் இதனையே உரைக்கும்

இறைவன் அறிவுக்கும் ஆய்வுக்கும் அப்பாற்பட்டவன். அவனை ஒன்றிக் கலந்த கேண்மையால் உணரலாமே ஒழிய வேறு நெறியாய் அறிவது யாங்ஙனம்? திருமூலரும்

"உள்ளத்தின் உள்ளே உணரும் ஒருவனை" (511)

என்பர். ஊனாய் உயிராய் உணர்வாய் தம்முள் தாமே கலந்த இறை அனுபவத்தை மாணிக்கவாசகப் போதகர் இவ்வுலகம் உய்ய

"...............வியன் உலகில்
எனை தான்புகுந்து ஆண்டான் எனது என்பின் புரை உருக்கி
பினை தான் புகுந்து" (34-4)

என விளக்குவார். தான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்பதே மாணிக்வாசகரின் உயிருண்ணிப்பத்தில் வெளிப்படும் மெய்யுணர்வுக் கோட்பாடு.

புறம் போகாப் பெற்றி :

இவ்வுலக வாழ்வின் இன்பத்திற்கு ஒண்பொருள் வேண்டும். நிலையில்லா உலகில் நிலையற்ற பொருளையே நிலையாக எண்ணி மருண்டு மாளும் மக்களை மீட்க முனைந்தார் மாணிக்கவாசகர். மெய்ப்பொருளாம் சிவனை அடைய பொய்ப்பொருள் மயக்கம் அறுக; அறுக எனக் கூவி மொழிந்து தாம் மெய்ஞ்ஞானம் பெற்றுப் புறம்போகாப் பெற்றி கொண்ட நெறி மொழிவர்.

"வேண்டேன் புகழ் வேண்டேன் செல்வம் வேண்டேன் மண்ணும் விண்ணும்
வேண்டேன் பிறப்பு இறப்பு சிவம்வேண்டார் தமை நாளும்
தீண்டேன் சென்று சேர்ந்தேன் மன்னு திருப்பெருந்துறை இறைதாள்
பூண்டேன் புறம்போகேன் இனிபுறம்போகல் ஒட்டேன்" *(34-7)*

என இவ்வுலக வாழ்வின் பற்றுக்களைத் துறந்து சிவத்தை மறவா நிலையினைப் பாடிப் பரமானந்தப்படுவார். இப்பெற்றி மாணிக்கவாசகரின் ஒருபொருள் கோட்பாட்டிற்குக் காரணமானது எனின் மிகையன்று. திருமூலரின் 'ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்' எனும் மொழி ஒப்புமையின்பம் பயப்பது.

யான் எனது என்னும் செருக்கறுப்பவனே சிவப்பேறு அடைவான். உலக இன்பங்களில் உழல்பவன் வானுலகம் செல்லும் மார்க்கம் காணான் என்பதைத் தன்னிலை விளக்கமாக மாணிக்கவாசகர்,

"ஊன்பரவிய உடலைச் சுமந்து அடவிமரம் ஆனேன்" *(34-10)*

எனக் கழிவிரக்கத்தோடு உள்ளம் ஒன்றிய மெய்யுணர்வு அனுபவம் நேராத தொடக்கக் கால வாழ்வைக் கூறி மக்களை நல்லாற்றுப் படுத்துவார்.

அன்பின் ஆழம் :

புறமெங்கும் தேடியும் காண்பதற்கு அரியவனான சிவபெருமான் அடியவரின் அன்புக்கு எளியன். அன்பின் வழியை உயிர் நிலையாகக் கொண்ட மாணிக்கவாசகர் இறைவனை அருமருந்து, அமுது, அரசு, தேன் என இப்பதிகத்துள் பலவாறு

பாடிப்பரவுவார். சிவப்பரம்பொருளை முழுமையாய்ச் சொற்களுள் சிக்கெனப் பிடிக்க,

"கொல்தேன் எனக்கு என்கோ குரைகடல்வாய் அமுது என்கோ ஆற்றேன் எங்கள் அரனே அருமருந்தே எனது அரசே" (34-8)

என்றும், அடுத்த பாடலில்

"அச்சோ எங்கள் அரனே! அருமருந்தே ! எனது அமுதே" (34-9)

என்றும் முயன்று மருள்வார் மாணிக்கவாசகர். பின்னர்த் தெளிந்து அளவிட முடியாத ஆனந்த நன்றிப் பெருக்கை வார்த்தை வளங்களாலும் உருவக உக்தியாலும் ஓதிச் செல்வார். இதனை

"சொல்லும் பொருளும் இறந்த சுடர்"

"சொற்பதம் கடந்த அப்பன்" (3-40)

"மனவாசகம் கடந்தான்" (34-3)

என வரும் தொடர்கள் அழகுற படம்பிடித்துள. பரம்பொருளை எவரெல்லாம் இடையறாது எப்பொழுதும் சிந்தை கொள்வாரோ அப்பொழுதெல்லாம் அவன்,

"தானே வந்தென துள்ளம் புகுந்து அடியேற்கு அருள் செய்தான்" (38-10)

எனத் திருஏசறவு பதிகத்தில் உரைப்பார் வாசகர். சிவனின் திரு அருளே பற்றுகளையும் பரஞ்சுடர் என்பதை மாணிக்கவாசகர் உயிருண்ணிப்பத்தில்

"எனை நான் என்பது அறியேன் பகல் இரவு என்பதும் அறியேன் மனவாசகம் கடந்தான் எனை உன்மத்தன் ஆக்கி சினமால் விடை உடையான் மன்னு திருப்பெருந்துறை உறையும் பனவன் எனைச் செய்தபடிறு அறியேன் பரம்சுடரே" எனப் பாடுகின்றார்.

அழைப்பு :

உயிருண்ணிப் பத்தில் மாணிக்கவாசகரின் அனுபவத்தைப் படிப்பவர்கள் அவ்வின் வெள்ளித்தில் மூழ்கித் திளைப்பர். அவரின் பாடல்கள் இதயத்தை உருக்குவன. உணர்வு பரத்தில் கலப்பன. தாம் பெற்ற சிவ அனுபவத்தைப் பிறரும் அடைய

அடியவர்களைக் கூவி அழைக்கின்றார் - மாணிக்கவாசகர் இதனை,

"பற்றாங்கு அவை அற்றீர் பற்றும் பற்று ஆங்கு அதுபற்றி
நற்றாம் கதி அறிவோம் எனில் கெடுவீர் ஓடி வம்மீன்
தெற்றார் சடைமுடியான் மன்னு திருப்பெருந்துறை இறைசீர்
கற்றாங்கு அவன்கழல் பேணினரொடும் கூடுமின் கலந்தே" (34-5)

என உயிருண்ணிப் பத்து ஓதும். 'இறைவன் நாய் போன்ற எனக்கும் தவிசு இட்டு என்னை ஆட்கொண்டான்; என்னில் என்னினும் வினை கேடரும் உளரோ?' என வினவி அடியவர்களை ஆற்றுப்படுத்தி இறைவனோடு இரண்டறக் கலக்கச் செய்து ஒருபொருள் உண்மையை நிறுவ முயல்கிறார் மாணிக்கவாசகர். வானவரும் அறியாத வளம் ஈர்ந்தபிரான் உங்களுக்கு அருளுவான் என உறுதி மொழிகின்றார்.

இப்பத்தில் மாணிக்கவாசகர் தாம் அனுபவித்த அனுபவ உண்மையை அடியார்க்கு விளக்கும் தத்துவ ஒளியாக உளர். அன்புடையார் மாட்டு இறைதாமே தம்மை இணைத்துக் கொண்டு ஒருபொருளாம் என்பதை விளக்குவார் அப்பொருள் பிற உயிருள் கலக்கும் பொழுது மாசுபடாத பரம்பொருளாகும். இதனைக் குளிர்ந்த கயத்தில் படியும்போதும், கலங்கிய நீரில் படியும்போதும் வேறுவேறு இயல்பு நீர் நிலைகளில் படியும் போதும் அந்நிலைகளில் விளங்கித்தோன்றும் விண்நிலவு தன் நிலையில் மாறா ஒண்மை போல் பரம்பொருளும் உள்ளது என்பதை உயிருண்ணிப்பத்து சிறக்கப்பேசும். இறைகலந்த உயிர்கள் ஏகப்பொருளாகிப் புறம் ஏகாப் பெற்றியையும் மாணிக்கவாசகரின் அருந்தமிழ் அமுத்தமாகக் காட்டும். அத்துவைதக் கோட்பாட்டின் விளக்கத்திற்கும் செறிவுக்கும் உயிருண்ணிப்பத்தே விளக்கம் என்பது போதரும்.

35. அச்சப்பத்து

முனைவர். கு.வெ. பாலசுப்பிரமணியன்

சிவனடியே சிந்திக்கும் தவஞானியர் நெஞ்சத்தே அச்சம் குடிபுகுதல் இல்லை. காட்டாதன காட்டியும், கேளாதன கேட்பித்தும், மீட்டிங்கு வந்து பிறவாமல் ஆட்கொண்டு, பெருகு சிவஞானமெனும் அருளாரமுதம் பயந்தபின் அடியவர் அச்சமும் உறுவரோ? பதவியிற் பெரியவரை அடுத்தும், பொருளுடை வலியரைச் சார்ந்தும் வையத்தில் அச்சமற்றிருப்பார் உண்டு. ஆயினும் அந்நிலை உறுதிப்பாடுடையதன்று. பதவியும், பொருளும் குலைந்தழிய அவற்றைப் பெற்றிருந்தோரையும், அவர்தமை உற்றிருந்தோரையும் அச்சம் சூழ்ந்து மருட்டும். ஆனால் அரி அயன் இந்திரன் ஆனோர்க்கும் அரியனாகிய பெரியனின் திருவடி நிழல் சேர்ந்தாரை மறலி மறம் சாய்க்காது; வல்வினை நெருங்காது; தீவினை நண்ணாது; அச்சம் அற அணுகாது. "மானின் நேர் விழி மாதராய்! ஈனர்கட்கு எளியேன் அலேன் திருஆலவாய் அரன் நிற்கவே" என ஐந்தாட்டை மதலையும், "அஞ்சுவதொன்றில்லை அஞ்ச வருவதில்லை" என அகவை முதிர் தமிழாளியும், அவனருட்டுணையால் அஞ்சாமை மொழிந்தனர். மாணிக்கவாசகப் பெருந்தகையும்

யானேதும் பிறப்பஞ்சேன் ; இறப்பதனுக்கு என்கடவேன்;
வானேயும் பெறில்வேண்டேன்; மண்ணாள்வான் மதித்துமிரேன்;

என்றவரல்லரோ? அவ்வாறாயின் பெருந்தகை மிச்சப்பத்தெலாம் பாடியவர் அச்சப்பத்துப் பாடியதென் எனும் வினாவிற்கு விடை காண்பதே இக்கட்டுரையாம்.

அஞ்சாவாறும் அஞ்சுமாறும்

நஞ்சுமிழும் நாகத்திற்கு மாந்தர் அஞ்சுதல் இயல்பு. எனினும் நாகம் அரைக்கசைத்த நம்பர்க்கு அவ்வாளரவின் பால் அச்சமில்லை. சொல்வன்மை மிக்கான், மெய்யைப் போன்றதேயாம் பொய்யைப் படைத்துக் கூறிப் பலரையும் நம்பச் செய்து கெடுப்பன். அத்தகு பொய்க்கு யாரும் அஞ்சுவர். ஆனால் மெய்யடியார், உடம்பு பொய் என உணர்ந்தவர். மெய்யுடம்பு

நீங்கிப் புகழுடம்பு மருவும் புண்ணியர் எப்பொய்க்கும் அஞ்சார் என்பதும் ஒருதலை. பின் எவற்றுக்குத்தாம் அவர் அஞ்சுவர்?

"கற்றைவார் சடைஎம் அண்ணல் கண்ணுதல் பாதம் நண்ணி
மற்றும் ஓர்தெய்வம் தன்னை உண்டென நினைந்து எம் பெம்மாற்
கற்றிலா தவரைக் கண்டால் அம்ம நாம் அஞ்சு மாறே"

இதுவே பத்திமைக் கற்புநெறி. ஒரு தெய்வம் உண்டென்று உணர்ந்து அதன் திருவடிகள் நண்ணிய பின் மயக்கம் எற்றுக்கு? பாதாளம் ஏழினும் கீழ் சொற்கழிவு அவன் பாதமலர்கள்; போதார் புனை முடியும் எல்லாப்பொருள் முடிவாம் அவன், பிறப்பு இறப்பில்லான். இத்தகையானைத் தெய்வம் எனக் கொண்டபின், மற்றும் ஓர் தெய்வம் கொள்வது அறியாமை அன்றோ! ஆயிரம் தெய்வங்கள் உண்டென்று பேசி அலமருதல் மனிதர் இயல்பு. இறைத் தூதரென்றும், முற்றத் துறந்தாரென்றும், வரந்தருவாரென்றும், வாழ்விப்பாரென்றும், நோய் நீக்குவாரென்றும், நோக்கரிய செல்வம் வழங்குவாரென்றும் பொய்ம்மைத் துறவியரைப் புகலெனக் கொண்டு உலகர் எவ்வளவு துயருறுகின்றனர்? இத்தகையோரைக் கண்டு அடிகள் அஞ்சினர்.

ஒருநெறிய மனம் உறாதவரால் யாதும் எய்த இயலாது. வழுக்கி வீழினும் நின் திருப்பெயரன்றி மற்றொன்றறியாத மாற்றமில் உள்ளம் உடையார் இடரினும் தளரினும் அஞ்சார் என்பர் ஞானியர். கொண்டானை அல்லாற் பிறரை அறியாக் குலமகள் போல், சிவநெறியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம் பூண்டவர் பிற தெய்வம் சிந்திக்கும் பலஞானம் கருதார். "நள்ளேன் நினதடியாரோடல்லால் நரகம் புகினும்" என்ற அடிகளின் மொழியும் எண்ணுவதற்குரியது. எனவே பத்திமைக் கற்பறம் பற்றாத ஊசல் உள்ளம் படைத்தாரைக் கண்டு இவரால் உலகில் பத்திமை நெறி அழியுமே எனக் கவன்றதால், அத்தகையவர்க்கு அஞ்சுவதாக மொழிந்தனர் வாதவூரடிகள்.

சிவனெம்பெருமான் செத்தும் பிறந்தும் விளையிற் கிடந்தும் துயரும் ஏனைத் தெய்வங்கள் போன்றான் அல்லன். அவன் பிறவா யாக்கைப் பெரியோன். அந்தமும், ஆதியுமில்லா

அரும்பெரும் சோதி. அவனுக்கு ஆட்பட்ட உள்ளம் பிறரையெல்லாம் தேவரெனக் கொள்ள அருவருக்க வேண்டும். அவ்வாறு அருவராதவர் மெய்ஞ்ஞானமுறாதவர். அவர்க்கு ஞானத் தெளிவு இராது. கல்லாதவரை விட அரை குறைக் கல்வியினர் மன்பதைக்குக் கேடு பயப்பர். அதுபோல, மெய்ஞ்ஞானத் தெளிவற்ற பொய்யரால் இறைநெறி இழுக்குறுமென அடிகள் எண்ணினார். ஆகவே அஞ்சுவதாக மொழிந்தனர்.

வன்புலால் வேனும் அஞ்சேன்; வளக்கையார் கடைக்கண் அஞ்சேன் என்றமையின் புறப்பகைக்கும் அகப்பகைக்கும் அடிகள் அஞ்சா இயல்பு கூறினர். வேறுக் கஞ்சாமை திண்ணிய மனத்தாலும், வலிய உடலாலும் மறப்போர்ப் பயில் வானும் என அறிக. கடைக்கணுக் கஞ்சாமை, ஒரு நெறிய உளத்தானும், புறம் போகாப் புலனானும், யோக சித்தியானும் என உணர்க. மாதர்தம் கடைக்கண், பாலுணர்வுக் கட்டில் நில்லாரை மருட்டும், அவர்தம் கிளிமொழி இசையென மயக்கும். அவர்தம் பொய்மைசால் முறுவல் காம நெருப்பைப் பற்றுவிக்கும். முற்றத் துறந்தாரை இக்கண்வீச்சும், மொழியும் ஒன்றும் செய்யா; அவர் இவற்றுக்கு அஞ்சார். சென்றவிடத்துச் செலவிடாது தகைந்து புலன்களை நிறுத்தி ஏவல் கொள்ளும் சால் பினராதலின் சான்றோர், மாதர் வலைப்படுதல் இல்லை. ஆனால் இறைவனை நினைந்து நினைந்து உள்ளந்தான் நின்று உச்சியளவு நெஞ்சாய் உருகாதாரைக் கண்டு அடிகள் அஞ்சுவராம். ஓ! இவர் இந்நிலையாராயின் எக்கால் இவர் உய்வது எனும் ஏக்கமே அவரை அஞ்ச வைத்ததென்க.

ஆட்படாதார் அறிவிலாரே

செஞ்சடையெம்பெருமான் உயிர்களைப் பிறவிக் கடலினின்றும் உய்ப்பவர். அவர் பிணியெலாம் தவிர்ப்பவர்; பிறப்பாய பெரும்பிணிக்கும் மருந்தாகும் பெற்றியர். எனவே மணிவாசகர்,

"*பிணியெலாம் வரினும் அஞ்சேன்*
பிறப்பினோ டிறப்பும் அஞ்சேன்"

என்றனர். பிறப்பின் இறைவன் நினைவு உளதாகும் பெற்றிமை உடையராதலின் பிறப்பஞ்சேன் என்றனர். இறந்துபடின் அவன்

கழல் எய்தலும் கூடுமாதலின் இறப்பஞ்சேன் என்றனர். திருமால் நிலம்பிளந்தும் காணாச் சேவடியானம் எம்பெருமான் எல்லாரானும் தொழத்தக்கவன். அவனைத் தொழாதும், வெண்ணீறு தரியாதும் நிற்பவர் பிறவித் துயரினின்றும்பிழையார். அவர் பொருட்டு யான் அஞ்சுவேன் என்றனர் அடிகள்.

"பூசிற்றாம் திருநீறே நிறையப் பூசி
போற்றி எம்பெருமானே என்றுபின்நா
நேசத்தால் பிறப்பு இறப்பைக்" .....

கடந்து வாழ்தலே ஆன்மாக்கள் மெய் உணர்வு பெற்றதன் அடையாளம் என இதனால் உணர்த்தப் பெற்றது. இறைவன், மாந்தர்தம் நில்லா உடம்பைச் சுடலையில் இட்டுக் கொளுத்து இடுகாட்டில் உறைபவன் ஆதலின் காடுடைய சுடலை பொடியாட வெண்ணீறு கண்ணித்த மேனியின் ஆயினன். அடிகள் திருக்கோவையாரில் வானவ வளம் நீறெழ நீரணி அம்பலவன் "என்றமை காண்க. நீற்றனும் ஏற்றனுமாய சிவபெருமானின் தாட்டாமரை தொழுது வாட்டும் பிறவா நோய் தவிர்கிலர் காண் இவ்வுலகர் என அவரைக் கண்டு அ்டிகள் அஞ்சுவதாயினர்.

"அகம் நெகாதவர் அறிவிலாரே"

சான்றோர் பழிபாவங்கட்கு அஞ்சுவர். அடிகள் தமக்கு அவ்வச்சமும் இல்லையென்றார். ஏனெனில்.

"யாவர் கோன் என்னையும் வந்து ஆண்டு கொண்டான்
யாமார்க்கும் குடியல்லோம் யாதும் அஞ்சோம்"

என்ற தன்மையாலென்க. இறப்புக்கும் அஞ்சா நெஞ்சுரமும் வாய்த்தது. ஆயினும் அஞ்சுதல் முழுதும் ஒழிந்ததா எனின் இல்லை. பெருமானை அகத்துள் எண்ணி எண்ணி நெஞ்சுருகா எளியாரைக் கண்டு அடிகள் உள்ளம் நடுங்கியது. அகம் நெக வேண்டுமாயின் யாது செய்யவேண்டும். உள்ளத் தடத்தில் எம்பெருமானை நினைந்து இருத்த வேண்டும்.

"அச்சம் தீர்த்து ஆட்கொண்டான் அமுதம் ஊறி
அகம்நெகவே புகுந்தாண்டான்"

எனத் திருச்சதகத்துள் உரைத்தாங்கு, இறைவனை எண்ணி அகம் நெகுவார் அச்சந்தீர்வர்! உலகர் அது செய்யாமையின் அடிகள் உள்ளம் இரங்கி அஞ்சுவதாயிற்று. இவர் இவ்வாறிருப்பின் அல்லற்பிறவி தொடருமே என் செய்வதென அடிகள் எண்ணினார்.

கந்து கடியும் கடாக்களிறு காணின் மனிதர் எவரும் நடுங்குவர்; தழல் விழிப் புலியைக் காணாமலும் அஞ்சுதல் இயல்பு. அடிகள் இவ்வகை அச்சமெலாம் நீங்கினார். மதமும் சினமும் மிக்க விலங்குகளிடமிருந்து உய்யலாம் வகைக்கு இறைவன் அருளுவன். உடலால் விலங்காயின வற்றிடமிருந்து காத்துக் கொள்ளல் ஈசனடியார்க்கு எளிதாகும். ஆனால் விலங்கு மனத்தால் விமலன் பாற் கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும் நலந்தானில்லாத சிறியரை யார் காப்பது? உலகிலுறும் எத்தகு துயரையும் நீக்க வல்ல இறைவன் கழல்கள் பற்றாதவர் அறிவிலாதவர் அல்லரோ? அவரை நினைந்து அடிகள் அஞ்சுகின்றனர்.

சிவனை வழிபடாதவர் ஆண்மையிலார்

கருக்கொண்ட முகில் ஒன்றோடொன்று மோத வானத்தே பேரிடி ஒலிக்கும். இவ்விடி எங்காவது இறங்கிடின் என் செய்வதென மனிதர் அஞ்சுவர். காதுகள் செவிடுபடுமெனப் கைகளால் மூடுவர். அருச்சுனனை விளிப்பர். வானும் மண்ணுமாய் வளியும் ஒளிமாய்த் திகழும் சிவபிரானின் செழுங்கமலத் திருப்பாதம் சேர்ந்தவர்கள் இடியொலிக்கா அஞ்சுவர்? ஆனால் நீறணியாப் பாழ் நெற்றியரைக் கண்டால் அச்சமுறுவர். இடுகாட்டுச் சாம்பற்பொடி பூசி அலையும் பித்தன் என இகழ்ந்த தக்கன் நீறாயினன். நீறுபூசி விமல்ன் தாள் தொழ அஞ்சுவார்க்கு ஏன் அஞ்ச வேண்டும்? சிவமெனும் செம்பொருள் துணிந்து பவம் நீங்கக் கருதுவாரே நீறணிவார். பவக்கடலில் துரும்பாய் அலைய ஒருப்படுவார் நீறணிய அஞ்சுவார். இச்சாம்பரைப் பூசுவதால் என்ன பயன் என வினவுவர். இவ்வாறுள்ளவர் நாட்டிற் பயன்படாப் பாழ்மனிதராவர். இவர் சமுதாயம் கெடவே துணையாவர். எனவே இவர்க்கும் நல்லோர் அஞ்சுதல் ஆயிற்று.

"கோள்நிலா வாளி அஞ்சேன்; கூற்றுவன் சீற்றம் அஞ்சேன்;
நீள்நிலா அணியி னானை நினைந்துநைந் துருகி நெக்கு.
வாள்நிலாங் கண்கள் சோர வாழ்த்தி நின்றேத்த மாட்டா
ஆணலா தவரைக் கண்டால் அம்மநாம் அஞ்சுமாறே"

என அடிகள் கணைக்கஞ்சாத் தன்மையையும், கூற்றுவன் சீற்றத்திற் கஞ்சா நிலையினையும் கூறினார். வேனில் வேள் மலர்க்கணைக் கஞ்சாதவர் வெறுங்கணைக் கஞ்சுவரோ? மறலி மறம் பெயர்க்கும் சிவனின் திருவடிபேணுவார், கூற்றுவன் சீற்றத்திற்கு அஞ்சுவரோ? மாட்டாரென்க. ஆனால் உலகிற் சிவனைப் பேணி உளம் நெகிழவும், கண் பனிக்கவும், வாழ்த்தாத ஆண்மையிலாரைக் கண்டு அஞ்சுவன் என்றார் அடிகளார். ஆண்மை உடையாராயின், உலகிலுள்ள பேராற்றலை ஒப்புவர். பெருக்கத்து வேண்டும் பணிதல் என்பதற்கேற்பத் தாம் ஆண்மை உடையராயின் பேராண்மை உடைய சிவனை வணங்குதல் அன்றோ முறை? அவ்வாறு வணங்காமையின் அவரை ஆண்மையற்றார் என்றார்.

அடிகளின் அச்சம் உலகர் கொள்ளும் அச்சத்தினின்றும் வேறுபட்டது. கூற்றுக்கும் காற்றுக்கும், கனலுக்கும் புனலுக்கும், வேலுக்கும் வாளுக்கும், வேற்கண்ணார்க்கும் பான் மொழியார்க்கும், மன்னர்க்கும், தேவர்க்கும் அஞ்சும் அச்சம் அடிகளுக்கில்லை. உலகம் சிவநெறிக்கண் ஒருப்பட்டிலதே, தனு கரணபுவன போகங்களைக் கொண்டு மாயை இயல்பு அறிந்திலதே. பாசக்கட்டினின்றும் விடுபட அறியும் வகை தெளிந்திலதே, இனி என்னாகுமோ என்பதே அடிகளின் அச்சக் கருத்தின் அச்சாணியாம். உயிர்களிடத்து அடிகள் கொண்ட அளப்பரிய பரிவினால் இவ்வச்சம் உருக்கொண்டதென்க. மன்னுயிர்கள் உய்யும் வகைக்கு இவ்வச்சப்பத்து சிறந்த கருவியாகும்.

*

36. திருப்பாண்டிப் பதிகம்

ஆய்வுரைஞர் **சி. சிதம்பரம்**

பன்னிரு திருமுறை இலக்கியங்களில் சிந்தையை உருக்கும் திறத்தில் முன்னணியில் நிற்பது திருவாசகமாகும். திருவாசகத்தை முக்தியாகிய பேரின்பத்தை மக்கள் அடைவதற்குரிய பக்தி நெறியை விளக்கும் இலக்கியமாக மாணிக்கவாசகர் படைத்துக் காட்டியுள்ளார். கற்பார் உள்ளத்தைக் கனிவிக்கும் தேனினும் இனிய தீஞ்சுவைப் பாடல்ளை உடைய திருவாசகம் மாணிக்கவாசகரது வாழ்க்கை வரலாற்றை அறிவிக்கும் சுயசரிதையாகவும் திகழ்கிறது. மாணிக்கவாசகர் அரிமர்த்தன பாண்டியனுக்கு அமைச்சராக இருந்து குதிரைகள் வாங்கச் சென்றது முதல் திருப்பெருந்துறையில் இறைவன் தன்னைக் குருவடிவாகக் கொண்டது, கொண்டு சென்ற பொருளை அடியார் திருத்தொண்டில் செலவழித்து மீண்டது, நரியைப் பரியாக்கியது போன்ற பல நிகழ்ச்சிகளைக் குறிப்பிடுகிறார். மாண்க்கவாசகர் திருப்பாண்டிப் பதிகத்தில், தென்பாண்டி நாட்டனாகிய சிவபெருமான் குதிரைமேல் அழகாக அமர்ந்து எழுந்தருளி ஆட்கொண்டு அருளிய திறத்தை விவரித்துள்ளார்.

பாண்டிப் பதிகம் - பெயர்காரணம் :

உலக உயிர்களைக் காத்தருளும் சிவவருமான் தம்பொருட்டுப் (பாண்டியன் தனக்குப் பரிமாவிற்றல் வேண்டி) மதுரை நகரின்கண் குதிரைச் சேவகனாய் எழுந்தருளிய தெய்வக் காட்சியில் திளைத்த (மாணிக்கவாசகர்) (பரிபாகனாக எழுந்தருளிய இறைவனது திருக்கோலத்தின் பேரழகில்) பாண்டிய மன்னனும் தாமும், மதுரை நகர் மக்களும் (ஈடுபட்டு) நெஞ்சத்தினைப் பறிகொடுத்த பேரின்ப நிலையினை எடுத்து உரைக்கும் வகையில் அமைவதால் திருப்பாண்டிப் பதிகம் எனப்பெயர் பெற்றது. எனினும் இப்பதிகத்தை நிகழ்ந்தது நினைதல் எனும் உத்தியில் திருப்பெருந்துறையில் அருளியிருப்பது குறிப்பிடத்தக்கது. சிவபெருமான் நாட்டானாக எழுந்தருளியபோது தமக்கு உண்டாகிய சிவானந்த விளைவினை மாணிக்கவாசகர் விரித்து உரைப்பதால் இதனை சிவானந்த

விளைவு அல்லது சுகமேலீடு என அறிஞர்கள் கருத்துரை வரைகின்றனர்..

கட்டளைக் கலித்துறையில் அமைந்த பத்துப்பாக்களுடன் அமைந்த இப்பாண்டிப் பதிகத்தினைப்

"புரவியின் மேற் பாண்டியன்முன் வரும்பதத்தை
யாம்பெறும் அற்புதம் போல் யாரும்
விரவமின்கள் என்றடி யார்க் குறுதிசொலல்
திருப்பாண்டி விருத்தமாமே"

எனவும் திருப்பெருந்துறைப் புராணப்பகுதி சிறப்பிக்கின்றது.

ஒருவனே தேவன் :

பார்வதியைத் தன் இடப்பாகத்திலே கொண்டவரும், பாண்டிய மன்னனுக்கு அமிர்தமானவரும் ஆதியும் அந்தமும் இல்லாதவரும், குதிரைமேல் வந்து கண்டவர் மனம் உருகச் செய்தவரும் ஆகிய சிவபெருமான் ஒருவரை மட்டுமே நான் வணங்குவேன். அவர் ஒருவரே என் காட்சிக்கு இலக்காக இருக்கிறார். எனச் சிவபெருமானின் பெருமைகளை எடுத்துரைக்கிறார் மாணிக்கவாசகர். வைணவ அடியார்கள் திருமாலை மட்டுமே தமது நாவில் இசைக்க வேண்டும் என்ற கொள்கையுடன் செயல்பட்டனர். ஆனால் மாணிக்கவாசகர் சிவபெருமான் ஒருவனே என் உள்ளத்திலும் காட்சிக்கும் இலக்காகிறான் என்று பாடுவது நோக்கத் தகுவதாகும்.

அருட்பெருஞ்சோதி :

சிவனைப் பற்றுக்கோடாக உடையவர்கள் தற்போதம் இழந்து ஞான வேட்கை அடைவது உறுதி. சூரிய ஒளியை மங்கச் செய்யும் அளவிற்கு அருட்பெருஞ் சோதியுடன் சூலத்தை கையிலேந்தியவாறு குதிரை மேல் அமர்ந்து வந்த சிவபெருமானைக் கண்டவர்களுக்கு மறுபிறவி இல்லை. வள்ளுவரும்

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடி சேரா தார்"

என்று குறிப்பிடுவது எண்ணத் தகுந்ததாகும்.

உலக இன்பம் நிலையில்லாதது. உலகத்தவர் அனைவரும் பேரின்பத்தில் நிலைத்திருக்கச் செய்யுமாறு இறைவன் குதிரைச் சேவகனாக வந்து தொண்டரைத் தன் வயப்படுத்தும் இயல்புடையவர். எனவே அனைவரும் பேரின்பத்தையே நாடுங்கள் என நெறிப்படுத்துகிறார். இதனைப்

"பேரின்ப வெள்ளத்துள் பெய்கழ
லேசென்று பேணுமினே"

என்ற அடிகள் உணர்த்தும் இறைவனை அடைவது எக்காலம்?

இறைவனை அடைய கால நேரம் இல்லை. இறைவனை அடைய எந்த நேரமும் சிறந்ததே. சிவபெருமான் ஞானவாள் ஏந்தி ஆனந்தம் என்னும் குதிரையின் மீது ஏறி வந்து உலகில் உள்ள உயிர்களின் இருள் எனும் பிறப்பை நீக்கவல்ல பெருமை உடையவன்.

மாணிக்கவாசகர் பாண்டிப் பிரானாகிய சிவபெருமானைத், திருமால், பிரம்மன், தேவர்கள் முதலானோர் அணுக முடியாத நிலையில் அவனே மூலபண்டாரமாக விரைந்து வந்து அருள் புரிவான் என இறைவனின் அருட்கொடையை வியந்து பாடுகிறார்.

நாம் ஒரு பரிசைப் பெற அதிகம் முயற்சி செய்யவேண்டும். ஆனால் முக்தி எனும் பரிசைப்பெற, இறைவனின் அருட்சோதியை எப்போது வேண்டுமோ, அப்போதே சென்று பெறலாம். இதற்குத் தடையொன்றும் இல்லை என்று இறைவனின் எளிமைப் பண்பை வெளிப்படுத்துகிறார் அடிகள்.

"யான் பெற்ற இன்பம் பெருக இவ்வையகம்"

என்ற உயரிய நோக்கத்துடன் மாணிக்கவாசகர், தான் பெற்ற இறை அனுபவத்தைப் பிற உயிர்களும் பெறவேண்டும் என்ற எண்ணத்தில் ஆற்றுப்படுத்தும் முகமாக இறுதிப்பாடல் அமைந்திருப்பது நோக்கத்தக்கது.

சிவபெருமான் எமனையும், ஐம்புலன்களையும் வென்ற சிறப்புடையவன். தானும் தேவியுமாகப் பாண்டியன் முன் காட்சி கொடுத்து அவர்களது ஜீவ போகத்தை ஒழித்தான். தெளிவு பெறாத

நீங்களும் அவனை உறுதியாகப் பற்றிக் கொள்ளுங்கள் என்று வழிகாட்டுகிறார். இதனைக்

"கூற்றைவென் றாங்கைவர் கோக்களை
யும்வென் றிருந்தழகால்
வீற்றிருந் தான் பெருந் தேவியுந்
தோனுமார் மீனவன் பால்
ஏற்றுவந் தாருயி ருண்ட
திறலொற்றைச் சேவகனே
தேற்றமிலா தவர் சேவடி
சிக்கெனச் சேர்மின்களே!"

என்ற பாடல் விளக்கும்.

இவ்வாறு இறைவனின் பெருமைகளையும் பண்புகளையும் கூறி, தானும், பாண்டிய மன்னனும், மதுரை நகர மக்களும் பெற்ற இறை அனுபவத்தைப் பகிர்ந்து கொள்வதுடன், நம்மையும் இறைவன்பால் ஆற்றுப்படுத்தும் முகமாகத் திருப்பாண்டிப் பதிகம் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

37. பிடித்த பத்து

குன்றக்குடி பெரியபெருமாள்

மணிவாசகப் பெருமான் இரண்டு மாபெரும் அருள் நூல்களை இயற்றி அருளியுள்ளார். 'திருவாசகம்' 'திருக்கோவையார்' ஆகிய இரு நூல்களில், திருவாசகத்தை 'இயற்றி அருளியுள்ளார்' எனக் குறிப்பிடுவது ஒரு வகையில் பொருத்தம் இல்லாதது ! ஏனெனில் - திருவாசகம் திட்டமிட்டு, எழுதவேண்டுமென எண்ணிப் பார்த்து, இயற்றிய நூலன்று! இறை இன்பத்தில் திளைத்தபோதெல்லாம், உள்ளக் கனிவு உருகி, உதித்த அருட்பாடல்களின் தொகுப்பே திருவாசகம். மணிவாசகப் பெருமானுக்குத் திருவாசகத்தைப் பிரிந்த, தனித்ததொரு வாழ்க்கை இருந்ததில்லை. திருவாசகம்தான் மாணிக்கவாசகர்; மாணிக்கவாசகர் தாம் திருவாசகம் !

தேனமிழ்தமாகிய திருவாசம், ஐம்பத்தொரு பதிகங்களைக் கொண்டுள்ள திருநூல். ப்திகம் என்றால், பத்துப் பாடல்களைக் கொண்ட ஒரு பகுதி. திருவாசகப்பதிகங்கள், பத்துப்பாடல்களுக்கு மேம்பட்டும், குறைந்தும் உள்ளன. எனவே ஐம்பத்தோரு பதிகங்களில் அறுநூற்றி ஐம்பத்தெட்டுப் பாடல்கள் அடங்கியுள்ளன. பத்துப் பாடல்களைக் கொண்ட பதிகங்கள் இருபத்தைந்து; பத்துப் பாடல்களுக்கு மேற்பட்ட பதிகங்கள் பதினேழு; பத்துக்கும் குறைவான பாடல்களைக் கொண்ட பதிகங்கள் ஒன்பது. மிகக் குறைவாகத் தில்லையில் அருளிய 'திருப்படை எழுச்சி' இரண்டே இரண்டு பாடல்களைக் கொண்டுள்ளது. மிக அதிகமாக நூறு பாடல்களைக் கொண்டுள்ள 'திருச்சதகம்', பதிகப் பெயராலேயே பாடல்களின் எண்ணிக்கையை எடுத்தியம்பி விடுகிறதல்லவா ?

பத்துப் பாடல்கள் கொண்ட பதிகங்களில் திருத்தசாங்கம், திருப்பள்ளி எழுச்சி, கோயில் மூத்த திருப்பதிகம், கோயில் திருப்பதிகம், திருப்பாண்டிப் பதிகம், திருவேசறவு, திருவார்த்தை ஆகிய ஏழு பதிகங்களைத் தவிர, பதினெட்டுப் பதிகங்கள் பத்துப் பாட்டுகளை கொண்டவை என்பதை அவைகளின் தலைப்புகளே தெளிவுபடுத்துகின்றன. இந்தப் பதினெட்டுப் பதிகங்களில் ஒன்று 'பிடித்த பத்து'.

"இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான்" எனப் பேசப் பெறுகின்ற ஈசன், பிறவாப் பெம்மான் அருளாணையை ஏற்ற மணிவாசகப் பெருமான், மதுரை நகரம் விட்டுப் புறப்பட்டுப் பல திருத்தலங்களுக்கும் சென்று வழிபட்டு, சீர்காழித் திருத்தலத்தை அடைந்தார். திருக்கோயில் கோபுர வாயிலைக் கடந்து, உள்ளே சென்று, திருக்கயிலையாய்க் காட்சி தந்த திருத்தோணிபுரத்தை வணங்கிநின்ற வேளையில், தில்லையம்பலத்தில் திருக்கூத்தாடுகின்ற பெருமானின் திருவடிப் பேரழகு, திருவாதவூரர் மணிவாசகரின் நெஞ்சுள் தோன்றிட, அதனைச் சிக்கெனப் பிடித்த சிந்தையராய்ப் 'பிடித்த பத்து' அப்பெருமானின் திருவாயினின்றும் அருள் தமிழாய் வெளிப்பட்டதென கூறப் பெறுகின்றது.

"எம்பொருட்டு உன்னைச் சிக்கனப் பிடித்தேன்"

"இடைவிடாது உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்"

"இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்"

"இருளிடத்து உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்"

"எய்ப்பிடத்து உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்"

"இறவிலே, உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்"

"ஈசனே, உன்னைச் சிக்கெனப்பிடித்தேன்"

"எத்தனே, உன்னைச் சிக்கெனப்பிடித்தேன்"

"யான்உனைத் தொடர்ந்து சிக்கெனப்பிடித்தேன்"

"இன்பமே, உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்"

எனப் பத்துத் திருப்பாடல்களிலும் சிவபெருமானின் திருப்பாதங்களை நழுவவிடாது, பற்றிக் கொண்டதாகப் 'பிடித்தேன்! பிடித்தேன்! எனத் திரும்பத் திரும்ப மணிவாசகர் மொழிவதால், இப்பதிகம் பிடித்த பத்து' எனப்பெயர் பெற்றது.

முத்திக்கலப்புரைத்தல், அதாவது ஆன்மாக்களுக்கு முத்தியின் சுகத்தை எடுத்துக் கூறி, இறைவனை இன்ப அன்பு வடிவினனாகக் கண்டு, அவனுடன் வேறின்றிக் கலந்து இன்பம் கொண்டு, இனி ஒருக்காலும் அதனை நழுவ விடா எழுச்சி பெற்று 'பிடித்தேன்' எனத் துணிவுடன் கூறுகிறார் வாதவூரர்.

இறைவனும், மனிதனும் தம்தம் இயல்பான அமைப்பு நிலையில் வேறு, வேறாயிருப்பினும், ஐக்கியானுபூதி பெற்ற வேளையில், ஐயத்திடற்கிடமின்றி 'ஒருயிர் ஈருடல்' எனும் ஒப்பற்ற தன்மையை அடைந்துவிடும் அற்புதம் நிகழ்ந்து விடுகிறது. அத்தகைய அற்புத நிலையைப் பெற்ற மணிவாசகப் பெருமான், 'பிடித்தேன்' எனத் துணிவுடன் பேசிப் பெருமிதத்துடன் மகிழ்ச்சி அடைகிறார்.

'ஒரு சிறிதும் இடைப்பட்டுவிடாது, இந்தப் பிறவியிலேயே, என்னை நானறியாத, இருளான நிலையிலும், இளைத்த காலத்திலும், இறுதிக் காலத்திலும், ஏமாற்றி அலைக்கழிப்பினும், தொடர்ந்து உன்னைப் பற்றி நிற்பேன்; அடியேன் உய்வதற்காக மட்டுமல்ல ; அடியார்களாகிய நாங்கள் உய்வதற்காகவே!' எனக் கூறுகிறார் மணிவாசகப் பெருமான். எனவேதான் 'எம்பொருட்டு' உன்னைச்சிக்கெனப் பிடித்தேன் எனக் குறிப்பிட்டுள்ளார்.

முதற்பாடலில் - "வாழ்வற வாழ்வித்த மருந்தே!" என்னும் தொடர், நினைந்து நெகிழத்தக்கது. வாழ்விக்கும் இறைவன், வாழ்வை நீக்குகிறான் எனப்பேசுகிறார் வாதவூரர். வாழ்வைத் துண்டித்து வாழ வைப்பதா ? ஆம் ; பொருளற்ற இக வாழ்வை நீக்கி, பொருளார்ந்த இன்ப அன்புப் பேரின்ப வாழ்வை அருள்கிறான் இறைவன். எனவேதான் இறைவனை 'வாழ்வற வாழ்வித்தவன்' எனப்பேசுகிறார்; போற்றுகிறார் பெருமான்.

"கடைபடா வண்ணங்காத்தெனையாண்ட கடவுளே" என இரண்டாம் பாடலில், இறைவனின் பெருங்கருணைத் திருவருள் சுட்டப் பெருகின்றது. 'மேலும், மேலும் வருந்தா வண்ணம், இழிந்த பிறவிகளை எடுத்துக் கீழாகா வண்ணம், எம்மைக்காத்து நிற்கும் கருணைக் கடலே' என வாழ்த்தும் மணிவாசகர், காப்பாற்றியதோடு, செம்மையாகிய சிவபதமும் கூட்டி வைத்த பேரருளை மூன்றாம் பாடலில் கூறி மகிழ்கிறார்.

"சுடரே ! கனியே ! அரசே ! போகமே ! பொலிவே ! செல்வமே ! என்றெல்லாம் சிவபரம்பொருளைப் போற்றியுரைக்கும் மணிவாசகர், "இன்பத்தால் அறிவிழந்த நிலையில், உன்னைச் சிக்கெனப் பிடித்துவிட்டேன், இனி நீ எங்கு

எழுந்தருள்வது?" என வினவுகிறார். சிவானுபவக் காலத்துச் சிவம் நுகர்ச்சிக்கு வருகிறபோது, கனியைப் பாலைத் தேனை ஒத்திருக்கும் எனச் சிவாகமங்கள் அறிவுறுத்துவதால், "அளிந்ததோர் கனியே" என நான்காம் திருப்பாட்டில் குறிப்பிட்டுக் காட்டுவது நினைக்கத்தக்கது.

வறியவன் எதிர்பாராது பொன்னைப் பெற்றதுபோல, இளைத்த காலத்தில் உன்னைப் பற்றினேன். இனி உன்னை நான் விடுவேனா ? நீ எங்கும் போய்விட முடியாது என உள்ளார்ந்து உறுதியை வெளிப்படுத்தும் வாதவூர் அடிகள், "ஒப்புனக்கில்லா ஒருவன்" என ஐந்தாம் பாடலைத் தொடங்குகிறார். அழகு, ஆற்றல், உடைமை, பெருமை ஆகியவற்றால் சிறந்து நிற்கும் ஒன்றை, மற்றொன்றுக்கு ஒப்புரைப்பது வழக்கமான ஒன்று. ஒப்புரைக்க, மனம் முதலிய கருவி கரணங்கள் கண்டுரைக்கத் துணையாவன. இறைவனே கருவி, கரணங்கைக் கடந்த, உள்ளத்து உணர்வாவே உணரப்படும் பேரின்ப வடிவுடையான். இல்லையா? ? எனவே இறைவனை அனுபவித்து, அவனுக்கு ஒப்பொன்றும் இல்லையென்பதை உணர்ந்து, அவனே அவனுக்கு ஒப்பெனத் தெளிந்து, "ஒப்புனக்கு இல்லா ஒருவனே!" எனப் போற்றுகிறார் அடிகள். 'அறவையேன்' எனத் தம்மை அழைத்துக் கொள்ளும் மணிவாசக பெருமான், அறவையேன் எனில் அற்றவனாகிய யான் எனப்பொருள்படும் ; தாய், தந்தை, தாரம், கணவன் என ஒவ்வொரு காலத்தும், ஒவ்வொருவரை ஆதரவாகக் கொண்டு இயக்குவது மக்களின் இயல்பு; உயிர் பிரிகிறபோது இவர் எவரும் உறுதுணை ஆகார் அல்லவா ? அந்நிலையில் ஆன்மா தனித்துத் தனிநிலை பெறுகிறது. அந்த நிலையை உணரும் பெருமான், தம்மை 'அறவையேன்' என அறிவித்துக் கொள்கின்றான் - தமது மனத்தையே திருக்கோயிலாகக் கொண்டு, இதயாலயத்தில் எழுந்தருளும் சிவபரம்பொருள், பிறவியை அறுத்துப் பேரானந்தப் பெருவாழ்வை அருளும் பிஞ்ஞகனாகக் காட்சியளிப்பதாக ஆறாவது திருப்பாடலில் கூறி, அந்த இறுதிக் காலத்தில் அதாவது இறவிலே உன்னதமளிக்கும் ஒரு பொருளை, ஆம், ஒரே பொருளைச் சிக்கெனப் பற்றிக் கொண்டதாக இயம்புகிறார். "உள்ளம் பெருங்கோயில்" என்னும் திருமந்திரக்

கருத்து இப்பாடலில் உள்ளீட்டுப் பொருளாய் ஊடுருவி நிற்பது எண்ணிபார்க்கத் தக்கது.

ஆணவ மலத்தை அகற்றி, திருவடிக் காட்சியை வழங்குதலாகிய முத்திக் கலப்பை விடாது பிடித்தேன் எனப்படும் ஏழாவது பாசுரத்தில், இடைவிடாது பூசனை செய்கின்ற வாதவூரருக்கு, இறைவன் சிந்தையுள் நின்று, திருவடிக் காட்சியை அருளிக்கொண்டே இருக்கிறானென உருகி உரைக்கிறார் ; உருகவும் உரைக்கிறார் மணிவாசகர். "பூசனை உகந்து என் சிந்தையுள் புகுந்து, பூங்கழல் காட்டிய பொருளே!" என்பது பெருமானின் திருவாக்கு.

இறைவனை 'எத்தன்' எனக் குறிப்பிட்டுக் கூறும் எட்டாவது திருப்பாடல், சுவை மிளிர தெய்வசுகமளிக்கக்கூடிய உய்விக்கும் தன்மை கொண்டது. எல்லா உயிரோடும், இரண்டறக் கலந்திருக்கும் பெருமான், அவைகளுள் சில பிழை செய்கின்ற வேளையில், அவற்றினின்று வேறாகி நிற்கும் வித்தகம் உணர்ந்து, இறைவனை 'எத்தன்' எனக் குறிப்பிடுகிறார். சரிதானே ?

பதிகத்தின் ஒன்பதாவது பாசுரம், படித்துப் படித்துச் சுவைக்கத்தக்கது; சுவைத்துச் சுவைத்து நெகிழத்தக்கது ; நெகிழ்ந்து, நெகிழ்ந்து உருகத்தக்கது

"பாலினைந் தூட்டுந் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை யுருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந்திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே!"

குழந்தையின் பசியை நினைந்து, பாலூட்டுகின்ற தாயைக் காட்டிலும் மிகு பாசமுடன், வெகு ஆர்வத்துடன் பாவியாகிய அடியேனுடைய உடலை உருக்கி, உள்ளொளியாகிய ஞானத்தைப் பெருக்கும் இறைவன் மேலானவன் எனப் பேசுகிறார் அடிகள். எப்படி ? ஆம், தாயைக் காட்டினும் மேலானவன் ஆனது எப்படி ? தாய், பாலை ஊட்டி உடலை வளர்ப்பவள் தானே? இறைவன் உடலை உருக்கி, உணர்வைப் பெருக்கி, அழிவில்லாத

ஆனந்தத்தை ஊட்டுபவன் ஆயிற்றே! உடலில் கொழுப்பேற, (தாய் தரும் பாலால்) உள்ளொளியாகிய அறிவு மழுங்கிவிடுமே! இறைவனால் அருளப்பெறும் உணர்வு, அறிவையும் ஞானமாகத் தழைக்கச் செய்துவிடுமே ! எனில், தாயைவிடத் தயாபரனாகிய இறைவன் மேலானவனே அல்லவா ? எல்லையற்ற பேரின்பத்தை எனக்கருளி, புறத்தே திரிந்த செல்வமே! உன்னை இறுகப்பற்றினேன்; இனி நீ எங்கும் செல்ல இயலாது' என உறுதியுரை வழங்கி விடுகிறார் மணிவாசகர்.

'அடடா ! என் உடலில் இழிவு எங்கே ? அறியாமையில் மூழ்கி, மயக்கத்தால் ஆகாதனவற்றையே ஆற்றும் அடியேன் எங்கே ? இறைவனின் எல்லையற்ற பேரருளும், அதன் பெருங் கீர்த்தியும் எங்கே? அடியேனிடத்துக் கொண்ட பெருங்கருணையினாலே, இரங்கி எளிமையாக வந்து இன்னருள் பாலிக்கும் அருமைதான் எங்கே? எண்ணிப் பார்த்தால், எலும்பெல்லாம் உருகிவிடும் போலிருக்கிறதே!' என உள்ளார்ந்து, நெக்குருகி, நெகிழ்ந்துரைக்கிறார் அடிகள்.

"புன்புலால் யாக்கை புரைபுரை கனியப்
பொன்னெடுங் கோயிலாய் புகுந்து என்
என்பெலாம் உருக்கி எளியையா யாண்ட
ஈசனே ! மாசிலா மணியே !"

மணி முழுவதும் ஒளி நிறைந்திருத்தல்போல், சிவஞானம் தம்மிடம் செறிவுடன் நிறைந்திருப்பதைக் கருதி 'மாசிலா மணியே' எனப் போற்றியுரைக்கிறார்.

'பிடித்த பத்து' என்னும் பதிகத்தின் பத்துப்பாடல்களாலும், இறைவனின் திருவடிகளையே பற்றிப் பக்தி செலுத்துபவர்களுக்கு, பெருமான் அருள்புரியும் பெருங்கருணையையும், தந்தையும் தாயுமாய் எழுந்தருளிப் பாசத்தின் ஆணி வேரை அறுத்துத் தாயினும் சாலப்பரிந்து காக்கும் திருவருளையும், உலப்பிலா ஆனந்தத்தை உதவி, இன்பவடிவாய்க் காட்சி தருவதையும் எடுத்தியம்பிய மணி வாசகர், "உன்னை நான் சிக்கெனப் பிடித்தேன் ; பெருமானே ! நீ இனி எங்கும் எழுந்தருள இயலாது!" எனத்தம் உள்ளார்ந்த உறுதியை உணர்த்தி விடுகிறார்.

'சிக்கனப் பிடித்தேன்', 'சிக்கனப் பிடித்தேன்' எனப் பத்துப் பாடல்களிலும், திரும்பத் திரும்ப நிறைவுரையாக்கிய மணிவாசகரின் உறுதியுரையை உளம் கொள்கிறபோது, மகாபாரத இதிகாசத்தின் ஒரு நிகழ்வு, நினைவில் நீந்தி, நெஞ்சுள் நிற்கிறது!

போர்வேண்டுமா, வேண்டாவா எனப் பாண்டவர்கள் முன்னிலையில் கண்ணபெருமான் ஆய்வு நடத்துகிற வேளையில், "கண்ணா! நீதூது சென்று, நாடு வேண்டாம், ஐந்து வீடுகளையாவது பெற்று வந்துவிடு ! எப்படியாவது போரைத் தவிர்த்தாக வேண்டும்". எனத் தருமன் கூறுகிறான்.

தருமனின் கருத்தைக் கண்ணியமற்ற செயலெனக் கூறி, கடுஞ்சினம் கொண்ட பீமனும், அருச்சுனனும் போர் நடத்தியே ஆக வேண்டும் எனப் பொங்கி எழுகின்றனர்.

சகாதேவன் அமைதியாகக் கண்ணனை நோக்கிச் சொன்னான்: "போர் தவிர்க்கப்பட வேண்டியதுதான்; போரைத் தவிர்ப்பதெனில், மூன்று சீரிய செயல்களை உடனே செய்தாக வேண்டும்!"

"மூன்று செயல்களா?" அவைகளை உடனே செய்ய வேண்டுமா? என்னப்பா அவை?" என வியந்து வினவினான் கண்ணன்.

"கண்ண பரமாத்மா ! முதலில் பாஞ்சாலியின் முடியாது தொங்கும் சிகையை அறுத்தெறிய வேண்டும் ! அடுத்து, அர்ச்சுனனின் காண்டீபத்தை உடைத்தெறிய வேண்டும்! மூன்றாவதாக, கண்ணா ! உன்னைக் கட்டிப்போட வேண்டும்!" என்றான் சகாதேவன்.

தனியாகச் சகாதேவனை அழைத்துச் சென்ற கண்ண பெருமான், "ஏனப்பா சகாதேவா!" "முதலில் நீ தெரிவித்த செயல்களைச் செய்து விடலாம்தான்! என்னைக் கட்டிப் போட வேண்டுமெனக் கூறினாயே....." எனக் கண்ணன் சொல்லிக் கொண்டிருந்தபோதே இடைமறித்து, "ஆம்! உன்னைக் கட்டிப் போட்டால் தான் பாரதப்போர் நிகழாது"! என ஓங்கி உரைத்தான் சகாதேவன். உன்னால் முடியுமா ? என வினவிய கண்ண பரமாத்மா, தம் பேருருவைச் சகாதேவனிடம் காட்ட, தான் வாழும் உலகையும், தன்னையும் மறந்த சகாதேவன், கண்ண பரமாத்மாவை

தன் உள்ளத்துள் எழுந்தருளச் செய்து, ஆழ்ந்த பக்தியால் சிக்கெனப் பிடித்துக் கட்டி விடுகிறான்!

கண்ணன், தன் விடுவிப்புக்குச் சகாதேவனை வேண்ட வேண்டி வந்தது!

ஆழ்ந்த பக்தியால் ஆண்டவனைச் சிக்கெனப் பிடித்துக் கொள்ளலாம் ; அதுவும் வேறெங்கும் எழுந்தருளப் செய்ய இயலாதவாறு! அப்படிச் செய்தவர்தான் திருவாதவூரர்! அதனால் வெளிப்பட்டதுதான் திருவாசகத்தின் 'பிடித்த பத்து!'

38. திருவேசறவு

பேராசிரியர். **மு. பழனியப்பன்**

திரு+ஏசறவு=திருவேசறவு : ஏசறவு என்பதற்கு அன்பு எனப் பொருள் கொள்ளலாம். மணிவாசகர் மீது, ஆண்டவன் கொண்ட திருவன்பு குறித்த பதிகம் திருவேசறவு ஆயிற்று. இப்பதிகத்துள் மணிவாசகர் மீதான அன்பு கருதி சிவபெருமான் நரியைப் பரியாக்கி, திருவடியிணையைக் காட்டி, ஆண்டு கொள்ளப் பெற்ற தன்மை எடுத்தோதப் பெற்றுள்ளது.

திருப்பெயர்

மணிவாசகர் இப்பதிகத்தின் வாயிலாக, தம்மை ஆண்டு கொள்ள வந்த திருப்பெருந்துறை சிவனை, ஆரமுதே (2), பரம்பரனே (3), அம்பலத்தமுதே (4) திருப்பெருந்துறை சிவபெருமானே (6), எம் பெருமானே (6) சிவபெருமானே (8,9), மூத்தானே (7), மூவாத முதல்வனே் (7), முடிவில்லா ஒத்தானே (7), பொருளானே (7), உண்மையுமாய் இன்மையுமாய் பூத்தானே (7), எனப் பல்வேறு பெயர்களைச் சுட்டிப் புகழ்ந்துள்ளார். இவ்வாறு விளித்துள்ள பல பெயர்களும், உறவடிப்படை வாய்ந்தனவாக இல்லாமல், ஞானாசிரியனை - மாணவன் விளிக்கும் முறையாக அமைந்துள்ளமை இங்குக் கருதத்தக்கது. இதனால் சிவனார்க்கும் இவர்க்கும் இடையேயிருந்த ஞானமார்க்கம் தெரிய வருகின்றது.

திரு உருவம்

திருப்பெயர்களைச் சுட்டிய மணிவாசகர் திருவுருவின் இயல்பையும் இப்பதிகத்தில் வருணித்துள்ளார். கங்கையின் அலைகள் உலவும் சடையினை உடையவன் (1), பண்போலும் சொல்லுடைய உமையம்மையைத் தன் பாகத்தில் கொண்டவன் (2), பாற்கடலில் கிடைத்த நஞ்சினை உண்டவன் (3), பாம்பினை ஆட்டுபவன் (4), போன்ற வடிவக்கூறுகளை மணிவாசகர் சிவபெருமானுக்கு உரியனவாகக் கண்டுள்ளார்.

திருவாழ்வு

இப்பதிகத்தில் பெயரையும், வடிவையும் காட்டிய மணிவாசகர், அடுத்த நிலையில் தனக்கும் பெருமானுக்குமான திருவாழ்வுத்தொடர்பினைச் சிலவரிகள் மூலம் எடுத்துரைக்கின்றார். பெருமான் மணிவாசகருக்கு, இக்கட்டு நேர்ந்தபோது, நரியைப் பரியாக்கி உலக நிலையாமையை எடுத்தறிவித்தான். இந்நிகழ்ச்சி இப்பதிகத்தின் முதல் பாடலில் "நரிகளெல்லாம் பெருங்குதிரை ஆகிய வாறன்றே" என இடம் பெற்றுள்ளது.

மேலும் மணிவாகர், செம்பஞ்சுக் குழம்பு போன்ற அடிகளையுடைய பெண்கள் கடைக்கண் பட்டுத் துயருற்றபோது, அஞ்சேல் என்று கூறி இவரின் வாழ்வை ஆண்டவன் நற்கதிக்குத் திருப்பிய நிகழ்ச்சியை, 'பஞ்சாய அடிமடவார் கடைக்கண்ணால் இடர்ப்பட்டு, நஞ்சாய துயர் கூர நடுங்குவேன் நின்னருளால் உய்ஞ்சேன்" (6), என்று பதிகத்துள் காட்டுகின்றார். அதுபோலத் தன் அநாதை வாழ்வுநிலையை, 'ஆதமிலியான்', 'ஆர்தமரின்றி' (2) என்றும், அறிவற்ற நிலையைக் கற்றறியேன், கலைஞானம் கசிந்துருகேன் (5) என்றும், பாடல்களில் சுட்டுவதன் மூலம் மணிவாசகர் அறியாமையுடன் கூடிய வாழ்வுநிலை பெற்றிருந்தார் என்பது தெரியவருகின்றது. அறிவு, அனுபவம் எதுவுமற்ற இவரை ஏற்றமுடைய நிலைக்கு உயர்த்தித் திருவாழ்வினை சிவபெருமான் தானாக் காட்டியருளி, அடையச் செய்துள்ளான் என்பது இப்பதிகத்தின் வழி தெரியவரும் கருத்தாகும்.

திருவடி

மணிவாசகர் இப்பதிகத்துள் திருவடிப்புகழைச் சிறப்புடன் எடுத்துக் காட்டியுள்ளார். சிவபெருமான் மணிவாசகருக்குத் தன் திருவடிக் காட்சியைக் காட்டி மெய்ப்பொருள் உணரச்செய்துள்ளான். 'காட்டினை உன் கழலிணைகள்' என முதல் பாடலில் தொடங்கும் அத்திருவடிக்காட்சி அடுத்து இருபாடல்களிலும் தொடருகின்றது.

"........ அடியேனை
மண்ணார்ந்த பிறப்பு அறுத்திட்டு ஆள்வாய்நீ வாஎன்ன
கண்ணார உயர்ந்தவா றன்றே உன்கழல் கண்டே".

என்று இரண்டாம் பாடலில் பிறப்பறுக்கும் பெரும் பொருளாகத் திருவடிக்காட்சி மிளிருகின்றது. அடியவர்க்குத் திருக்காட்சி தரும் நிலை 'பாதமலருக்கே உண்டு' என்று மூன்றாம் பாடல் முழங்குகின்றது. இவை தவிர எட்டாம் பாடலில், திருவடிகளை முதலில் மனதில் நினைந்து, பின் சிவபெருமான்! சிவபெருமான்! என்று ஓலமிட்டு, செய்கை புரிய, கருணைத் தடங்கடற்பேறு கிடைக்கப்பெறும் திருவடியே ஞானத் திருவழி; அதுவே உயிர்களுக்கு உய்தி தரும் மெய்வழி எனத் தெளிவு படுத்துகின்றார் மணிவாசகர்.

திருவாட்சி

சிவபெருமான் சிவாட்சிக்குள் தன்னைக் கொண்டு வந்தமையை இரு உவமைகள் வழி மணிவாசகர் விளக்குகின்றார். அவை பின்வருகின்றன.

இரும்பு கரும்பானது

இரும்பு மனம் கொண்ட என்னைத் தன்னுள் ஈர்த்து, எலும்பை உருக்கி, கரும்பு தரும் சுவையைப் போன்ற சிவச்சுவையினைப் புகட்டி மகிழ்ந்தான் சிவபெருமான் (1), என பெருமையுறுகின்றார் மணிவாசகர். இரும்பினைக் காந்தம் தானே கவர்ந்து கொள்வது போல, இறைவனே அவனாக வந்து ஆட்கொண்டான் என அவனருளால் அவன் தாள் வணங்கும் முறைமையை இவ்வுவமை வழி எடுத்துரைக்கின்றார் மணிவாசகர். மேலும் கரும்பின் எப்பகுதியும் இனிமை கொண்டதுபோல சிவச்சுவையும் இன்பம் பயப்பது எனக் காட்டியிருப்பது குறிப்பிடத்தக்கது.

பொன் தவிசில் நாய்

பொன்னால் செய்யப்பெற்ற அழகுமிகு ஆசனத்தை நாய்க்குத் தந்தால் அது அதனுள் முடங்கி உட்கார்ந்திருக்கும்.

பொன்னின் பெருமையையும், அவ்வாசனத்தில் அமரவேண்டிய முறைமையையும் அது மேற்கொள்ளாது. அக்காட்சியின் இழிதன்மையைப்போல இறைஆட்சிநிழல் தந்து இறைவன், என்னை முறைமையறியாதவனாக ஆக்கிவிட்டான் (5) என்று பதறுகின்றார் மணிவாசகர். இவ்வாறு உவமைகள் வழி தனது நிலையை அவர் காட்டினும்,

"என்பாலைப் பிறப்பறுத்திங்கு இமையவர்க்கும் அரிய வொண்ணாத்
தென்பாலைத் திருப்பெருந் துறையுறையும் சிவபெருமான்
அன்பால் நீ அகம் நெகவே புகுந்தருளி ஆட்கொண்டது"(6)

என ஆட்கொண்ட தன்மையின் உயர்வை உளமுருகிப் பாடியுள்ளார்.

திருவழி

இவ்வாறு தான் அடைந்த பெருநிலையினை உலகமும் அடைய, மணிவாசகர் அவ்வழியின் இயல்புகளைப பின்வரும் பாடல்வழி எடுத்தியம்புகின்றார்.

"நானேயோ தவம் செய்தேன். சிவாயநம எனப்பெற்றேன்
தேனாய்இன் அமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான்
தானே வந்தெனது உள்ளம் புகுந்தடியேற் கருள் செய்தான்
ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே வெறுத்திடவே" (10)

என்ற இவ்வடிகளில் சிவாயநம என்பதே சிவ வழிக்குரிய நாமம் என்று மணிவாசகர் பகர்ந்துள்ளார். இம்மந்திரம் சூட்சுமபஞ்சாட்சரம் எனப்படும்; வீடளிக்கும் தன்மையது.

சி →ஈசன் - சிவன்; வா →அருள் - அருள்; ய →ஆவி - உயிர்; ந →திரதோம் - மறைப்பாற்றல்; ம →மலம் - ஆணவம் என்று இம்மந்திரத்தின் ஒவ்வொரு எழுத்திற்கும் பொருள் கூற இயலும். இம்மந்திரத்தின் மறுவடிவான நவசிவாய என்பது தூல பஞ்சாட்சரம் எனப்படும் போக மளிக்கும்; இகவாழ்விற்குரியது.

எனவே வீடுபெற 'சிவாயநம' மந்திரத்தைக் கூறிட வேண்டும்; அவ்வாறு கூறிடச் சிவன் உயிரின் உள்ளத்திற்குத் தானே வருவான், புலன் இன்ப வாழ்வை மாற்றுவான்,

வீடளிப்பான் என்று ஞானவழி பகர்கின்றார் மணிவாசகர். இவ்வழி செல்லாது வேறு வழி செல்ல வேண்டாம் என்றும் இப்பதிகத்துள் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார் . "எச்சத்தார் சிறுதெய்வம் ஏத்தாதே அச்சோ" *(3)* "மற்றறியேன் பிறதெய்வம்" *5)* என்றும் அவர் கேட்டுக் கொண்ட வேண்டுகோள்களை ஏற்று, அவர் காட்டிய மெய் வழி நடப்போமானால் நமக்கும் திருவன்பு உண்டு; திருவேசறவு சித்திக்கும்.

39. திருப்புலம்பல்

புலவர். **இரா. சந்திரசேகரன்**

தெளிவு இல்லாத - உடன் உணர்ந்து கொள்ள இயலாத - தைரியமற்ற சொற்களை, வாய் வெருவி, சோகம் கலந்த அழுகையாக, இடையறாமல் கூறுவதையே புலம்பல் என்கின்றோம்.

புலம்பு என்ற சொல்லுக்கு அழுகை, ஒலி, வெறுப்பு, குற்றம, பிதற்றல் மொழி என்றும்,

புலம்பல் என்ற சொல்லுக்கு அழுகை, ஒலி, தனிமை, கூறுகை, பிதற்றுதல் என்றும் தமிழ் அகர முதலிகள் விளக்கும் தருகின்றன.

யாருக்கும் பயன்படாத பிதற்றல் மொழிகள் புலம்பல் எனக் கொள்ளலாம்.

ஆனால், சிவானந்த முதிர்வு பெற்ற மணிவாசகப் பெருந்தகை, விண்சுமந்த கீர்த்தி வியன் மண்டலத்து ஈசனை, கண் சுமந்த நெற்றிக் கடவுளை, பெண் சுமந்த பாகத்தனை, தாயிற்சிறந்த தயாவான தத்துவனை, நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனை, தில்லையுள் கூத்தனை, தென்பாண்டி நாட்டானை, ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றுமில்லா உத்தமனை, செம்மையே ஆய சிவபதம் தந்த செல்வத்தை, சிவபெருமானைத் தமது நெஞ்சகத்தே எப்போதும் எண்ணித் துதித்து, வழிபட்டு, ஊனெலாம் உருகி, என்பெலாம் குழைந்து, உணர்வெலாம் அவனே ஆகி, அவன் பெருமைகளை அடியார்கள் உணரும் வண்ணம், அவனியில் உள்ள அனைத்து உயிர்களும் உய்திபெறும் வண்ண்ம், தாம்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்ற உயரிய நோக்கோடு, வாய் விட்டுப் புலம்பிய புலம்பல் ஆதலின், இது பொதுப் புலம்பலாய் இராமல் திருப்புலம்பல் என்ற திருப்பெயர் பெற்றது.

சிவானந்த முதிர்வுடன், திருவாரூர்த் திருத்தலத்தில், மணிவாசகப் பெருந்தகை அருளிய மூன்று பாடல்கள்

திருப்புலம்பல் எனும் பகுதியாகத் திருவாசகத்தில் இடம் பெற்றுள்ளது.

அழகிய தாமரை மலரில் தங்கும் நான் முகனும், திருமாலும் அறியாத, ஞான நெறியால் உணரப் பெறுபவன் சிவபெருமான். அவன் கோங்கு மலரை ஒத்த அழகிய மார்பகங்களை உடைய உமையின் பாகன். திருவெண்ணீறு முற்றிலும் பூசப்பெற்ற திருமேனி உடையவன் உயர்ந்த மதில்கள் சூழ்ந்த திருவாரூரில் உறைபவன். அவ்விறைவனது வீரக்கழலை அணிந்த திருவடிகள் இரண்டினையும் அல்லாமல் வேறு எதனையும் தாம் புகழ மாட்டாத உயரிய தன்மையை உரக்கப் பேசுகிறார் மணிவாசகப் பெருந்தகை முதற்பாடலில்

"பூங்கமலத் தயனொடுமால் அறியாத நெறியானே
கோங்கலர் சேர் குவிமுலையாள் கூறா வெண்ணீறாடி
ஓங்கெயில்சூழ் திருவாரூர் உடையானே அடியேன்நின்
பூங்கழல்கள் அவையெல்லா தெவையாவும் புகழேனே"

திருமாலுக்கும் பிரமனுக்கும் கடவுளை அறியும் சிவஞானம் ஏற்பட்டிருக்க வேண்டுமென்ற கட்டாயம் இல்லாமையால், 'அவர்கள் அறியாத நெறியானே' என்றார். சிவத்துடன் சக்தி சேரா விட்டால் இவ்வுலகம் எரிந்தழியும் என்பதால் 'குவிமுலையாள் கூறா' என்றார். இடைவிடாமல் எந்நேரமும் தாம் புலம்புவதெல்லாம் அவனது பூங்கழல்களின் புகழே தவிர வேறேதுவும் இல்லை என்று அற்புதமாய்ச் சித்தரிக்கின்றார்.

அடுத்த பாடலில் "சடையை உடையவனே" தழலேந்திய திருக்கரங்களுடன் கூத்தாடுபவனே ! மூவிலைச் சூலப்படை உடையவனே ! வெண்ணிறமுடைய இளங்காளையை வாகனமாக உடையவனே ! எங்கும் பரவிய சோலைகள் சூழ்ந்த திருப்பெருந்துறையானே ! முதல்வனே ! உன்னையல்லாமல் வேறு உற்ற துணையை நான் அறியேன் என்று உளமுருகிப் பேசுகிறார் மணிவாசகர்.

"சடையானே தழலாடீ தயங்குமூ விலைச்சூலப்
படையானே பரஞ்சோதீ பசுபதீ மழவெள்ளை
விடையானே விரிபொழில்சூழ் பெருந்துறையாய் அடியேன்நான்
உடையானே உன்னையல்லா துறுதுணை மற்றறியேனே!"

உலகை அழிக்கும் ஆற்றலைக் குறிக்கத் 'தழலாடீ' என்றும், உயிர்களைக் காப்பவன் என்பதால் 'சூலப்படையான்' என்றும், மேலான தெய்வம் என்பதால் 'பரஞ்சோதி' என்றும் உயிர்களின் தலைவன் என்பதால் 'பசுபதி' என்றும் கூறினார்.

இடர் உற்ற காலையில் யாரொருவர் துணையாக இருப்பாரோ அவரே பெருந்துணையாக இருக்க முடியுமாதலின் இறைவனை 'உறுதுணை' என்றும் அற்புதமாக விளக்குகின்றார்.

மூன்றாம் பாடலில் "திருக்குற்றாலத்தில் விரும்பி வீற்றிருக்கும் கூத்தப்பெருமானே! உறவினரை யான் வேண்டுவன் அல்லேன். ஊரும் பேரும் எனக்கு வேண்டுவனவல்ல. திருவடி ஞானம் பெறாத கலைஞானம் உடையாரை யர்ன் விரும்பேன். கற்க வேண்டியனவும் இனிப் போதுமானவையே. கழல்கள் ஒலிக்கின்ற உனது திருவடிக்கே, கன்றை உடைய பசுவின் மனம்போலக் கனிந்து உருகுவதையே யான் உன்பால் வேண்டுகின்றேன்" என்கிறார் மணிவாசகர்.

"உற்றாரை யான் வேண்டேன் ஊர்வேண்டேன் பேர் வேண்டேன்
கற்றாரை யான்வேண்டேன் கற்பனவும் இனியமையும்
குற்றாலத் தமர்ந்துறையும் கூத்தாஉன் குரை கழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே"

'ஊரும் சதமல்ல, உறவும் சதமல்ல, உற்றுப் பெற்ற பேரும் சதமல்ல' என்பகவாகலின், உற்றாரை, ஊரை, பேரை வேண்டேன் என்றார். திருவடி ஞானம் இல்லாமல் வெறும் கல்வி ஞானம் மட்டும் உடையவராக இருப்பவர்கள் வெறும் குழப்பவாதிகளே யாதலின் 'கற்றாரை யான் வேண்டேன்' என்றார். திருவள்ளுவப் பெருந்தகையும்.

"கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்"

என்றமையை உய்த்துணர்ந்தால், கலை ஞானமும் கல்வி ஞானமும் இறைவன் திருவடி ஞானத்தை உணர்த்தாவிடில் பயனில்லை என்பதை உணரலாம்.

கற்பனவெல்லாம், சுட்டறிவுடையார்க்கே பயன்படுவன. அகண்ட அறிவுடையார்க்குச் சுட்டறிவினாற் பெறும் கலைஞானம் புதிது புதிதாக வேண்டியதின்மையான் 'கற்பனவும் இனி அமையும்' என்றார்.

கன்றை ஈன்ற பசு, அக்கன்றின்பால் கொண்ட காதலால் கனிந்து உருகி அன்பு சுரப்பது போலத் தாம் இறைவன்பால் காதலாகிக் கசிந்து, கண்ணீர் மல்கி உருகும் தன்மை தோன்றக் கற்றாவின் மனம் போல என்றார்.

இறைவன் தாயாகவும் உலக உயிர்கள் குழந்தையாகவும் இருப்பதாகக் கூறும் மரபை மாற்றி இறைவனைக் கன்றாக்கிய மணிவாசகப் பெருந்தகை தம்மைத் தாய்ப்பசுவாக உருவகித்த சிறப்பு உயர்வானது; எண்ணி இன்புறத்தக்கது; குழைந்த மனங்கொண்ட அடியவர்களின் பேரன்புத்திறத்தைப் புலப்படுத்தவல்லது.

"திருவாசகம் இங்கு ஒருகால் ஓதின்
கருங்கல் மனமும் கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியிற் சுரந்து நீர்பாய
மெய்ம்மயிர் பொடிப்ப விதிர் விதிப்பெய்தி
அன்பர் ஆகுநர் அன்றி
மன்பதை உலகின் மற்றையர் இலரே"

40. குலாப் பத்து

தவத்திரு. சாதுசண்முக அடிகளார்

சமயச் சான்றோர்கள் உலக வாழ்க்கை உயிர்கள் வினைப் பயனைக் கழித்து உயர்நிலையை அடையவே என்ற அடிப்படையில் சைவ சித்தாந்தம், வேதாந்தம் ஆகிய சமய நூல்களை அருளியுள்ளனர்.

இறைவன் வேறு நாம் வேறு எனினும் இறைவனோடு தன்னை அன்பின் மிகுதியால் இணைத்துக் கூறுவது சைவ சித்தாந்தத்தின் சாரம்சமாகும். திருவாசகப் சித்தாந்த, வேதாந்தக் கருத்துக்களை உள்ளடக்கிதாக காணப்பட்டாலும் குலா பத்தில் இறைவனோடு தன்னை இணைத்துக் கொள்ளும் அளவிற்கு பற்றியதன் பொருட்டு இது முழுவதும் சைவ சித்தாந்த கருத்துக்களையே உள்ளடக்கியதாக கொண்டு அமைகிறது. இங்கு இறைவனை பற்றியதனால் எனக்கு எவ்வித இடர்கள் இனி உண்டோ என்ற அன்பின் முதிர்ச்சியினைக் காணமுடிகிறது.

குலாவுதல் என்பது தனக்கு பிடித்தவரிடத்தில் அல்லது பிடித்த ஒன்றின் மீது பற்றியிருப்பதை பற்றி கூறுவதாகும். பேச்சு வழக்கில் கூறிக் கொள்ளும் பொழுது 'கொஞ்சிக் குலாவுறான்' என்ற வழக்கத்தை நாம் காண முடிகிறது.

அவ்வகையில் ஆன்மாவானது இறைவனுடைய திருவடியை பற்றியதனால் உலக வாழ்க்கையில் பெரும் இன்ப துன்ப நிலைகளை விளக்கமாக குலாப் பத்து அமைந்துள்ளது. உலக வாழ்க்கை என்பது இறை நிலைக்குச் செல்வதற்கான ஒரு நிலையாகும். இத்தகைய உலக வாழ்க்கை என்பது பிறவியாகி 'கடல்'. இதனைக் கடந்தால் 'கடவுள்' என்ற பயன் பெறப்படுகிறது. இத்தகைய வாழ்க்கையில் இறைவனைப் பற்றினால் பெரும் பயன் பற்றியே குலாப் பத்தில் மாணிக்கவாசகர் கூறியுள்ளார்.

ஆன்மா சாதாரண நிலையில் இருக்கும் போது உலக வாழ்க்கையில் தன்னுடைய நலன் கருதியே பெற்றோர் பிள்ளைகளை நேசிக்கின்றனர். தலைவன் தலைவியை

நேசிக்கிறான். தனது இன்பத்திற்கோ, புகழுக்கோ கேடு செய்பவர் உறவினராக இருப்பினும் புறக்கணிக்கப்படுகிறார்கள்.

ஆன்மா இன்னொருபடி மேலேரும் பொழுது அவனது உடலின்பம் ஒரு லட்சிய இன்பமாக மேலோங்குகிறது இந்நிலையில் உறவு, இனம், ஊர் முதலியன பின்னணிக்குப் போய் விடுகின்றன.

ஆன்மா அருள் துறையில் பிரவேசிக்கும் பொழுது இறைவனுடைய அன்பர்களையே அவன் சிறப்பாக நேசிக்கிறான். அந்நிலையில் அவர்களுக்காக அவன் எதையும் தியாகம் பண்ணுகிறான்.

ஆன்மா நிறை ஞானியாகும் பொழுது அவன் முற்றும் அன்பு சொரூபம் ஆகிறான். பரமனையே அவன் உள்ளும் புறத்திலும் காண்கின்றான். சிருஷ்டியில் உள்ள அனைத்தையும் பரம்பொருள் சொரூபமாகக் கண்டு நேசிக்கிறான். இது அன்பில் பூர்த்தியான் பரநிலை ஆகும். இந்நிலையில் அன்பே சிவம்ாவதை விளக்கு முகமாக குலாபத்து அமைந்துள்ளது.

ஆன்மா இறைநிலையோடு குலாவி அன்பு செலுத்தி அவ்வன்பின் முதிர்வினால் சிவபரத்தை அடைகிறான். அந்நிலையில் பரஞானத்தின் விளைவாக உலக வாழ்வு பரபோதமாகத் திருந்தியமைகிறது.

இறைநிலையை அடைகின்ற குறிக்கோளுடையவர்கள் உண்கலமாகிய திருவோடும், நீங்காவுடைமையாகிய கோவணமும் ஆகிய இரண்டையும் அகப்புறம், புறம் என்னும் இரண்டையும் பற்றும் உறவெனக் கொண்டு உள்ளமுருகி என்றும் விடாது தேடும் பொருள் சிவமாகக் கொள்ளும் நிலை தெளிந்து கொள்ள முடிகிறது. அந்நிலையில் உடலிலும் ஆனந்தம் ஊட்டுகிற இறையருளை நாம் போற்ற வேண்டும். மேலும் இறைவனின் திருவடியை பற்றியவர்க்கு குற்றும் பொருந்திய தீவினைகள் செய்து இருப்பினும் அதனால் அவர்களுக்கு தீங்கு நேராது. ஏனெனில்

ஆன்மாவானது தெய்வீக நடுநிலையில் மனதை நிறுத்தும் பொழுது உடல் தூயதாகிறது. பிராரப்த கர்மத்தின் வேகம் தணிகிறது. துன்பம் ஒழிகிறது. இருமைகள் இறைவனுடைய செயல்களால் புனிதம் பெறுகின்றன. ஆகாமிய சஞ்சித கர்மங்கள் ஒசித்துப் போகின்றன.

இறைவன் நல்லார் பொல்லார் ஆகிய எல்லார் உள்ளத்திலும் நீக்கமற வீற்றிருக்கிறார். இஃது சாதாரண நிலையில் இருக்கும் எல்லா உயிர்களிடத்தும் இடம் பெறும் நிலையாகும். எனினும் சிவபதத்தை இடை விடாது போற்றும் ஆன்மாவிடத்து இறைவனுடைய சொரூபம் அமிர்த வடிவெடுத்துப் பேரானந்தமாகப் பொலிகிறது.

இறைவனுடைய திருவடியே முழு முதலாகக் கொள்ளும் ஒருவருக்கு கன்ம வினைகளில் இருந்து விடுபட்டு பசுபாலும் ஒழிந்து வீடு பேற்றினை அடைய வழி ஏற்படும் இந்நிலையில் சிவனார் திருவடி காணும் பொருட்டு ஐம்பொறிகளின் குறும்பும் அடங்கி விடுகிறது.

உதாரணமாக அருச்சுணன் பகையவனை வெல்லுதற் பொருட்டுக் காட்டகத்தே சிவ்னை நோக்கி கடுந்தவம் புரிந்தனன் அவனுடைய தாயப் பகையாகிய அரவக் கொடியோன் ஓர் அசுரன் துணையால் அத்தவத்தினை அழிக்க முற்பட்டணன். அவ்வசுரன் ஒரு பன்றி வடிவெடுத்து அருச்சுனனை நோக்கிச் சென்றான். அதனை அடக்குதற் பொருட்டு சிவபெருமானும் கான வேடனாய் அப்பன்றியின் பின் தொடர்வனவாயினன். பன்றியைக் காண்பதும் அருச்சுனன் வில் வளைத்து நாணேற்றி ஒல்லும் வகை எய்தினான். சிவபெருமானும் பின்புறமாக நின்று அம்பு தொடுத்து அருளினான். அப்பன்றியும் மாய்ந்தது. அருச்சுன்ன் உண்மையறியாது வேடனாக வந்த சிவபெருமானுடன் போர் தொடுத்தனன். பின் உண்மை தெரிந்து சிவபெருமானை வணங்கி படை பெற்றுப் பகையை வென்றான். இவ்வுண்மை நிகழ்வில் அறியக் கிடைக்கும் உண்மை யாதெனில் பன்றி ஆணவ மலமாகும். அருச்சுனன் எய்த அம்பு சிற்றுணர்வாகும். சிவபெருமான் எய்த அம்பு முற்றுணர்வாகும். ஆணவம் சிற்றுணர்வால் அடங்காது முற்றுணர்வால் மட்டும் அடங்கும்.

ஆனால் அந்த முற்றணர்வு சிற்றுணர்வைக் கருவியாகக் கொண்டு செயல்படும். இஃது தவத்தோரைக் காப்பது சிவத்தின் தலைக்கடன் என்பதை அனைவரும் உணர்ந்துய்ய நிகழ்ந்த நிகழ்ச்சியாகும்.

தவத்தின் விளைவாக இறைவனின் திருவடியைக் காண முடிகிறது. அவ்வாறு கிடைப்பது முற்பிறவியில் செய்த தவத்தின் விளைவாகவும் இருக்கும். இவ்வாறு இறைவனோடு ஒன்று பட்டு செம்மை சான்ற மனத்தால் திருவருளால் திருத்தொண்டுகள் செய்வோர்க்கு இம்மைக்கண் நிலையாத சிற்றின்பப் பயன்களனைத்தையும் இவ்வுலகிலேயே ஒழிக்க வல்ல வல்லமையை அளித்தருளும் அந்நிலையே முக்தி அடையும் நிலையாகும்.

இப்பதிகத்தின் கண் திருவடியுணர்வு திருவருளால் எய்தப் பெறுகிறது. அஃது பொருட்டுணர்வின் சீர் பெற அமைந்துள்ள அருமைகளாக அமைகின்றன. இங்கு இவ்வனைத்தையும் குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டு நிகழ்வனவைகள் என்றும் சைவ சித்தாந்த மெய்மை விளக்கமாக திருப்பாட்டுக்களின் இறுதியே எனினும்

"குலாத்தில்லை ஆண்டானைக் கொண்டன்றே"

என்றும் அருண்மொழி ஓதப் பெற்றுள்ளமையால் நாம் உணர முடிகிறது.

41. அற்புதப் பத்து

- கவிஞர் குழிபிறை
வீ.கே. கஸ்தூரிநாதன்

முன்னுரை

எந்தப் பக்கத்தைப் படித்தாலும் இனிக்கின்ற இயல்பு உடையது மணிவாசகரின் தனி வாசகமாம் திருவாசகம் அதனால்தான் "வான் கலந்த வாசகரின் தேன் கலந்த வாசகம் தெவிட்டாமல் இனிக்கின்ற தெள்ளமுது" என்று வள்ளல் பெருமான் உள்ளம் திறந்து உவகையுடன் பாடுகின்றார். அந்த அரிய வாசகத்தின் அற்புதப் பத்து நற்பதம் கொடுக்கக் கூடியது. எப்படி என்பதை இவன்காண்போம்.

முன் நிற்கும் முதல்வன்!

எடுக்கும் பணியில் எல்லாம் தொடுக்கும் தோடுடைய செவியின் முன்னால் நிற்கிறார். புல்லாகிப் புழுவாகிப் பல் விருட்சமாகி மனிதப் பிறவிக்கு மாறிய மனித இனம் கருவறையில் தொடங்கி கல்லறை வரைக்கும் ஆசை, பாசம், காமம், கோபம் ஆகியவற்றில் ஆட்பட்டு அவதிப்பட்டு அல்லலுறுகிறது. மயக்கும் மாயப் பிசாசு என்று மங்கையரைச் சொல்லிக் கொண்டே அவர்களை மோகித்துக் கிடந்து உழல்கிறது. அந்த நிலையில் இருந்து தன் மனம் விடுபட்டு. வெளிப்பட்டு, எங்கும் நிறைந்த எம்பெருமான் சிவனைப் பற்றிப் படரப் அற்புதமாக காட்சி தருகிறவன் அவனே என்பதை முதல் பாடலில் முழுமையாக உணர்த்துகிறார்.

மையல் ஆய், இந்த மண்ணிடை வாழ்வு எனும்
ஆழியுள் அகப்பட்டு,
தையலார் எனும் சுழித்தலைப்பட்டு, நான்
தலை தடுமாறாமே,
பொய் எலாம் விட, திருவருள் தந்து, தன்
பொன் அடி, இணை காட்டி,
மெய்யன் ஆய், வெளிகாட்டி, முன்நின்றது ஓர் -
அற்புதம் விளம்பேனே !

சம்சாரமாகிய சாகரத்தில் மனிதன் அகப்பட்டு, அல்லல்பட்டு எல்லையற்ற துன்பத்தை இடைவிடாது அனுபவித்துக் கொண்டு இருக்கிறான். ஆனாலும் அதை இடைவிடாமல் பற்றிக்கொண்டே பயனில்லாமல் போகிறான். இந்த புறப்பற்றில் புரையோடிப் போகும் அவனை ஆட்கொண்டு அல்லல் அறுப்பது ஆதி சிவனின் ஓதும் திருநாமமே!, இருவினைக்கு இடையில் கிடந்து உழல்கின்ற மனிதனை "குருவென வந்து குணம்பல நீக்கி தரும் என ஞானத்தால் தன் செயல் அற்றார் திரி மலம் தீர்ந்து சிவன் அவனாமே" என்ற திருமூலரின் பெரு நெறியை ஊட்டுவது எல்லையில்லா உலகை ஆளும் எம்பெருமானே ஆவான் என்பதை மாணிக்கவாசகர் "போந்து, யான் துயர் புகாவணம், அருள் செய்து பொன்கழல்-இணைகாட்டி" என்ற வரிகளால் நமக்கு எடுத்து இயம்புகிறார்.

அலைவது அறிவன்று!

பற்றுதல் இல்லா இறைவனைப் பற்றிக் கொண்டால் மட்டுமே எப்பற்றும் இல்லாமல் இவ்வுலகில் அன்புற்று வாழ முடியும் என்பதை மறந்து விட்டு அலைந்து திரிவதால் ஆண்டவனை அறிய முடியாது. எண் சாண் உடம்பை இறைவன் நமக்கு அருளியிருப்பதற்கு காரணம் அவனருளாலே அவன்தாள் வணங்க வேண்டும் என்பதற்குத்தான். அவன் முன்னைப் பழம் பொருளுக்கு முன்னவன். பின்னைப் புதுமைக்கு புதுமையானவன். ஐம்புலன்களை நமக்கு அளித்திருப்பதற்குக் காரணம் ; அவனை வணங்கி, அவனை நினைத்து, அவனைத் தொழுது, அவனோடு கலப்பதற்கேயாகும். இதை வாழ்த்த வாயும், நினைக்க மட நெஞ்சும், தாழ்த்தச் சென்னியும், தந்த தலைவனை 'சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே வீழ்த்த வாவினையேன் நெடுங்காலமே' என்று சொல்லி நெஞ்சம் உருகுகிறார் அப்பர். அற்புதப்பத்தின் மூன்றாவது பாடலில் மாயை நிரம்பிய மனித வாழ்க்கையை மணிவாசகர் பட்டியலிடுகிறார். எப்படியென்றால்,

நடித்து, மண்ணிடை; பொய்யினைப் பல செய்து,
நான் எனது எனும் மாயும்
கடித்த வாயிலே நின்று; முன் வினை மிகக்

கழறியே திரி வேனை;
பிடித்து முன்நின்று, அப்பெருமறை தேடியே
அரும் பொருள் அடியேனை
அடித்து அடித்து அக்காரம் முன் தீற்றிய
அற்புதம் அறியேனே!

அகப்பகை அறுக்கும் அற்புதம்

புறப்பகை பிறரால் அறியக் கூடியது.அகப்பகை தன்னுள் இருந்தே தன்னை மாய்க்கக் கூடியது. அத்தகைய அகப்பகையை காமம், குரோதம்,லோபம், மோகம், மதம், மாச்சரியம் என்று வகைப்படுத்தலாம்.காமத்தால் ராவணனும், குரோதத்தால் சிசுபாலனும், லோபத்தால் துரியோதனனும், மோகத்தால் இந்திரனும், மாச்சரியத்தால் கம்சனும், அழிந்ததை நமது பண்டை இலக்கியங்கள் பகர்கின்றன. மதத்தால் மனித குலம் அழிந்து கொண்டு இருப்பதை இன்று நேரடியாகக் கண்டு கொண்டிருக்கிறோம். பிறப்பையும் இறப்பையும் உணராமல் அரும் துணைவன் அவன் என்பதை அறியாமல் கருங்குழலார் கண் வலையில் அகப்பட்டு பெருந்துயரடையும் மனிதனை அருந்துணையாய் தோன்றி ஆண்டு கொண்டு அருள்கின்ற அற்புதமானவன் இறைவன் என்ற கற்பனையில்லாத உண்மையை நமக்குத் தருகின்றார்.

கூட வருவது கோடி செல்வமல்ல!

பிறந்தது முதல் மனிதன் பொன்னையும் பொருளையும் தேடி ஓடிக் கொண்டேயிருக்கிறான். அவை கிடைக்கவில்லை எனில் தன்னை வருத்தி வாடிக்கொண்டேயிருக்கிறான். நாளை என்பதையும் நமக்கு மேலே ஒருவன் உண்டு, அவன் இறைவன் என்பதையும் மறந்துவிட்டு அவசர அவசரமாக அனைத்தையுமே அனுபவிக்கத் துடிக்கிறான். அதன் விளைவாக மூப்பும் நோயும் வந்து அமைதியை இழந்து அவதியில் உழல்கின்றான். மனிதனின் ஆசையை, கவியரசு கண்ணதாசன் 'இருபதே வயதில் என்னை இருநூற்று ஐம்பது ஆண்டு பருவத்தே வைப்பானேயானால் பார்க்கின்ற யாவும் பார்த்து மருவற்ற பெண் கூட்டத்து மடியிலே நித்தம் ஒரு கிண்ணம் மாற்றி மாற்றி உலகத்தே அனுபவிப்பேன்"

என்று ஏங்குகிறார். அப்படி ஆடுகின்ற மனிதனின் அகத்தில் புகுந்து ஆட்கொள்ள வேண்டும் என்பதை திருவாதஊரர்

வீடு தந்து, என் தன் வெம் தொழில் வீட்டிட,
மென் மலர்க் கழல் காட்டி,
ஆடுவித்து எனது அகம் புகுந்து, ஆண்டது ஓர்
அற்புதம் அறியேனே!

என்று பாடுவதன் மூலம் நமக்கு உணர வைக்கிறார். நம் நெஞ்சைக் கரைய வைக்கிறார்.

அணைந்து வரும் அண்ணல் !

குணமும் குற்றமும் நிறைந்தவன் மனிதன். மனிதன் இயல்பை விளக்க வந்த பெர்னாட்ஷா என்ற பேரறிஞர், மனிதன் நல்லதை நினைக்கிறான். ஆனால் கெட்டதையே செய்கிறான் என்று கூறுகிறான். அப்படி, இருக்கும் வரைக்கும் ஏதேனும் ஒரு தீச்செயலில் மனிதன் இடறி விழுகிறான்! எப்போதாவதுதான் எழுகிறான்! தீச்செயலை விட்டு விட்டால், தனக்கு தனக்கு என்று ஒதுக்கும் தன்னலத்தை விட்டுவிட்டால், தமக்கு தமக்கு என்று பதுக்கும் இழிகுணத்தைக் கட்டிப் போட்டால், மனிதப்பிறவி வணங்கத் தக்கதாகி விடும். அப்படிப்பட்டவர்கள் எவருக்கும் அஞ்சி வாழவேண்டிய அவசியமில்லை! "காலா என்னருகே வாடா" என்று காலனுக்கு ஓலை அனுப்பிய பாரதியைப்போல எப்பொழுதும் அஞ்சா நெஞ்சோடு அகிலத்தில் வலம் வர முடியும். இதை "கோனிலா வாளும் அஞ்சேன் கூற்றுவன் சீற்றம் அஞ்சேன்" என்று சொல்லும் மாணிக்க வாசகர் இந்த நிலை வந்து விட்டால் 'குணங்களும் குறிகளும் இலா குணக்கடல் கோமளத் தொடும் கூடி அணைந்து வந்து எனை ஆண்டு கொண்டு அருளிய அற்புதம் அறியேனே!' என்று இயம்புகிறார்.

"கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை"

என்ற பொய்யா மொழிப் புலவரின் தித்திக்கும் திருக்குறளின் தெள்ளிய கருத்து ஈண்டு நோக்கத் தக்கது.

அப்பனாய் ஆளும் அண்ணல்

"ஒன்று என்று இரு:தெய்வம் உண்டு என்று இரு" என்று பட்டினத் தடிகள் பகருகின்றார். அதை உணராதவர்கள், கண்டதே காட்சி, கொண்டதே கோலம் என்று கருத்தழிந்து அலைகின்றார்கள். அப்படி அலைபவர்கள் இப்பிறப்பின் பயனை இழந்தவர்கள் என்கிறார் மாணிக்கவாசகர். தப்பு இல்லாத தயாபரானாகிய சிவபெருமானின் கழல்களைத்தொழாது மாதர் தங்களிடம் மையல் கொண்டு கிடந்தால் வாழ்வில் வந்த நோக்கம் நிறைவேறாதுஎன்ற உண்மையை "அப்பன் என்னை வந்து ஆண்டு கொண்டு அருளிய அற்புதம் அறியேனே" என்ற வரிகளால் உணர்த்துகிறார்.

பாசம் அறுக்கும் பரம்பொருள்

கடிகாரத்தில் அலைகின்ற பெண்டுலத்தைப் போல நமது உயிர் இந்த உடலில் மாட்டிக்கொண்டு இரு வினைகளுக்கு இடையே வாடுகின்றது. தினமும் ஆடுகின்றது! இந்த மயக்கத்தை நீக்க வல்லது மகாதேவனின் மலரடிகளே யாகும். அவனை நினைத்து அன்றாடப் பணிகளைச் செய்தால் நம் ஆசையையும் பாசத்தையும் அறுத்து, தன்னோடு இந்த உயிரை அவன் ஐக்கியப் படுத்திக் கொள்வான். கள்ளப் புலன்கள் ஐந்தையும் கட்டி ஆண்டால் அடியார்களுடைய ஆருயிரில் கலக்கும் அற்புதப் பொருளாகிய கங்கை நீரணிந்தவன், கயிலாய மேரு இருப்பவன், நமது உள்ளத்தில் வந்து உறைவான் என்பது திண்ணம். இதை உணராமல் இருப்பது மடமை என்பதையே அற்புதப் பத்தில் அற்புதமாக மாணிக்கவாசகர் விளக்குகிறார். அவரது திருவாசகத் தேனைச் சுவைத்து எம்பெருமானின் திருவருள் பெற எல்லோரும் முயலுவோம்!

42. சென்னிப் பத்து

- காப்பியக் கவிஞர். **நா. மீனவன்**

வினைவழிக் கிடந்து மயங்கும் உயிர்களின் மாயப் பிறப்பு அறுக்கும் மன்னவன், ஆகமம் ஆகி நின்றவன், நேயத்தே நின்ற நிமலன், குருபரன் ஆகி அருளிய கொற்றவன், அருமையில் எளிய அழகன், மன்னிய திருவருள் மலையான், பாரிடை ஐந்தாய்ப் பரந்தவன், நீரிடை நான்காய் நிகழ்ந்தவன், தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தவன், வளியிடை இரண்டாய் மகிழ்ந்தவன், வெளியிடை ஒன்றாய் விளைந்தவன், என்னையும் ஒருவன் ஆக்கி, இருங்கழல் சென்னியில் வைத்த சேவகன் என்றெல்லாம் பாடிப் போற்றிப் பரமனின் பேரருள் பெற்றவர். தேன் ஊறும் வாசகங்கள் அறுநூறும், திருக்கோவை நானூறும், அமுதூற மொழிந்து அருளிய நாயகன் வானூறும் கங்கை எனத் திருவாசகம் பாடியவர் மாணிக்க வாசகர். அவர் பாடிய திருவாசகமும், திருக்கோவையாரும் பன்னிரு திருமுறையில் எட்டாம் திருமுறையாகும்.

அடியார்க்கு எளியவனான ஆண்டவனை, குருந்தின் கீழ்வந்து குருவாய் இருந்து, தானே வந்து தலையளித்து ஆட்கொண்ட வள்ளலை, அப்பெருமானின் தத்துவத்தைச் சிவம் மணக்கச் சிவநேயச்செல்வர் சிந்தை எல்லாம் குளிர, ஒப்பரிய தமிழில் உயிர்கலந்து பாடிய திருவாசக நூலில் அமைந்துள்ள தலைப்புக்களின் எண்ணிக்கை 51 ஆகும். அவற்றுள் 42 ஆம் பகுதியாக வருவதுதான் சென்னிப் பத்து, இத்தலைப்பு, பெருந்துறைப் பெருமான் தன் திருவடிகளை, அவர் சென்னியில், அதாவது தலையில் சூட்டி பேரின்பத் திறம் பாடுவது ஆகும். சிவானந்தம் ஆகிய பேரின்பத்தைத் தான் மகிழத் தந்த பெருமானின் அழகை அற்புதப் பத்தாக்கிப் பாடிய பெருமான் அடுத்து அவன் அடியைச் சென்னியில் சூட்டிய அருளிய மகிழ்வால் எழுந்த வெளிப்பாட்டு உணர்வு இங்கு சென்னிப் பத்தாக மலர்கின்றது.

பேராதரிக்கும் அடியவரைப் பேணும் பெருமான் சிறப்பைப் பல்வேறு நிலைகளில் பாடி மகிழ்ந்த அருளாளர்கள்

பலர் ஆவர். அவர்களுள் திருநாவுக்கரசர் பெருமான், ஆண்டவன் நமக்கு உடல் அளித்தமை எதற்காக என்று எண்ணிப் பார்க்கின்ற போது, நம் உடலில் உள்ள அனைத்து அங்கங்களுக்கும் ஆண்டவனை வணங்குவதற்காகவே படைக்கப்பட்டன என்று கருதி, அங்க மாலை பாடிஅருளினார். தலையே நீ வணங்காய் என்று பாடிய அப்பர் பெருமான் நிறைவாகப் பாதங்கள் இறைவன் திருக்கோவிலை வலம் வந்து வணங்கவே படைக்கப் பட்டன என்றுபாடி மகிழ்வார். ஆனால் மணி வாசகர் பெருமான் இறைவனின் அங்கங்களை எல்லாம் பலவாறு பாடித் துதித்தவர். எப்படிப் பாடிப் பரவினாலும் இறைவனின் செந்தாமரை மலர்ப் பாதங்கள் சிந்தையில் நிறைவாய் நின்றமையால் அப்பாதங்களைப் பலவாறு பாடித் துதித்து மகிழ்வார். சிவபுராணம் என்ற பகுதியின் கண் உள்ள முதல் வரியிலேயே, 'நமச்சிவாய வாழ்க, நாதன்தாள் வாழ்க என்று தொடங்கிப் பதினெட்டாம் வரிகள் வரை பாடி மகிழக் காணலாம். எனவே, அவன் திருவடிப் பேற்றைப் பெரிதும் விரும்பிய மாணிக்க வாசகருக்கு, சீராரும் திருப்பெருந் துறையுள் குருந்தின் நீழலில் குரு வடிவாகிய கோலம் காட்டி ஆட்கொண்டு, தம் திருவடிகளைச் சென்னிமிசைச் சூட்டினான் சிவபெருமான்.

தென்பெருந்துறை நாயகன் தன் மெய்ச் சேவகன் என்று கருதியவர் மாணிக்க வாசகர். அவருடைய அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவாய் வந்தவன் அந்த நாயகன். பெருங்கருணைப் பேராறு, ஆரா அமுது, அளவிலாப் பெம்மான் ஆகிய சிவபெருமானைச் சிக்கெனப் பிடித்த சிவநேயச் செல்வராம் மாணிக்க வாசகருக்குப் பால் நினைந்து ஊட்டும் தாயினும் சாலப் பரிந்து வந்து, தன் தாள் தாமரை காட்டி, தண்கருணைத் தேன் காட்டி, காட்டாதன எல்லாம் காட்டி ஆண்டு கொண்டவன் அந்தப் பெருந்துறை ஈசன். அத்தகைய பெருமான் தன் தலையில் திருவடி சூட்டிய திருக்காட்சியை வியந்து பாடுவார் மாணிக்க வாசகர். அவர் அழுது அழுது அடியடைந்த அன்பர் அல்லவா?

மூவராலும், யாவராலும் அறியப் படாத ஆனந்த மூர்த்தி, அன்பரால் அன்றிப் பிறரால் அறிய இயலாத மலர்ச் சோதி என்று பலவாறுபோற்றி வணங்கப்படும் இறைவன் திருவடி என்

சென்னியில் என்றும் பொருத்தி இருக்க வேண்டும் என விரும்பினார். அந்தமிலா ஆனந்தம் அளிக்கும் மெய்ச் சிவலோக நாயகன் திருவடியில் தலை வைத்து வணங்கினால் பேரானந்தப் பெருவெள்ளம் ஊற்று எடுக்கும். ஏன் என்றால் அவன் ஆனந்த வெள்ளமாய் இருப்பவன்.

தெங்குதிரள் சோலைத் தென்னன் பெருந்துறையான் என்னைப் பணி கொண்டவன். தில்லைக்கண் திருக்கூத்து ஆடும் பெருமான் பெருந்துறை வந்து என்னைப் பிச்சேற்றித் திருவடி தந்து ஆண்டு கொண்டவன். பிறவிக் கடல் நீந்தப் பெரும்புணை ஆனவன். இத்தகைய பெருமான் சிவனை அன்றிப் பிற தெய்வங்களைச் சிந்தையாலும் ஏற்காதவர். உள்ளேன் பிற தெய்வம் உன்னை அல்லால் உத்தமனே என்று பாடிய மனஉறுதி கொண்டவர். ஐம்பூத வடிவான உலகை ஊழியில் அழித்துப் பின்னர்ப் படைக்கும் திறம் படைத்த இறைவனை அடையக் கருதும் நான் நாடகத்தால் உன்னடியார் போல் நடித்து உன் வீடகத்தே புகுந்திட மிகப் பெரிதும் விழைகின்றேன், பெருமானே என் மனத்தில் அன்பு பெருக அருள் காட்டு என வேண்டியதோடு அவ்வருள் பெறும் நாள் என்று எனக் கேட்டவர். அவர் வேண்டுகோளை ஏற்றுத் திருப்பெருந்துறை வந்து, அவர்தம் சித்தமே புகுந்து ஆட்கொண்டு தீவினை கெடுத்து அழகிய மலர்ச் சேவடியைச் சென்னி வைத்தவன். அத்திருவடி என்றும் என் சென்னி மேல் இருப்பதாக என்று வேண்டுகின்றார்.

இப்படி எல்லாம் பலவாறு பாடிப் போற்றிய மாணிக்க வாசகர் பண் கலந்த தமிழால் கண் கசியப் பாடும் காட்சி நம் கண்களிலும் நீரை வருவிக்கும். மாயப் பிரபஞ்ச வாழ்க்கையை மெய்யென நம்பி மதித்து வந்த என்னை அவ்வாறு எண்ணாத படி அருள் செய்தவர். பிறவிப் பெருங்கடல் நீந்தப் பேரருள் தந்தவர். வம்பனாய்த் திரியும் என்னையும் வா என்று அழைத்து வல்வினை தன்னை மாய்த்தவர்.. அத்தகையவர் இன்று என்னை அவலக் கடலாய வெள்ளத்து அமிழாமல் காத்தவர்.

அருளாளன் ஆகிய அவனை வணங்க அனைவரும் வாருங்கள். அவன் நித்திய முத்தி தருபவன். பரஞ்சோதி, முக்கண் முதல்வன், முதல் வித்து, வாலறிவன், தேசன், சிவலோகன்,

தில்லைச் சிற்றம்பலவன் என்று அவனுடைய திருநாமம் பாடும் அன்பர்களே இங்கு வாருங்கள். வந்து உங்கள் பந்த பாசத் தனை அறும்படி அவன் தாள் பணியுங்கள். அவனது திருவடிக் கீழ் நம் சென்னி என்றும் இருந்து மாறிலா இன்பம் பெறுக என்று மற்றவரையும் திருவடி இன்பம் பெற அழைக்கின்றார் மாணிக்கவாசகர்.

பரந்து பல் ஆய் மலரிட்டுப் பணிந்து கூத்தாடி இப்பிறவிக் கடல் நீந்திட எண்ணிய மாணிக்க வாசகர், பெருந்துறையில் திருவடி காட்டி அருள் செய்த திருக்காட்சியை விளக்கும் இந்தச் சென்னிப் பத்து, சிவனை வணங்குவதால் உண்டாகும் விளைவை உயர்த்துவது கண்டு நாமும் அந்நிலை பெற மாணிக்க வாசகர் மலர்த்தாள் வணங்குவோமாக.

43. திருவார்த்தை

- ஆய்வுரைஞர் **பி. மாலதி**

மனிதர் எத்தனை விதம் உள்ளரோ அத்தனைவித மனப்பாங்குகள் உள. உளவேற்றுமைகள் மனிதனைத் தரம் பிரிக்கின்றன. மனதை உறுதிப்படுத்த நல்லுணவு தேவை. அவ்வுணவினைத் திருவாசகத்தின் வழி சமைத்துக் காட்டுகிறார். மாணிக்க வாசகர். சொல், பொருள் இரண்டும் அழகுற இணக்கம் பெறும் முறையில் நன் கவிதை உருவாகும். இவ்விரண்டையும் ஒருங்கிணைத்து நன்னெறி உணர்த்துவது திருவாசகம். இத்திருப்பாட்டில் ஐம்பத்தொரு பதிகங்கள் உள. அதனுள் நாற்பத்துமூன்றாவது பதிகமாக அமைந்துள்ள 'திருவார்த்தை' உணர்த்தும் மெய்பொருளைக் காண்பது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

திருவார்த்தை

"அறம் பெருகும் பெருந்துறையிற் றமையாண்ட
செயல்முதலா அரன்சீ ராட்டின்
திறமறிவார் எம்பிரா னாவரென வுரைத்தல்திரு
வார்த்தை யாகும்"

என்பது திருப்பெருந்துறைப் புராணம். இறைவன் திருப்பெருந்துறையில் திருவாதவூரர் பொருட்டுக் குருவாக எழுந்தருளினர். இறைவனது புகழை விரித்துரைக்கும் அருள்மொழிகள் திருவார்த்தைகளாய் மலர்ந்துள. திருவார்த்தையுள் காணப்பெறும் பொருண்மை மெய்ப்பொருள்.

மெய்பொருள்:

"மெய்ப்பொருள் ஒன்று; அதற்குப் பெயர்கள் பல, ஒரு காலத்தில் இருந்து இன்னொரு காலத்தில் மறைவது மெய்பொருள் ஆகாது. ஓர் இடத்தில் இருந்து கொண்டு மற்றோர் இடத்தில் இல்லாதது மெய்பொருள்ஆகாது. ஒரு காரணத்தால் தோன்றி அக்காரணம் ஒழியும்போது தானும் அழியும் பொருள் மெய்பொருள் ஆகாது" மெய்பொருள் நிலைபேறுடையது.

இகம்பரத்துடன் நெருங்கிய தொடர்பு உடையது. ஆதலான்,

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

என வள்ளுவம் சுட்டுகின்றது.

கைம்மாறு கருதாத கருணை :

மாணிக்கவாசகர், அடியார்க்கு அருள்புரிந்த இறைவனின் திருமொழிகளை உணர்ந்தவரைத் தமக்குத் தலைவராகக் கொள்கின்றார். வாசகரின் வார்த்தைகளாய்ப் பெருமானின் திருவரலாறுகள் பத்து பாடல்களிலும் பரவியுள்ளன.

திருவிடை மருதூரில் வரகுணபாண்டியன் தனக்கு மணஞ் செய்விக்கப் பெற்ற பெண்ணை, அவளது அழகுநோக்கி இறைவனுக்கு அளித்தான். பெருமான் அவனது அன்பை ஏற்று அப்பெண்ணின் கரத்தை ஒழித்து ஏனைய உறுப்புக்களைத் தனது இலிங்கத் திருமேனியில் மறைந்துக் கொண்டார். திருமணக்காலத்தில் அவளது கையைத்தான் தீண்டியதால் இறைவன் ஏற்க வில்லைபோலும் என மன்னன் வருந்தினன். இறைவன் அவன் கருத்து, எண்ணி கரத்தினையும் மறைத்தார். அவனது மனைவிக்கு வீடுபேறு மளித்தார். இவ்வருட் திறத்தை,

"நன்னெறி காட்டி நலந்திகழுங்
கோல மணியணி மாடம்நீடு
குலாவும் இடவை மட நல்லாட்குச்
சீலம் மிகக்கரு ணையளிக்குந்
திறமறி வாரெம் பிரானாவாரே" (43 -2)

என்பர். இங்கு பெருமான் இடைவை மடநல்லாட்குக் கருணை அளித்தது அன்புக்கு வித்திடுகின்றது. இவ்வருட்செயலில் கைம்மாறு கருதாத கருணை பெறபெறும். 'சீலமிகக் கருணை' என்ற வார்த்தை சிந்தனைக்குரியது. இறைவன் காட்டுகின்ற நன்னெறியில் சீலம், நோன்பு, அறிவு போன்றவை வைத்தெண்ணப் பெறும். அவற்றுள் சீலம் முதற்கண் அமைவதாகும். சீலம் என்பது ஒழுக்கம். ஒழுக்கம் விளங்கும்படி பெருமான் மன்னனுக்கு அருள்புரிந்தான் என்பதாம். ஒழுக்கம்

சார்ந்த அன்பும், கைம்மாறு கருதாத கருணையும் வாழ்வியலுக்கு நல்லியல்புகளாக அமையும் என்பது விளங்கும்.

தன்மை அறிந்து செயல்

இராவணன் மனைவி மண்டோதரி. சிவன்பால் பயன்கருதி வழிபாடு கொண்டனள். இறைவன் திருவுத்திரகோச மங்கையில் மரத்தடியில் முனிவர்களுக்கு ஆகமங்களை உணர்த்தி கொண்டிருந்தார். அச்சூழலில் மண்டோதரி வேண்ட, இறைவன் இலங்கை சென்று குழந்தையாகத் தோன்றி பயன் கொடுத்தான்.

மற்றொரு சூழலில் தாருகாவனத்து முனிவர்கள் தெய்வநெறி பரவாது, கன்மத்தைக் கைக்கொண்டு வேள்வி நடத்தினர். அதன்பொருட்டு உலகில் தீங்குகள் நிலவின. ஆதலின் பெருமான் முனிவர்கள் வேள்வியால் ஏவிய புலியைக் கொன்று ஆடையாக்கினார்.

வாதவூரடிகள் இறைவனின் இத்தகு அருள் செயலை,

"ஓங்கு மதிலிலங் கையதனிற்
பந்தணை மெல்விர லாட்கருளும்
பரிசறி வாரெம் பிரானாரே" 43 : 5

எனக் குறித்துக் காட்டுகின்றார். இறைவனின் அருட்செயல் அருமை அறிபவர்தாம். தலைவர் ஆவார் என்பது அடிகளின் கருத்து அடிகள் காட்டும். இவ்வருட் செயலின் மெய்ப்பொருள் என்ன ?... மண்டோதரி பயன் கருதி வழிபாடு செய்தனள். அரக்கர் குலத்தினள். ஆயினும் இறைவன் குழந்தையாகப் பய்ன் அளித்தனன். முனிவர்கள் உடல் வருத்தி வேள்வி செய்தனர். எனினும். பரம்பொருளை எண்ணாது கன்மத்தைக் கைக் கொண்டனர். ஆதலின் இறைவன் அவர்களை அடக்கி ஆண்டான். வரகுண பாண்டியனின் பயன்கருதா வழிபாட்டிற்கு வீடுபேறு நல்கினன். இறைவனைப் பரவுகின்ற முனிவர்களுக்கு இலந்தை மரத்தடியில் ஆகமங்களை உணர்த்தினார். இவற்றான் இறைவன் தன்மை அறிந்து செயல்புரிகின்ற நிலை புலப்பெறும். ஆதலான் மன்பதையில் தன்மை அறிந்து செயலாற்றுகின்ற நிலையில், அச்செயல் சீர்மை பெறும் என்பது கருத்திற்குரியது.

துன்பம் களைதல் :

"ஏவுண்ட பன்றிக் கிரங்கி ஈசன்
எந்தை பெருந்துறை ஆதியன்று
கேவலங் கேழலாய்ப் பால்கொடுத்த
கிடப்பறி வாரெம்பி ரானாவாரே " (43:6)
"கேதங் கெடுத்தெம்மை ஆண்டருளுங்
கிடப்பறி வாரெம் பிரானாவாரே", (43:9)

என அடிகள் திருப்பெருந்துறைப் பெருமானின் அருட்திறத்தை விளக்குவர். இறைவன் முப்புரங்களைச் சிரிப்பால் அழித்தவர். பன்றிக்கு இரங்கிபால் கொடுத்தவர். முன்பு அருச்சுனனுக்காக பன்றியை அழித்தார். அதே பெருமான் பன்றிக்குப் பால் புகட்டினார். இவற்றான் துன்பப்படுவோர் யாவராயினும் இனத்தை நோக்காது உதவுதல் வேண்டும் என்பது உணரப் பெறும்.

மாணிக்க வாசகர் அமைச்சுத் தொழில் சார்ந்த நிலையில் குதிரைகள் வாங்காது சிவமயமானார். அந்நிலையில் பாண்டிய மன்னனால் துன்பத்திற்கு ஆளானார். திருப்பெருந்துறை இறைவன் நரியைப் பரியாக்கி பாண்டியனையும், வாசகரையும் ஆட்கொண்டார். இங்கு இறைவன் அடிகளை ஆட்கொண்டது மட்டும் பெரிதல்ல. பாண்டிய மன்னனுக்குத் தவறினை உணர்த்தி சிவநெறிபடுத்தியது உணரத்தக்கது.

வாழ்வில் துன்பப்படுவோருக்கு எந்நிலையானும் உதவுதல் வேண்டும். அதனோடு தவறிழைத்தவரை நன்னெறிப் படுத்துவதும் வேண்டற்பாலது.

அறியாமை அகற்றல்

"பேதங் கெடுத்தருள் செய்பெருமை
அறியவல் லாரெம்பி ரானாவாரே" (43 :7)

என்பர். பேதமாவது உயர்வு தாழ்வு பாராட்டுவது. இது அறியாமையின் உணர்நிலை ஆகும். அதனான் விருப்பு வெறுப்பு மலரும். இவற்றைக் களைகின்ற உண்மை ஞானம் பெற்றவன் திருப்பெருந்துறை இறைவன் என்பதை வாதவூரர்

விளக்குகின்றார்.

"வேடுருவாகி மகேந்திரத்து
மிகுகுறை வானவர் வந்துதன்னைத்
தேட இருந்த சிவபெருமான்" (43-4)

எனச் சுட்டுவது அறியாதவற்கு அறிவித்தல் பொருட்டாகும். மகேந்திர மலையில் இறைவன் வேடவடிவம் தாங்கித் தேவர்கள் தேடும்படியாக மறைந்து இருந்தனன். ஏனெனின், தேவர்கள் போகத்தின்பால் கொண்ட பலவகை விரும்பத்தான் மிகுகுறை உருவானது. இருப்பினும், அவர்தம் அறியாமையை உணரச் செய்து பின் அன்பர்க்கு அருள் புரிந்தார்.

வலைஞர் வேடம் தரித்து வலைஞர் குலப் பெண்ணை மணந்து அருள் செய்தவர் இறைவர். இதனை

"பேரருளாளன் பெண்பாலுகந்து
மணிவலை .கொண்டு வான் மீன் விசிறும்
வகையறி வாரெம்பி ரானா வாரே" (43.3)

எனக் குறிப்பர். வலைஞராகவும், பெண் பன்றியாகவும் இறைவன் வேடம்தாங்கியது இவண் நோக்கத்தக்கது. ஏனெனின் குலத்தாழ்ச்சி எனும் அறியாமை இருளை நீங்குதற் பொருட்டு இங்ஙனம் வேடந்தரித்தனன் என்பது புலப்பெறும்.

மனித மனம் மாயையைக் கண்டு மயங்குவதுண்டு. நிலை பேறற்ற நிலைகளுக்கு ஏங்குவது இயல்பு. ஆன்மாக்களுக்கு ஆசை எனும் பற்று மிகுகின்றபோது துன்பப் பேறு கூடுகின்றது. மாயையை நீக்கி உண்ணப் பொருளை உண்டாக்க வல்லவன் இறைவன். திருவாதவூரடிகள் ஆன்மாக்களது மயக்கத்தைப் போக்கியருளிய இறைவனது. திறத்தை,

"எங்கள் பிரான் இரும் பாசந்தீர
இகபர மாயதோர் இன்பமெய்தச்
சங்கங் கவர்ந்துவன் சாத்தினொடுஞ்
சதுரன் பெருந்துறை ஆளிஅன்று
மங்கையர் மல்கும் மதுரைசேர்ந்த
வகையறி வாரெம்பி ரானாவாரே" (43:10)

என்பர். தாருகாவனத்து முனிபத்தினியர் மதுரையில் வணிக மகளிராய்ப் பிறந்து இறைவன். வளையல் கொணர்ந்து இடப்பெற்றனர். ஆசை என்னும் மாயையை இறைவன் போக்கினன். இதனோடு மற்றொரு கருத்தும் பெறப்பெறும், என்னெனின், முன்பு உலகிற்குத் தீங்கு இழைத்தவர் தாருகா வனத்து முனிகள். இறைவனால் முனிபத்தினிகள் வணிக மகளாய்ப் பிறக்கக் கடவாயினர். இறைவன் வளை இட்ட முறையான் அப்பெண்டிர் அப்பிறப்பு நீங்கப் பெற்றனர். இவற்றான் குற்றம் செய்தவர்களைப் பொறுத்தருளக் கூடிய திறம் கைவரப்பெற வேண்டும் என்பதும் விளங்கும்.

ஆதிப்பிரம்மம்

மெய்ப்பொருள் ஆய்வில் பரம்பொருள் குறிப்பிடற்குரியது. மனிதப் பிறப்பு பரம்பொருளால் இயங்குவது. பெரும் பொருளாகிய இறைவனின் தன்மையை அறிந்து அன்புறுத்துபவர்க்கு வாதவூரர் அடிமை என்கிறார்.

"புண்ணியன் மண்ணிடை வந்திழிந்து
ஆதிப்பிரமம் வெளிப்படுத்த
அருளறி வாரெம்பி ரானாவார", (43:1)

'ஆதிபிரம்மம்' என்பது மெய்ப் பொருளின் விளக்கமாகும். இறைவன் மெய்ப்பொருளானவன்.அவன் உணர்த்தும் அருள் மொழி மன்பதைக்கு மெய்ப்பொருளாகும். அகரமுதலிக்கு ஆதிபகவனைச் சுட்டினார் வள்ளுவர். ஆத்ம நிலைக்கு ஆதிபிரம்மத்தை உணர்த்துகின்றார் மாணிக்கவாசகர்.

44. எண்ணப் பதிகம்

பேரா. ச. முத்துக்குமரன்

மாணிக்கவாசகர் இறைவன் தனது திருவருளைக் காட்டி தன்னை ஆண்டருள வேண்டும் என்ற தம்முடைய மாறா எண்ணத்தை இப்பதிகத்தில் நம் மனதில் பதியுமாறு வெளிப்படுத்துகிறார். இப்பதிகத்தில் உள்ள ஆறு பாடல்களில் அவர் நமக்கு அறிவுறுத்துவனவற்றைப் பற்றிச் சிந்திப்பதே இச்சிறு கட்டுரையின் நோக்கம்.

மனிதர் நிலை

திருவாசகத்தில் ஒவ்வொரு பாடலிலும் பொதுவாகத் தன்னைப் பற்றி மாணிக்கவாசகர் சொல்லிக் கொள்வார். அவர் இந்தப் பதிகத்தில் தன்னைப் பற்றி பின்வருமாறு சொல்லிக்கொள்கிறார் : நான் இறைவனுக்கு அடிமை ஆகும் தகுதி இல்லாதவன்; நாயேன்; நான் ஒன்றும் அறியாதவன் (பாடல் 2). இறைவனின் திருவடிகளைக் காணுவதை விட்டேன்; போற்றுவதை விட்டேன்; புகழ்வதையும்; அறிவு அழிவுற்றேன்; இறைவனின் அடியார்களின் தன்மைகளைப் பார்ப்பதை விட்டேன்; ஆகவே இறைவன் என்முன் வந்தால் அவனைக் காணவும் கூசுவேன் (பாடல் 5). நான் அறவழி நில்லாதவன். (பாடல் 6)

மேற்கண்டவாறு வாதவூரார் சொல்வன எல்லாம் தன்னைப் பற்றிச் சொல்கிறார் என்று கொள்ளல் தகுமோ? அவர் தான் காணும் மக்களின் நிலையையே இவ்வாறு சொல்கிறார். இன்று நம் நாட்டு மக்களில் பலர் ஒன்றும் அறியாதவர்களாக வாழ்கிறார்கள். அறியாமையால் அவர்கள், அறவழி நிற்க வில்லை. இறைவனின் திருவடிகளைப் பற்றி எண்ணுவதில்லை; திருவடிகளைப் புகழ்வதில்லை; இறைவனின் அடியார்களுடன் பழகுவதில்லை; ஆகவே இறைவனே கருணை கொண்டு வந்தாலும் இவர்கள் அவனைக் காண நாணுவர்.

சிவபெருமானின் பெருமை

மாணிக்கவாசகர் இப்பதிகத்தில் சிவபெருமானை எவ்வாறு எல்லாம் வருணிக்கிறார் என்று நோக்குவோம் ; சீர் உரு ஆய சிவபெருமானே ! செங்கமல மலர் போன்ற ஆர் உருவாய ஆரமுதே! ஒப்பற்ற திருவடி உடையவனே! (பாடல் 1) சங்கரா! (பாடல்2). துறவிகளின் தலைவனே! என் உயிருக்கு உயிரானவனே! (பாடல் 3) எனது தலைவனே! ஆதியானவனே! (பாடல் 4). உறுதியானவனே ! (பாடல் 5) முதல்வனே! பால் போலும் வெள்ளிய திருநீறு அணிந்த பெரியோனே! உண்மை அன்பர்க்கு அருள் வழி நல்கும் ஒளியானே! (பாடல் 6) என்று இறைவனை விளித்துப் பாடுகிறார்.

சிவபெருமானின் கருணை

பெருமைகள் பலவும் பெற்ற சிறந்த தலைவனான சிவபெருமான். அளவிலா கருணையும் உடையவன். அவன் பெரியவன் என்பதால், எளிய மக்கள் மீது வைத்த இரக்கத்தால், தனது திருவடிகளைக் காட்டி அவற்றைப் பற்றிக்கொள் என்று கட்டளையிடுவான். அவ்வாறு செய்தால் உன்னைப் பிரிய மாட்டேன் என்று கூறுவான். அது பொய்யாகாது. (பாடல் 2). பக்குவம் பெறாத மக்களையும் அவன் எலும்பும் உருகுமாறு தனது பேர் அருளைக் காட்டுவான். அதன் வழி ஆட்கொண்டு, அவர்கள் பசுத்தன்மையைத் தொலைப்பான். (பாடல் 3). இவ்வாறு எல்லாம் அவன் கருணை காட்டுவதால், அவன்பால் ஈர்க்கப்பட்டு அவனை ஒரு கணமும் பிரிந்து இருக்க முடியாத நிலை உருவாகும். (பாடல்கள் 2, 4). இத்தகைய நிலை எல்லோருக்கும் உருவாக வேண்டும் என்பதே மாணிக்கவாசகரின் எண்ணம்.

ஆண்டவனிடம் அவர் கேட்பவை

மாணிக்கவாசகர் இந்தப் பதிகத்தில் பாடல் 5ல் எதையும் நேரிடையாக இறைவனிடம் வேண்டவில்லை. மற்ற பாடல்களில் அவர் எம்பெருமானின் அன்பை வேண்டுகிறார். (பாடல் 1). அவரது அடியவர்க்கிடையே தானும் ஒருவனாகத் திகழ வேண்டும் என்று கேட்கிறார் (பாடல் 2). மேலும், கழல் அணிந்த அவனது திருவடிகளைப் பற்றிக் கொண்டு அவனது திருவடிகளைப்

பிரியாதிருக்க வேண்டும் (பாடல் 2). அவனருள் வேண்டும் (பாடல் 6). அவன் தன் மலரடிகளைக் காட்டித் தன்னை ஆட்கொள்ள வேண்டும். (பாடல் 3); அவன் தனது பேரின்பத்தை, அளித்து தன்னை உருக்கித் தன் பசுத்தன்மையை நீக்க வேண்டும்; (பாடல் 3); அவன் தனது அன்பால் என் பிறவித் துன்பத்தை ஒழிக்க வேண்டும் (பாடல்கள் 1,4).

அதாவது வாதவூரார், எல்லாம் வல்ல இறைவனிடம் தனக்கென்று எதையுமே கேட்கவில்லை என்பதைக் காண்கிறோம். அவர் வேண்டுவன, இறைவனின் அருளும் இறைவனின் அடியார்களில் தானும் ஒருவனாகத் திகழ வேண்டும் என்பவையே.

முடிவுரை

நம் முன்னோர் உள்ளியவை யாவும் உயர்வானவையே. நமக்கு இன்றைக்குக் கிடைத்துள்ள தமிழ் நூல்களில் எல்லாம் மிகவும் பழமையானது பரிபாடல். அது சற்றேறக்குறைய ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முந்தியது. அந்நூலில்

"..............யாம் இரப்பவை
பொருளும் பொன்னும் போகமும் அல்ல, நின்பால்
அருளும் அன்பும் அறனு மூன்றும்
உருளிணர்க் கடம்பின் ஒலி தாரோயே"

(பரிபாடல் 5, வரிகள் 78-81)

என்று சொல்லப்பட்டிருப்பது இங்கு நினைவு கூரத்தக்கது.

மற்ற நாடுகளில் மக்கள் இயற்கை நிகழ்ச்சிகளைக் கண்டு அஞ்சி தெய்வத்தை நினைந்து நடுங்கி, என்னைக் காப்பாற்று, என் எதிரியை ஒழித்து விடு, என் எதிரியின் சொத்துக்களை எனக்கு அளி என்று வேண்டி வாழ்ந்த அதே காலக்கட்டத்தில் மிக உயர்ந்த எண்ணங்களுடன் மேலான வாழ்க்கை வாழ்ந்தனர் நம் முன்னோர். அவர்கள் விட்டுச் சென்ற இலக்கியங்களை நாம் கற்க வேண்டும். நம் குழந்தைகளையும் கற்கச் செய்ய வேண்டும். அப்போதுதான் நாம் உயர்வோம், நம் நாடும் முன்னேறும். அத்தகைய மன அமைதியை எல்லாம் வல்ல சிவபெருமான் நமக்கு அளிப்பானாக.

45. யாத்திரைப் பத்து

நாவுக்கரசர். முனைவர். **சோ. சத்திய சீலன்**

வள்ளல் இராமலிங்க அடிகளார் மணிவாசகப் பெருமானிடம் ஒரு வேண்டுகோள் வைக்கிறார்.

"உயர்ந்த உள்ளங்களில் இனிக்கின்ற மணிவாசகப் பெருந்தகையே! உன்னுடைய திரு வாசகத்தின் பொருளோ, அழகோ, உவமை நயங்களோ, மற்ற அணி நலன்களோ எனக்குத் தெரிய வேண்டியதில்லை. **உன்னுடைய அனுபவத்தை மட்டுமே எனக்கு வழங்குவீர்களாக** என்று!

யாத்திரைப் பத்தில் மணிவாசகப் பெருந்தகை அனுபவ விளக்கத்தையே நமக்கு வழங்குகின்றார். அதுவும் தம்முடைய அனுபவம் கடந்த நிலையைப் பத்து பாடல்களில் நமக்குக் கூறி நம்மையும் அந்த அருளனுபவத்தைப் பெற அழைக்கின்றார்.

"கொன்றை மாலையையும் பாம்புகளையும் அப்பெருமான் அணிந்து கொண்டுள்ளான். நம் மனத்தை அறிவுருவாய் வந்து கனிவிக்கின்றான்!"

இந்த மண்ணில் எழுந்தருளி என்னை ஆண்டு கொண்டான். உமையொரு பாகனாக விளங்குகின்றான்.

அத்தகைய சிவபெருமானுடைய திருவடியை நோக்கிப் பயணம் செய்ய வேண்டிய காலம் வந்து விட்டது. அதற்கு உங்களை ஆயத்தப் படுத்திக் கொள்ளுங்கள்.

நீங்கள் செய்ய வேண்டிய கடமை என்ன தெரியுமா?

நீங்கள் எல்லோரும் உடலாலும் உள்ளத்தாலும் ஒன்றுபட்டுக் கூடுங்கள், அவனுடைய திருவடியைச் சேர்ந்தால் ஒரு நாளும் தளர்ச்சி அடையாமல் பேரின்ப வாழ்வை அடைவீர்கள்.

அப்படி அவனடியைச் சேர வேண்டுமானால், உங்களுடைய புலன்களுக்கு அடிமையாகி, அவற்றின் வழி

செல்லாதீர்கள். அவனது திருவடிகளையே எப்பொழுதும் சிந்தையில் நிறுத்துங்கள்.. மற்றவற்றையெல்லாம் வெளியே போக்கிவிடுங்கள்.

நமக்குச் சுற்றமெல்லாம் சிவபெருமான் ஒருவன்தான்.

நாம் என்பதும், நம்முடையதுஎன்பதும் பாசம் என்பதும் மாயங்களே!

அந்த இறைவனுடைய பழமையான தொண்டர்களை அடையுங்கள். அவனுடைய திருக்குறிப்பை உணருங்கள். பொய்யை ஒழியுங்கள். அவனுடைய திருவடியைச் சென்று சேரத் தயார் ஆகுங்கள்.

அவனுடைய அடியார்களாகிய நீங்கள் அற்ப விளையாட்டுகளை விட்டொழியுங்கள். அழியும் புலால் உடம்பைத் தூரமாய் ஒழியுங்கள்.

கோபத்தை விலக்குங்கள். ஒற்றுமையை நாடுங்கள் சிவபுரத்திற்குச் செல்வோம். அங்கு அவனை மனம் உருகி வழிபடுவோம்! அவனைப் போற்றுவோம், புகழ்வோம்! துதிசெய்து பாடுவோம்!

துன்பங்களை விலக்கிப் தூரத் தள்ளுங்கள். அவனுடைய திருவடியை மலர்களால் அலங்காரம் செய்யுங்கள். சிவபுரத்திற்குச் சென்று அவன் தாளை வணங்கி, அவனுடைய அடியார் முன் நெஞ்சு உருகி நில்லுங்கள்!

இப்படிப் பேரானந்தத்தில் பிரியாதிருக்கப் பெற்றவர்களே!

மீண்டும் கொடிய மயக்கம் உங்களை அழிப்பதற்கு முன் சிவபுரத்தை அடைந்து, இறைவனுடைய திருவடிகளைத், திருக்கதவு திறந்து இருக்கும் போதே அடைந்து விடுங்கள்.

உங்கள் மனத்தைத் திருத்தமாய், வைத்துச் சிந்தியுங்கள். சிவபெருமானுடை ய அருளமுதக்கடலில் அழுந்தி விடுங்கள். இந்தப் பிரபஞ்சமாகிய பொய்யிற் கிடந்து புரளாமல் ஆண்டவரை நோக்கிய அற்புத யாத்திரைக்குத் தயாராகுங்கள்.

இப்படியெல்லாம் செய்யாவிடில் அவனருளைப் பெற ஒரு போதும் இயலாது"

இப்படியெல்லாம் நம்மை, ஆண்டவனை நோக்கி அருளானந்த யாத்திரைக்கு அழைக்கும் மணிவாசகப் பெருந்தகை, ஏழாம் திருப்பாடலிலும், பத்தாம் திரும்பாடலிலும் நமக்கு ஓர் எச்சரிக்கையையும் விடுக்கின்றார்.

"பொய்யுலகில் இருப்பவர் இங்கேயே இருக்கட்டும். நாம் இறைவனுடைய பொன்னடியைச் சென்றடைவோம். அவனருளை எண்ணித் தரையில் புரளாதவர்கள், புரண்டு அழாதவர்கள், பின்னால் இருளில் அகப்படுவீர்கள்! அறிவு கலங்கி மயங்கித் துன்புறுவீர்கள். எனவே அவனுடைய திருவடியை அடைய முற்படுங்கள்"

"நிற்பார் நிற்க நில்லா வுலகில்
நில்லோம் இனிநாம் செல் வோமே
பொற்பால் ஒப்பாம் திருமேனிப்
புயங்கன் ஆள்வான் பொன்னடிக்கே
நிற்பீர் எல்லாம் தாழாதே
நிற்கும் பரிசே ஒருப்படுமின்
பிற்பால் நின்று பேழ்கணித்தால்
பெறுதற்கு அரியன் பெம்மானே!
புரள்வார் தொழுவார்! புகழ் வாராய்
இன்றே வந்து ஆளாகாதீர்!
மருள்வீர் பின்னை மதிப்பார் ஆர்
மதியுட் கலங்கி மயங்குவீர் !
தெருள்வீராகில் இது செய்ம்மின் :
சிவலோகக் கோன் திருப்புயங்கள்
அருளார் பெறுவார் அகலிடத்தே
அந்தோ அந்தோ அந்தோவே"

இறைவன் திருவடியை நோக்கி யாத்திரை செய்த தன் அருள் அனுபவத்தை நமக்கு, இந்த யாத்திரைப்பத்தில் மணிவாசகப் பெருந்தகை உருக்கமுடன் எடுத்து ஓதுகின்றார். அந்த அனுபவாதீதத்தை அதாவது, அனுபவங்கடந்த அருள் நிலையை

உயிர்களெல்லாம் பெற்று உய்ய வேண்டுமென்று ஆசைப்படுகின்றார் மணிவாசகப் பெருந்தகை. ஓதி, உணர்ந்து, பின்பற்றி இறைவன் அருளைப் பெறுவோமாக!

46. திருப்படை எழுச்சி

புலவர். க. சண்முகம்

திருவாதவூரடிகள் படைத்த திருவாசகத்தில் 46 ஆம் தலைப்பில் திருப்படை எழுச்சி உள்ளது. மணிவாசகப் பெருமான் பல தலைப்புக்களை, பதிகமென்றும், பத்து என்றும், சதகம் என்றும் குறித்துள்ளார். எண்ணப் பதிகம், பாண்டிப்பதிகம், அச் சோப் பதிகம் என்றும், குலாப்பத்து, யாத்திரைப் பத்து, அற்புதப் பத்து என்றும் குறிக்கப் பெற்றவை சான்றுகளாகும். இப்பெயர்கள் கொண்ட தலைப்பில் பத்துப்பத்துப் பாடல்கள் அமைந்துள்ளன. இவ்வாறு பதிகம், பத்து என்று குறிக்காமல், திருப்பள்ளி எழுச்சி, திருப்புலம்பல், திருப்படை எழுச்சி என்பன போன்ற தலைப்புகளும் உள்ளன. இவைகளில் பத்துப்பாக்களும், பத்திற்கு மேற்பட்டும், பத்திற்கு குறைந்தும் பாடல்கள் உள்ளன. மிகக் குறைந்த பாக்களைக் கொண்ட தலைப்பு 'திருப்படை எழுச்சி' யாகும்.

தமிழ்ப் பேராசியர் திரு. தா.ம.வெள்ளைவாரணம் அவர்கள் முன்னுரையுடன். திருப்பனந்தாள் திருமடம் பதிப்பித்துள்ள திரு வாசகத்தில், திருப்படை எழுச்சியில் உள்ள இரண்டு பாடல்களுக்கும் முறையே 4 என்றும், 8என்றும் குறிக்கப்பெற்றுள்ளன. வேறு சில பதிப்புகளில் 1, 2 என்றே குறிக்கப் பெற்றுள்ளன. மணிவாசகர் இத்தலைப்பில் பத்து பாடல்கள் பாடி, இரண்டு பாடல்கள் மட்டும் பழுதடையாமல் கிடைத்திருக்கக் கூடுமோ என்றும் எண்ணத் தோன்றுகிறது.

திருப்படை எழுச்சி "தில்லையில் அருளியது" என்றும், விளக்கம் செய்யும் பொருட்டாக "பிரபஞ்சப்போர்" என்றும் பல பதிப்புகளில் கூறப் பெற்றுள்ளன. "பிரபஞ்சப்போர்" என்ற விளக்கச்சொல்லை மணிவாசகர் குறிக்கவில்லை எனத்தெரிகிறது.

முன்னோர் இதற்குப் "பிரபஞ்சப்போர்" எனக் கருத்துரை வரைந்தனர் என்று திரு. வெள்ளைவாரணனார், பன்னிரு திருமுறை வரலாறு என்னும் பெரு நூலில் குறித்துள்ளார்.

(பன்னிரு திருமுறை வரலாறு 11ஆம் பகுதி பக்கம் 270)

இக்கருத்தையே திரு. அருணை வடிவேலு முதலியார் அவர்களும், திருப்படை எழுச்சி என்னும் தலைப்பின் விளக்கத்தில், "பிரபஞ்சப்போர்" என்று முன்னோர் குறித்தனர் என்றுரைக்கின்றார். "பிரபஞ்சப்போர்" திருப்படை எழுச்சிப் பாடல் களைக் காணும் பொழுது "பிரபஞ்சப்போர்" என்னும் கருத்துரை விளக்கம், சாலப் பொருந்துவதாகவுள்ளது.

உயிர்கள் துய்த்து வாழ இறைவனால் கொடுக்கப் பெற்றது பிரபஞ்சம் அல்லது உலகம். தனு, கரணம், புவனம், போகம் முதலியன பிரபஞ்சத்தைக் குறிப்பன வாகும். உயிர்கள் இறைவனால் படைக்கப் பெற்றவையல்ல. ஆணவ இருளில் பிணிப்புற்ற உயிர் கடைத் தேற உடலையும், உலகையும் இறைவன் தந்தருளுகிறான் என்பது சைவ சிந்தாந்தக் கோட்பாடாகும். உடல் பெற்ற உயிர்கள் இப் பிரபஞ்சப் பொருட்களைக் கொண்டு வாழ்ந்து, உண்மைப் பொருளாகிய இறைவனை அடைய முயலுதல் வேண்டும். ஆகவே, உலகியற் பொருட்கள் , அல்லது பிரபஞ்சம் உயிர்களுக்கு உதவும் பொருளாகும் இவ்வுலகத்தை என்றும் உள்ள மாயையினின்றும் உயிர்களின் சிற்றறிவை மயக்கி ஈர்க்கும் தன்மை மாயாகாரியமாகிய உலகப் பொருள்களுக்குண்டு. இக் கருத்தினைச் சிவஞான சித்தியார் திருப்பாடல் கொண்டு அறியலாம்.

"நித்தமாய் அருவாய் ஏக நிலையதாய் அகிலத் துக்கோர்
வித்துமாய் அசித்தா யெங்கும் வியாபியாய் விமல னுக்கோர்
சத்தியாய்ப் புவன போகந் தனுக ரணமும் உயிர்க்காய்
வைத்ததோர் மலமாய் மாயை மயக்கமும் செய்யு மன்றே"

(சித்தியார், சுபக்கம்-142)

இப் பாடலில் மாயை இலக்கணமும் உதவியும், செயற்பாடும் விளக்கம் செய்யப் பெற்றுள்ளன. மாயா காரியப் பொருளாகிய பிரபஞ்சம் இன்பம் தரும் பொருளாகத் தோற்றம் செய்யும். அந்த மயக்கத்தில் மயங்கிய உயிர்கள், உண்மைப் பொருளாம் இறைவனை அடையமுயலாமல் உதவ வந்த உலகப் பொருள் களே உண்மைப் பொருள் எனக் கொண்டு துன்பத்தில் உழலும்.

இம்மெய்த் தன்மை யறிந்த மணிவாசகர் உயிர்கள் மாயைப் பொருட்களில் மயங்கும் தன்மையை நீக்க விழைந்தார். குறிப்பாக, சிவத்தொண்டர்கள் மாயையினின்றும் முற்றாக நீங்குதல் வேண்டும். அது எளிதல்ல. மாயையின் மயக்கம் மிக்க வலியுடையது. அதனால், அவற்றை மாயப்படை என்று உருவகம் செய்தார்.

ஞானத்தை அடைய விடாமல் தடுப்பது பிரபஞ்ச மயக்கமாகும். இம்மயக்கத்தை இறையருள் துணை கொண்டே நீக்கலாம். முருகப்பெருமான் திருவருள் பெற்ற அருணகிரி நாதர்-பிரபஞ்சத்தை அழுந்தச் செய்யும் சேறு என்று உருவகம் செய்தார். இச்சேற்றிலிருந்து கரையேற்றியவன், சிவபெருமானின் திருமகனாம் முருகனே என்று கசிந்து பாடுகிறார்.

"பேற்றைத் தவம் சற்று மிலாத என்னைப் பிரபஞ்ச மெனும்
சேற்றைக் கழியவழி விட்டவா! செஞ்சடா டவிமேல்
ஆற்றைப் பணியை இதழியைத் தும்பையை அம்புலியின்
கீற்றைப் புனைந்த பெருமான் குமாரன் கிருபாகரனே"

(கந்தரலங்காரம் - பாடல் 1)

பிரபஞ்சப் பாசங்களில் வீழ்ந்து கிடக்கும் அடியவர்களை விழித்தெழச்செய்து, போர்க்கோலம் கொள்ளுமாறு செய்கிறார் மணிவாசகர்.

"ஞானவாள் ஏந்தும் ஐயர் நாதப்பறை அறைமின்
மானமா ஏறும் ஐயர் மதிவெண் குடைகவிமின்
ஆனநீற் றுக்கவசம் அடையப் புகுமின்கள்
வானவூர் கொள்வோம் நாம்மாயப் படை வாராமே"

திருப்படை எழுச்சி - பாடல்-1

ஞானவாள் :

வலிமை மிகு மாயைப் படையை வெல்ல வலிமை மிக்க படைக்கருவிகள் வேண்டுமல்லவா? சிவபெருமானின் துணையின்றி வெல்லுதல் இயலாதாம். ஆகவே, சிவபெருமான் கோலத்தையே படைக் கருவிகளாகக் கொள்ளுமாறு மணிவாசகர்

கூறினார். எதிரியை வெட்டி வீழ்த்துவதற்கு முதற்கருவியாக வேண்டுவது வாள். எந்த வாளை ஏந்திச் செல்வது? 'சிவஞானத்தையே வாளாக ஏந்திச் செல்லுங்கள்' என்று பணித்தார்.

எமதருமனை எதிர்த்துப் பாடும் பொழுது அருணகிரியார், விரோதமில்லாத ஞானத்தையே சுடர் வாளாகக் கூறினர். அந்த ஞானவாள் கொண்டு எமனின் தண்டாயுதத்தையும், திரிசூலத்தையும் வெட்டி வீழ்த்தித் திண்டாடச் செய்வேன், என்று வீறு பேசுகிறார்.

"தண்டாயுதமும் திரிசூலமும் விழத் தாக்கி யுன்னை
திண்டாட வெட்டி விழவிடுவேன் செந்தில் வேலனுக்குத்
தொண்டாகிய என் அவிரோத ஞானச் சுடர்வடிவாள்
கண்டாயடா அந்தகா! வந்துபார் சற்றுஎன் கைக்கு எட்டவே"

(கந்தரலங்காரம் 25)

என அருணகிரியாரும் ஞானத்தை வாளாக உருவகம் செய்துள்ளார். மணிவாசகப் பெருமானும் ஞானத்தையே வாளாக ஏந்துமாறு தொண்டர்களுக்கு அறிவுறுத்துகிறார்.

நாதப்பறை :

படை எழுச்சிக்குப் பறை முழக்கம் வேண்டுமே! சிவபெருமானைத் துதிக்கும் மந்திர நாதத்தையே பறையாக முழக்குங்கள் என்று பொருள்படும்படி 'நாதப்பறையறைமின்' என்று பணிக்கிறார்.

'நாதப்பறை அறைதலாவது, பிரணவ பஞ்சாக்கரத்தோடு கூடிய சூக்கும பஞ்சாக்கரத்தை ஒலியாமல் ஒலித்தலே பறைய்றைதலாம்' என்று விளக்கம் செய்கிறார் த்ண்டபாணி தேசிகர்.

'நமசிவாய வாழ்க! என்ற தொடங்கத்தக்கன போல வாழ்த்து வகையானும் வணக்க வகையானும், வானளாவ முழக்குதல்' என 'நாதப்பறை யறைமின்' என்ற தொடருக்கு விளக்கம் செய்துள்ளார் அருணை வடிவேலர்.

"படைக்கலமாக உன் நாமத்து எழுத்தஞ்சு
என் நாவிற் கொண்டேன்"

என்ற நல்வாக்கையும் ஈண்டு இணைத்துக் காணலாம்

(நாவுக்கரசர் தேவாரம். கோயில் திருப்பதிகம் -8)

காளை ஊர்தி :

படைகள் ஏறிச் செல்லும் வாகனங்கள் வேண்டுமே! 'மானமா ஏறும்' என்றார். 'ஈண்டு இறைவன் இவரும் ஊர்தி இடபமாதலின் அது கொள்ளப்பட்டது. எத்தகைய இடையூறு நேரினும் பின் வாங்காமையும் எதிர் சென்று தாக்குதலும் மானம். அவற்றையுடைய மா என்று வாகனம் பற்றி விளக்கம் செய்கிறார் தண்டபாணி தேசிகர்.

மதிக்குடை :

படை எழுச்சிக்கு அழகும் ஊக்கமும் தருவது குடை. அது வெண்மை நிறம் என்றே பலரும் குறிப்பர். இந்தப்படை எழுச்சிக்குக் கொடையாது? 'ஐயர் மதிவெண் குடைகவிமின்' என்றார். மதி வெண்ணிலவையும் குறிக்கும்; அறிவையும் குறிக்கும். சிலேடை நயம் காட்டி உரைக்கின்றார். இறைவன் அறிவே வடிவானவன். அறிவு வெள்ளொளிச் சோதியாய் விளங்கும். அந்த அறிவை மதிபோன்ற வெண்ணிறக் குடையாகக் கவியுங்கள் என்றுரைக்கின்றார்.

திருநீற்றுக்கவசம் :

படை எடுத்துச்சென்று, போர் புரிய வல்லார்க்குக் கவசம் வேண்டுமே! எதிரி படைக்கருவிகள் தாக்காமல் தடுப்பது கவசமல்லவா? அந்தக்கவசம் எது? ஆன நீற்றுக் கவசம் அடையப் புகுமின்கள் என்று அடிகள் அருளுகின்றார். இறைவன் வெண்ணீறணி கோலமுடையவன். பசுஞ்சாணம் நீற்றப்பட்டது வெண்ணீறு. அவன் பூசும் திருநீற்றையே கவசமாக அணிந்து கொள்ளுங்கள் என்று கவசம் தருகின்றார்.

"கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை
மங்காமல் பூச மகிழ்வீரே யாமாகில்
தங்கா வினைகளும் சாரும் சிவகதி
சிங்கார மான திருவடி சேர்வரே!"

(திருமந்திரம். திருநீறு-பாடல் 2)

என்ற திருமூல நாயனாரின் திருவாக்கை ஒப்பு நோக்கிக் காணலாம்.

பயன் :

இவ்வாறு படை எழுச்சி கொண்டு புகுந்தால் மாயப்படை நம்மை எதிர்த்து வாரா. தடையின்றி சிவபெருமான் ஊராம் வானவூரைத் தமதாக்கி மகிழலாம் என்று அடியார்களுக்கு எழுச்சியூட்டுகிறார் மணிவாசகர்.

படை அணிவகுப்பு :

"தொண்டர்காள் ! தூசி செல்லீர் பத்தர்காள் ! சூழப்போகீர்
ஒண்டிறல் யோகிகளே! பேரணி உந்தீர்கள்
திண்டிறல் சித்தர்களே! கடைக்கூழை செல்மின்கள்
அண்டர்நா டாள்வோம் நாம் அல்லற்படை வாராமே"

(திருப்படை எழுச்சி - பாடல் 2)

இரண்டாம் பாடலில், படை அணி வகுப்பைக் கூறுகிறார். பாண்டிய மன்னனிடம் அமைச்சுப் பணி ஆற்றியவரல்லவா? அதனால், படைகளின் பகுப்பும் வகுப்பும் தெரிந்தவராயிற்றே. அரசைக் காக்கவோ, எதிரி அரசைத் தாக்கவோ எடுக்கும் படை எழுச்சி அல்ல இது. அண்டங்களின் . தலைவனாம் சிவபெருமானின் சிவலோகம் ஆளச்செல்லும் அடியார்களைத் தடுக்கும் அல்லற்படை. வாராமல் காக்க அடியார்களை அணி வகுக்கிறார்.

தேர், யானை, குதிரை, காலாள் என நால்வகைப் படைகளுண்டு. 'மணிவாசகர்' சிவபெருமானை வணங்கும் பல திறத்து அடியார்களையே நான்கு வகைகளாக்குகிறார்.

தொண்டர்களே ! அணிவகுப்பின் முன் செல்லும் தூசிப் படையாகச் செல்லுங்கள். எப்போதும் பெருமானையும் அடியார்களையும் மனம் கொண்டு வணங்கும் பக்தர்களே ! படைகளுக்குப் பாதுகாப்பாக இரு பக்கமும் சூழும் படைகளாகச் செல்லுங்கள். யோக நிலையிலிருந்து, உடலின் ஆறு ஆதாரங்களிலும் சிவபெருமானைப் பேரொளியாக நிறுத்தும் யோகிகளே ! சிவலோகம் ஆளச்செய்யும் படைகளை அணிவகுத்துத் தலைமை தாங்குங்கள். சித்தி பெற்ற சிவஞானிகளே! மூலப்படையாக நடுவிடத்தே செல்லும் கூழைப் படையாகச் செல்லுங்கள். இவ்வாறு தொண்டர்களை, பக்தர்களை, யோகிகளை, ஞானிகளை விளித்து அணிபெறச் செய்யும் அழகை உணர்ந்து மகிழலாம்.

சரியை, கிரியை, யோகம், ஞானம் என வழிபாட்டுப் படிநிலைகளை நான்கு வகையாகச் சைவ சித்தாந்தம் கூறும். சிவனடியார்கள் அனைவரும் ஒருதிறத்தாரே ஆயிடினும் பக்குவ நிலைக் கேற்பப் படி நிலைகள்ாக உரைக்கப் பெறுவர். இக்கருத்துக்களை எல்லாம் உள்ளடக்கி இரு பாடல்களில் விளக்கிய மணிவாசகப் பெருமானின் அருள் திறத்தைப் போற்றி வணங்குவோமாக !

47. திருவெண்பா

-கலைமாமணிடாக்டர். **இளங்கம்பன்,**

உலக நூல்களில் நன்னூல் என்றும் பொன்னூல் எனப் போற்றப்படும் நூல்கள் பலப்பல உள்ளதை நாம் நன்கறிவோம். ஆனால் இறைவன் தாம் கற்று மகிழ ஓர் நூலை மனிதனிடத்துப் பெற நினைந்தார் என்றால் அது விந்தைக்குரிய தல்லவா? அந்த விந்தைக்குரிய நூலே திருவாசகம் ஆகும்.

இறைவனுக்கு வேண்டிய நூலாகத் திருவாசகம் அமைந்ததால், இறை அனுபவத்தையே பொருளாகக் கொண்டு அந்நூல் பொலிகின்றது. இதனைப் பேராசிரியர் சுந்தரம்பிள்ளை மனோன்மணியம் என்ற தம் நாடகநூலில் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

"கடையூழி வரும்தனிமை கழிக்கவன்றோ,அம்பலத்து
உடையான் உன்வாசகத் துள் ஒருபிரதி கருதியதே"

இந்த வரிகள் திருவாசகத்தின் தெய்வ நலத்தை தேசுற விளக்கக் கர்ண்கிறோம்.

இறையனுபவம் என்பது மணிவாசகருக்கு ஏற்பட, இறைவனின் அருளே இன்துணையாக நின்று உதவியுள்ளதை நாம் நன்கு அறிய முடியும். அந்த இறைவன் குருந்த மரத்தடியில் குருவாக வந்து அருள் புரிந்துள்ளார். மணிவாசகர் பெற்ற முழுமையான இறையனுபவம் என்பது இறைவனைக் கலந்தும் கடந்தும் கண்டதாகும். மணிவாசகரின் மேலான இறைஅனுபவம் , அவர் வழியில் அது தனித்த இனித்த நலத்தில் விளங்கி, திருவாசகத்தின் எழுத்துக்கு எழுத்து அந்த அனுபவம் எதிரொலிக்கக் காண்கின்றோம். இந்த வகையில் திருவாசகம் முழுக்க முழுக்க இறையனுப நூலாகவே விளங்குகின்றது.

இறைக் காட்சியில் அவர் அடைந்த உவகை உணர்வு அவர் உள்ளத்தில் கரைபுரண்டு ஓடி அவரைக் கனிவித்துள்ளது. அந்தக் கனிவே ஒவ்வொரு பாடலிலும் அலைபாயக் காண்கிறோம்.

"திருப்பெருந்துறை" என்ற நற்பதியே அவருக்கு இறைவனின் திருவருளைப் .பெற உதவியுள்ளது. உருவாய், அருவாய் உளதாய் இலதாய் இலங்கும் இறைவன் மணிவாசகப் பெருமானுக்கு குருவாகவே தோன்றி குறைநீக்கி அருள் புரிந்துள்ளார். மணிவாசக்ர் குருவின் வடிவாகவே இறைவனைக் கண்டும் களித்தும் கொண்டும் கொடுத்தும், மகிழ்ந்திருக்கின்றார்.

இந்த முறையில் இறைவனிடத்தில் தம் மன உணர்வுகளை எல்லாம் அவர் கூறக் கொஞ்சமும் தயங்காமல் வெளியிட்டுள்ளார். திருவாசகத்துள் உள்ள "திருவெண்பா" என்ற பகுதிஅணைந்தோர் தன்மையை விளக்கும் பகுதியாக ஆன்றோர்களால் விளக்கப்பட்டுளது.

மணிவாசகர் இந்தப் பகுதியில் உள்ள பதினொரு வெண்பாக்களிலும், தன் மன உணர்வையும், நிலைகளையும் வெளிப்படையாகவே பாடி உள்ளார். அத்துடன் இப்பாக்களில் இழையோடி நிற்கின்ற அவரின் எளிமை உணர்வையும் உள் உணர்வு ஒளிப் பெருக்கத்தையும் நன்கு நாம் காணலாம்.

தம் குறைகளை எல்லாம் அதிகம் அவர் எண்ணிப் பார்க்கின்ற இயல்பை, அவரால் மறைக்க முடியாத நிலைகளையும் இப்பாக்களில் காணலாம்.

இறைவனையே நினைந்து வாழும் ஓர் பித்துற்ற வாழ்வை பேரிறைவன் எனக்குத் தந்துள்ளான். மற்றும் பேசும் நிலை நீங்க அவன் நினைவில் உத்தமமாகவே இருக்கும் நிலையை இறைவன் தனக்கு அருளி உள்ளதை. அவர் பின் கண்டவாறு பேசுகிறார். அதில்தான் எவ்வளவு எக்களிப்பு?

"பித்தென்னையேற்றும் பிறப்பறுக்கும் பேச்சரிதாம்
மத்தமே யாக்கும்வந் தென்மனத்தை- அத்தன்
பெருந்துறையான் ஆட்கொண்டு பேரருளா னோக்கும்
மருந்திறவாய்ப் பேரின்பம் வந்து"

இறையருளில் திளைத்து இன்புறும் போதும் கூட மணிவாசகருக்குத் தன்னைப் பற்றிய தன்னுணர்வுச் சிந்தனையிலும் சுய மதிப்பீட்டிலும் தன்னை மிகவும்

எளிமையாகவே கருதுவது குறிப்பிடத் தக்கதாகும்.

"யாவர்க்கும் மேலாம் அளவிலாச் சீருடையான்
யாவர்க்கும் கீழாம் அடியேனை யாவரும்
பெற்றறியா இன்பத்துள் வைத்தாய்க்கென் னெம்பெருமான்
மற்றறியேன் செய்யும் வகை"

இறைவனுக்குக் காட்ட வேண்டிய நன்றியுணர்வை எல்லாம் மணிவாசகர் தம் அடி மனத்தில் தேக்கிவைத்துக் கொண்டு அதனை இப்பாடலிலும் மிகுந்த ஏக்கத்துடன் வெளியிட்டுள்ளார்.

இறைவனுடன் கலந்து வாழ்கின்ற வாழ்வில் இறைவனுக்கும் நமக்கு முள்ள உறவு மிகவும் நெருக்கமும் உருக்கமும் உள்ளதாகிவிடுகிறது.

இறைவன் அடியாரைப் பிரியாதவனாகி விடுகின்றான். அடியாரின் நிலை மணிவாசகரின் நிலைதான். இறைவனுக்கு நாம் அங்கு மிங்கும் ஆலயங்களை எழுப்பினாலும் அவன் நினைப்போர் மனத்தையே கோயிலாகக் கொண்டு குடியிருக்கத் தம் மனக் குறைகளை எல்லாம் கூறுவதுடன் வினைகளால் உண்டான துன்பத்தை அப்படியே இறைவனிடம் முறையீடாக்கி மகிழ்கின்றார். தம் மனத்தைக் கலந்து நிற்கின்ற பொய்மையை அவர் போக்கவும் நீக்கவும் முடியாத நிலையில் வருந்துகின்றார்.

"வெய்ய வினையிரண்டும் வெந்த கல- மெய்யுருகிப்
பொய்யும் பொடியாகா தென்செய்கேன்...."

என்று அவர் உள்ளுருகி நிற்கின்றார். பொய்மையைப் பெருக்கி வாழும் வாழ்வாகவே அவர் தம் வாழ்வைக் கருதுவது குறிப்பிடத்தக்கதாகும். தனது வாழ்வை எண்ணிப் பார்க்கும் அவர்

ஆர்க்கோ அரற்றுகோ, ஆடுகோ, பாடுகோ..

என்று மனம் நைந்து பாடுவதும் குறிப்பிடத்தக்கதாகும் மற்றும் அவர்

"செய்த பிழை அறியேன் சேவடியே கைதொழுது
உய்யும் வகையில் உயிர்ப்பறியேன்"

என்றெல்லாம் தம் குறையை எண்ணி எண்ணி உருகும் அவர் இறைவன் அவருக்கு அருளியுள்ள இன்ப நலப்பேறுகளை எல்லாம் சற்றும் மறக்காமல் மிகுந்த பெருமிதத்துடன் பாடுவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

"முன்னை வினையிரண்டும் வேரறுத்து முன்நின்றான்
பின்னைப் பிறப்பறுக்கும் பேராளன்"

என்று சிவபெருமானைப் போற்றிப் புகழ்ந்து புளக முற்று, தன்குறைகளையும் இயல்புகளையும் அறிந்த போதும் அவன் என்னை என்றும் பிரியாத வகையில் பிரிய முற்றவனாகவே உள்ளான் என்பதைத் தெரிவிக்கும் போது .

"பெருந்துறையுள் மேயபெருமான் பிரியாது
இருந்துறையும் என் நெஞ்சத்து"

என்று இறைவனின் நீங்காத பற்றைத் தன் பாடல்களில் நிலை நாட்டியுள்ளார்.

இதுவே இறைவன் கொண்டுள்ள உண்மையான விருப்பமாகும். இதனை மணிவாசகர் தம் வாழ்வில் மெய்மையாக்கிக் கொண்டதால் அதனை மிகவும் ஆனந்தமாகவும் அற்புதமாகவும் வெளியிட்டு மகிழ்கின்றார்

புற உலகில் உள்ளவர்களுக்கு ஐயம் நிறைந்த ஆய்வு என்னவென்றால் இறைவன் எங்கே தங்கியுள்ளான்? எவ்வுருவில் இயங்குகிறான்? என்பதே ஆகும். ஆனால் மணிவாசகர் போன்ற மாதவத் தோர்களுக்கு இந்த ஐயம் எழ இம்மியும் இடமில்லை. அவர்கள் " எல்லாம் அவன்! என்னிடம் அவன்" என்று எக்களிப்புடன் பேசும் நிலையைப் பெற்று விடுகிறார்கள்.

மணிவாசகர் இத்தகைய இறை அனுபவத்தில் முதன்மை உள்ளவராக நிற்கின்றார். இல்லை என்றால்

"இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க"

என்று பாடியிருக்க முடியுமா? இறைவனை இதயத்தில் வைத்து இன்பம் கண்ட அவர், அந்தப் பெருக்கை நன்கு உணர்கின்றார் அந்த இன்பம் அந்த மொன்றில்லாத இன்பம்;

பெருகிப் பெருகி நிற்கும் பேரின்பம்.

ஊற்றெடுத்துப் பெருகும் அந்த இன்பத்தை, அவர் உரைக்கின்ற பாங்கே தனித்த தாகும்.

இறைவன் எந்த ஊரில் நிலையாகத் தங்குகிறான்? அவனுக்குள்ள திருத்தலங்களில் எது அவனுக்கு மிகவும் பிடிக்கும்? என்றெல்லாம் பலர் ஐயத்துடன் சிந்திக்கலாம்.

ஆனால் மணிவாசகர் போன்ற பெருமக்கள் அவ்வாறு எண்ண முடியாத ஏற்றம் பெற்றவர்களாத் திகழ்கின்றார்கள். காரணம் இறைவனுக்கும் மணிவாசகருக்கும் உள்ள உறவும் உரிமையும் அவனை எங்கும் விடாமல் பற்றி இழுத்துக் கொள்கின்றன. இறைவனும் அவர்களைப் பிரிய முடியாத நிலையில் அவர்களின் உள்ளத்தையே இறைவன் எழுந்தருளும் இடமாகக் கொள்கிறான்.

இன்னும் சொன்னால் மணிவாசகர் முழுக்க முழுக்க இறைவனைத் தனக்கே தன் நெஞ்சத்திற்கே சொந்த மாக்கிக் கொண்ட பேரின்பத்தில் பாடுகின்றார்

இறுதிப் பாடல் இறையின்பத்தை விளக்கும் இணையற்ற பாடலாகவே விளங்குகின்றது.

"இன்பம் பெருக்கி இருளகற்றி எஞ்ஞான்றும்
துன்பத் தொடர தொடர்பறுத்து சோதியாய் - அன்பமைத்துச்
சீரார் பெருந்துறையான் என்னுடைய சிந்தையே
ஊராகக் கொண்டான் உலந்து"

*

48. பண்டாய நான்மறை

அருட்கவி அரசு. **சி. செகநாதன்**

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளை நீக்கி, அல்லலை அறுத்து ஆண்டு, ஆனந்தமாம் நித்திய இன்பத்தை ஆக்கும் தேனும் திருவாசகத்துள் உள்ளது. பதிகங்களுள் 48வது பதிகமாக வழங்கப்பெற்றுள்ளது. பண்டாய நான்மறை என்பது அனுபவத்திற்கு ஐயமின்மை உரைத்தல் என்ற அடிக்குறிப்புடன் வழங்கப்பெற்றுள்ளது. இப்பதிகம் திருப்பெருந்துறையில் பாடப்பெற்றதாகும்.

திருவாசகம் என்னும் தேனாம், அது கனகசபையின் இடத்தே முகிழ்த்து சிற்சபையினடத்தே ததும்பி வழிந்ததை மாணிக்கவாசகத் தந்தையார் நமக்குத் தருகின்றார். பிறவிகள் பல சூழ்ந்து சூழ்ந்து இளைக்க வைத்த பிறவியாம் காட்டில் இருந்து நமது ஆன்மப் பறவைக்கு உடல் எடுக்கும் தளையினின்றும் விடுதலை தருவதற்கென்றே, சிவபெருமானால் நமக்களிக்கப்பெற்றவர் மணிவாசகத் தந்தையார் ஆவார்.

மனக் கருங்கற் பாறையையும் கனிவித்துக் கசிந்துருகச் செய்யும் திருவாசகம். ஆகவேத்தான் திருவாசகத் துருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார் என்ற பண்டு மொழி ஏற்பட்டது. மனம் ஏன் உருக வேண்டுமாம்? அது உருகினால் அன்றி மெய்ஞானம் ஊற்றெடுக்காதாம். மனம் உருகாத பொழுது மலம் மாயை என்னும் கெட்டி மண் ஞான ஊற்றை வெளிவர ஒட்டாது தடுக்கும். ஆகவே தான் மனத்தைக் கனிவிக்க வேண்டும் என்பார்கள். மனத்தைக் கனிவித்து நெகிழச் செய்வதில் தமிழ் நான் மறையுள் திருவாசகத்திற்குத் தனிச் சிறப்பு உண்டு.

திருவாசகத்தை ஊன்றி ஓதி உணர்ந்த திருவருட்பிரகாச வள்ளல் பெருந்தகையார் கூறுவார். விலங்கினங்கள் கூட திருவாசகத்தை ஒருவர் ஓதினால் காதுகளை ஆட்டாமல் கேட்டு மெய்ஞானம் அடையும். ஆனால் இது வியப்பல்ல. அவற்றுள் சிங்கம், புலி, கரடி, ஓநாய், நரி, கழுதை போன்ற விலங்குகள் கூட மெய்ஞான விருப்பத்தை அடையும். ஏன்? விலங்கினங்களை

விட ஓரறிவு குறைந்த பறவை இனங்களே மெய்ஞான நாட்டமுறும் என்று கூறி அப்பறவைச் சாதிகளுள் உள்ள கீழ்ப்பறவை சாதிகள் ஆய கோட்டான், வலியன், கூகை, கழுகுகள் கூட திருவாசகம் ஓதப் பெறுவதைக் கேட்டால் மெய் ஞானத்தின் மேல் நாட்டம் உறும். அத்தகையவாய் ஒப்பற்று உருக்குந் தன்மை உடையது திருவாசகம் என்பார்.

"வாட்டமிலா மாணிக்க வாசக நின் வாசகத்தைக்
கேட்டபொழு தங்கிருந்த கீழ்பறவைச் சாதிகளும்
வேட்டமுறும் பொல்லா விலங்குகளும் மெய்ஞான
நாட்டமுறும் எனில்இங்கு நானடைதல் வியப்பன்றே"

என்பார். இத்தனைச் சிறப்பும் செழுமையும், வளமையும் ஞானமும் நிறைந்த திருவாசகத்திலே வரும் ஒவ்வொரு வரியும், ஒவ்வொரு வார்த்தையும் இல்லை இல்லை ஒவ்வொரு சொல்லும் மெய்ஞானச் சுடரேந்தி அமையப்பெற்றுள்ளது.

இவ்வாறு அமையப் பெற்றதிருவாசகத் தேனுள் உள்ள 656 துளிகளுள் பண்டாய நான் மறை என்னும் பதிகத்துள் உள்ள ஏழே ஏழு தேன் துளிகளை நான் நுகர்ந்த படி நுகரத் தருகின்றேன். தித்திக்கத் தருவது என் கடன். தித்தித்து அனுபவிப்பது நுமது விருப்பம். என்னைத் தொண்டு கொண்டு தொண்டனாக உரிமை தந்த அந்த கோகழியாம் திருப்பெருந்துறையெம் பெருமானுக்கு, என்நெஞ்சமே என்ன கைம்மாறு செய்ய முடியும்? முடிந்தால் சொல். ஏனெனில் நம் பெருமானைக் காண்பதற்கு அவாவி நான் முகனும், மாலும், நான் மறையும் தேடித்தேடி அலமந்தன! இது வரையும் கண்ணாலும் காண மாட்டாது தயங்கி நிற்கின்றன. நிற்க, அப்பெருந்தகையான் என்னை ஆண்டு தொண்டு கொண்டார்ன் மட்டுமல்ல, அவன் அவ்வாறு தொண்டு கொள்ள என்னுள் ஒத்து நின்ற நெஞ்சமே உன்னையும் சேர்த்துத் தான் தொண்டுகொண்டான்! ஆகவே நாம் இருவரும் அப்பெருந்துறை பேரரசுக்கு ஆற்றும் கைமாறு ஏதேனும் இருந்தால் கூறுக என்று முதல் வெண்பாவில் தன் நெஞ்சகத்தை விளித்துப் பேசுகிறார்.

பிரமனும், மாலும் தம் பேதைமை என்னும் அகங்காரத்தால் யாம் பரமம், என்று கூறித் திரிந்ததவர்களின் பதைப்பு ஒடுங்கவே, அழல் உருவாய்த் தோன்றி அளவிறந்த பரமாகி நின்றனர் எம்பெருமான் என்று (324ம்பாட்டில்) திருந்தோணோக்கத்தில் கூறியபடி இப்பாட்டிலும் பண்டாய மால் அயனும், பார்த்திலர், அதுமட்டுமல்ல பண்டாய நான்மறையும், இன்றுவரையும் தேடித்தேடி அலமந்து கண்டறியாது நிற்கின்றது என்பர்.

"பண்டாய நான்மறையும் பாலணுகா மாயனும்
கண்டாரு மில்லைக் கடையேனைத் -தொண்டாகக்
கொண்டாருளும் கோகழியெங் கோமாற்கு நெஞ்சமே
உண்டாமோ கைம்மா றுரை."

திருவாசகத்தைத் தேன் என்று குறிப்பிட்டது போல இறைவனது அருட்பெருக்காம் இன்தேன் வெள்ளம் என வருகின்றது. அது நம்மைப் பீடித்துள்ள, நம்மை மறைத்துச் சிறை செய்துள்ள மலமாம் ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களும் மாய்ந்தொழிய, அற்றொழியச் செய்கின்றது. அருள் வந்துறின் ஆகாதது ஒன்றும் இல்லை என்பர். மலவாதனை கழிந்தது. அல்லல் பிறவியான் தொல்லையும் ஒழிய வேண்டும் அல்லவா?அல்லலுக்கு வித்தாகிய மலம் களைந்த பின் பிறவி ஏது? பிறவியைத் தரும் வினையாகிய கரு ஏது? பிறவிக் கருவறுத்த பிஞ்ஞகன், தான் உறை கோயிலாம் பெருந்துறைக்குக் கைம்மாறு செய்ய முடியுமோ ஆன்மாக்களால்? ஆகவே தான் மணிவாசகத் தந்தையார் அப்பெருந்துறையை வாழ்த்து மின்கள், வாழ்த்துமின்கள் என்கின்றார். வாழ்த்த வாய் தந்த அவனை வாழ்த்துவது மட்டுமே நம்மால் புரியமுடியும். எளிவந்த எம்பிரான் அவனல்லவா? ஆகவே அவன் அன்பைப்பெற எளிய வழியாம் வாழ்த்துரைமட்டுமே போதும் என்கின்றார். உகுபெருந்தேன் வெள்ளம் தரும் பயிரின் மேல் வந்த வள்ளல் அவர். அவரின்அருள் தேன் பெருக்கத்தைக் குறிக்கவே இவ்விரண்டாம் பாடலில் பெருந்துறை என்றார். அருள் தேன் பெருக்கும் பயிர்கள் நிறைந்த பெருந்துறையும் அதுவே ஆகும்.

"உள்ள மலமூன்றும் மாய உகுபெருந்தேன்
வெள்ளந் தரும்பயிரின் மேலவந்த -வள்ளல்
மருவும் பெருந்துறையை வாழ்த்துமின்கள் வாழ்த்தக்
கருவுங் கெடும்பிறவிக் காடு".

காட்டு விலங்குகள் போலக் கட்டுவாரற்று, வேட்டுத் திரியும் நமது பொறி புலன்களை வேட்டையாடி வேட்கை ஒழிக்கவும், அக் காட்டை விட பன் மடங்கு பரந்து விரிந்த கடலில் திரியும் அஞ்ஞான மீன்களை அறிவுவலை வீசிப் பிடித்துத் தெளிவிக்கவும், மக்கள் வாழ்கின்ற நாட்டில் திரியும் நம்மையும் மீட்டி நமது உயிர்ப்பாம் ஈறாறு கால் கொண்டு எழுகின்ற புரவியாம் குதிரையைத் தன் வயப்படுத்தி ஆளும் பாகனாகி, அடக்கி ஒடுக்கி அழிவற்ற ஆனந்தம் பெற வும் என, மூவகையாகிய இடங்கட்குரிய உயிர்களை அருளாம் மேம்பாடடையச் செய்யும் வித்தகன் நம் பெருந்துறைப் பேரரசு. காடு, கடல், நாடு இவற்றில் வாழும் விலங்கு, பறவை, மீன், சுறா போன்று நாட்டில் வாழும் மனிதர்களும் உண்டு. அவர்க்ளையும், அவ்வினைக்காட்டில் வினைக்கடலில் இருந்து மீட்டி அருள் அருளும் பெருந்துறையின் அழகிய தாமரைப் பாதங்களை ஏ நெஞ்சே நீ வாழ்த்துவாயாக! ஏனெனில் இம்மூவகை இடத்தும் உயிர்களும் மருள் என்னும் பாச வலைப்பட்டு மயங்கித் திரிகின்றன. சேயார் புரமெரித்த செம்மல், அருள் வலை விரித்து நம்மை ஆட்கொள்ளும் அருள் வேட்டுவனும் அவனே. அருள் வலைஞனும் அவனே. அவனே அருட்பாகன் என்று நம்மை விழிப்பித்து அருள் பாலிக்கின்றார்.

"காட்டகத்து வேடன் கடலில் வலை வாணன்
நாட்டிற் பாிப்பாகன் நம் வினையை - வீட்டி
அருளும் பெருந்துறையான் அங்கமல பாதம்
மருளும் கெடநெஞ்சே வாழ்த்து".

2, 3வது பாடல்களில் வாழ்த்துமாறு தம் நெஞ்சுக்குக் கூறிய பெருமான், 4வது பாடலில், ஏ நெஞ்சே உன்னை ஏன் வாழ்த்துமாறு பணித்தேன் தெரியுமா? திரு பெருகும் துறையே திருப்பெருந்துறை. அத்திருப்பெருந்துறையாம் அருள் பெருகும் துறையை யார் யார் எல்லாம் வாழ்த்துகிறார்கள் தெரியுமா என்று கேட்டு விட்டு, கூறுகின்றார்:

இறப்பற்று வாழ்ந்தவர்கள் ஆவார்களும், பிறப்பற்று நின்றவர்கள் ஆவாரும், தம் வல்லிய வினையாம் இருளைக் கடிந்து, மாய்த்து நிற்பாரும், உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உள்ளாராய், எல்லா உயிர்களும் கை கூப்பித் தாழ்ந்து வணங்கி ஏத்த தகுந்தவர்களாம் அருளாளர்களும், வானகத்து வானவாசிகளும் சென்று சென்று அணுவாகித் தேய்ந்து தேய்ந்து, நெக்குருகித் தொழும் அப்பெருந்துறையை நாமும் தொழுதோம் ஆனால் மேற்கூறியவர்களோடு நாமும் ஒருவராய் ஆகி நம்மவர் ஆகி விடுகிறோம் அல்லவா? இத்துணை எளிய வழியைக் கண்ட பின்னும் நாம் வாளாவிருத்தல் அழகல்லவே என்று தம் நெஞ்சுக்கு உரைத்து நமக்கும் உணர்த்துகின்றார்.

"வாழ்ந்தார்கள் ஆவாரும் வல்வினையை மாய்ப்பாரும்
தாழ்ந்துலகம் ஏத்தத் தருவாரும். -சூழ்ந்தமரர்
சென்றிறைஞ்சி ஏத்தும் திருவார் பெருந்துறையை
நன்றிறைஞ்சி ஏத்தும் நமர்".

ஏழ் இசையாம், இசையின் பயனாயும், அதற்கு மேம்பட்ட பண்ணாயும், பண்ணமைதியாயும் கூடிய வடிவே தம் அழகிய வடிவாம் வீற்றிருந் தருளும் மொழியாளாம் உமையாம்பிகையோடு உத்தர கோச மங்கையுள் அருள் பாலித்தலில் நிலை நிற்கும் எம்பெருமானையும், கோகழி ஆண்ட குருமணி நற்றாளையும் நெஞ்சே நீ காண்பாயாக! ஏனெனில் நம்மை இதுகாறும் தொடர்ந்து வந்த வல்வினையாம் இடர்கள் போய் அகன்று நாம் நாமாக, நாம் அருள் பெற்றோமாக ஆகவே. ஆகையால் என் நெஞ்சே நீ என்னை எழுந்து என்னுடன் வருவாயாக! என்றழைக்கும் முகத்தான், உலகவர்களின் இடர்கள் தொலைந்தகழ, பிறவிப் பெரும் பிணி நீங்க அழைக்கின்றார்.

" நண்ணிப் பெருந்துறையை நம்மிடர்கள் போயகல
எண்ணி எழுகோ கழிக்கரசைப்-பண்ணின்
மொழியாளோ டுத்தர கோச மங்கை மன்னிக்
கழியா திருந்தவனைக் காண்".

"அந்தக் கரணம் அடங்கத் துறப்பதுவே எந்தத் துறவினும் நன் றெந்தாய் பராபரமே" என்பது தாயுமானவர் தம் வாக்கு. அந்தக்

கரணமாம் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் இவை நான்கும் இவ்வுலக மாயை வாழ்வில் நம்மை மன்னி வாழ வழி வகுப்பவை. இவைகள் உயிர்க்கும், உடற்கும், ஏன் ஆன்மாவுக்குமே தொல்லை தருபவை. ஆகவே இவைகளைத் துறக்க வேண்டும். துரத்த வேண்டும் என்பதே உலக நடையாளர்கள் தாம் உற்ற கருத்து. மாணிக்கவாசகப் பெருந்தகையார் இந்நான்கு கரணங்களையும் பேரின்பமெனக் கொண்டு, இவற்றைப் பேணிப் பாதுகாக்கின்றவர்கள் அடியார்கள் என்று குறிப்பிடுவர்.

இடரே உருவாய் நின்ற அந்தக் கரணம் நான்கினையும் பேரின்பமே வடிவாய் ஆக்கிய சிவ அடியார்களே பிறவியை விட்டு அகன்றவர்கள் ஆகின்றார்கள். இடரே மயமாய் இருந்த அந்தக் கரணங்களைப் பேரின்பமே வடிவாய் ஆக்கியது எது? பெருந்துறைப் பெம்மானாய் வருந்துயர் தீர்க்க வழிநின்று காப்பானாம் அவனே ஆவான். அப்படிப்பட்ட பேரருளாளனை, பெரியவனை, பெம்மானை வாழ்த்த வேண்டாம் நெஞ்சே, நீ அவனைப் பேசினாலே, அவன்து பெரும்புகழை வாயாரப் பேசினாலே போதும் என்பார். வாழ்த்த வசதி ஏற்படாவிட்டாலும், பேசவே பிரியப்படும் இவ்வாய் அவன்தன் பெருமையைப் பேசட்டும். அது பேசுமாறு என்னெஞ்சே நீ என்னுள் பேசுக என்பார்

“ காணுங் கரணங்கள் எல்லாம்பே ரின்பமெனப்
பேணும் அடியார் பிறப்பகல - காணும்
பெரியானை நெஞ்சே பெருந்துறையில் என்றும்
பிரியானை வாயாரப் பேசு”.

நீ அவனைப் பேசினால் உன் பேச்சு வெறும் பேச்சாக, வெறும் பிதற்றலாக உலக வர்தம் வாய் போன்று அமையாது, அது மணி வார்த்தையாக, மாசில் உரையாக, மாண்பொருள் வடிவமாக ஆவதுடன், உன் பேச்சு, நீ பேசும் பொருளுக்கு இலக்கிய, இலக்கணமாயும் ஆகும் பெற்றி உற்றிடும். இந்தப் பெற்றிக்கு நீ உற்றவனாய் ஆக அவனையே பேசு, பேசு, பேசிக்கொண்டே இரு. இதனை-

"வாழ்த்துவதும் வானவர்கள் தாம் வாழ்வான் மனநின்பால்
தாழ்த்துவதும் தாமுயர்ந்து தம்மையெல்லாந் தொழவேண்டிச்
சூழ்த்துமது கரமுரலுந் தாரோயை நாயடியேன்
பாழ்த்த பிறப் பறுத்திடுவான் யானுமுனைப் பரவுவனே" - 16

என்று பாழ்த்த பிறப்பு அறுத்திடுவான் ஆகவே யானைமுனைப் பரவுவனே என்பதற் கிணங்க, இப்பாடலிலும் பெருந்துறையே என்று என் பிறப்பறுத்தேன் என்பார்.

பெருந்துறையே நம் பிறப்பறுக்கும் மருந்து. அம்மருந்தை என் மனத்தகத்தே வைத்துள்ளேன். பிறவிப் பிணியறுக்கும் மருந்துறைக் கோயில் திருப் பெருந்துறை. அங்கே சென்று கூடுக நெஞ்சே அங்கே தான் அருள் அனுபவம் ஐயமற்றுக் கிடைக்கும். ஏன்? அருளே அதுதான் என்பார்.

"பேசும் பொருளுக்கிலக் கிதமாய் பேச்சிறந்த
மாசின் மணியின் மணிவார்த்தை - பேசிப்
பெருந்துறையே என்று பிறப்பறுத்தேன் நல்ல
மருந்தினடி என்மனத்தே வைத்து".

தொகுப்புரை : தம்மைத் தொண்டானகக் கொண்டமைக்கு கைம்மாறு இல்லாது கலங்குகின்றார்.

மலம் மூன்றும் மாயவும் பிறவிக் காடாம் கருவுறுப் பெறும் தன்மையை ஒழிக்கவும், உருக்கும் பெருந்தேன் தரும்பயிராம் பெருந்துறையை வாழ்த்துங்கள் என்பார் இரண்டாவது பாடலில்.

காட்டு விலங்கைக் கடிதில் பிடிக்கவும், கடலில் மீன்களை வலை வீசிப் பிடிக்கவும், சீறிப்பாயும் குதிரையை அடக்குபவனாய் நாட்டகத்தும் வந்தவன். இம்மூவகைத் தீமையையும் வீழ்த்தி அருளை அருளும் அழகிய தாமரைத் திருவடியை வாழ்த்திச் சொல்கின்றார் மூன்றாவது பாட்டில்.

என்றும் அழியாது வாழ்பவரும், வல்லிய இருவினைகளை மாய்த்துத் தாம் மாயாது இருப்பவரும், உலகம் முழுமையும் தலை வணங்கித் தாழ்ந்து ஏத்தத் தகுந்த பேரறி வாளனாகத் திகழ்பவரும், வாணவர்களும் சென்று சென்று ஏத்தி, போற்றிப் புகழும் பெரும்

புகழ் உற்றது பெருந்துறை. அதனை நாமும் ஏத்தினால் அவர்களுள் நம்மையும் இனம் பற்றி நமர் எனக் கொண்டு நலம் பாலிப்பர். ஆகவே நெஞ்சே பெருந்துறையை ஏத்து என்பார் நாலாவது பாடலில்.

இவ்வுலகத்துள் செங்கோல்களை அமைத்துத் தரும் செங்கோலை உடைய பேரரசர் நம் கோகழிக் கரசர். (கோ-அரசன்; கழி-செங்கோல்) எவ்வாறு? உலகை ஆளும் அரசன் தன் நாட்டு மக்களை காக்க செங்கோல் வளையாது பாதுகாப்பானே அதை விடப் பன்மடங்கு நேரியதாகிய செங்கோல் திருப்பெருந்துறைப் பேரரசு தம் கையில் ஏந்திய செங்கோல். இதனை சுட்டவே 5வது பாடலில் கோகழிக் கரசை என்று பாடினார். இங்கே அவனைக் காண வேண்டும் என்று நம் நெஞ்சுக்கு அறிவுறுத்துகின்றார் ஐந்தாம்பாடலில் 6வது பாடலில் ஒரு புரட்சியை செய்கின்றார்-கரணங்களை மாற்றி பேரின்பத்திற்கு அதுவே வித்து என நாட்டுகின்றார். கருவுக்கு வித்தாகிய கரணங்களை அருள்பெறவும் பயன்படுத்தலாம் எப்பொழுது எனின், யாவற்றுக்கும், யாவர்க்கும் பெரியவனாக உள்ள பெருந்துறை மேய பெருமானை வாயாரப் பேசும் பொழுது என்பார். இப்படி அவனது பெரும் புகழைப் பேசிப் பேசியே தம் பிறவி வேர் அறுத்தவர்களே அவனது அடியார் என்று தம் நெஞ்சுக்கு நீதி கூறுகின்றார்.

வாயாரப் பேசும் பொழுது அப்பேச்சு இலக்கிய, இலக்கண வரம்பு கடந்து விடுமோ, பிழைபட்டு விடுமோ, என்று அஞ்சுகின்ற நெஞ்சுக்கு ஆறுதல் கூறுகிறார் .பெருகும் அருட்டுறையானை பேசும் எப்பேச்சும் அவனாகவே ஆதலின் அப்பேச்சும் அதற்குரிய பொருளும் அவனே ஆகலான் ,அவ்விடத்தே பிழை என்பதே தோன்றாமை உண்டு அல்லவா? ஆகவே நீ சொற்பிழை, பொருட்பிழை, இலக்கணப்பிழை வந்து விடுமோ என்று எதற்கும் அஞ்ச வேண்டாம், நெஞ்சே நீ அஞ்ச வேண்டாம். ஏனெனில் என் பிறவியை அறுத்த பேச்சே அவனைப் பற்றிய பேச்சே என்று ஆணையிட்டு உரைக்கின்றார் ஏழாவது பாடலில்.

முடிவுரை

பண்டு ஆய நான் மறை என்ற இப்பகுதியில் 2, 3வது பாடல்கள் வாழ்த்துமாறும், 4வது பாடல் இறைஞ்சி ஏத்து மாறும், 5வது பாடல் காணுமாறும், 6, 7வது பாடல்களில் வாயாரப் பேசுமாறும் கூறி இந்த நான்கு விதமான முறைகளில் நான் இறைவனது தொண்டகை ஆனேன். அத்தகு பெற்றிக்கு உரிய கைம்மாறு இருந்தால் உரை என்று முதற்பாடலில் முன்னுரை தந்தும் பாடியுள்ளமை ஓர்ந்துணர்தற்கு உரியது. நான்கு விதமான உபாயங்களாம் வாழ்த்தல், இறைஞ்சுதல், காணுதல், வாயாரப்பேசுதல் என்பனவே ஈண்டு பண்டு ஆய நான்கு மறைப்பொருள் ஆயிற்று என்பதும் ஒருவாறு கொள்ளலாம்.

"உண்டான நான்மறைகள் ஓங்குதிரு நாட்டினிலே
பண்டாய நான்மறையைப் பாடியகற் - கண்டாய
ஒன்றுதிரு வாசகத்தை ஓதினர் தம்முணர்வில்
ஒன்றுதிரு வாவார் உவந்து".

49. திருப்படையாட்சி

சித்தாந்த ரெத்தினம் கணபதி. ராஜேந்திரன்

இறைவன் திருவடி ஞானமே மாயையைக் கெடுத்து முக்தி நல்கவல்லது என்பதை மாணிக்கவாசகர் திருவாசகம் முழுவதும் விளக்கிக் கூறி உள்ளார். ஆனால் நாற்பத்தொன்பதாவது பதிகமான திருப்படையாட்சியில் மட்டும் ஞானசாதகர் சாதனைக் காலத்தில் கடைப்பிடிக்க வேண்டிய முறைகளைப் பல படிகளில் உணர்த்தியுள்ளார். " சிவ உபாதி ஒழிதல்" என்பது உலக சம்பந்தங்களில் இருந்து விலகி நிற்றலாகும். இறைவன் ஐந்தெழுத்தே வடிவானவன். சைவ சித்தாந்த சாத்திரங்களில் ஒன்றான " உண்மை விளக்கத்தில்"

" ஆடும்படி கேள்நல் அம்பலத்தான் ஐயனே
நாடும் திருவடியின் நகரம் - கூடும்
மகரம் உதரம்; வளர்தோள் சிகரம்
பகருமுக வா முடியப் பார் "

என்று கூறுகிறது. திருநாவுக்கரசரும் "படைக்கலமாக உன் நாமத் தெழுத்தைந்தும் என் நாவில் கொண்டேன்" என்று கூறுவது உணரத்தக்கது. இறைவனின் துணை கொண்டே நம்மை நற்கதிப் பேற்றுக்குத் தக்கவராக்கிக் கொள்ள வேண்டும். இதற்கு திருப்படையாட்சிப்பதிகம் வழி காட்டுகின்றது.

"மீன்வலை வீசிய கானவன் வந்து வெளிப்படுமாடியிலே"

வலை ஞானாகிய சிவன் அருட்பேரொளியாகிய வலையை வீசி மீன்களாகிய அஞ்ஞானக் கூட்டங்களைப் பிடித்து உயிர்களைக் கரையேற்றுவதற்கு வெளிப்படும் போது, ஞானமாகிய திருவடிகளை அகத்தில் கண்டு மகிழ்ச்சியில் திளைப்பது என்பது இல்லை. உயிர்களின் போக வாழ்க்கையில் பரத்திலே திளைக்கின்ற என் வாழ்வு கீழ்மை பொருந்திய தன்று. மயக்கத்தின் காரணமாக இறைவனை மறந்து மண்ணில் வந்து பிறந்திடுவது என்பது இல்லை. இறைவன் வெளிப்பட்ட பிறகு அறியாமை என்பதோ அதனால் மறைக்கப்பட்ட பாதம் என்பதோ

கிடையாது. உலக சம்பந்தங்களில் இருந்து விடுபட்டதால் இன்பத்தைத் தருகின்ற, பாடல், ஆடல்களுக்கு அங்கு இடம் இல்லை. வேதத்தின் ஒரு நாயகமாக விளங்கும் இறைவனின் நுண்மைகளை கேட்டும் அறிந்தும் . உணர்ந்தும் உண்டாகும் மேலான இன்பம் வெளிப்படும் என்பது கிடையாது என்று முதல் பதிகத்திலே விளக்குகின்றார்.

"எனை ஆளுடை நாயகன் என்னுள் புகுந்திடிலே"

காளையை வாகனமாகக் கொண்ட சிவன் என்னை ஆட்கொண்டு விட்டால்" ஒன்றினோடு ஒன்றும், ஓர் ஐந்தினோடு ஐந்தும்"என்பது, உடல் உயிரது கூட்டுறவால் உள்ள அனுபவமும், பொறி புலன்களின் அனுபவமும் இனி ஒன்று படுதல் இல்லை என்பதாம். கன்றை நினைந்து ஓடி வரும் பசுவைப் போல், என்னை ஆட்கொள்ள இறைவன் ஓடி வருவான் என்பதும், பிறப்புக்குக் காரணமான மனத்தைப் பற்றுகின்ற முக்குணங்கள் அறிவில் பொருந்துவதென்பதும் இனி இல்லை. நல்வினை தீவினைகளால் வரும் நடுக்கம் விலகியது. உயர்வைத் தருவதாகிய நல் அடியார்களின் இணக்கமும், நீக்கமற்ற என் அன்பு நிறைந்து பரத்தின் அமுதைப் பெறுவது என்பதும் முடியாது. ஏனென்றால்" 'தந்தது உன்தன்னை', கொண்டது என் தன்னை"என்ற மாணிக்கவாசகப் பெருந்தகையார் நிலையில் இவைகள் வேண்டற்பாலது என்று இயம்புகின்றார்.

"என்னுடைய நாயகனாகிய ஈசன் எதிர்ப்படுமாயிடிலே"

"என்னுடைய நாயகனாகிய ஈசன் எதிர்ப்பட்டு நிற்கும் போது, உயிர்களைக் கட்டி இருக்கின்ற மூல மலங்கள் களையப்பட்டு விடும்.

"*சித்த மலம் அறுத்து சிவமாக்கி எனையாண்ட*"

என்று அச்சோ பதிகத்தில மாணிக்கவாசகர் பாடுகின்றார். சாதகனின் பாவனையில் அமுதம் வெளிப்படும் என்பதும், முடிவற்ற எங்கும் நிறைந்த அகண்டாகாரமானது அகப்படும் என்பதும் முடியாது. எல்லாவற்றுக்கும் ஆதியாக உள்ள பரஞ்சோதியை பொருந்தி நிற்பதென்பதும் முடியாது. உயிர்கள்

ஆண், பெண் என்றும் வேற்றுமை கடந்த நிலையில் பெண்களால் இடர்ப்பாடுகள் என்பது இல்லை. இறைவனையே நினைந்து மீன் கண்கள், கண்கள் இமையாது அவன் திருமேனியில் திளைத்து ஆனந்தப் படுவது இல்லை. இந்திரன் உலகத்திற்கு செய்வதற்கான நல்வினைகளோ பிறவிக்கு காரணமான மறு வாசனைகளும் அகன்று விடும் என்பதும் இல்லை. இவ்வாறாக தன் நிலையில் ஏற்படும் அனுபவங்களை நாம் உணர்வதற்காக உணர்த்துகிறார்.

"பெருமான் அருள் ஈசன் எழுந்தருளப் பெறிலே"

என்னை ஆட்கொண்ட பெருமான் என்னுள் எழுந்தருளிய பின், அழகு பொருந்திய பெண்களோடு கலந்து இன்புறுவது என்பது வேண்டற்பாலது. எல்லையற்ற பரம்பொருளின் கருணைக்கடலில் கலந்து இன்புறுவதும் இல்லை. என்பதாம்.

"நன்மணி நாதம் முழங்கி என் உள்ளூற
நண்ணுவது ஆகாதே?"
என்பது
"மணிகடல் யானை வார்குழல் மேகம்
அணி வண்டுதும்பி வளைபேரிகை யாழ்
தணிந்தெழு நாதங்கள் தாமிவை பத்தும்
பணிந்தவர்க் கல்லது பார்க்க ஒன்னாதே-(திருமந்திரம்)
நாதாந்தமாக விளங்குகின்ற சிறந்த மணியின்
ஓசையை கேட்பது என்பதும் இறைவன்
எழுந்தருளிய பிறகு இல்லை என்பதாம்.

"நாதன் அணித்திரு நீற்றின் நீத்தலும் நண்ணுவ தாகாதே"

இறைவனின் அருள் வெளிப்பாடக விளங்குகின்ற திரு நீற்றினை, சரியை, கிரியை செயல்கள் என்னிடமிருந்து விலகியநிலையில் அணிவது என்பது இல்லை என்றாயிற்று. உயிர்களைப் "பசு" என்பர். பசுவின் மலம் எரிக்கப்படும் போது தூய்மையான திருநீறாகின்றது. அதுபோல் உயிர்கள் தம்மிடம் உள்ள மலக் குற்றங்கள் நீங்கும் போது இறைவன் ஆட்கொள்கின்றான் என்பதாம். அன்பால் என் பணி முந்துற வேண்டுமென்பதும் வேதங்களால் அரியப்படாதே, இறைவனின் திருவடிகளை வணங்குதல் என்பதும் இறைவனால்

ஆட்கொள்ளப்பட்ட நிலையில் இல்லை என்றாயிற்று. "இன்னியச் செங்கழு நீர் மலர் என்தலை எய்துவதாகாதே"

இறைவனின் செங்கமலப் பாதங்களை என் தலையில் சூடுவது என்பதும் இல்லை. "இணையர் திருவடி என்தலைமேல் வைத்தலுமே" என்று "திருப் பூவல்லி" யில் குறிப்பிடுகின்றார்.

"நெற்றிக்கு நேரே புருவத்திடை வெளி
உற்றுற்றுப் பார்க்க வொளி விடுமந்திரம்
பற்றுக்கு பற்றாய் பரமனிருள் திடஞ்
சிற்றம் பலமென்று சேர்ந்து கொண்டேன் (திருமந்திரம்)
என்று திருமந்திரம் கூறுவதும் ஈண்டு
சிந்திக்கத் தக்கது.
"என்னையுடைப் பெருமான் அருள் ஈசன் எழுந்தருளப் பெறிலே"

அருளே வடிவான பெருமான் என்னுள் எழுந்தருளும்போது, பிறவிக்கு காரணமான பாச மயக்கம் விலகுவதும், வானவரும் தம் அறியாமையால், அறிய முடியாத இறைவனின் மலர்ப் பாதங்களை அதீத நிலையில் வணங்குவது என்பதும் இல்லை. கணக்கற்ற பிறவிகளில் வந்த மயக்கம் அறுதலும், அடியார் மனம் களிப்படையும் என்பது மில்லையாம். உயிர்களுக்கு பெண், அலி, ஆண் என்னும் உலகியல் வேறு பாடு நீங்கி தெளிந்த நிலையாகிறது. கணக்கற்ற பிறவிகளிலிருந்து உய்ந்தோம் என்பதுவும் அநேக சித்திகள் என்னிடம் வந்து பொருந்துவதும் வேண்டத் தக்கதன்று. இறைவனே எழுந்தருளிய பிறகு மற்ற சித்திகள் பொருளற்றது என்பதாம்.

"என்னைமுன் ஆளுடை ஈசன் என் அத்தன்
எழுந்தருளப் பெறிலே"

மாசற்ற பொன் மேனியைப் பெற்றபின் அருளொளி வெளிப்பாடு என்பது முடியாது. பெருமை பொருந்திய தவத்தை உடைய யோகிகள் கைகள் குவிந்த போது, திருவடிகளிலிருந்து அருள் வெளிப்பாடு இல்லை. மின்னல் போன்ற இடையை உடைய மாதரார் எண்ணங்கள் வெளிப்படாது, சாதகரின் சாதனையில் எழும் இன்பம் பயக்கும் வீணை ஓசை வேண்டப்படுவதன்று. தன் அடியார் அடி .என் தலை மீது

தழைப்பதென்பதும் இல்லை. தான் அடிகளோடு வந்து உய்வடைய செய்வது என்பதும், எங்கும் இன்பம் பரவி நிற்கின்ற இனிமையான சொற்களைக் கேட்டலும் வெளிப்படுத்தவும் முடியாது. ஏனெனில் ஈசன் எழுந்தருளுகின்ற நிலை அத்தகையது என்பதாம்.

"எங்களை ஆள எழுந்தருளப் பெறிலே"

சொல்லில் வடிக்க இயலாத இன்பத்தைத் தருகின்ற நல்ல மணியின் ஓசையை அனுபவித்தலும், மிக விரைந்து என் உள்ளத்தில் பொருந்திய சோதியாகிய பேரொளி தொடர்ந்து எழுவது என்பதும் இனி முடியாது என்பதாம். மனத்தின் இயல்புகள் மறைந்து மேலான நிலையை அடைவதும், முன்பு அனுபவத்தறியாத பர அனுபவங்கள் எழும்என்பதும், வில்லின் தன்மையையொத்த நல்ல நுதலுடைய பெண்களின் மோகமும் இல்லை.யன்பதாம். வானவர்களும் அறிய முடியாத எங்கும் பரந்து நிறைந்த. இறைவனின் எண் குணங்களை அடைவது என்பதும் இறைவன் எழுந்தருளிய நிலையில் இல்லை என்பதாம்.

"ஈறறியா மறை யோன் எனை ஆள எழுந்தருளப் பெறிலே"

வேதங்களாலும் அறியப்படாத ஈசன் என்னுள் வெளிப்பட்டு நிற்கும்போது சங்கின் ஓங்கார ஒலியானது அறியப் படுதலும். அஞ்ஞான தத்துவங்கள் ஒடுங்குவதும், நல்வினை தீவினைக்கு காரணமான மாயை செயல் ஒடுங்கி இருப்பதும், அடியார்க்கு அடியோம் என்கின்ற ஆசையும் இல்லை என்பதாம். மீன் போன்ற கண்களையுடைய பெண்களின் சிந்தையில் கலந்து இன்புறுவது இனி கிடையாது. பெருமை பொருந்திய திருவடியையே நினைந்து அதனால் பெறப்படுகின்ற சிவ அனுபவங்கள் இனி இல்லை என்றாகிவிடும். எங்கும் நிறைந்துள்ள அமுதத்தை ஒத்த பரஞ்சுடரை அடைவது என்பதும் இல்லை என்கின்றார்.

திருவாசகத்தில் மிகவும் சிறப்பு பொருந்திய சிவ புராணத்திற்கு அடுத்தபடியாக சிறந்ததாக கருதப் படுவது திருபடையாட்சிப் பதிகமாகும். இப்பாசுரங்களில் மாணிக்கவாசகர் நான்கு நிலைகளை குறிப்பிடுகின்றார். அவையாவன.

1. இறைவன் வெளிப்படுகின்ற நிலை
2. இறைவன் உள் புகுந்திடும் நிலை
3. இறைவன் எதிர்ப் படுகின்ற நிலை
4. இறைவன் எழுந்தருளுகின்ற நிலை.

இப்படிப்பட்ட நான்கு நிலைகளையும் விளக்கி, ஒரு அடியார், சாதனைக் காலத்தில் அவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய முறைகளை, எவற்றை எப்போது கடைப்பிடித்து ஒழுக வேண்டும் என்றும் விளக்குகின்றார் மாணிக்கவாசகர். இறைவன் வெளிப்படுகின்ற நிலையில் எவை எல்லாம் வேண்டாம் என்று கூறுகின்றாரோ அவை எல்லாம் ஞானசாதகருக்கும் வேண்டும் என்றும், அப்பொழுதுதான் இறைவன் வெளிப்பட்டு, எழுந்தருளி அருள் செய்வார் என்றும் இயம்புகின்றார். இதன் மூலம் மாணிக்கவாசகப் பெருமான், தான் அடைந்த அருள் அனுபவ பேற்றினை நாமெல்லாம் உணருமாறு உணர்த்தி அருளுகின்றார். இத்திருப் படையாட்சியின் கருத்து முழுமையும் உண்மையான உள்ளடக்கிய திருமந்திரப் பாடல் வருமாறு.

"கரியுண் விளவின் கனிபோல் உயிரும்
உரிய பரமுமுன் றேதும் சிவமும்
அரிய துரியமேல் அண்டமும் எல்லாந்
திரிய விழுங்குஞ் சிவபெருமானே" - 2548

*

50. ஆனந்த மாலை

தவத்திரு சாது சப்பாணி பரமஹம்சர்

மணிவாசகப் பெருமான் ஒப்புயர்வற்ற சிவநேயச் செல்வர். தேனூறும் வாசகங்கள் அறுநூறும் திருக்கோவை நானூறும் அமுதூறப் பொழிந்து அருளிய பான்மையால் வானூறும் கங்கை நிகர் மாணிக்க வாசகர் என்று பாராட்டப் பெற்றவர்.

சைவத் திருமுறைகளில் எட்டாம் திருமுறையாக இலங்கும் திருவாசகத் தேனை நமக்கு அருளியவர்.

ஊனினையுருக்கி உள்ளொளி பெருக்கிக் கொண்ட அவர் சிவபெருமானின் தேனருட் கடலில் திளைத்தெழுந்தவர். அந்தப்பெரும் பேற்றை யாரும் பெறுதல் அரிதாம்.

இறைவன் பால் அவர் பெற்ற ஆனந்தம் அந்தமொன்றில்லாத பேரானந்தம் ஆகும். அந்த ஆனந்தத்தை அற்புதமாக வெளிப்படுத்தும் பகுதியாக அமைந்ததே ஆனந்த மாலையாகும். இதற்குத் தலைப்பு விளக்கம் எ.ழுத வந்த பெரியோர்.

"சிவானுப விருப்பம்" என்றே எழுதியுள்ளார்கள். ஆசிரிய விருத்தத்தில் அமைந்த இந்தப்பதிகத்தில் எப்படியோ மூன்று பாடல்களை இழந்து விட்டோம்.

ஏழு பாடல்கள் உள்ள ஆனந்த மாலை அற்புதமான இறையனுபவங்களைக் கொண்டதாகும். உலகில் மனிதன் அடையும் ஆனந்தம் என்பது பல திறத்தன ஆகும்.

இறைவனின் வழி அடைகின்ற ஆனந்தம் பேரானந்தம், பேசுதற்கும், விளக்குதற்கும் அரிய உன்னதத் துய்ப்பு அனுபவமாகும்.

திருவாசகம் முழுவதிலும் பரவியும், விரவியும் உள்ளது மணிவாசகரின் சிவானுபவமே ஆகும். என்றாலும் அந்த அனுபவ விருப்பத்தை இப்பகுதியில்தான் வெள்ளிடை மலையாகக் கண்டு கொள்ள முடிகிறது.

"என்னால் அறியா பதம் தந்தாய்
யான் அதை அறியாது கெட்டேன்
உன்னால் ஒன்றும் குறையில்லை
உடையாய் ....என் நாயகமே!
பிற்பட்டு இங்கு இருந்தேன்" ....(2)

இப்பாடல் தன் மேல் உள்ள குறையை உணர்ந்து உன்னால் ஒன்றும் குறையில்லை என்ற தொடர் குறிப்பிடத்தக்கதாம். மேலும் அவர் தன் தகுதியை மிக மிகத் தாழ்த்திக் கொண்டே செல்வதில் பெரிதும் விருப்பத்தைக் காட்டித் கொள்கிறார்.

"சீலம் இன்றி நோன்பின்றி
செறிவே இன்றி அறிவின்றி
தோலின் பாவைக் கூத்திட்டாய்
சுழன்று விழுந்து கிடப்பேனை" (3)

சீலம், நோன்பு, செறிவு, அறிவு இவைகளைப் பெறாத எனக்கு உன் கோலங்காட்டி் ஆண்ட உன்பால் சேருவதென்ற ஏக்கத்தின் எதிரொலி ஒவ்வொரு எழுத்திலும் விளங்கக் காண்கிறோம்.

தொடரும் ஒவ்வொரு பாடலிலும் இந்த நீர்மையையே அவர் வெளிப்படுத்தி உள்ளார். இதுவே அவரின் அரிய பாங்கை இந்தப் பகுதியில் வெளிக்காட்டுகிறது.

இந்த வையக வாழ்க்கையில் இவ்வாறெல்லாம் நான் கெடுவது நல்லதா? என்று இறைவன்பாலே கேட்கின்றார்.

"கெடுவேன் கெடுமா கெடுகின்றேன்
கேடு இல்லாதாய் - பழி கொண்டாய்
படுவேன் படுவது எல்லாம் நான்
பட்டால் பின்னைப் பயன் என்னை" (4)

என்று கேட்கின்ற அவர் இறைவா! நான் உனக்கு வேண்டாதவனாக ஆகிவிட்டேனா! என்கிறார். திகைத்து விட்டேன் தேற்றாயோ! என்கின்றார். இறுதியில், செய்வது அறியாதவனாக உள்ளேன் என்கின்றார். இந்த உணர்வுகளைக் காட்டுகின்ற இவரின்

கவிதை வரிகள் எல்லோருடைய உள்ளத்தையும் நைய வைக்க கூடியவை.

... நாயேன் அடிமைஉடனாக
ஆண்டாய் நான் தான் வேண்டாவோ? (5)

... தேவே! தில்லை நடமாடீ
திகைத்தேன் இனித்தான் தேற்றாயோ (6)

... அரிய பொருளே அவிநாசி
அப்பா ! பாண்டி வெள்ளமே
தெரிய அரிய பரஞ்சோதீ
செய்வது ஒன்றும் அறியேனே (7)

மணிவாசகர் இறையன்பைப் பெற்று இறை இயல், அருளியல் இவைகளில் தெளிவு பெற்றதனால், இந்த உலகில் உள்ள தன் பிடிப்பு வாழ்நிலை இவைகளை வெறுத்து அதில் விலக முடியாத நிலையில், அவர் மனத்தில் எழுந்த அகப் போராட்டங்களையே பாடல்களாய்ப் பதிவு செய்து சிவபெருமானின் பூரணமான நிறைவான திருவடிப் பேற்றைப் பெற அவர் கொண்ட விருப்பத்தையும், வேட்கையையும் இப்பகுதி விண்ணப்பமாக்கித் தந்துள்ளது.

'இறைவா உன்னைக் கூடும் வகையைத் தெரியாமல் குமைகின்றேன்' என்பதைச் சொல்ல வரும் அவர்,

"கல்நேர் அனைய மனக்கடையாய்க்
கழிப்புண்டு அவலக் கடல் வீழ்ந்த
என்நேர் அனையேன் இனி உன்னைக்
கூடும் வண்ணம் இயம்பாயே" (1)

இந்த உலகில் மிக இழிந்த தன்மையில் எனக்கு நிகர் எவரும் இல்லை எனக் கூறிக்கொள்ளும் அவரின் இதயப் பாங்கை என்னவென்று சொல்வது? எவ்வளவு தாழ்வு - பணிவு? இந்தப் பாங்கு ! இந்தப் பகுதியில் உள்ள எல்லாப் பாடல்களிலும் மிளிரக் காணலாம்.

என்னால் அறிந்து கொள்ள முடியாததான சிவபதத்தை எனக்கு நீ வந்த வகையில் குறையில்லாதவனாகவே நீ உள்ளாய்.

எனக்குத் தான் யாருமில்லை. தொல்லடியார் பாங்கில் கூடாமல் எளியேன் பிறப்பட்டு விட்டேன் என்று கூறும் இரண்டாம் பாடல் மணிவாசகரின் உள்ளூறுத்தலை அழுத்தமாகவே வெளிப்படுத்தியுள்ளது.

பொதுவாக இறைத் தொடர்பில் இன்பம் உற்றவர்கள் தம் தகுதிக் குறைவுக்குத் தானே இரக்கம் காட்டிக் கொள்வது எத்தகையது என்றால் ஆன்மீக விழிப்பையும், நிறைவையும் காண அவர்களுக்கு இந்த வகையான தன்னோக்கு, உள்நோக்குச் சிந்தனைகள் தேவைப்படவே செய்கின்றன. இந்த வழி முறையை மணிவாசகர்க்குப் பின் வந்த வள்ளலார் போன்றவர்களிடம் மிகுந்து நிற்பதை காணுகிறோம். பூரணமான ஆனந்தத்தைப் பெற வேண்டும் என்ற தூண்டுதலுக்குத் தன் வாழ்வைச் செம்மை செய்து கொள்ளவே இந்த தன்னாய்வுமுறை மரபு முறையில் பல அடியார்கள் இடத்தும் காணப்படவே செய்கின்றன. தன் நினைப்பு முழுவதும் தன் வாழ்க்கை முறைமையைப் பற்றியதே என்று காட்டுவதைப் போலவே மணி வாசகர் தன்னை மிகவும் தாழ்த்திப் பாடுவது கற்போர் நெஞ்சைக் கரைவிக்கவே செய்கிறது.

"கோவே! அருள வேண்டாவோ?
கொடியேன் கெடவே அமையுமே" *(6)*

அடியவராகிய மணிவாசகர் கொடியவர் என்றெல்லாம் கூடக் கூறிக்கொள்வது இவ்வகையில் தான் என்பதை நாம் உணர வேண்டும். சிவானுபவத்தைப் பெற தன்பால் தடைகளாக உள்ளதைக் கூறுவதைப் போலவே மணிவாசகர் பாடி, நம் மனத்தையும் நம் வாழ்க்கையையும். மணிவாசகர் இப்பகுதியில் கரைத்து விடுகின்றார்.

எப்படியும் இறைவனுடைய பூங்கழல்களில் இணைந்தாக வேண்டும் என்ற வேட்கை ஒரு பக்கம். தம் வாழ்க்கையில் உள்ள குறைகள் அதனைத் தடைசெய்கிறதே என்ற உள் நெகிழ்ச்சி மறு பக்கம் இவைகளின் போராட்டத்தில் மணிவாசகர் ஆனந்த அனுபவத்தை இந்த ஏழு பாடல்களில் காட்டி நம்மைக் கனிவிக்கின்ற மாண்பு, இறையியல் அனுபவ உலகில் தனித்ததாகவே உள்ளது.

❋

51. அச்சோ பதிகம்

பேராசிரியர். **தா. மணி**

திருவாசகத்தின் இறுதிப் பதிகமாக அமையும் அச்சோ பதிகம் ஒன்பது கலிவிருத்தப் பாடல்களைக் கொண்டதாகும். இதற்கு முந்தைய பதிகமான "ஆனந்த மாலையில்"மணிவாசகர் 'நெகிழ்ந்துருகி இறைவனே! உன்மீது எந்த குறையுமில்லை. 'எல்லாம் என்னுடைய தவறுதான்' உனது அடியார்க் கூட்டத்தோடு கூடிவாழாது நானே என்னைக் கெடுத்துக் கொண்டேன்' என்று தன் தவற்றை உணர்ந்து வருந்துகிறார். அதே நேரம் தனக்கு இறையருள் கிட்டியதை எண்ணி உள்ளுக்குள் இன்புற்று மகிழ்ச்சிகொள்கிறார். அந்த ஆனந்த மாலையைத் தொடர்ந்து; இறையருள் தனக்கு முழுமையாகக் கிட்டியதை எண்ணி வியந்துபோகிறார் மாணிவாசகர். அதன் வெளிப்பாடே இவ்விறுதிப் பதிகமான 'அச்சோ பதிகமாகும்!'. தன்னைத் தானே முன்வந்தளித்து சிவமயமாக ஆக்கிய திறம் எண்ணி வியந்து 'அச்சோ'! என ஒவ்வொரு பாட்டினிறுதியிலும் களிப்புடன் உரைக்கிறார்.

அச்சோ :

'அச்சோ' என்பது கனிவும் களிப்பும் கலந்த உணர்ச்சியைக் குறிப்பிடும் சொல், என்பதை நாம் ஒருவாறு ஏற்றுக் கொள்ளலாம். இன்னும் வியப்பையும், விரைவையும் வெளிப்படுத்தும் சொல்லாகவும் கொள்ளவேண்டும். இன்றும் 'அச்சோ' என்றும் 'அச்சச்சோ' என்றும் வழங்கி வருவதைக் காணலாம். இழப்புணர்ச்சியின் அவலத்தில் கூட இச்சொற்கள் வரும் என்றாலும்; இன்பவுணர்ச்சியான மகிழ்ச்சிப் பொருளில் இச்சொல் அதிகம் வழங்கக் காண்கிறோம். (ஐயோ! ஐய்யயோ! என்னும் சொற்களையும் இன்று வழக்கத்தில் காணலாம்) ஐ.....ய்.......யோ! என நீட்டி முழக்கி அளபெடையாய் 'இச்சொல் மகிழ்ச்சி' குறியீடாக வழங்கிவருவதை அறிவோம். அதே பொருளில்தான் பேரின்பப் பெருவெள்ளத்தில் திளைத்த மணிவாசகரும் "அச்சோ" என்னும் சொல்லை வழங்கிப் பாடியுள்ளார். அவர் தம் வாழ்நாள் முழுதும் அரிதின் முயன்று நோற்ற ஆன்மீகத் தேடலின் விடையே இப்பதிகமாகும்.

பேரின்பத்தடை :

இவ்வுலகில் நம் உடலால் பெறும் இன்பமனைத்தும் சிற்றின்பங்களாகும். சிற்றின்பம் + சிறுமை+இன்பம். ஈண்டு; சிறுமை என்பது அளவுப் பொருட்டன்று, கீழ்மை எனப்பொருள் கொள்க. துன்பம் தரும் இன்பத்தையே சிற்றின்பம் என்று உணரவேண்டும். உலகியலில், உடலால் பெறும் கண்டு கேட்டு உண்டு உயிர்த்து உற்று அறியும் இன்பத்தையே சிற்றின்பம் என்று உணரவேண்டும். இவ்வின்பங்கள் அனைத்தும் முடிவில் துன்பமாய் மாறிவிடும். இவை என்றும் எவருக்கும் நிலைத்த நிறைவைத் தந்ததில்லை. அந்தந்தக் கனப்பொழுதில் இன்பம் பயக்கும் எதுவும் அடுத்தடுத்த கனம் சோர்வையும், சோகத்தையும் தந்துவிடும். ஆனால் உடலியல் சார்ந்த வாழ்வுடைய நமக்கு அச்சிற்றின்ப நாட்டமே நாளும் நாளும் குறைவுபடாமல் பெருகிக் கொண்டே வளர்கிறது. இச்சிற்றின்பத்தையும் மீறி இவ்வுலகில் நாம் பெறும் வேறு உயிர்ப்பயன் (ஆன்மலாபம்) எதுவும் உண்டோ? என்ற வினாவிற்கான விடையே, அருளாளர்கள்கூறும் 'பேரின்ப' நாட்டமாகும். ஆனால் அந்நெறி அவ்வளவு எளிதல்ல! உலகியலின்பங்கள் அனைத்தும் கசந்த நிலையில்தான் அப்பேரின்பப் பெருநெறி நமக்கு வாய்க்கும். அப்பேரின்பப் பெருவெள்ளத்தில் நீந்தித் திளைக்கப் பெருவிருப்புடன் முயன்றும்-உலகியலின்ப ஈர்ப்பிலிருந்து விடுபட முடியவில்லை. திருவாசகம் முழுவதிலும் இந்தச் சிற்றின்ப பேரின்ப இரண்டாட்டத்தில் இடர்ப்படும் மாணிக்க வாசகரின் அவலக் கண்ணீரின் ஈரத்தை நம்மால் உணரமுடிகிறது.

முக்தி நெறி

இப்பதிகத்தினால் நாம் பெறும் பயன் 'முக்திநெறி' எதுவென்பதை அறிவதாகத்தான் அமையவேண்டும்.

'முக்திநெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனை'

என இப்பதிகப் பாடல் தொடங்குகிறது. மணிவாசகரின் புகழ் பெற்ற பாடல் இது; பொருளும் வெளிப்படையே. எனினும் உண்மைப்பொருளை ஊன்றி அறிந்தால் மட்டுமே நமக்கு

உயிர்ப்பயன் மிகும். முக்திநெறி என்பது உயிர் வாழ்வின் பயனாகிய ஒப்பிலாப் பேரின்பப் பெருவாழ்வாகும். வீடுபேறு என்றும், வீட்டின்பமாகிய 'மோட்ச லோகம்' என்றும் கூறுவதெல்லாம் உலகியலின்பங்களை ஒத்த போலித்தனமான பொய்யொழுக்கம் என்றறிய வேண்டும். வீடு பேறு என்பதற்கு - உடலின்பமாம் உலகியலின்பத்தை விட்டு விலகிய நெறியே என்பதறிய வேண்டும். முக்தி நெறியாம் அம் முதிர்ந்த நிலையை அடையத் தடையானவர்களை 'மூர்க்கர்கள்' என்கிறார் மணிவாசகர். முரண்டு பிடித்து விடாப்பிடியாக நம்மை இழுத்துச் செல்பவர்களையே மூர்க்கர்கள் என்பர். கொண்டது விடா நெறியே மூர்க்க நெறியாகும். நம்மைக் கெடுக்கும் அம்மூர்க்கர்கள் யார்? அடையாளம் கண்டு கொண்டால் அடித்து விரட்டலாம் அல்லவா? அம்மூக்கர்கள் வேறு எவருமல்லர்; உடனிருந்தே நமக்கு ஊறு தேடித்தரும் 'ஐம்பொறி' மூர்க்கர்களே அவர்கள் ஆவர். இவ்வைம் பொறி மூர்க்கர்களைத்தாம் 'ஐம்புல வேடர்' என்றும் 'ஐவர்கள்' என்றும் முன்னோர் கூறியுள்ளனர். இவர்களை விட்டு விலகி வேறு நின்று துய்ப்பதே முக்தி நெறியாகும். அந்நெறியே உயிரொளி கண்டு உவக்கும் பேரின்ப நெறியாகும்.

பக்தி நெறி :

முக்தி நெறி அறியாதமூர்க்கரொடு பழகுவேனைப் பக்தி நெறி இதுவென்று அறிவித்துப் பழவினைகளை நீக்கினார் என்கிறார் மணிவாசகர். 'பக்தி நெறி ' - இறைவனிடத்து இடைவிடா நாட்டம். இறைவன் அவரவருள்ளே உயிரொளியாய்க் கலத்துள்ள பேரின்ப ஆற்றலாவன். '**சீவன் சிவலிங்கம்**' என்பர். தன்னையே தான் உணர்வதும், தன்னுள்ளே ஒளிரும் அருட்பேரொளியைக் கண்டுவப்பதும், அந்நிலையில் அன்புரு இன்புரு அருளுரு எனப் படிப்படியாக எய்தி, எல்லா உயிர்களுக்கும் அருள் கனிந்து நிற்பதுவே பக்தி நெறி என்க. ஆக வள்ளலார் கூறிய 'சீவகாருண்யமே' பக்தி நெறி என்று முடித்தல் வேண்டும். வேறு பிற பிற கற்பனைக் கடவுளைத் தன்னிலும் வேறாய் எண்ணி வணங்குவதும், வாழ்த்துவதும் பக்திநெறி ஆகா என்பதைத் திருவாகப் பயனாக நாம் நம் நெஞ்சில் நிறுத்தல் வேண்டும். அதனால்தான் '**சிவமாக்கி எனை**' என்று இப்பாடலில்

தெளிவுபடுத்துகிறார். இவ்வுண்மை பக்தி நெறி வாய்த்தாலே, உயிரழக்குகளாகிய மும்மலங்களும் நம்மைவிட்டு ஓடும் என்பதுவே உண்மை. 'பக்தி நெறி' இதனை அறிந்தவுடனேயே, '**பழவினைகள் பாறும் வண்ணம் அருளினான் என்கிறார்**' '**மும்மை மலம்**' என்றும் இதனைக் குறிப்பிடுவார். பழவினைகள் எவை? அவ்வாறாயின் புதுவினைகள் எவையும் உண்டோ? என்னும் வினாக்கள் எழுவது இயல்பே. பழவினைகள் ஆணவம், கன்மம், மாயை என்பனவாகும். புது வினைகள் இம்மூன்றினாலும் இப்பிறவியில் நாம் ஈட்டும் புது உயிர் அழுக்குகளாகும். '**அழுக்காறு அவா ....என**' இப்புது அழுக்குகளை வள்ளுவர் வகைப்படுத்துவர். இவ்விரு வினைகளையும் நீக்கும் ஆற்றல் மேற்கூறிய உண்மை பக்தி நெறி ஒன்றினால் மட்டுமே உருவாகும்

அத்தன் எனக்கு அருளியவாறு யார்பெறுவர்

அத்தன் -தந்தை என்பர். 'அச்சன் 'என்பது மலையாள வழக்கு. மகனைப் பயந்து, சான்றோனாக்கி, அவையத்து முந்தியிருக்கச் செய்பவனே தந்தை என்பது தமிழ் மரபு. என்னுள்ளே இருந்து என்னை இதுகாறும் மிகச் சரியாகச் செலுத்திய என் தந்தைபோலும் 'ஆன்ம ஒளியே' அத்தனாவான் என்பது தோன்ற '**என் அத்தன் அமுதன் என்றள்ளூறி**' என்று பிறவிடத்திலும் கூறுவது கண்டுணர்க. அத்தனாகிய ஆன்மச் சுடரொலியுள் ஒளியாகிய ஆண்டவன்தான் மலத்தில் கட்டுண்டு மயங்கும் ஆன்மாவின் அவத்தைகளைக் காணச் சகியாது அருள்புரிவான் என்பதுணரவேண்டும். **அடுத்து அருளிய ஆறு ஆர் பெறுவார்** 'என்பது தம்மைத் தாமே மற்றவரினும் மிகைப்படுத்திக் கொண்டதகாது. தம்மைப் போல் அனைவரும் இந்நிலை எய்த வேண்டும் என்னும் அவா தொக்கி நின்ற ஊக்க உரை எனக் கொள்க. **யார் பெறுவார்?** என்பதற்கு 'யானும் பெறுவேன்' என்பது மாணிக்க வாசகருக்கு நாம் தரும் விடையாக இருக்க வேண்டும். அதுவே அவர்தம் உள்ளக் கிடைக்கை என்றுணர்க:

முதற்பாடற்கருத்தே - முற்றும் பதிகக்கருத்தாகியுள்ள தறிந்தே இவ்வொரு பாடற் கருத்து ஈண்டு விளக்கப்பட்டதாகக் கொள்ளவேண்டும். இனிப் பதிகக் கருத்தைப் பலபட நாம் காண வேண்டும்.

குறியொன்றுமில்லாக் கூத்தன்

எல்லாம் வல்ல இயற்கை உண்மை ஏகதேசமாக விளங்கும் ஆற்றலை இறை, கடவுள், ஆண்டவன் என்றெல்லாம் குறியிட்டுக் கூறுவோம். அதற்கும் மேலாய் எண்ணிலா வடிவவேறுபாடுகளையும் கொடுத்து அப் பேரருளை நம்மைப் போல் கீழ்மைப் படுத்தி ,மீண்டும் நமது சிற்றின்ப நாட்டத்திற்கு நியாயம் கற்பிப்போம். அதுவே நமது ஆன்மிக உயர்வுக்கு அடிப்படைத் தடையாகிறது. இதெல்லாம் தோன்றத்தான் குறியொன்றுமில்லாத கூத்தன் என்று கூறுகிறார். உருவமற்ற, ஆனால் இடைவிடாது இயங்குகின்ற அச் சக்தியைக் கூத்தன் என்றும், அதன் இடைவிடா இயக்கத்தைக் கூத்து என்றும் கூறுவது தென்னாட்டுச் சமய மரபாகும். தில்லைக்கூத்தனும் இவ்விடையிடா இயக்கத்தின் குறியீடே அன்றிக் கையும் காலும் தூக்கியாடும் மானிடப் பிறவியின் மறுபதிப்பன்று என்றுணரவேண்டும்.

நெறியில்லா நெறி

நெறியில்லா நெறியில் நாம் செல்லக்கூடாதென்பது மாணிக்கவாசகர்தம் விருப்பமாகும். இறைப் பேரருள் அவ்வாறு 'போக்கும் வரவும்' புரிந்து கொண்டும் 'ஒன்றாய் வேறாய் உடனாய் நின்றும் புரியாத புதிராய் விளங்கித் தோன்ற, நாம் நமது அறியாமையால் அச்சக்தியை உருவ வேறுபாடுகளால் புனைந்தும், புதுக்கியும் விளையாடும் விளையாட்டையே நெறியல்லா நெறி என்கிறார். அந்நெறிகளைச் 'சிறு நெறிகள்' என்றும் கூறுகிறார். கலையுரைத்த கற்பனை - என்பர் வள்ளலார்.

பெண்ணின்பம்

பெண்ணின்பமே இவ்வுலகில் 'கண் கூடாய்க் காணும் பேரின்பம்' என்று சிலர் கூறிக்கொள்வர். ஆனால் நமது அருளாளர்கள் மட்டும் பெண்ணின்பத்தை வெறுத்துக் கூறியுள்ளனர். ஆனால் அத்தகைய அருளாளர்களின் செவிவழி வரலாறு, அவர்கள் பெண்ணின்பப் பெரும் போகத்தில் அழுந்தித் திளைத்துப் பின் வெறுத்து வேதனையுற்றுப் பாடியுள்ளனர் என்று கூறுகிறது.

ஆனால் இயல்பான ஊக்கமுடைய இளமைப்படுவத்தே அதனை வெறுத்து ஒதுக்க முயலும் மாணிக்கவாசகர்,

"பொய்யெல்லாம் மெய் என்று புணர் முலையார் போகத்தே
மையலுக் கடவேனை மாளாமே, காத்தருளி"

என்று பாடுகிறார். பெண்ணின்பத்தை முற்றவும் வெறுத்து ஒதுக்க வேண்டும் என்பது அவர் கருத்தன்று. அது கருத்தாயின் இறைவனைத் '**தையலிடங் கொண்டபிரான்**' என்று பெண்மையைச் சேர்த்துக் கூறியிருக்க மாட்டார். காணும் பெண்களை எல்லாம் காமுறும் நெஞ்சையே அவ்வாறு கூறினார் என்பது '**புணர்முலையார்**' என்ற '**பன்மையால்**' உணர்ந்து கொள்ளவேண்டும். ஆண்மையும் பெண்மையும் பூரணமாய் ஒன்றிப் பொலிவதே மனிதப்பிறவியின் மாண்பு என்பதை மணிவாசகர் அறியாதவரல்லர். எனினும் எல்லை மீறிச் செல்லும் பெண்ணவாவும் உள்ளத்தையே '**மையலுறக் கடவேன்**' என்று கூறிச் செல்கிறார். இத்தகைய வரம்பு மீறிய காமத்தையே தொல்காப்பியமும் '**இளமைதீர்திறம்**' என்றும், '**காமத்து மிகுதிறம்**' என்றும் பெருந்திணைப் படுத்திக் கூறியுள்ளது கண்டுணர்க. இப்பெருந்திணைக் கேட்டையே பொருத்தாக்காமம் என அருளாளர்கள் எடுத்தியம்பியுள்ளனர்; இயல்பான இல்லற இன்பத்தை அன்று என்று உணரவேண்டும். பெருங்காம நிலயை; உறுப்பழகைக் கண்டு உள்ளுருகும் கழி பேர் காமத்தைக் குறிக்கவே '**புணர்முலையார்**' என்றும் '**குவிமுலைமேல் வீழ்வேன்**' எனவும் கூறியிருப்பதிலிருந்து நாம் கொள்ளலாம். மேலும் '**பஞ்சாய அடிமடவர்**' என்றும் கூறி அவர்தம் கடைக்

கண்ணுக்கிடர் பட்டதையும் கூறுகிறார். இச்சின்றின்ப நாட்டமெதுவும் அருளாளர்களுக் கில்லை என்றும், பெரும்பான்மை உலக ஒழுக்கம் கருதியே தம்மை இவ்வாறு தாழ்த்திக் கூறிக்கொண்டனர் என்றும் சிலர் கூறுவார். அவ்வாறு கூறி அப்பாடல்களின் இயல்பான தன்னுணர்ச்சி வெளிப்பாட்டைத் தடைசெய்யவேண்டியதில்லை. எவ்வின்பத்தைத் துறந்தாரேனும் இயற்கை ஈர்ப்பாகிய பாலுணர்வு ஈர்ப்பை உள்ளத்தால் உள்ளாது இருப்பது அரிதினும் அரிதே. இவ்வுண்மையைப் புராண இதிகாச முனிவர்களும், இருடிகளும் நமக்குப் பூடகமாக உணர்ந்துகின்றார். ஆயின் அப்பாலின்ப உணர்ச்யிலிருந்து தம்மை மீட்டருளி அசைக்கமுடியாத ஆன்ம உறுதியை அருளிய 'இறையருளை' வியந்து போற்றுகின்றார். இப்பதிகத்தின் 9 பாடல்களில் 5 பாடல்களில் பெண்ணின்பத்தையே பேரிடராக மாணிக்கவாசகர் கூறியுள்ளார். திருவாசகம் முழுமையிலும் இக்கருத்தை நாம் அதிகம் காணலாம். **'தையலார் மையல்'** என்றும் **'காதலின் மிக்கு அணியிழையார் கலவி,** என்றும் எண்ணிலா இடர்தந்த பெண்ணியலார் இடர்ப்பாட்டை நம் மனக்கண் முன் உருவகித்துப் பாடியுள்ளர்.

நாய்ச் சிவிகையேற்றுவித்தான்

மணிவாசகப் பெருமான் தம்மைத் தாமே இழிவுபடுத்திக் கொள்ளும் இடமெல்லாம் நாயுடன் ஒப்பிட்டுப் பாடுகின்றார். எப்பிறவியினும் இழிபிறவி நாய்ப்பிறவி என்பது உணர்ந்தே இவ்வாறு கூறியுள்ளார். உயிரேறு உருவாகிய ஊன உடல்களில் நாயுடலே நனிகேடுடைத்தாகும். ஈனத் தனமானச் செய்கைகள் அனைத்தையும் எவ்வித மறைப்பு இடம், பொருள், ஏவல் எதுவுமின்றிச் செய்யும் உடல் நாயுடலாகையால் நாயை இழிபிறவி என்று எல்லோரும் கூறுவர். உயிர், முதலிறுதி அற்ற பழமையுடையதேனும், சார்ந்ததன் வண்ணமாய்த் திரியும் இயல்புடைமை உண்மையாகும். உடல் நாயுடல் போல் கேடுகெட்டு அலைவதால் தம்மை நாய் என்று தாழ்த்திக் கொள்கிறார். அப்படி இருப்பினும் இறையருள் பெருங்கருணையால் நாயாகிய தம்மையும் பல்லக்கில் ஏற்றுவித்த

அழகை வியந்தே 'நாய்ச்சிவிகை ஏற்றுவித்த அம்மை' என்று போற்றுகின்றார்.

நம் அறிவினுள் அறிவாக, சீவனுள் சிவமாக ஒளிரும் இறைப் பேரருள், தனிப்பெருங் கருணைக்கடல் என்றும், அக்கருணைக்குப் பாத்திரமாக நம்மை நாம் தயாரித்துக் கொள்ளவேண்டும் என்றும் உணரவேண்டும். அவ்வாறாயின் நாமும் மணிவாசகர் போன்று பெரும் பேறுபெற்று பேரின்ப நிலை எய்தி 'எனக்கு அருளியவாறு யார் பெறுவார் அச்சோவே' என்று பாடி மகிழலாம். அதுவே இப்பதிகப் பயனாகும்; திருவாசகத் தெளிவும் அதுவாகவே அமைய வேண்டும்.



திருவாசக உரைக்களஞ்சிய உருவாக்கத்திற்கு
உந்து சக்தியாக அமைந்த அருட்செல்வர்
நா.மகாலிங்கம் அவர்களை உள்ளார்ந்த நன்றிப்
பெருக்கோடு உவந்து போற்றுகிறோம்.

தயானந்த சந்திரசேகரன்
திருவாகி,
திலகவதியார் திருவருள் ஆதீனம்

குன்றக்குடி பெரியபெருமாள்
பேராசிரியர். தா.மணி
தொகுப்பாசிரியர்கள்